ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ப்ரபந்நஜந கூடஸ்தரான நம்மாழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

திருவாய்மொழி

4 — 6.

நான்காம்பத்து.

இதற்கு

* தெள்ளாரும் ஞானத்திருக்குருகைப்பிரான் பிள்ளான்
அருளிச்செய்த ஆறாயிரப்படியும்,

* அன்போடழகிய மணவாளச்சீயரருளிச் செய்த
பன்னீராயிரப்படி உரையும்

* தெள்ளியதா நம்பிள்ளை செப்புநெறி தன்னை
வள்ளல் வடக்குத்திருவீதிப் பிள்ளை அருளிச்செய்த
ஈடு ப்ரதி திருவாய்மொழியின்
ப்ரவேசங்களும்
ப்ரதி பாசுரங்களின் அவதாரிகைகளும்

ஸபாபண்டிதரான

ஸ்ரீமான், புதுப்பட்டு-திருவேங்கடாசார்யரால்

பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீ வைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபையாரால்

சென்னை.

ஸ்ரீநிகேதன முத்ராக்ஷர சாலையில்

அச்சிட்டு ப்ரசுரம் செய்யப்பட்டது.

அக்ஷய ௵

1926

ஐஶ்வர்யம் அல்பாஸ்திரத்வாதி தோஷத்தை யுடைத்தாகை யாலே தண்ணிது; ஆத்மலாபம் அபுருஷார்த்தமாய்க்கொண்டு நிலை நிற்குமாகையாலே தண்ணிது; இப்படி ஐஶ்வர்ய கைவல்யங்களு க்கு உண்டான தண்மையைச் சொல்லி, 'ஸர்வேஶ்வரனுகிறான் ஸமஸ்தகல்யாண குணாத்மகனாய் ஸர்வாபேக்ஷிதப்ரதனாயிருப்பா னொருவன்; ஆனபின்பு அவற்றைவிட்டு பகவத்பஜநம்பண்ணப் பாருங்கோள்' என்று இங்ஙனே பகவத்ஸமாஶ்ரயணத்துக்கு உண் டான நன்மையை உபபாதியா நின்றுகொண்டு, பரோபதேஶ ப்ர வ்ருத்தராகிறார், இவர்தாம், ஸம்ஸாரிகள் தாந்தராய்வந்து 'எங்க ளுக்கு ஹிதஞ்சொல்லவேணும்' என்ன, சொல்லுகிறாரன்றே; பிரா ட்டியும் ஸ்ரீவிபீஷணாழ்வானும் ராவணனை நோக்கி ஹிதஞ்சொன் னாற்போலே யிருப்பதொன்றிறே; (க) [... ப்ர தீப்தம்ஶரணம்யதா] வென்று அற்றக்குறுத்திலே 'ஒருகம்பாகிலும் கிடைக்குமோ?' என்று அவிக்கப் பார்ப்பாரைப்போலே.

ஈடு;—முதற்பாட்டில், ஸார்வபௌமராய்ப்போந்த ராஜாக்கள் அந்த ராஜ்யஸ்ரீயை யிழந்து இரந்து ஜீவிக்கவேண்டும்படி துர்க்கத ராவர்கள்; ஆனபின்பு, (உ) " ... — ஸ்ரீவத் ஸவக்ஷாநித்யஸ்ரீ:" என்கிறபடியே நித்யஸ்ரீயான ஸர்வேஶ்வர னைப் பற்றப் பாருங்கோள் என்கிறார்.

ஒருநாயகமா யோடவுலகுடனாண்டவர் *
கருநாய்கவர்ந்தகாலர் சிதைகியபானைபர் *
பெருநாடுகாண விம்மையிலேபிச்சைதாங்கொள்வர் *
திருநாரணன்தாள் காலம்பெறச்சிந்தித்துய்ம்மினோ. (க)

ப;—முதற்பாட்டில், ஏகாதிபத்யம் நடத்தின ராஜாக்களே பிக்ஷுக்களாய் க்லேஶிப்பார்கள்; ஆதலால், நிருபாதிக ஸம்பந்தயுக்தனாய் நித்யஸ்ரீயான நாராய ணன் திருவடிகளை ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்.

ஒருநாயகமாய் — மண்டலநாதத்வரூப மான ஏகாதிபத்யத் தையுடையராய்க்கொ ண்டு	ஓட—(நெடுங்காலம்) நடக்கும்படி
	உலகு—லோகத்தோடே
	உடன்—பொருந்தி

(க) ரா - யு - கக - உஉ. (உ) ரா - பு - ககச - கரு.

ஆண்டவர்—ராஜ்யரக்ஷணம்பண்ணிப் போந்தவர்கள், (அந்த ஐஸ்வர்யம் பக்நமானவாறே லஜ்ஜித்து ராத்ரியிலே பிக்ஷைபுகத் தேடி)
கரு—(இருளிற்காட்டில்வாசியறக்) கறுத்த
நாய்—நாயாலே
கவர்ந்த—கவ்வப்பட்ட
காலர்—காலேயுடையராய்
சிதைகிய—(உபயோகார்ஹமன்றியே) பொளிந்து போகட்ட
பானையர்—பானையைப் பாத்ரமாகக் கொண்டு
பெருநாடு—(தாங்கள் நிர்வஹித்த) மஹாப்ருதிவியிலுள்ளாரெல்லாரும்
காண—காணும்படியாக
இம்மையிலே—இந்த ஜந்மந்தன்னிலே
பிச்சை—பிக்ஷையை
தாம—(லஜ்ஜையையும்விட்டுச்சென்று) தாம் அர்த்தித்து
கொள்வர்—கொள்வர்; (இப்படி ஐஸ்வர்யம் அஸ்திர மாதலால்
திரு—நித்யஸ்ரீயாய்
நாரணன்—(நிருபாதிகஸேஷியான) நாராயணனுடைய
தாள்—திருவடிகளை
காலம்பெற—காலவிளம்பம்பிறவாமல் சடக்கென
சிந்தித்து—அநுஸந்தித்து
உய்ம்மின்—உஜ்ஜீவியுங்கோள்.

ஸ்ரிய:பதியான நாராயணன் திருவடிகளிறே ஆஸ்ரயணீயமும் ப்ராப்யமும்.

ஆறு;—ஸ்வஸ்வபாநுவர்த்தி ஸகலமநுஜராய், ஸப்தத்வீப வதியான மேதிநியெல்லாவற்றுக்கும் அத்விதீயாதிபதிகளாய்க் கொண்டு ராஜ்யம்பண்ணினவர்களே, உத்தரக்ஷணம் அபஹ்ருத ஸகலராய் அகிஞ்சனராய் க்ஷுதார்த்தராய் ஸர்வஜநங்களுங்காண ஆஹாரார்த்திகளாய்த் திரிவர்; இப்படி ஐஸ்வர்யம் அஸ்திரமாதலால் அத்தை விட்டு ஸ்ரிய:பதியாயிருந்த நாராயணன் திருவடிகளை ப்ராப்யமாகப் பற்றி உஜ்ஜீவியுங்கோள் என்கிறார். (க)

ஈடு;—அவ;—இரண்டாம்பாட்டு. ராஜ்யத்தை யிழக்கையேயன்றிக்கே, ராஜ்யம்பண்ணுகிற நாளில் போக்யைகளாகப் பரிக்ரஹித்த ஸ்த்ரீகளையும் ஸத்ருக்களுக்குக் கொடுத்து எளிமைப் படுவர் என்கிறார்.

உய்ம்மின்திறைகொணர்ந்தென்றுலகாண்டவர் * இம்மையே
தம்மின்சுவைமடவாரைப் பிறர்கொள்ளத் தாம்விட்டு *
வெம்மினொளிவெயிற்கானகம்போய்க் குமைதின்பர்கள்
செம்மின்முடித்திருமாலை விரைந்தடிசேர்மினோ. (உ)

ப;—அநந்தரம், ஐஶ்வர்யபங்கமே யன்றிக்கே அபிமதவியோகமும் பிறக்குமாதலால், ஸர்வாதிகனேஶ்வரனான ஶ்ரிய:பதியை ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்.

திறை—திறையை
கொணர்ந்து—கொண்டுவந்து
உய்ம்மின்—உஜ்ஜீவியுங்கோள்;
என்று — என்று (இந்த உக்திமாத்ரத்தாலே)
உலகு—லோகத்தை
ஆண்டவர்—ஆண்டவர்கள்
இம்மையே — இப்படிவாழ்ந்த ஜந்மந்தன்னிலே
தம்—தங்களுக்கு அஸாதாரணைகளாய்
இன்—அபிமதைகளாய்
சுவை—போகரஸத்தையுடையராய்
மடவாரை — (தங்களையொழியச்செல்லாத பாரதந்த்ர்யத்தையுடையரான) ஸ்த்ரீகளை
பிறர்—அந்யர்
கொள்ள—பரிக்ரஹிக்கும்படி
தாம்—தாங்களே
விட்டு — கைவிட்டு (அத்தேசத்திலுமிருக்கப்பெறாதே)
வெம்—வெவ்வியதாய்
மின் ஒளி — (பார்த்தவர் கண் வெறியோடி) மின்னொளி பரக்கும்
வெயில்—வெயிலையுடைய
கானகம்—காட்டுள்ளே
போய்—போய்
குமைதின்பர்கள் — (அங்கும் அந்யராஜாக்களாலே) பீடிதராவர்கள் : (ஆதலால்)
செம் மின்—அப்ரதிஹததேஜஸ்ஸான
முடி—அபிஷேகத்தையுடைய
திருமாலை—ஶ்ரிய:பதியை
விரைந்து—ஸத்வரராய்க்கொண்டு
அடிசேர்மின் — பதாஶ்ரயணம் பண்ணுங்கோள்.

செம்மி னென்கிறது - சிவந்த வொளி யென்றுமாம். (உ)

ஆறு;—இப்படி அபஹ்ருதராஜ்யராய்ப்போமித்தனையன்றியே, அபஹ்ருதஸ்வாபிமத களத்ராதிகளாய் அவ்வவதேஶாத் ப்ரஷ்டருமாய் வநசரராய் தத்ராபி ஶூர்யஶத்ருபிர்ப்பாத்ய மாநருமாவர் ; ஆனபின்பு, கிரீடமகுடாதி திவ்யபூஷணபூஷிதனாய் ஶ்ரிய:பதியாயிருந்தவன் திருவடிகளை ஈண்டென ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்.

ஈடு ;—அவ ;— மூன்றாம்பாட்டு. ராஜாக்கள் தங்கள் காலிலே விழுந்து கிடந்தால் அநாதரித்திருக்கும் மதிப்பை யுடையவர்கள், 'ஒருசேதநன்' என்று நினையாதபடி மதிப்பறுவர்கள் என்கிறார்.

அடிசேர்முடியினராகி அரசர்கள்தாந்தொழ *
இடிசேர்முரசங்கள் முற்றத்தியம்பவிருந்தவர் *
பொடிசேர்துகளாய்ப்போவர்க ளாதலில்நொக்கெனக் *
கடிசேர்துழாய்முடிக் கண்ணன்கழல்கள்நினைமினோ. (௫)

ப ;—அநந்தரம், காலில்விழுந்த ராஜாக்களையும் மதியாதிருந்தவர்கள். ஒருவன் காலிலேதட்டினால் ஒருவஸ்து ப்ரதிபத்தி பிறவாதபடி யாவர்கள் ; ஆதலால், போக்யனான க்ருஷ்ணன் திருவடிகளை ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்.

அடி—தங்கள்காலோடே
சேர்—சேர்ந்த
முடியினராகி—முடியை யுடையராய்க் கொண்டு
அரசர்கள்—ராஜாக்கள்
தாம் — (இந்த ஆஸத்திதான் தாமாக அவர்கள் அநாதரித்திருக்கச்செய்தே) தாங்களே
தொழ—தொழாநிற்க,
இடிசேர்—இடியோடு ஒத்த
முரசங்கள்—முரசங்கள்
முற்றத்து—முற்றவெளியிலே
இயம்ப—ஶப்திக்க
இருந்தவர்—(அதிலே செவிமடுத்து அந்யபரதை) பாவித்திருக்குமவர்கள்
பொடி — ஒருபதார்த்தத்தை கதேஶத்தோடு
சேர்—சேர்ந்த
துகளாய்—பரமாணுவாம்படி
போவர்கள்—மதிப்பற்றுப்போவர்கள் ;
ஆதலில்—ஆதலால்
நொக்கென—சடக்கென
கடி சேர் — பரிமளஸமவாயத்தை யுடைய
துழாய்—திருத்துழாயாலே அலங்க்ருதமான
முடி—திருமுடியையுடைய
கண்ணன்—க்ருஷ்ணனுடைய
கழல்கள்—திருவடிகளை
நினைமின்—நினையுங்கோள். (௫)

ஆறு ;—இப்படி ஐஶ்வர்யம் அஸ்திரமன்றியே, ஐஶ்வர்ய போக்தாக்களானவர்கள் தாங்களும் அத்யந்தம் அஸ்த்திரர் ; ஆதலால், ஈண்டென நிரதிஶய போக்ய பூதனாய் ஆஶ்ரித ஸுலபனா யிருந்த எம்பெருமானை நினையுங்கோள் என்கிறார். (௫)

ஈடு ;—அவ ;—நாலாம்பாட்டு. ஐஶ்வர்யத்தின் நிலையாமையும் மதிப்பறுகையும் கிடக்கச்செய்தே, போக்தாக்களுடைய நிலையாமை யாலும் அவனைப் பற்றவேணும் என்கிறார்.

நினைப்பான்புகின் கடலெக்கலின்நுண்மணலிற்பலர் *
எனைத்தோருகங்களு மிவ்வுலகாண்டுகழிந்தவர் *
மனைப்பால்மருங்கற மாய்தலல்லால்மற்றுக்கண்டிலம் *
பனைத்தாள்மதகளிறட்டவன் பாதம்பணிமினே. (௪)

ப;—அநந்தரம், மதிப்புக்கேடே யன்றியே ஆயுஸ்ஸும் நிலைநில்லாதா கையாலே விரோதி நிவர்த்தகனான க்ருஷ்ணன் திருவடிகளை வணங்குங்கோள் என்கிறார்.

நினைப்பான்—(பகவதநுபவத்தை விட்டுச்செத்தராஜாக்களை) நிரூபிக்க
புகில்—இழியில்
எனைத்தோருகங்களும் — அநேகயுகங்களும்
இ உலகு—இந்தலோகத்தை
ஆண்டு—ஆண்டு
கழிந்தவர்—கழிந்துபோனவர்கள்
கடல் எக்கலில்—கடல் எக்கலிட்ட
நுண்மணலில் — நுண் மணலிற்காட்டில்
பலர்—அநேகர் ; (இவர்கள் முடியுமளவில்
மனைப்பால் — (தாங்களிருந்த) க்ருஹப்ரதேசத்துக்கும்
மருங்கு—அதின்பரிஸரத்துக்கும்
அற—வாசிதெரியாதபடி
மாய்தல் அல்லால்—அழியுமதொழிய
மற்று—வேறு அவஶேஷிப்பதொன்று உண்டாக
கண்டிலம்—கண்டிலோம்: (ஆதலால்)
பனை—பனைபோலேபருத்த
தாள்—அடிப்பரப்பையுடைத்தான
மதகளிறு—மத்தகஜத்தை
அட்டவன்—அழித்தவனுடைய
பாதம்—திருவடிகளை
பணிமின்—வணங்குங்கோள்.
'நுண்மணலிற்பலர்'' என்று, ஐந்தாம் வேற்றுமை - உவமைப் பொருவாய், நுண் மணல்போலே அஸங்க்க்யாதரென்றுமாம்

ஆறு ;—ஐஶ்வர்ய போக்தாக்களானவர்களெல்லாரும் ஸாந்வயமாக நஶித்துப்போன இத்தனையல்லது, மற்றும் ஸ்த்திரராயிருப்பாரொருவரையும் கண்டிலோம்; ஆதலால், ஆஶ்ரித விரோதி நிரஸநஸ்வபாவனாயிருந்தவன் திருவடிகளைப் பணியுங்கள் என்கிறார். (௪)

ஈடு ;—அ௨ ;—அஞ்சாம்பாட்டு. செல்வக்கிடப்போபாதி அங்க நாபரிஷ்வங்கமும் அஸ்திரம் என்கிறார்.

பணிமின் திருவருளென்னு மஞ்சீதப்பைம்பூம்பள்ளி *
அணிமென்குழலாரின் பக்கலவியமுதுண்டார் *
துணிமுன்புநாலப் பல்லேழையர் தாமிழிப்பச்செல்வர் *
மணிமின்னுமேனி நம்மாயவன்பேர்சொல்லிவாழ்மினே. (ரு)

ப; — அநந்தரம், அபிமதைகளான அங்கனைகளோடு ஸம்ஶ்லேஷமும் அஸ்திரமாதலால், அபிரூபனுன ஸர்வேஶ்வரன் திருநாமத்தைச்சொல்லி வாழப்பாருங்கோள் என்கிறார்.

அம்—அழகியதாய்
சீதம்—சீதளமாய்
பை—பரந்த
பூ பள்ளி—பூப்படுக்கையிலே
திருவருள்—திருவருளை
பணிமின்—பண்ணியருளவேணும்
என்னும்—என்னும் ஆதரத்தையுடைய
அணி—அலங்காரோத்தரமாய்
மெல்—ம்ருதுதரமான
குழலார்—குழலையுடையவர்களுடைய
இன்பக் கலவியமுது — ஆநந்தாத்மக ஸம்ஶ்லேஷாம்ருதத்தை
உண்டார்—புஜித்தவர்கள்
துணி—துணிச்சீலையானது, (பின்னுக்கெட்டாமையாலே)
முன்பு—முன்னளவிலே
நால—நாலும்படியாக
பல் — பலவகைப்பட்ட
ஏழையர்—முன்பு சபலைகளான அந்த ஸ்த்ரீகள்
தாம்—தாங்களே
இழிப்ப—அநாதரோக்தியைப்பண்ணச்செய்தே
செல்வர்—(ஆஶாபலத்தாலே பின்னையும் அங்கே) செல்லுவார்கள்; (ஆதலால்)
மணி—நீலரத்நம்போலே
மின்னு—ஒளியையுடைத்தான
மேனி—திருமேனியை யுடையவனாய்
நம்—(ஆஶ்ரிதரான) நமக்குத் தன்னை யநுபவிப்பிக்கும்
மாயவன் — ஆஶ்சர்யபூதனுடைய
பேர்—திருநாமங்களை
சொல்லி —சொல்லி
வாழ்மின் — ஆநந்திகளாகுங்கோள்.

ஆறு ;—இந்த அஜ்ஞாரஸம்போலே ஸ்த்ர்யாதி விஷயாஸமும் அத்யந்த அல்பத்வ அஸ்திரத்வாதி தோஷதூஷிதமாதலால் அவற்றைவிட்டு திரஶ்ரேயஸ்ஜ்ஜ்வல்ய ஸௌந்தர்யாதி கல்யாணகுணகணநிதியாய் ஆஶ்ரித வத்ஸலனுயிருந்தவன் திருநாமங்களைச் சொல்லி வாழுங்கள் என்கிறார். (ரு)

ஈடு ;— அவ ;— ஆறும்பாட்டு. வைத்யர்கள் பிழைத்தாரை யெண்ணுமாபோலே முடிந்தவர்களை யெண்ணுகிறதென்? ஜீவித்தவர்களும் சிலரில்லையோ? என்ன, அது இருந்தபடி கேட்கலாகாதோ பின்னை? என்கிறார்.

வாழ்ந்தார்கள்வாழ்ந்தது மாமழைமொக்குளின்மாய்ந்துமாய்ந்து *
ஆழ்ந்தாரென்றல்லாலன்றுமுதலின்றறுதியா *
வாழ்ந்தார்கள்வாழ்ந்தேநிற்ப ரென்பதில்லைநிற்குறில் *
ஆழ்ந்தார்கடற்பள்ளி யண்ணலடியவராமினே. (௩)

ப ;— அநந்தரம், நிலைநின்ற ஜீவநமில்லாமையாலே, ஸ்திரஜீவநம் வேண்டியிருப்பார் க்ஷீரார்ணவஸாயிக்கு சேஷபூதராகுங்கோ ளென்கிறார்.

வாழ்ந்தார்கள் — வாழ்ந்தார்களாகத் தந் தாமை நினைத்திருக்கிறவர்கள்
வாழ்ந்தது — ஜீவித்தது
மா மழை — பெருமழையில்
மொக்குளின் — குமிழிபோலே
மாய்ந்துமாய்ந்து — நசித்துநசித்து
ஆழ்ந்தார் — அத:பதித்தார்கள்
என்று அல்லால் — என்னுமித்தனையொழிய
அன்றுமுதல் — உத்பத்திவேளை தொடங்கி
இன்று அறுதியா — இன்றெல்லையாக
வாழ்ந்தார்கள் — ஜீவித்தவர்கள்
வாழ்ந்தேநிற்பர் — ஏகரூபமாக ஜீவித்தேநிற்பர்;
என்பது — என்கிற அர்த்தந்தான்
இல்லை — இல்லை.
நிற்குறில் — நிலைநின்றவாழ்வு கிட்டவேண்டில்
ஆழ்ந்து — ஆழ்ந்து
ஆர் — நிறைந்த
கடல் — கடலை
பள்ளி — படுக்கையாகவுடைய
அண்ணல் — ஸர்வஸ்வாமிக்கு
அடியவர் — அடியார்
ஆமின் — ஆகுங்கோள்.
ஆர்தல் — நிறைவுடைமையுமாம்.

ஆறு ;— ஐஸ்வர்யத்தைப்பெற்று வாழ்ந்தார் ஒருவருமில்லையோவென்னில்; வாழ்ந்தார்கள் வாழ்ந்ததும் வர்ஷஜல புத்புதம் போலே அத்யல்பகாலம் வாழ்ந்து நசித்துப்போன வத்தனை; பண்டு வாழ்ந்தவர்கள் தாங்கள் வாழப்புக்க அன்றுமுதல் இன்று அறுதியாக வாழ்ந்தே நிற்கக்கண்டிலோம்; ஆனபின்பு, நித்யஸித்தமான ஐஸ்வர்யத்தை வேண்டியிருக்கில், ஆஸ்ரித பரித்ராணார்த்தமாக வந்து திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற பரமபுருஷன் திருவடிகளிலே அடிமைசெய்கையாகிற நித்யஸித்த திவ்யைஸ்வர்யத்தைப் பற்றுங்களென்கிறார். (௩)

ஈடு ;—அவ ;—ஏழாம்பாட்டு. "ஐச்வர்யத்துக்கு நீர் சொல்லுகிற தோஷம் உண்டேயாகிலும், அந்நபாநாதிகள் தாரகமுமாய் போக்யமுமாயிருக்கிற ஆகாரமுண்டே" என்ன, 'அதுவும் நிலை நில்லாது' என்கிறார்.

ஆமின்சுவையவை யாறோடடிசிலுண்டார்ந்தபின் *
தூமென்மொழிமடவா ரிரக்கப்பின்னுந்துற்றுவார் *
ஈமினெமக்கொரு துற்றென்றிடருவராதலின் *
கோமின்துழாய்முடி யாதியஞ்சோதிகுணங்களே. (௭)

ப;—அநந்தரம், தேஹபோஷண ஹேதுவான அந்நபாநாதிபோகமும் அநித்யமாகையாலே ஸர்வகாரணபூதனான ஸர்வஸ்மாத்பரனுடைய குணங்களை அநுஸந்தியுங்கள் என்கிறார்.

ஆம்—ப்ரக்ருத்யநுகுணமாய்
இன்—ஹ்ருத்யமாய்
அவை—லோகப்ரஸித்தமான
ஆறுசுவையோடு—(மதுராம்ல லவண திக்த கடு கஷாய மாகிற) ஆறு ரஸத்தோடே கூடின
அடிசில் — (விலக்ஷணமான) அந்நத்தை
உண்டு—புஜித்து
ஆர்ந்தபின்—பூர்ணரானபின்பு
தூ—(பரிவாலுண்டான ஸஹ்ருதயத்வத்தாலே) ஶுத்தமாய்
மென்—(ஶ்ராவ்யமாம்படி) ம்ருதுவான
மொழி—பாஷணத்தையுடைய
மடவார்—(பவ்யைகளான) ஸ்த்ரீகள்
இரக்க — அபேக்ஷிக்கையாலே, (அது மறுக்கமாட்டாமல்)
பின்னும்—பின்னும்
துற்றுவார்—வருந்தி புஜித்துப் போருமவர்கள், (அந்த ஸம்பத்துநசித்தவாறே அந்த ஸ்த்ரீகளிருந்த விடத்தே சென்று நீங்களெல்லீருங்கூட)
எமக்கு—எங்களுக்கு
ஒரு துற்று—ஒருபிடிசோறு
ஈமின்—இடவேணும்
என்று—என்று அபேக்ஷித்து
இடறுவர் — (அது கிடையாதொழியிலும் வாசல்தோறும்) தட்டித்திரிவர்;
ஆதலின்—ஆதலால்
துழாய்—திருத்துழாயாலே அலங்க்ருதமான
முடி—திருமுடியை யுடையனாகையாலே நிரதிசய போக்யனாய்
ஆதி—ஸர்வகாரணபூதனாய்
அம்—தர்ஶநீயமாய்
சோதி—தேஜோமயமான திவ்ய விக்ரஹத்தையுடையனான ஸர்வேஶ்வரனுடைய
குணங்கள்—குணங்களை
கோமின்—(௧) "ஸர்வகந்த: ஸர்வரஸ:" என்கிறபடியே சேர்த்து புஜியுங்கோள்.

(௧) தை-ஆ-௯.

கோத்தல் - சேர்த்தல். எமக்கு என்னும் பன்மையால் - அவ்வவஸ்தையிலும் ஸ்வபாவமான தோற்றுகிறது. (எ)

ஆறு ;—அந்நபாநாதி விஷயரஸங்களும் அத்யந்தம் அஸ்திரம் அதிக்ஷுத்ரமாதலால் துழாய்முடி ஆதியஞ்சோதி குணங்களைக் கோமின்கள் என்கிறார். (எ)

ஈடு ;—அவ ; - எட்டாம்பாட்டு. ராஜ்யஸ்ரீ நிலைநில்லாதொழிவது நாட்டோடுபொருந்தி வர்த்தியாதொழியிலன்றோ? அவர்களோடு பொருந்திவர்த்திக்கவே அது நிலைநிற்குமே என்ன,—பொருந்திவர்த்தித்தாலும் எம்பெருமானை ஆஸ்ரயியாவிடில் கிடையாது ; அவனை ஆஸ்ரயித்துப் பெற்றாலும் அவற்றின் ஸ்வபாவத்தாலே நிலைநில்லா ; ஆனபின்பு, அவன் தன்னையே ப்ரயோஜநமாக ஆஸ்ரயியுங்கோள் என்கிறார்.

குணங்கொள்நிறைபுகழ்மன்னர் கொடைக்கடன்பூண்டிருந்து *
இணங்கியுலகுடனாக்கிலு மாங்கவனையில்லார் *
மணங்கொண்டபோகத்துமன்னியும் மீள்வர்கள்மீள்வில்லை *
பணங்கொளரவணையான் திருநாமம்படிமினோ. (அ)

ப;—அநந்தரம், பகவத் ப்ரஸாதமில்லாதபோது லப்தமான ராஜ்யமும் நிலைநில்லாதாதலால் அநந்யராயி திருநாமங்களை அப்யஸியுங்கோள் என்கிறார்.

குணம்—ஔதார்யாதிகுணங்களுக்கு
கொள்—ஆகரபூதராய்
நிறை—(இக்குணங்களையுடைய லோகமெல்லாம் கொண்டாடுகையாலே) பூர்ணமான
புகழ்—புகழையுடையராய்
மன்னர் — அபிஷிக்த க்ஷத்ரியபுத்ரர்களாய்
கொடை—(ஸ்வஸம்பத்தைலோகோபஜீவ்யமாக்கும்) ஔதார்யமாகிற
கடன்—ஸ்வபாவத்தை
பூண்டு—ஏறிட்டுக்கொண்டு
இருந்து—ப்ரதிஷ்டிதராய்
இணங்கி—(௧) "[illegible] -ஸர்வாநர்த்திநோ த்ருஷ்ட்வாஸமேத்ய" (என்கிறபடியே) பொருந்தி
உலகு—லோகம்
உடன் ஆக்கிலும் — உடன் படும்படி ரக்ஷித்துப் போரிலும்
ஆங்கு—அந்த ஐஸ்வர்யவிஷயமாக
அவனை —(ஐஸ்வர்யப்ரதனான) ஸர்வேஸ்வரனை
இல்லார்—ஆஸ்ரயித்துக்கொண்டு போருகை யில்லாதவர்கள்

---

(௧) ரா - அயோ - ௧௬ - உஎ.

மணம் — நித்யோத்ஸவமான செவ்வியை

கொண்ட — உடைத்தான

போகத்து — ஐஸ்வர்ய போகத்திலே

மன்னியும் — இப்படி நிலைநின்றார்களே யாகிலும்

மீள்வர்கள் — நிவ்ருத்தைஸ்வர்யராவர்கள்;

மீள்வு இல்லை — புநராவ்ருத்தியில்லாத புருஷார்த்தம் ஸித்திக்கும்;

பணங்கொள் — (ஸ்வஸ்பர்ஸத்தாலே) விரிகிற பணங்களையுடைய

அரவு — திருவநந்தாழ்வானை

அணையான் — அணையாக வுடையனாகையாலே ஆஸ்ரித ஸம்ஸ்லேஷஸ்வபாவனானவனுடைய

திருநாமம் — திருநாமங்களை

படிமின் — ("ஸநக ஸநந்தந ஸநாதந ஸநத்குமார ஸேவித அநந்தாநந்த ஸயந புராண புருஷோத்தம" என்னுங்கணக்கிலே) அப்யஸியுங்கோள்

ஆறு ;— தாநாதி ஸுசரித தர்மோபேதராய்க் கொண்டு ராஜ்யாநுபவத்திலே ப்ரவ்ருத்தரானாலும் எம்பெருமானை ஆஸ்ரயியாதொழியில் அந்த ராஜ்யம் ஸித்தியாது; அவனை யாஸ்ரயித்துப் பெற்றாலும் சிலகாலம் அநுபவித்து நிவ்ருத்தராவர்; ஆதலால், தன் திருவடிகளை ப்ராபித்தாரை ஒருநாளும் கைவிடாத எம்பெருமான் திருவடிகளையே ப்ராப்யமாகப் பற்றுங்கள்; 'அவன் திருவடிகளை ப்ராபித்தாரைக் கைவிடானோ?' என்னில், — 'திருவநந்தாழ்வானைக் கைவிடிலன்றோ திருவடிகளை ப்ராபித்தாரைக் கைவிடுவது' என்கிறார். ()

ஈடு ;— அவ ;— ஒன்பதாம்பாட்டு. கீழெட்டுப் பாட்டாலே ஐஹிகபோகம் அஸ்திர மென்றார்; இதில், காயிக க்லேஸாத்மகமான தபஸ்ஸைப் பண்ணி அந்தத் தப:பலம் ஸ்வர்க்கமாகக் கொண்டு ஸ்வர்க்கத்தை ப்ராபிக்கும்போது பகவத் ப்ரஸாதம் வேணும்; அது உண்டாய் ப்ராபித்தாலும் அது தன்னின் ஸ்வபாவத்தாலே நிலைநில்லாது என்கிறார்.

படிமன்னுபல்கலன் பற்றோடறுத்தைம்புலன்வென்று *
செடிமன்னுகாயம்செற்றார்களு மாங்கவனையில்லார் *
குடிமன்னுமின்சுவர்க்கமெய்தியும் மீள்வார்கள்மீள்வில்லை *
கொடிமன்னுபுள்ளுடை அண்ணல்கழல்கள் குறுகுமினோ. (கூ)

ப;—அநந்தரம், இப்படி பார லௌகிகமான ஸ்வர்க்காதி ஸுகமும் நிலை நில்லாமையாலே, நிலைநின்ற புருஷார்த்தத்தைக் கொடிகட்டிக்கொடுக்கும் ஈஶ்வரனை ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்.

படி—க்ஷேத்ரத்தையும்,
மன்னு—(கழற்றாமல்) என்றும்பூண்டு போந்த
பல்—பலவகைப்பட்ட
கலன்—ஆபரணங்களையும்
பற்றோடு—ஸங்கத்தோடேகூட
அறுத்து—விட்டு,
ஐம்புலன் — (விஷயாந்த்ர ப்ரவணமான) இந்த்ரியங்களைந்தையும்
வென்று—(ஸ்வவஶமாம்படி)வென்று
செடி மன்னு—(தீர்க்ககாலம் தபஸ்ஸு பண்ணுகையாலே) தூறுமண்டிக்கிடக்கிற
காயம்—ஶரீரத்தை
செற்றார்களும் — (உபவாஸாதிகளாலே) ஒறுத்துப்போந்தவர்களும்
மன்னும்—(இந்த்ரத்தபஃபலமாய் கல்பாவஸாந) ஸ்தாயியான
குடி—குடியிருப்பையுடைத்தாய்

இன்—ஸுகோத்தரமான
சுவர்க்கம்—ஸ்வர்க்கத்தை
எய்தியும் — பெற்றார்களேயாகிலும், (அந்தபோகஸ்தைர்யத்துக்கு உறுப்பாக)
அவனை—(பலப்ரதனான) அவனை
ஆங்கு—அங்குமிருந்து
இல்லார்—ஆஶ்ரயிக்கையில்லாதவர்கள்
மீள்வர்கள் — நிவ்ருத்தராய்ப் போவர்கள்;
மீள்வில்லை — நிவ்ருத்தியில்லாத பலமுண்டாகைக்கு
கொடி—த்வஜத்திலே
மன்னு—நித்யஸந்நிதி பண்ணும்
புள்—பெரியதிருவடியை
உடை—உடைய
அண்ணல்—ஸர்வேஶ்வரனுடைய
கழல்கள்—திருவடிகளை
நுமது ஆமின்—கிட்டப்பாருங்கோள்.
படிமன்னு என்று—ஶரீரத்தோடு பொருந்தின என்றுமாம்.

ஆறு;—இப்படி ஐஹிகமான ஐஶ்வர்யம் அல்பமுமாய் அஸ்திரமுமா யிருந்ததாகில், ஸ்வர்க்காத் யைஶ்வர்யத்தை ப்ராப்யமாகப் பற்றினாலோ? என்னில், ஸ்வர்க்காத்யைஶ்வர்ய வாஞ்சையாலே ஐஹிக விஷயஸங்க பரித்யாக பூர்வகமாக இந்த்ரியங்களை ஜயித்து ஸ்வர்க்க ப்ராப்தி விரோதி ஶரீரத்தைப் பரித்யஜித்தவர்களுக்கும் எம்பெருமானை ஆஶ்ரயியாதொழியில், அந்த ஸ்வர்க்காத் யைஶ்வர்யம் ஸித்தியாது; ததாஶ்ரயணத்தாலேஸித்தித்தாலும் அஸ்த்திரம்; ஆதலால், இப்படி அல்பாஸ்த்திரத்வ பஹுளதுக்கத்வ அநர்த்த

ஹேதுத்வாத்யநேக தோஷதூஷிதமான இந்த ஐஶ்வர்யத்தை விட்டு, பெரிய திருவடியைக் கைவிடிலும் ஸ்வாஶ்ரிதரை ஒருநாளும் ஒருதசையிலும் கைவிடாத எம்பெருமான் திருவடிகளையே பரம ப்ராப்யமாகப் பற்றுங்கள் என்கிறார். (கூ)

ஈடு;—அவ;—பத்தாம்பாட்டு. பூமியில் ஐஶ்வர்யம், ஸ்வர்க்கா நுபவம் இவை நிலைநில்லா வென்றார் கீழ்; இவைபோலன்றிக்கே ஆத்மலாபம் நிலைநின்ற புருஷார்த்தமே யென்னில்;—கீழ்ச்சொன்னத்தைக் குறித்து ஒருநன்மை யுண்டேயாகிலும் பகவதா நந்தத்தைப்பற்ற இது ஏகதேஶமா யிருக்கையாலே அதுவும் தண்ணிது; ஆனபின்பு, அவனைப்பற்றப் பாருங்கோ ளென்கிறார்.

குறுகமிகவுணர்வத்தொடுநோக்கி எல்லாம்விட்ட *
இறுகலிறப்பென்னும் ஞானிக்கு மப்பயனில்லையேல் *
சிறுகநினைவதோர்பாசமுண்டாம் பின்னும்வீடில்லை *
மறுகலிலீசனைப்பற்றி விடாவிடில்வீடஃதே. (கo)

ப;—அநந்தரம், இப்படி அஸ்திரமன்றியே ஸ்திரமான கைவல்யமும் பரம புருஷார்த்தத்தைப் பற்றப் பசையற்றிருக்கையால் நியந்தாவான ஸர்வேஶ்வர பகவத் ப்ராப்தியே அதிஶயித புருஷார்த்தமென்கிறார்

குறுக—(விஷயாந்தரங்களில் அகலப் போகாதபடி ப்ரத்யக் விஷயத்திலே) ஆஸந்நமாக
உணர்வத்தொடு—ஜ்ஞாநைக நிரூபணீயமான ஆத்ம வஸ்துவோடேகூடி
மிகநோக்கி — (தர்ஶந ஸமாநாகாரமாம்படி) மிக அநுஸந்தித்து
எல்லாம்—(ஆத்மவ்யதிரிக்த) ஸகலபுருஷார்த்தங்களையும்
விட்ட—விட்டவனாய்
இறுகல்—ஆத்மமாத்ரத்திலே பர்யவஸித்த
இறப்பு—மோக்ஷத்தை
என்னும் — புருஷார்த்தமென்றிருக்கும்
ஞானிக்கும்—ஜ்ஞாநிக்கும்
அப்பயன் — (ஸ்வயம் ப்ரயோஜநரூபமான ஸர்வேஶ்வரனை) உபாயமாகப்பற்றுகை
இல்லையேல்—இல்லையாகில்
சிறுக—அபக்ருஷ்டபுருஷார்த்தங்களை
நினைவது—ஸ்மரிக்கைக்கடியான
ஓர்பாசம்—ஸங்கம்
உண்டாம்—உண்டாம்.
பின்னும்—அதுக்குமேலே
வீடு—(ஆத்மப்ராப்திரூபமான) மோக்ஷமும்
இல்லை—ஸித்தியாது; (ஆனபின்பு)

மறுகல் இல் — ஸ்வபாவ பேதாதிரூப ஸங்கோசரஹித ப்ரதி படனாய்

ஈசனை—(ஸ்வாபாவிக) ஸமஸ்தநியந்த்ருத்வாதி ஸமஸ்த கல்யாண குணாத்மகனான ஸ்வாமியை

பற்றி — (ப்ராப்யத்வேநவும் ப்ராபகத்வேநவும்) ஸமாஶ்ரயித்து

விடாவிடில் — (அதிகார்யந்தரங்களைப் போலே ப்ரயோஜநாந்தரங்களைக்கொண்டு) அகலாதொழியில்

அஂதே—அதுவே

வீடு—பரமபுருஷார்த்தம்.

இறுகல்-ஸங்கோசமும், சிக்கெனவும்; மறுகல்-ஸ்வபாவபேதம். (க0)

ஆறு;—அஸ்திரத்வாதி தோஷாஸம்பிந்நமான கைவல்யத்தை ப்ராப்யமாகப் பற்றினாலோ? என்னில்; - ப்ராக்ருதவிஷய வைராக்ய பூர்வகமாக ஜ்ஞாந யோகநிஷ்டனானவனுக்கும் எம்பெருமானை ஆஶ்ரயித்தாலல்லது ஆத்மாவ-லோகந விரோதிகர்மம் போகாது; பகவத் ஸமாஶ்ரயணத்தாலே ஆத்மாவலோகநம் பிறப்பது; பிறந்தாலும் அந்திமதசையிலே பகவதநுஸந்தாநம்பண்ணி ப்ரதிபந்தகத்தைப் போக்காதொழியில் பின்னை ஆத்மயாதாத்ம் யாவிர்ப்பாவ லக்ஷணமோக்ஷம் ஸித்தியாது; முக்யமான மோக்ஷமாகிறதும் அந்த பகவத் கைங்கர்யமே; இப்படி கைவல்யோபாயதயா பகவத் ஸமாஶ்ரயணம் பண்ண வேண்டுகையாலும், பகவத் கைங்கர்யந்தானே பரமமோக்ஷமாகையாலும், அந்த பகவத் கைங்கர்யாபேக்ஷயா அத்யல்பஸுகமான கைவல்யத்தை விட்டுப் பகவத் கைங்கர்யத்தையே பரமப்ராப்யமாகப் பற்றுங்கள் என்கிறார். (கO)

ஈடு; — நிகமத்தில் - இத்திருவாய்மொழி பத்தும் கற்றார், ஐஶ்வர்யாதி க்ஷுத்ர புருஷார்த்தத்தைத் தவிர்ந்து பகவத் கைங்கர்யைகபோகராவரென்கிறார்.

அஂதேஉய்யப்புகுமாறென்று கண்ணன்கழல்கள்மேல் *
கொய்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்குற்றேவல் *
செய்கோலத்தாயிரம் சீர்த்தொடைப்பாடலிவைபத்தும் *
அஂகாமல்கற்பவராழ்துயர்போயுய்யற்பாலரே. (கக)

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ப;—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக து:க்கநிவ்ருத்தி பூர்வகமான ஆத்மோஜ்ஜீவநத்தை அருளிச்செய்கிறார்.

உய்ய—உஜ்ஜீவிக்கைக்கு உறுப்பாக
புகும்—கிட்டும்
ஆறு—உபாயம்
அஃதே — அதுவே,
என்று—என்று (அறுதியிட்டு)
கண்ணன்—க்ருஷ்ணனுடைய
கழல்கள்மேல்— திருவடிகளின்மேலே
கொய் —கொய்யப்படும்
பூ—புஷ்பஸம்ருத்தியையுடைத்தான
பொழில்—பொழிலையுடைத்தான
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வார்
குற்றேவல்கள்—அந்தரங்கமான கைங்கர்ய ரூபங்களாக
செய்—செய்த
கோலம்—அலங்காரபூர்ணமாய்
ஆயிரம்—ஸஹஸ்ரஸங்க்யாதமாம்
சீர்த் தொடை — சீருந் தொடையுமுடைய
பாடல்—பாடலான திருவாய்மொழியில்
இவைபத்தும்—இவைபத்தையும்
அஃகாமல்—நழுவாதபடி
கற்பவர்—கற்பவர்
ஆழ் — (ஐஶ்வர்ய கைவல்யங்களிலே) ஆழங்காற்பட்டுவரும்
துயர்—து:கம்
போய்—போய்
உய்யற்பாலர்—(பகவத்பக்திரூபமான) ஆத்மோஜ்ஜீவந ப்ரகாரத்திலே யாவர்கள்.

இது - கலித்துறை. (கக)

ஆறு;—ஆழ்வார் ஸர்வோஜ்ஜீவநார்த்தமாக எம்பெருமானைப் பாடின இத்திருவாய்மொழியைத் தப்பாமல் கற்பார் நிரஸ்தாகில து:க்கராய்க்கொண்டு பகவத் கைங்கர்ய மஹாரஸத்தைப் பெறுவார் என்கிறார். (கக)

திருவாய்மொழி நாலாம்பத்து
முதற்றிருவாய்மொழி வ்யாக்யாநங்கள்
முற்றுப்பெற்றன.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

இரண்டாந்திருவாய்மொழி — பாலனாய்ப் ப்ரவேசம்

ஆறு ;—(பாலனாய்) இப்படி பரமப்ராப்யபூதனான எம்பெருமானோடே கலந்து பரிமாறவேணுமென்று ஆசைப்பட்டுப் பெறாத நிரவதிகவ்யஸநத்தாலே தாம் அலற்றுகிறபடியை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். *

ப ;—இரண்டாந்திருவாய்மொழியில் ; கீழ் - இதரபுருஷார்த்தங்களுடைய அபகர்ஷோபதேச பூர்வகமாக ஈஶ்வரனுடைய பரமப்ராப்யத்வத்தை உபதேசிக்கையாலே, ஆத்மாவினுடைய அநந்யபோக்யதையை அநுஸந்தித்து, அவ்வழியாலே பஹுவித ஸஹஜ போக்யாகாரயுக்தனான ஸர்வேஶ்வரனுடைய விப்ரக்ருஷ்டாபதாநங்களில் போகாபிநிவேஶயுக்தராய் ; அவனுடைய வடதளஶாயித்வத்தையும், கோபிகாலீலா ஸங்கித்வத்தையும், த்ரைவிக்ரமப்ரகாரத்தையும், பாரத்வவைபவத்தையும், ஸப்தருஷபநிரஸநத்தையும், ஸ்ரீவராஹப்ராதுர்ப்பாவத்தையும், அம்ருதமதநவ்ருத்தாந்தத்தையும், லங்காநிரஸநத்தையும், அஸாதாரண சிஹ்நங்களையும், ஆபரணஶோபையையும் அநுஸந்தித்து, ஏவம்விஶிஷ்டனான ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே போக்யதாஸூசகமான திருத்துழாய் விஷயமாகத் தமக்குப் பிறந்த ஆதர விஶேஷத்தைப் பரிவர் பார்ஶ்வஸ்தர்க்குச் சொல்லுகிற பாசுரத்தை, விஶ்லிஷ்டையான நாயகியினுடைய ஆர்த்த்யதிஶயங்கண்டு நற்றாயானவள் வினவினார்க்கு உரைத்த பாசுரத்தாலே அருளிச்செய்கிறார். *

ஈடு ;—ராமவிரஹத்தில் திருவயோத்யையிலுள்ளார் கூப்பிட்டாற்போலே, தாமும் தம்முடைய கரணக்ராமமுமாய்ப் பெருவிடாய்ப்பட்டுக் கூப்பிட்டார் - * முடியானேயில் ; இக்கூப்பிட்டை அல்லாதார் க்ஷுத்ர ப்ரயோஜநங்களுக்காகப் புறம்பே கூப்பிடுகிற படியைக் கண்டு, 'இது இவ்விஷயத்திலே யாகப் பெற்றதில்லையே!' என்று நொந்து, நாம் முந்துற முன்னம் இவ்விஷயத்திலே கூப்பிடப்பெற்றோமிறே' என்று உகந்தார், * சொன்னால் விரோதத்தில் ; 'அவ்வளவேயோ? பகவதர்ஹகரணனாகவும் பெற்றோம்' என்றார் - * சன்மம் பலபலவில் ; அல்லாதார், தந்தாமுடைய கரணங்களைப் பாழே போக்குகைக்கு அடியான ஐஶ்வர்ய கைவல்யங்களிலே ப்ரவணராய் அநர்த்தப்படுகிற படியைக்கண்டு, அவற்றினுடைய அல்பாஸ்த்திரத்வாதி தோஷங்களையும், ஸர்வேஶ்வரன் பரமப்ராப்யனாயிருக்கிற படி

யையும் உபதேசித்து, 'அவற்றைவிட்டு அவனைப் பற்றுங்கோள்' என்றார் - * ஒருநாயகத்தில். ப்ரஸங்காத், "இவ்வொருநாயகம் அருளிச்செய்தவரே கிடீகோள் * சூழ்விசும்பணிமுகிலும் அருளிச் செய்தார்; இத்தை ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவுள்ளம் பற்றுங் கோள்" என்று பிள்ளை அருளிச்செய்வர். அதாவது - "இது ப்ரத் யக்ஷிக்கிறுப்போலே இஶ்ஶரீர ஸமநந்தரம் அதுவும் காணவன்றே நாம் புகுகிறது; இனி எத்தனைநாள்" என்று.

ஆக, மூன்று திருவாய்மொழியாலும் - இப்படி பரோபதேசம் பண்ணின விது ஸம்ஸாரிகள் திருந்துகைக்கு உடலன்றிக்கே, அத் தாலும் தமக்கு பகவத் விஷயத்திலே விடாய் பிறந்தபடி சொல்லு கிறார் - இதில்; அதாவது - இதர விஷயங்களினுடைய தோஷாநு ஸந்தாந பூர்வகமாக பகவத் வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்திறே, 'அவனைப் பற்றுங்கோள், இதர விஷயங்களை விடுங்கோள்' என் கிறது; அது அவர்களுக்கு உடலன்றிக்கே தமக்கு வைஶத்யம் பிறக்கைக்கு உடலாயிற்று; ஸ்ரீவிபீஷணாழ்வான் ராவணனுக்குச் சொன்ன ஹிதம் அவனுக்கு உடலன்றிக்கே தனக்குப் பெருமாளைப் பற்றுகைக்கு உடலானாற்போலேயும், ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் ஹிரண் யனுக்குச்சொன்ன ஹிதம் அவன் நெஞ்சிலேபடாதே தனக்கு பகவத் பக்தி மிகுகைக்கு உடலானாற்போலேயும்; * வீடுமின் முற்றத்தி லும் * சொன்னால் விரோதத்திலும் * ஒருநாயகத்திலும் - பிறரைக் குறித்துச்சொன்ன ஹிதம் அவர்களுக்கு உறுப்பன்றிக்கே, மூன்று களையும் பறித்துச் சங்காயமும் வாரின பயிர் ஶதஶாகமாகப் பணைத் துப் பலிக்குமாபோலே தமக்கு அவன் பக்கலிலே அபிநிவேஶம் ஶதஶாகமாகப் பணைக்கைக்கு உடலாயிற்று.

இவர்களுக்குக் களையாவது - பகவத்வ்யதிரிக்தவிஷயங்களும், அஸேவ்ய ஸேவைபண்ணித் திரிகையும், 'ஐஶ்வர்ய கைவல்யங்கள் புருஷார்த்தம்' என்றிருக்கையும்; சங்காயமாவது - பயிர் தன்னிலே யுண்டாய் அறியாதார்க்குப் பயிர்போலே பிரதிபாஸித்து அச்சங் காயம் வாரிப்பொகடாதபோது நெல் பதர்க்கும் படியாயிருப்ப தொன்று; அப்படியே கைவல்யமும். இவ்வபிநிவேஶமும் இப்படிச் செல்லா நிற்கச்செய்தே முன்பு * முடியானேயிற் பிறந்த விடாய்

ரஸாந்தரங்களாலே அபிபூதமாய்க் கிடந்தது; அந்தவிடாய் தலை யெடுத்து, 'தேசகாலங்களால் விப்ரக்ருஷ்டமான அவன் படிகளை யும் தத்தத் தேசகால விசிஷ்டமாக்கி இப்போதே பெற்று அநு பவிக்கவேணும்' என்னும் விடாயும் பிறந்தது; அது அப்போதே கிடையாமையாலே, அந்த விடாய்தான் அவஸ்தாந்தரத்தைப் பிறப்பித்தது.

அவ்வவஸ்தாந்தரந்தான் - ஸர்வேச்வரனோடே கலந்து பிரிந்தா ளொருபிராட்டி தசையாய் - பிராட்டிதான் மோஹங்கதையாய்க் கிடக்க, அவள் தசையை அநுஸந்தித்த திருத்தாயார் 'தேசகாலங் களால் விப்ரக்ருஷ்டமான அவன் படிகளையும் தத்தத்தேசகால விசிஷ்டமாக்கி இப்போதே பெற்று அநுபவிக்கவேணு மென்று நின்றாள்' என்கிற பாசுரத்தாலே ஸ்வதசையைப் பேசுகிறாள். திருவடியைக்கண்ட பீமஸேநன், (க) "ஸாகரம் [illegible] । [illegible] - ஸாகரம் தர்த்து முத் யுக்தம் ரூபமப்ரதிமம்மஹத் । த்ரஷ்டுமிச்சாமி" என்று நீ முன்பு கடல்கடந்த வடிவை நான் இப்போது காணவேணு மென்றானிறே, 'இவன் சக்திமான்' என்று தோற்றுகையாலே; அப்படியே இவளும் பகவச் சக்தியை யறிந்தபடியாலேயும், தன் சாபலாதிசயத்தாலேயும், அவாவின் மிகுதியாலேயும், பூதகாலத்திலுள்ளவற்றையும் இப் போதே பெறவேணுமென்று ஆசைப்படா நின்றாள் என்கிறாள். *

ஈடு ;—அவ ;—முதற்பாட்டு; வடதளசாயியினுடைய திருவடி களில் சாத்தின திருத்துழாயைச் செவ்விபோடே இப்போதே பெற வேணுமென்று ஆசைப்படா நின்றாள் என்கிறாள்.

பாலனாயேழுலகுண்டுபரிவின்றி *
ஆலிலையன்னவசஞ்செய்யுமண்ணலார் *
தாளிணைமேலணிதண்ணந்துழாயென்றே
மாலுமால் * வல்வினைபேன்மடவல்லியே. (க)

ப ;—முதற்பாட்டில், வடதளசாயி திருவடிகளில் திருத்துழாயைப் பெற வேணுமென்று ப்ரமியாநின்றாள் என்கிறாள்.

(க) பாரத உத்யோக.

பாலனாய் — அதிபால்யமான வடிவை யுடையனாய்
ஏழ் உலகு—ஸமஸ்தலோகங்களையும்
உண்டு—அமுதுசெய்து, அத்தால்
பரிவு இன்றி—ஒருமிறுக்கு இன்றியே
ஆலிலை—ஆலந்தளிர்மேலே
அன்னவசம்செய்யும் — உண்டதுக்கு ஈடாகக் கிடக்கும்
அண்ணலார்—ஸ்வாமியானவருடைய
தாளிணைமேல்—திருவடிகளிரண்டின் மேலே
அணி—'இவ்வபதாநத்துக்குத்தோற்று அன்புடைய ஸூரிகள்) சாத்தின
தண்—குளிர்ந்த
அம்—செவ்வியையுடைய
துழாய் — திருத்துழாயை (ப்பெற வேணும்)
என்றே—என்கிற
மாலும்—('அதீதகாலத்திலது இப்போது கிட்டாது') என்றறியாதே ப்ரமியாநின்றாள்;
வல்வினையேன் — இக்கலக்கம் காண்கைக்கு அடியான பாபத்தை யுடையளான என்னுடைய
மடம்—பற்றிற்றுவிடாத துவட்சியை யுடையளாய்
வல்லி — உபக்நாபேக்ஷமான கொடி போலே யிருக்கிற இவள்.
அகடிதங்களை கடிப்பிக்கும் ஸர்வ ஶக்திக்குச் செய்ய வொண்ணாததில்லை யென்றிருக்கை.
"காலிணை மேலணி தண்ணந்துழாய்" என்றுபாடம்சொல்லுவாருமுளர். (க)

ஆறு ;—எம்பெருமான் ஒருபிள்ளையாய்ப் பிள்ளைத்தனத்தாலே முன்பு காணப்படுகிற இந்த ஏழுலகங்களையும் உண்டு அதனால் ஓர் அநிஷ்டகந்தமின்றியே ஆலிலையிலே கண்வளர்ந் தருளினபோது அவன் திருவடிகளிலே யணிந்த திருத்துழாயை இக்காலத்திலே பெறவேணுமென்று ஆசைப்படா நின்றாள்; இப்படி ஸர்வ ஶக்தியான எம்பெருமான் தன்னாலும் ஸம்பாதிக்க வொண்ணாத ஒன்றை இவள் ஆசைப்படுகிறது என்னுடைய பாபமிறே என்று இவளுடைய திருத்தாயார் அலற்றுகிறாள். (க)

ஈடு ;—அவ ;—இரண்டாம்பாட்டு. 'ஸர்வரக்ஷகனான ஸர்வேஶ்வரன் ப்ரளயாபத்திலே தன் விபூதிரக்ஷணம் பண்ணினானாகில், அது உன் பேற்றுக்கு உடலாமோ?' என்ன, 'அது உடலன்றாகில் தவிருகிறேன், என்பருவத்திற் பெண்களுக்கு உதவின விடத்திலே எனக்கு உதவத் தட்டு என்?' என்னாநின்றாள் என்கிறாள்.

வல்லிசேர்நுண்ணிடை யாய்ச்சியர்தம்மொடும் *
கொல்லைமைசெய்து குரவைபிணைந்தவர் *
நல்லடிமேலணி நாறுதுழாயென்றே
சொல்லுமால் * சூழ்வினையாட்டியேன்பாவையே. (௨)

ப ;—அநந்தரம், திருக்குரவை கோத்த க்ருஷ்ணன் திருவடிகளில் திருத்துழாயை எப்போதும் பிதற்றிடா நின்றாள் என்கிறாள்.

வல்லி—வல்லியோடு
சேர்—ஒத்த
நுண்—நுண்ணிய
இடை—இடையையுடைய
ஆய்ச்சியர்தம்மொடும்—ஆய்ச்சியர் தங்களோடு ஒருகோவையாக (அவர்கள் வரம்பழியும்படி)
கொல்லைமை—அமர்யாதமான வ்யாபாரத்தை
செய்து—பண்ணி
குரவை—குரவையை
பிணைந்தவர்—கோத்தவருடைய
நல் — (ந்ருத்தத்துக்கிடாக மிதிக்கிற) அழகிய
அடிமேல்—திருவடிகளிலே
அணி—அணியப்பட்ட
நாறு—பரிமளோத்தரமான
துழாய் என்றே—திருத்துழாயென்றே
சொல்லும்—சொல்லாநின்றாள் ;
சூழ் — (இவளை இப்படி காணும்படி தப்பாமல்) சூழ்ந்த
வினையாட்டியேன்—பாபத்தை யுடைய என்
பாவை—பெண்பிள்ளையானவள். (௨)

ஆறு ;—(வல்லிசேர்) தன்னுடைய ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதி கல்யாண குணவிஷ்காரத்தாலே திருவாய்ப்பாடியில் பெண்பிள்ளைகளை வாயடித்துத் தம் திருவடிகளிலே வந்துவிழும்படி வசீகரித்து அவர்களோடே திருக்குரவை கோத்தருளின வண்டுவரைப் பெருமானுடைய அவ்வழகிய திருவடிகளிலே யணிந்த நாறுதுழாயை ஆசைப்படுகிறாள் என்கிறாள். (௨)

ஈடு ;—அவ ;—மூன்றாம்பாட்டு. ஒருருக்காக உதவினதேயன்றிக்கே, ஒருநாட்டுக்காக உதவினவன் பக்கலுள்ளது பெறத் தட்டு ஏன் ? என்னுநின்றாள் என்கிறாள்.

பாவியல்வேத நன்மாலைபலகொண்டு *
தேவர்கள்மாமுனிவ ரிறைஞ்சநின்ற *
சேவடிமேலணி செம்பொன்துழாயென்றே
கூவுமால் * கோள்வினையாட்டியேன்கோதையே. (௩)

ப ;—அநந்தரம், ஸர்வலோகமும் ஸ்துதிக்கும்படியான த்ரிவிக்ரமன் திருவடிகளில் திருத்துழாயைச் சொல்லி அழையாநின்றாள் என்கிறாள்.

பா—சந்தஸ்ஸிலே
இயல்—வர்த்திப்பதான
வேதம்—வேதஸமூஹங்களையும்
நல்—திவ்யமாய்
பல—பலவகைப்பட்ட
மாலை—மாலைகளையும்
கொண்டு—கொண்டு,(க) "ஸமௌஜஸஸம்ஸ்தாணாஸ்து ஸங்கைஸ் ஸம்ஸ்தூரணம்" என்கிறபடியே)
தேவர்கள்—தேவர்களும்
மா முனிவர் — ப்ரதாநயரான ஸநகாதி முனிகளும்
இறைஞ்ச—ஆராதிக்கும்படி
நின்ற—(லோகத்தையளந்து) நின்ற
சே அடிமேல்—சிவந்த திருவடிகளின் மேலே
அணி—(அவர்கள்) அணிந்த
செம்—சிவந்த
பொன் — பொன்போலே ஸ்ப்ருஹணீயமான
துழாயென்றே — திருத்துழாயைச் சொல்லியே
கூவும்—கூப்பிடாநின்றாள்,
கோள் வினை யாட்டியேன் — ப்ரபலமான பாபத்தையுடையேனுடைய
கோதை—பூமாலைபோலே யிருக்கிறவள். மாலையை யுடையவளாகவுமாம்.
கோள்—மிடுக்கு கூவுதல் - அழைத்தலாய் கூப்பிடுதல். (௫)

ஆறு ;—(பாவியல்.) ஸாதுபதவிரசிதமாய் அதிமங்களமாய் அஸங்க்யேயமாயிருந்த வேதங்களாகிற மாலைகளைக்கொண்டு சதுர்முகாதி தேவர்களும் ஸநகாதிமுநிகளும் இறைஞ்சும்படி தன்னைக் கொடுத்துக்கொண்டு பாற்கடல் சேர்ந்த பரமனுடைய அழகிய திருவடிகளிலே யணிந்த செம்பொற்றுழா யென்று இவள் கூப்பிடா நிற்கும் என்கிறாள். (௫)

ஈடு ; — அவ :—நாலாம்பாட்டு. பெருக்காறு வற்றினாற்போலே ஒருகால் எல்லாரையும் வாழ்வித்துப்போன அவதாரத்தி லுள்ளத்தை நான் இப்போது எங்கே தேடுவேன்? என்ன, அது தவிருகிறது, என்றுமொக்க ஏகரூபமாயிருக்கிற பரமபத நிலயன் திருவடிகளில் திருத்துழாய் பெறத் தட்டு என்? என்னாநின்றாள் என்கிறாள்.

> கோதில்வண்புகழ் கொண்டுசமயிகள் *
> பேதங்கள்சொல்லிப் பிதற்றும்பிரான்பரன் *
> பாதங்கள்மேலணி பைம்பொன்துழாயென்றே
> ஓதுமால் * ஊழ்வினையேன் தடந்தோளியே. (௬)

(க) வி-த;மாங்களய ஸ்தவம்.

ப ;—அநந்தரம், ஸௌரிபோக்யனான ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளில் திருத்துழாயைச் சொல்லிப் பாராயணம் பண்ணாநின்றாள் என்கிறாள்.

கோது — (ஸ்வோத்கர்ஷார்த்தமாகிற) கோது
இல—இன்றியே (பரார்த்தமாயே அநுபாவ்யமா) யிருக்கிற
வண்—விலக்ஷணமான
புகழ்—குணங்களை
கொண்டு—கொண்டு
சமயிகள்—ஸீலாதிகளாயும் ஸௌர்யாதிகளாயும் ஆநந்தாதிகளாயுமிருக்கிற குணங்களிலே தனித்தனியே வ்யவஸ்திதராய்
பேதங்கள் — (தத்தத் குணோத்கர்ஷ) பேதங்களை
சொல்லி—சொல்லி
பிதற்றும்—(ஸரஸமான) அக்ரமோக்திகளைப் பண்ணும்படி இவர்களை அநுபவிப்பிக்கிற

பிரான்—மஹோபகாரகனான
பரன்—ஸர்வஸ்மாத்பரனுடைய
பாதங்கள்மேல்—திருவடிகளிலே
அணி — (குணவித்தரான ஸௌரிகள்) சாத்தின
பை—பசுத்து
பொன்—நன்றான
துழாயென்றே—திருத்துழாயென்றே
ஓதும் — (எப்போதும்) சொல்லாநின்றாள்,
ஊழ்வினையேன் — அநாதிஸித்தமான மஹாபாபத்தையுடையேனான என்னுடைய
தடம்—சுற்றுடைத்தான
தோளி—தோளையுடையவள்.
ஊழ்வினை—பழவினை. ச)

அரு ;- (கோதில்.) - ஒரொரு குணவிஶேஷத்தை அநுபவித்தால், "இந்தக்குணமல்லது மற்றொன்று அறியேன்" என்று அந்தக்குணத்துக்குத் தோற்று அடிமையாயிருக்கும் திவ்ய புருஷர்களாலே, இநாநா பூதகுணங்களைக் காட்டில் ஸ்வாநு பூதகுணத்துக்கு வைலக்ஷண்யத்தை விவஶராய்க்கொண்டு பரஸ்பரம்சொல்லிப் பிதற்றப்படுகிற எம்பெருமானுடைய பாதங்கள்மேலணி பைம்பொன் துழாயிலே யுள்ள ஆசையாலே அத்துழாயென்றே இவள் பலகாலும் அலற்றும் என்கிறாள். (ச)

ஈடு ;—அவ ;—அஞ்சாம்பாட்டு. 'ஸர்வஸ்மாத்பரனாய்ப் பரமபத நிலயனாய் அப்ராப்யனா யிருக்கிறவன திருவடிகளில் சாத்தின திருத்துழாயை என்னாலே தேடப்போமோ?' என்ன, 'ஆனால், இங்கே என்னோட்டையா ளொருத்திக்காகத் தன்னைப்பேணாதே எருதேழடர்த்த க்ருஷ்ணன் திருவடிகளிற் சாத்தின திருத்துழாய் பெறத் தட்டு என்? என்னாநின்றாள்' என்கிறாள்.

தோளிசேர்பின்னைபொருட்டெருதேழ்தழீ இக்
கோளியார்*கோவலனார் குடக்கூத்தனார் *
தாளிணைமேலணி தண்ணந்துழாயென்றே
நாளுநாள் * நைகின்றதால் என்தன்மாதரே. (௫)

ப ;—அநந்தரம், எருதேழடர்த்த க்ருஷ்ணன் திருவடிகளில் திருத்துழாயைச்சொல்லி ஶிதிலையாகா நின்றாள் என்கிறாள்.

தோளி—(அவன் விரும்பும்படியான) தோளையுடையளாய்
சேர்—(ஶீலாதிகளால் அவனுக்கு) ஸத்ருஶையான
பின்னைபொருட்டு—நப்பின்னைக்காக
எருதுஏழ்—எருது ஏழையும்
தழீஇக்கோளியார்—(ஒருகாலே) தழுவிக்கொள்ளும் ஸ்வபாவராய்
கோவலனார்—(அவர்களுக்கு அநுரூபமான) கோபத்வத்தையுடையராய்
குடக்கூத்தனார்—குடக்கூத்தாலே மநோஹர சேஷ்டிதரானவருடைய
தாளிணைமேல்—திருவடிகளிரண்டின் மேலே
அணி—(அந்த வீராபதாநத்துக்குத் தோற்று அவர்கள்) இட்ட
தண்—குளிர்ந்து
அம்—அழகிய
துழாயென்றே—திருத்துழாயென்றே
நாளுநாள்—நாடோறும் நாடோறும்
என்தன் மாதர்—என்பெண்பிள்ளை
நைகின்றது—நைகிறது. (௫)

ஆறு ;—(தோளிசேர்.) - தன் திருத்தோளினழகாலே வண்டுவரைப் பெருமாளிலும் அதிகதரையாய் மற்றுமுள்ள தன்னுடைய திவ்யாவயவ ஸௌந்தர்யத்தினால் அவனோடு ஸத்ருஶையா யிருந்த நப்பின்னைப் பிராட்டியைத் திருமணம் புணருகைக்காக எருதேழ் தழுவிக்கொண்டு ஆஶ்ரிதஜந நயநஸம்ருத்யர்த்தமாகக் குடக்கூத்தாடியருளின வண்துவரைப் பெருமானுடைய தாளிணைமேல் அணி தண்ணந்துழா யென்றே நாளும்நாள் நைகின்றதால் என்தன் மாதர் என்கிறாள். (௫)

ஈடு ;—அவ ;—ஆறும்பாட்டு. மனிச்சுழியாமல் நப்பின்னைப்பிராட்டிக்கு உதவினாற்போலன்றிக்கே, ஸ்ரீபூமிப்பிராட்டிக்காகத் தன்னையழிய மாறியும் உதவினவனுடைய திருவடிகளில் திருத்துழாயை ஆசைப்படாநின்றாள் என்கிறாள்.

மாதர்மாமண்மடந்தைபொருட்டேனமாய் *
ஆதியங்காலத்தகலிடக்கீண்டவர் *
பாதங்கள்மேலணிபைம்பொன்துழாயென்றே
ஓதுமால் * எய்தினளென்தன்மடந்தையே. (௬)

ப ;—அநந்தரம், ஸ்ரீ பூமிப்பிராட்டிக்கு உதவின ஸ்ரீ வராஹநாயனார் திருவடிகளில் திருத்துழாயென்று எப்போதும் சொல்லும்படி இவள் பிச்சேறினாள் என்கிறாள்.

மாதர்—நாரீணாமுத்தமையாய்
மா—ஶ்லாக்யையான
மண்மடந்தைபொருட்டு — ஸ்ரீ பூமிப்பிராட்டிக்காக
ஏனம் ஆய் — (நீருக்கும் சேற்றுக்கும் இறாயாத) வராஹவேஷத்தை யுடையனாய்
ஆதி—கல்பாதியாய்
அம் — (ப்ராதுர்ப்பாவ யோக்யதையாகிற) நன்மையையுடைய
காலத்து—காலத்திலே
அகல் இடம்—விஸ்தீர்ணையான ப்ருதிவியை
கீண்டவர்—(அண்டத்தினின்றும்) ஒட்டுவிடுவித்து எடுத்துக்கொண்டு ஏறினவருடைய
பாதங்கள்மேல் — திருவடிகளின் மேலே
அணி—(ஸநகாதிகள் சாத்தின
பை—பசுத்த
பொன்—தர்ஶநீயமான
துழாய்என்றே—திருத்துழாயென்றே
ஓதும் — (எப்போதும்) சொல்லும்படியான
மால்—ப்ரமத்தை
எய்தினள்—அடைந்தாள்,
என்தன் மடந்தை — என் விலக்ஷணமான மடப்பத்தையுடையவள்.

ஆறு ;—(மாதர்) நிரதிஶய ஸௌந்தர்ய ஸௌஶீல்யாதி கல்யாணகுண மஹோததியான ஸ்ரீபூமிப்பிராட்டிக்காகப் போய்க் கல்பத்தினுடைய ஆதிகாலத்திலே அபிரமணீய திவ்ய வராஹரூபனாய்த் தன்னுடைய திவ்ய தம்ஷ்ட்ரையாலே ப்ரளயஸமயத்தில் ரஸாதலஸ்தமான பூமண்டலத்தை இடந்தெடுத்தருளினவன் பாதங்கள் மேலணி பைம்பொன் துழாயென்றே ஓதும் மாலெய்தினள் என்தன்மடந்தை என்கிறாள். (௬)

ஈடு ;—அவ ;—ஏழாம்பாட்டு அம்ருதமதநதசையிலே பெரிய பிராட்டியாரைத் திருமார்பிலே வைத்தருளினவனுடைய திருவடிகளிற் சாத்தின திருத்துழாயை ஆசைப்படாநின்றாள் என்கிறாள்.

மடந்தையை வண்கமலத்திருமாதினைத் *
தடங்கொள் தார்மார்பினில் வைத்தவர் தாளின்மேல் *
வடங்கொள் பூந்தண்ணந்துழாய்மலர்க்கே இவள்
மடங்குமால் * வாணுதலீரென்மடக்கொம்பே. (எ)

ப;—அநந்தரம், அர்ருதமதநதசையிலே பிராட்டியைத் திருமார்பிலே வைத்தவனுடைய திருவடிகளில் திருத்துழாய் நிமித்தமாக இவள் துவளா நின்றாள் என்கிறாள்.

மடந்தையை — (நித்யாநுபாவ்யமான) மடந்தைப்பருவத்தை யுடையளாய்
வண்—(க) "விகாஸிகமலேஸ்திதா - விகாஸிகமலேஸ்திதா" என்கிறபடியே தர்ஶநீயமான
கமலம் — தாமரைப்பூவை இருப்பிடமாகவுடையளாய்
திரு—(க) "ஸ்ரீர்தேவீ - ஸ்ரீர்தேவீ" என்கிறபடியே) திருநாமத்தை யுடையளாய்
மாதினை—"ஸௌந்தர்யாதிஜ்யோதிஸ்புரத்காந்திமதீ" என்கிறபடியே) மாதுமையாலுண்டான ஸௌந்தர்யாதிகளையுடையவளை
தடம் கொள்—பரப்பை உடைத்தாய்
தார்—(ஈஶ்வரத்வஸூசகமான) மாலையையுடைய
மார்பினில்—திருமார்பிலே
வைத்தவர்—(உ) "யயௌ வக்ஷஸ்தலம் ஹரே: - யயௌ வக்ஷஸ்தலம்" என்கிறபடியே அவளை றும்படி) வைத்தருளினவருடைய
தாளின்மேல்—திருவடிகளில் (தத்காலவர்த்திகளான தேவர்கள் சாத்தின)
வடம்—தொடையை
கொள்—உடைத்தாய்
பூ—தர்ஶநீயமாய்
தண்—குளிர்ந்த
அம்—செவ்விய
துழாய்மலர்க்கு—திருத்துழாய்ப்பூந்தாருக்கு
வாள் நுதலீர்—உஜ்ஜ்வலமான நெற்றியையுடையவர்களே !
என்—எனக்கு
மடம்—பவ்யையாய்
கொம்பு—வஞ்சிக்கொம்புபோலே தர்ஶநீயையான
இவள்—இவள்
மடங்கும்—(அவஸந்நையாய்ச்) சுருளாநின்றாள்
உங்களைப்போலே இவளையும் உஜ்ஜ்வலாவயவையாகக் காணவல்லேனே என்று கருத்து.
வடங்கொள்கை--தழைத்தலாகவுமாம்.

(க) வி-பு-க-கூ ௧௦௦.   (உ) வி.பு க-கூ-௧௦௫.

ஆறு ;—(மடந்தையை.) ஸர்வலோகேஶ்வரியாய் ஸௌந்தர்ய ஸௌகுமார்யாத்யநவதிககுணகண விபூஷிதையாயிருந்த பெரிய பிராட்டியை, அதிவிஶாலமாய் அதிபரிமள துளஸீவிலஸிதமான திருமார்பில் வைத்தவர் தாரின்மேல் வடங்கொள்பூந் தண்ணந் துழாய்மலரை ஆசைப்பட்டுப் பெருமையாலே முடிந்தாளென்று அலற்றுகிறாள். (எ)

ஈடு ;—அவ ;—எட்டாம்பாட்டு, ஸ்ரீ ஜநகராஜன் திருமகளுடைய விரோதியைப் போக்கின சக்ரவர்த்தி திருமகன் திருவடிகளிற் சாத்தின திருத்துழாயை ஆசைப்படாநின்றாள் என்கிறாள்.

கொம்புபோல்சீதை பொருட்டிலங்கைநகர் *
அம்பெரியுய்த்தவர் தாளிணைமேலணி *
வம்பவிழ் தண்ணந்துழாய்மலர்க்கே இவள்
நம்புமால் * நானிதற்கென்செய்கேன் நங்கைமீர் ! (அ)

ப ;—அநந்தரம், ஜநகராஜன் திருமகளுக்காக லங்காநிரஸநம்பண்ணின சக்ரவர்த்திதிருமகன் திருவடிகளில் திருத்துழாய்க்கு விருப்பத்தையுடையளாகாநின்றாள் என்கிறாள்

கொம்புபோல்—வஞ்சிக்கொம்புபோலே அபிரூபையாய்
சீதைபொருட்டு—(க) "கேஷத்ரே ஹலமுகக்ஷதே" என்கிறபடியே அயோநிஜையான ஸ்ரீ ஜநகராஜன் திருமகளுக்காக
இலங்கைநகர்—லங்காநகரத்திலே
அம்பு எரி—ஶராக்நியை
உய்த்தவர்—ப்ரவேஶிப்பித்தவருடைய
தாளிணைமேல்—திருவடிகளின்மேலே
அணி (உ) "ஸஹ பத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்" என்று ஸ்துதித்த ப்ரஹ்மாதிகள் சாத்தின
வம்பு அவிழ்—அபிநவபரிமளவிகாஸியாய்
தண்—குளிர்ந்து
அம்—அழகிய
துழாய்—திருத்துழாயினுடைய
மலர்க்கு—பூந்தாருக்கு
இவள்—இவள்
நம்பும்—விருப்பத்தையுடையளாகாநின்றாள்
நங்கைமீர்—பூர்ணைகளானவர்களே !
இதற்கு—இந்த அதீதவிஷயாபிநிவேஶத்துக்கு
நான்—நான்
என்செய்கேன்-எத்தைச் செய்வேன்?.

(க) ரா-ஸு கக கக. (உ) ரா யு கஉ-கச.

அவன்தான் இன்னமும் அவதரித்து உபகரிக்குமதொழிய என்னுற் செய்யலாவதில்லையென்று கருத்து. (அ)

ஆறு ;—(கொம்பு.) அவையெல்லாம் ஆசைப்படலாம் ; திவ்யாத்ம குணங்களாலும் திவ்ய ரூபகுணங்களாலும் பரமபுருஷ திவ்ய மஹிஷியாய் ஸர்வ மஹேஸ்வரியான பெரியபிராட்டியிலும் உத்க்ருஷ்டதையா யிருந்த ஸ்ரீ ஜநகசக்ரவர்த்தி திருமகளுக்காக இலங்கைநகர் அம்பெரியுய்த்த தயரதற்குமகன் திருவடிகளில் திருத்துழாயை ஆசைப்படுவாருளரோ? இவள் திருத்துழாயை ஆசைப்படா நின்றாள் ; நான் இதற்கு என்செய்கேன் நங்கைமீர் ? என்று கூப்பிடுகிறாள். (அ)

ஈடு ;—அவ ;—ஒன்பதாம்பாட்டு. "அவனுடைய ஆயுதாதிகளைக் காணவேணும்" என்று சொல்லப்புக்கு முடியச் சொல்லமாட்டாதே நோவுபடாநின்றாள் என்கிறாள்.

நங்கைமீர்நீருமோர் பெண்பெற்றுநல்கினீர் *
எங்ஙனேசொல்லுகேன் யான்பெற்றவேழையை *
சங்கென்னும்சக்கரமென்னும் துழாயென்னும் *
இங்ஙனேசொல்லுமிராப்பக லென்செய்கேன் ? (கூ)

ப ;—அநந்தரம், அவனுடைய அஸாதாரணசிஹ்நங்களை எப்போதும் சொல்லாநின்றாள் என்கிறாள்.

நங்கைமீர்—பரிபூர்ணைகளான
நீரும்—நீங்களும்
ஓர் பெண் – ஒரு பெண்ணை
பெற்று—பெற்று
நல்கினீர் — ஸ்நேஹித்து வளர்த்தி [கோள் ;
யான்—நான்
பெற்ற—பெற்ற
ஏழையை—சபலையான இவளை
எங்ஙனம்—எப்படி
சொல்லுகேன்—சொல்லுவேன் ? (ஆனமட்டுஞ்சொல்லில்)
சங்கு என்னும்—(அவனுக்கு அஸாதாரணசிஹ்நமான) சங்கென்பது
சக்கரமென்னும்—சக்கரமென்பது
துழாயென்னும்—(அவன் திருவடிகளில்) திருத்துழாயென்பதாய்க்கொண்டு
இராப்பகல்—அஹோராத்ர விபாகமில்லாதபடி
இங்ஙனே—இப்படி தனித்தனியே
சொல்லும் – சொல்லாநின்றாள் ;
என்செய்கேன்—இதற்கு ஏது செய்வேன் ?

ஸ்வரூபத்தைப்பார்த்து இவள் வாய்மூடும்படி பண்ணவோ? தாத்காலிகமான அஸாதாரண சிஹ்நத்தைச் சொல்லும்படி பலத்தையுண்டாக்கவோ? அவைதன்னை இப்போது ஸந்நிஹிதமாக்கவோ? ஒன்றும் செய்யமுடியாது என்று கருத்து. நீரும் ஓர்பெண்பெற்று நல்கினீரென்ற விடம் - இவ்வாழ்வாருடைய ப்ரேமதசைக்கு அல்லாத ஆழ்வார்களுடைய ப்ரேமதசை ஒவ்வாதென்கிற பாவத்தை ஸூசிப்பிக்கிறது. (௯)

ஆறு ;—(நங்கைமீர்.) நங்கைமீர்! உங்களுடைய பெண்பிள்ளைகளும் எம்பெருமானை ஆசைப்பட்டுப் பெருமையாலே அத்யந்தம் அவஸந்நைகளானவர்கள் இப்பாடுபட்டாருமுளரோ? இவள்பட்டது என்தான்? என்னில்,-எம்பெருமான் திருவாழியும் திருச்சங்கமும் ஏந்தியிருந்தருளும் அவ்வழகைக் காணவேணுமென்றும், மத்ஸ்ய கூர்ம வராஹாத்ய ஸங்க்யேய திவ்யாவதார விசிஷ்டனும் திவ்யக்ரீடா விசிஷ்டனும் ஸ்ரீவைகுண்டநாதனுமிருந்தவனுடைய திருவடிகளில் திருத்துழாயைத் தத்தத்தசையிலே பெறவேணுமென்று சொல்லப்புக்கு முடியச் சொல்லமாட்டாதே, சங்கென்னும், சக்கரமென்னும், துழாயென்னும்; இங்ஙனே இராப்பகல் கூப்பிடாநிற்கும்; என்செய்கேன்? என்கிறாள். (௯)

ஈடு ;— அவ ;—பத்தாம்பாட்டு. உன்மகள் நீயிட்ட வழக்கன்றோ? அவளுக்கு ஹிதம் சொல்லி மீட்கத் தட்டு என் உனக்கு? என்றவர்களைக்குறித்து நான் சொல்லிற்றுக் கேளாதே அவனையே ஆசைப்பட்டு மிகவும் அவஸந்நையாகா நின்றாள் என்கிறாள்.

என்செய்கேனென்னுடைப்பேதை என்கோமளம் *
என்சொல்லுமென்வசமுமல்லள் நங்கைமீர் *
மின்செய்பூண்மார்பினன் கண்ணன்கழல்துழாய் *
பொன்செய்பூண்மென் முலைக்கென்று மெலியுமே. (௧௰)

ப ;— அநந்தரம், எனக்குவிதேயையன்றியே க்ருஷ்ணனுடைய ஆபரண ஶோபையிலே அகப்பட்டு அவனுடைய திருவடிகளில் திருத்துழாய் தன் முலைக்கு அலங்காரமாகவேணுமென்று உடம்பு இளையாநின்றாள் என்கிறாள்.

நங்கைமீர்—நங்கைமீர்!
என்னுடை—என்னுடைய
பேதை — (ஹிதங்கேட்கும்பருவமல்லாத) பேதையாய்
என்கோமளம்—(ஹிதஞ்சொல்லப் பொறுக்கமாட்டாத) மார்த்தவத்தை யுடைய இவள்
என்சொல்லு :—என் சொல்லிலும்

என்வசமும்—என்நினைவிலும்
அல்லள்—வருகிறிலள் ;
என்செய்கேன் — (நான் இதற்குச் செய்வதுண்டோ) ? (இவள் அவஸ்த்தை இருந்தபடி !
மின்செய்—ஒளியையுடைத்தான
பூண் —கௌஸ்துபாத்யாபரணபோபி [தமான
மார்பினன்—மார்பையுடைய
கண்ணன்—க்ருஷ்ணன்
கழல்—திருவடிகளில்
துழாய்—திருத்துழாயை
பொன்—(விரஹவைவர்ண்யமாகிற) பொன்னையாலே
செய்—செய்யப்பட்ட
பூண்—ஆபரணபோபையையுடைய
மெல்—(விப்லேஷாஸஹமாய்த்) துவண்ட
முலைக்கு—முலைக்கு (அலங்காரமாக வேணுமு)
என்று—என்று ஆசைப்பட்டு
மெலியும்—(அது கிடையாமலே) க்ருபமரீரையாகாநின்றாள். (௧௦)

ஆறு ; —(என்செய்கேன்.) விவேகரஹிதையாய் விரஹவ்யஸநாஸஹிஷ்ணுவாயிருந்த என்னுடைய பெண்பிள்ளை என்சொல்லும் என்வசமுமல்லள் ; நங்கைமீர் ! நிரதிமயௌஜ்ஜ்வல்ய மௌக்திகஹாராதி திவ்யபூஷண பூஷித வக்ஷஸ்தலனாயிருந்த வண்டுவரைப் பெருமாள் திருவடிகளில் திருத்துழாய், தத்ஸம்ப்லேஷார்த்தம் மங்களமான பூஷணங்களாலே அலங்க்ருதமான தன்னுடைய மென் முலைக்கென்று மெலியாநிற்கும் ; என்செய்கேன் ? என்று அலற்றுகிறாள். (௧௦)

ஈடு ;—அவ ;—பதினோராம்பாட்டு. நிகமத்தில் - இத்திருவாய்மொழி அப்யஸிக்கவல்லார் நித்யஸூரிகளுக்கு ஸத்ருபராவர் என்கிறார்.

மெலியும்நோய்தீர்க்கும் நங்கண்ணன்கழல்கள்மேல் *
மலிபுகழ்வண்குருகூர்ச் சடகோபன்சொல் *
ஒலிபுகழாயிரத்திப்பத்தும் வல்லவர் *
மலிபுகழ்வானவர்க்காவர் நற்கோவையே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழி கற்றார் நித்யஸூரிகளோடு ஒரு கோவையாவர்கள் என்று பலத்தை அருளிச்செய்கிறார்.

மெலியும்—இப்படி ப்ரீதிலாபகைக்கு அடியான	ஒலி—கொண்டாடப்பட்ட
நோய்—விரஹவ்யதையை	புகழ்—குணபௌஷ்கல்யத்தையுடைத்தான
தீர்க்கும்—போக்கும்	ஆயிரத்து—ஆயிரந்திருவாய்மொழியிலும்
நம்—ஆஸ்ரிதஸுலபனான	இப்பத்தும்— இப்பத்தையும்
கண்ணன்—க்ருஷ்ணன்	வல்லவர்—(பாவயுக்தமாக அப்யஸிக்க) வல்லவர்கள்
கழல்கள்மேல் - திருவடிகள் விஷயமாக	மலி—அபிவ்ருத்தமான
ஒலி—(விப்ரக்ருஷ்டாநுபவத்திலும் அபிநிவிஷ்டரென்னும்படி) வளர்ந்த	புகழ்—பகவதநுபவப்ரதையையுடைய
புகழ்—புகழையுடையராய்	வானவர்க்கு—ஸூரிகளுக்கு
வண்—ஸ்லாக்யமான	நல்—ஸ்லாக்யராய்க்கொண்டு
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான	கோவை ஆவர்—ஒருகோவையாவர்கள்
சடகோபன்—ஆழ்வார்	இது—கலிவிருத்தம் (கக)
சொல்—அருளிச்செய்த	

ஆறு;—(மெலியும்.) இப்படி தன்னோடு ஸம்ஶ்லேஷிக்க ஆசைப்பட்டுப் பெருமையாலே அத்யந்தம் அவஸந்நனான என்னுடைய அவஸாதமெல்லாம் போம்படி என்னோடே ஸம்ஶ்லேஷித்தருளின வண்துவரைப்பெருமாள் திருவடிகளிலே, தச்சேஷத்தைகரஸித்வ மஹாயஶஸ்ஸையுடையனான வண்குருகூர்ச்சடகோபன் சொல் ஒலிபுகழாயிரத்து இப்பத்தும் வல்லவர் அயர்வறும் அமரர்களுடைய திவ்யபரிஷத்துக்கு ஒருபூஷணமாவர் என்கிறார். (கக)

நாலாம்பத்து இரண்டாந்திருவாய்மொழி

முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நான்காம் பத்து

மூன்றாந்திருவாய்மொழி—கோவைவாயாள் ப்ரவேசம்.

ஆறு;—(கோவைவாயாள்.) இப்படி அவஸந்நரான தம்முடைய அவஸாதமெல்லாம் போம்படி தம்மோடே கலந்தருளின எம்பெருமானுடைய ப்ரணயித்வகுணாநுபவ ஜநித ப்ரீதியாலே அந்த ப்ரணயித்வத்தைப் பேசுகிறார். *

ப;—மூன்றாந்திருவாய்மொழியில் - இவருடைய ஆர்த்தி தீரும்படி ஸம்ஶ்லேஷித்த ஸர்வேஶ்வரன் இவருடைய அபிநிவேஶஹேதுவான அநுராக விஶேஷத்தைக்கண்டு அவனும் இவர்பக்கலிலே அத்யந்தாபிநிவிஷ்டனாம்படி அநுரக்தனாம்படியை அநுஸந்தித்த இவர், அவனுடைய ப்ராப்தி ப்ரதிபந்தக ஸமஸ்தவிரோதி நிவர்த்தகத்வத்தையும், ரக்ஷகத்வப்ரயுக்த ஸம்பந்தத்தையும், ஸர்வாத்மபாவாதியால் வந்த நாராயணத்வத்தையும், அநுகூலஶத்ரு நிரஸந ஸாமர்த்யத்தையும், ஸௌஶீல்யாதி குணயோகத்தையும், ரக்ஷணோபகரணவத்தையையும், அநந்யார்ஹமாக்கி அடிமைகொள்ளும் ஸ்வபாவத்தையும், ஸர்வவ்யாபகத்வத்தையும், பாரமார்த்திகபரத்வௌஜ்ஜ்வல்யத்தையும், அபரிச்சேத்ய மாஹாத்ம்யத்தையும் அநுபவித்து, ஏவம்விதனான ஸர்வேஶ்வரன் தம்முடைய ஆத்மாத்மீயங்களெல்லாம் ஸ்ரக்வஸ்த்ராபரணங்கராகாதிகளோபாதி தனக்கு அதிஶயித போக்யமாம்படி விரும்பின ப்ரணயித்வத்தை அருளிச்செய்து ஸந்துஷ்டராகிறார்.

ஈடு;—எல்லாத்தேசத்திலும் எல்லாக்காலத்திலுமுண்டான அவன்படிகளெல்லாம் இப்போதே பெற்று அநுபவிக்கவேணுமென்று விடாய்ப்பாரொருவரைப் பெறுகையாலே, இவர் ஸத்தையே தனக்கு எல்லாமாம்படியிருக்கிற தன் ப்ரணயித்வ குணத்தைக் காட்டிக்கொடுக்கக் கண்டு, இவரும் எல்லாம்பெற்றாராய் அநுபவிக்கிறார்.

ஸர்வேஶ்வரனுடைய பாலனை பேழலகு-இத்திருவாய்மொழி. இது தனக்கு மூன்றுபடியாக நிர்வஹிப்பர்கள் நம்முதலிகள்; எம்பார், "அம்புலியம்மானைப் பிடித்துத்தரவேணும், என்று அழுதப்ரஜைக்குத் தேங்காயைக்கொடுத்து அழுகையை ஆற்றுவாரைப்போலே, வேறொரு குணாவிஷ்காரத்தைப்பண்ணி அநுபவிப்பிக்க அநுபவிக்கிறார்" என்று அருளிச்செய்வர். திருமலைநம்பி, 'ஒரு

வன் ஒன்றை அபேக்ஷித்தால், அவனும் அதுசெய்வானாகத் தலை துலுக்கினால், பெற்றானாப் பின்பு பின்னிவிழவு தோன்றும்படி பன்று இருப்பது; ஆகையாலே, அவனும் 'அப்படி செய்கிறோம்' என்னக் கீழிவிழவை மறந்து எல்லாம் பெற்றாராய் அநுபவிக்கி றார்'' என்று;

ஸ்ரீகௌஸல்யையார், 'பெருமாள் வநத்துக்கு எழுந்தருளுகிறபோது ''ஏகபுத்ரையான நான் உம்மைப் பிரிந்திருக்கமாட்டேன்; கூடப்போகநினைத்தனை'' என்ன, ''ஆச்சீ, நீர் சொல்லுகிற இவை தர்ம ஹாநிகிடீர்'' என்று முகத்தைப்பார்த்து ஒருவார்த்தை அருளிச் செய்ய, இழவை மறந்து மங்களாஶாஸநம்பண்ணி மீண்டாளிறே; க்ருஷ்ணன் (௧) ''[illegible] - மாஶுச:'' என்று ஒருவார்த்தை அருளிச்செய்ய, அர்ஜுநன் (௨) ''நஷ்டோ மோஹ: - ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ:'' என்று தரித்தானிறே.

பட்டர், ''காலத்ரயத்திலுள்ளத்தையும் இப்போதே பெற விடாய்த்த இவர்க்கு அப்படியே அநுபவிக்கலாம்படி, காலசக்ரத் தேனுமென்று தானாகையாலே காலோபாதியைக் கழித்து, வர்த்த மாநகாலத்திற்போலே அநுபவயோக்யமாம்படி காலத்தை ஒருபோகி யாக்கிக்கொடுக்க அநுபவிக்கிறார்'' என்று அருளிச்செய்வர்.

ஈடு;—முதற்பாட்டில் - நப்பின்னைப்பிராட்டி, ஸ்ரீ ஜநகராஜன் திருமகள் தொடக்கமானார் உனக்கு ப்ரணயிநிகளாயிருக்க, நீ அவர்கள்பக்கலிலே யிருக்குமிருப்பை என்பக்கலிலே யிருக்கும்படி என் ஸத்தையே உனக்கு எல்லாமாய்விட்டது என்கிறார். அன்றிக்கே, ஆஶ்ரிதவிரோதிகளை நிரஸிக்கிற விடங்களில் அவ்வவஸமயங்களில் வந்து முகங்காட்டி அடிமைசெய்யப்பெற்றிலேன் நான்; இங்ஙனே யிருக்கவும் என் ஹ்ருதயத்தையே உனக்கு போக்யமாகக் கொள்ளுவதே! என்கிறாராதல்.

கோவைவாயாள்பொருட்டேற்றி னெருத்தமிறுத்தாய் *. மதிளிலங்கைக்
கோவைவீயச்சிலைகுனித்தாய் குலநல்யானைமருப்பொசித்தாய் *
பூவைவீயாநீர்தூவிப் போதால்வணங்கேனேலும் * நின்
பூவைவீயாம்மேனிக்குப் பூசுஞ்சாந்தென்னெஞ்சமே. (௧)

(௧) கீதை - ௧௮. (௨) கீதை - ௧௮.

ப ;—முதற்பாட்டில், ப்ராப்திவிரோதிகளை யழிக்கும் ஸ்வபாவனான ஸர்வேச்வரனைநோக்கி, 'என்னெஞ்சை உனக்கு அங்கராகமாகக் கொண்டாய்' என்கிறார்.

கோவை—கோவைப்பழம்போலே சிவந்த
வாயாள்பொருட்டு—அதரத்தையுடைய நப்பின்னைப் பிராட்டிக்காக
ஏற்றின்—எருதுகளினுடைய
எருத்தம்—பிடரை
இறுத்தாய்—முறித்தவனாய்,
மதிள்—மதிளையுடைய
இலங்கை—லங்கைக்கு
கோவை—நிர்வாஹகனான ராவணனை
வீய—முடியும்படியாக
சிலை—வில்லை
குனித்தாய்—வளைத்தவனாய்,
குலம்—ஜாதிவைலக்ஷண்யத்தையும்
நல்—லக்ஷண வைலக்ஷண்யத்தையுமுடைய
யானை—குவலயாபீடத்தினுடைய
மருப்பு—கொம்பை
ஒசித்தாய்—(அநாயாஸேந) முறித்தவனே !

(இப்படி நப்பின்னைக்கும் ஜநகராஜன் திருமகளுக்கும் மதுரையில் பெண்பிள்ளைகளுக்கும் ப்ராப்திவிரோதியைப் போக்கின உன்னை),
பூவை—புஷ்பத்தை
வீயா—அகலாத
நீர்—ஜலத்தை
தூவி—(ப்ரேமத்தாலே அக்ரமமாகப்) பணிமாறி
போது—உக்தகாலங்களிலே
வணங்கேனேலும்—வணங்கிற்றிலேனேயாகிலும்
நின்—உன்னுடைய
பூவை வீயாம்—பூவைப்பூநிறத்தையுடைய
மேனிக்கு—திருமேனிக்கு
பூசும்—சாத்தத்தகுதியான
சாந்து—அங்கராகம்
என்னெஞ்சமே—என்னெஞ்சாவதே !

ஆச்ரயதோஷம்பாராதே அநுராகலேசமே பற்றாசாக அங்கராகமாக்கினாய் ; அதுக்கு அடி - அவஸ்தா ஸப்தகவிகாரத்தையும் கழித்து, தமேந்த்ரியாநநமான தீமனத்தையும் கெடுத்து, ப்ரவேசவிரோதியான தூர்மாநத்தையும் அழிக்குமவனாதலால் என்று கருத்து. (க)

ஆறு ;—அதிபலவ்ருஷரூப அஸுரஸப்தக ஸபுத்ரஜநபாந்தவ தசாஸ்ய குவலயாபீட கம்ஸாத்யாச்ரிதவிரோதி நிரஸநஜநிதமான உன்னுடைய ச்ரமாபநோதநார்த்தமான சிசிரோபசாரங்களைத் தத்தத்காலங்களிலே உன்திறத்தில் நான் செய்யாதிருக்கச்செய்தேயும், என்னுடைய மநஸ்ஸானது சீதளமாய் நிரதிசய ஸுகந்தமாய் புஷ்பஹாஸ ஸுகுமாரமான உன்னுடைய திருவுடம்புக்கு ஸத்ருச

மாய் ஸர்வஸ்ரமாபநோதகமான திவ்யாங்கராகமாவதே! இது என்ன ப்ரணயித்வம்? என்கிருர், (க)

ஈடு ;—இரண்டாம்பாட்டு. என்னுடைய கரண கார்யமான ஸ்ம்ருத்யாதிகளே பரிபூர்ணனானவனுக்கு போகோபகரணங்களெல்லாமாயிற்று என்கிருர்.

பூசும்சாந்தென்னெஞ்சமே புனையுங்கண்ணியெனதுடைய *
வாசகம்செய்மாலேயே வான்பட்டாடையுமஃதே *
தேசமானவணிகலனு மென்கைகூப்புச்செய்கையே *
ஈசன்ஞாலமுண்டுமிழ்ந்த எந்தையேகமூர்த்திக்கே. (உ)

ப ;—அநந்தரம், 'ஸர்வநியந்தாவாய் ஸர்வரக்ஷகனான ஸ்வாமிக்கு என் கரணத்ரயமும் போக்யமாகாநின்றது' என்கிருர்.

ஈசன்—நிருபாதிகநியந்தாவாய்
ஞாலம் உண்டு உமிழ்ந்த—(ப்ரளயாபத்திலே) உண்பது உமிழ்வதாகையாலே ஸமஸ்தபதார்த்தத்துக்கும் ஸர்வ ப்ரகார ரக்ஷகனுய்
எந்தை—(இவ்வபதாநத்தாலே என்னையடிமைகொண்ட) அஸ்மத்ஸ்வாமியாய்
ஏகம்—(நிரதிசயபோக்யமாகையாலே) அத்விதீயமான
மூர்த்திக்கு—விக்ரஹத்தையுடையவனானவனுக்கு
பூசும்—(கூனியிட்ட சாந்துபோலே) தகுதியான
சாந்து—சாத்துப்படி
என்னெஞ்சம்—என்னெஞ்சாகாநின்றது;
புனையும்—(ஸ்ரீமாலாகாரர் மாலைபோலே உகந்து) சாத்தும்
கண்ணி—திருமாலை
எனதுடைய—என்னுடைய
வாசகம்—வாக்வ்ருத்தியான ஸப்தத்தாலே
செய்—தொடுக்கப்பட்ட
மாலை — மாலையாயிராநின்றது ; (க) "பூம்பட்டாம்" என்கிறபடியே திருவநந்தாழ்வான் ஸமர்ப்பித்ததென்னலாம்படி)
வான்—ஸ்ரீயதான
பட்டாடையும்—பரிவட்டமும்
அஃதே—அந்த வாக்வ்ருத்தியே :
தேசமான—தேஜஸ்கரமாம்படி
அணி—அணியப்பட்ட
கலனும்—ஆபரணமும்
என்—என்னுடைய
கைகூப்புச்செய்கையே—அஞ்சலிபந்தமே.

(க) க - திருவ - இஉ.

வாசகம் பட்டாடையாவது - ஒப்பனைக்குப் பௌஷ்கல்யகரமானை. அஞ்ஜலி ஆபரணமாகையாவது - இவர் தலையிலேவைத்த அஞ்ஜலி அவன் திருமுடியில் அபிஷேகாத்யாபரணங்களோபாதி அவனுக்கு ஔஜ்ஜ்வல்யாவஹமாகை.

ஆறு ;—(பூசும்சாந்து.) நிகிலபுவந நிர்மாணைகத ஸர்வேஸ்வர ஸ்வபாவனாய், ஸைதகரூபனாய்க்கொண்டு ஸ்ரீவைகுண்டநிலயனாயிருந்த எம்பெருமானுக்கு, ஸ்வவிஷயமாக மத்க்ருதமான ஸ்ம்ருதிகீர்த்தநாஞ்ஜலி ப்ரப்ருதி ஏகைக வ்ருத்தியே திவ்யகந்தாநுலேபந திவ்யமால்யாம்பர நிரதிஶயதீப்தியுக்த திவ்யபூஷணாதி ஸர்வபோகோபகரணங்களுமாயின; ஒருவனுடைய வ்யாமோஹம இருக்கும்படியே! என்கிறார். (௨)

ஈடு ;—மூன்றாம்பாட்டு. 'இத்தலையை உனக்காக்கி அத்தாலே க்ருதக்ருத்யனாயிருக்கிறாயே' என்கிறார்.

ஏகமூர்த்தி யிருமூர்த்தி மூன்றுமூர்த்தி பலமூர்த்தி
யாகி * ஐந்துபூதமா யிரண்டுசுடரா யருவாகி *
நாகமேறி நடுக்கடலுள் துயின்ற நாராயணனே * உன்
ஆகமுற்றும் அகத்தடக்கி ஆவியல்லல் மாய்த்ததே. (௩)

ப ;—அநந்தரம், ஸர்வாத்மபாவாதியால் வந்த ஸம்பந்தத்தையுடைய உன் வடிவழகை இப்படியநுபவித்து என் ஆத்மாவானது கீழ் ப்ரக்ருததுஃக்கம் தீரப்பெற்றதே என்கிறார்.

ஏகமூர்த்தி—(ஸூக்ஷ்மசிதசித் விசிஷ்டமாய் (௧) "ஸதேவ- ஏகமேவ" என்கிறபடியே காரணரூபத்தையுடையனாய் இருமூர்த்தி — (அந்த அவ்யக்தகார்யமான) மஹதஹங்காரங்களை வடிவாகவுடையனாய் மூன்றுமூர்த்தி—(௨) "ஸாத்விகோ ராஜஸஸ்சைவ தாமஸஸ்ச த்ரிதா மஹாந் - ஸாத்விகோராஜஸஸ்சைவ தாமஸஸ்சத்ரிதாமஹாந்" என்றும், "வைகாரிகஸ்தைஜஸஸ்ச பூதாதிஸ்சைவ தாமஸ: - வைகாரிகஸ்தைஜஸஸ்ச பூதாதிஸ்சைவதாமஸ:" என்றும் அந்த மஹதஹங்காரங்களினுடைய த்ரைவித்யஹேதுவான) ஸத்வராஜஸ்தமோரூபகுணத்ரயவைஷம்யங்களை ப்ரகாரமாகவுடையனாய் பலமூர்த்தியாகி-(வைகாரிககார்யமான) ஏகாதஶேந்த்ரியங்களை ப்ரகாரமாகவுடையனாய்

(௧) சாந்தோ - ௨.
(௨) வி - பு - ௧ - ௨ - ௩௪.

ஐந்துபூதமாய்—(பூதாதியான தாமஸாஹங்காரகார்யங்களான) பஞ்சபூதங்களை ப்ரகாரமாகவுடையனாய்
இரண்டுசுடராய் — (அண்டாந்தர்வர்த்தியான வ்யஷ்டி ஸ்ருஷ்டிக்கு உதாஹரணமான (க) " ஸூ- யதாவநு உஸை - ஸூர்யா சந்த்ரமஸௌ " என்றுசொல்லப்பட்ட) சுடரிரண்டையும் வடிவாகவுடையனாய்
அருவாகி — (அவற்றுக்கு அந்தராத்மதயா அநுப்ரவேசித்து) ஸூக்ஷ்மபூதனாய் (ஸ்ருஷ்டமான ஜந்துக்களினுடைய ரக்ஷணார்த்தமாக)
நாகம்—திருவநந்தாழ்வான்மேலே
ஏறி—ஏறி
நடுக்கடலுள்—திருப்பாற்கடல்நடுவே
துயின்ற—கண்வளர்ந்தருளின
நாராயணனே—(இந்த அந்தராத்மத்வத்தாலும் ஸமுத்ரஶாயித்வத்தாலும் ஸித்தமான) நாராயணஶப்தத்துக்கு வாச்யனானவனே! (கீழ்ச்சொன்ன ப்ரக்ரியையாலே)
உன்—உன்னுடைய
ஆகம்—வடிவையும்
முற்றும்—(என் ஸகலகரணங்களையும் உனக்கு ஸர்வாலங்காரமுமாகக்கொண்ட) அழகையுமெல்லாம்
அகத்து—என் நெஞ்சுக்குள்ளே
அடக்கி—கபளீகரித்து அநுபவித்து
ஆவி—என் ஆத்மாவானது
அல்லல் — (கீழிற்றிருவாய்மொழியிற்பட்ட) துக்கத்தை
மாய்த்ததே—போக்கப்பெற்றதே!

'பலமூர்த்தி' என்னுமளவும் - பர வ்யூஹ விபவ விக்ரஹங்களைச் சொல்லி, 'ஐந்து பூதமிரண்டுசுடர்' என்கிற இடம் - லீலாவிபூதிஸம்பந்தத்தைச் சொல்லுகிறது என்பாருமுளர்; அதில், ஸர்வப்ரதாநமாய் ப்ராப்யமானதையாலே அத்விதீயமான வாஸுதேவமூர்த்தியாய், அதுதான் ஶாந்தோதிதநித்யோதித பேதத்தையுடைத்தாய்க்கொண்டு இருமூர்த்தியாய், நித்யோதிதவேஷந்தான் ஸங்கர்ஷணப்ரத்யும்நாநிருத்தபேதத்தாலே மூன்றுமூர்த்தியாய், அவைதான் கேஶவாதி த்வாதஶமூர்த்தியாயும் தஶாவதாரரூபமாயும் பலமூர்த்தியாயிருக்குமென்றபடி. (ந)

ஆறு:—(ஏகமூர்த்தி.) அப்ராக்ருதநித்யஸித்த திவ்யரூப விஶிஷ்டனாய், ஸ்ரீவைகுண்டநிலயனாய்க்கொண்டு ப்ரக்ருதி மஹத்த்ரிவிதாஹங்காரமந: ப்ரப்ருதிகாண பஞ்சபூத சந்த்ரஸூர்யாதி பதார்த்தங்களுக்கும் ததந்தர்வர்த்திசேதநஜாதத்துக்கும் ஸ்ரஷ்டாவாய், அவற்றினுடைய ஸ்தித்யர்த்தமாக அந்தர்யாமிதயாவஸ்திதனாய், ஸ்ருஷ்டமான ஜகத்தினுடைய ரக்ஷணார்த்தமாகத் திருப்பாற்கட

(க) தை - நா - உ.

விலே கண்வளர்ந்தருளி நாகபர்யங்கஶாயியாயிருந்த நாராயணனே! உன் திருமேனிக்கு அபேக்ஷிதமான ஸர்வபோக்யங்களும் நான் உன் திறத்துப்பண்ணும் ஸ்ம்ருதிகீர்த்தநாதி வ்ருத்திகளேயாகக் கொண்டிருக்கிற உன்னுடைய மஹாகுணத்தை அநுபவித்து என்னுடைய க்லேஶமும் தீர்ந்தேன் என்கிறார். (௩)

ஈடு, அவ;—நாலாம்பாட்டு. பூதநாதிகளுடைய நிரஸநஸமயத்தில் ஸ்ரமந்த்ர ஶிஶிரோபசாரம் பண்ணப்பெற்றிலேனேயாகிலும் ஶிஶிரோபசாரத்தாலல்லது செல்லாத உன் ஸௌகுமார்யமான திருமேனிக்குச் சாத்தும் மாலை என்ஸத்தையேயாய்விடுவதே! என்கிறார்.

மாய்த்தலெண்ணி வாய்முலைதந்த மாயப்பேயுயிர்
மாய்த்த * ஆயமாயனே! வாமனனே! மாதவா! *
பூத்தண்மாலைகொண்டுன்னைப் போதால்வணங்கேனேலும் * நின்
பூத்தண்மாலை நெடுமுடிக்குப் புனையுங்கண்ணி எனதுயிரே. (௪)

ப;—அநந்தரம், அநுகூலஶத்ருவான பூதனையை நிரஸித்து என்னை அநந்யார்ஹமாக்கிக்கொண்ட ஸ்ரிய:பதியான உனக்கு என்ப்ராணன் திருமுடிக்கு விஶேஷாலங்காரமாவதே! என்கிறார்.

மாய்த்தல்—முடிப்பதாக
எண்ணி—நினைத்து
வாய்—திருப்பவளத்திலே
முலைதந்த—முலையை வைத்த
மாயம்—(அநுகூலமான) மாத்ருவேஷ பரிக்ரஹத்தையுடைய
பேய்—வஞ்சப்பேயினுடைய
உயிர்—ப்ராணனை
மாய்த்த—முடித்துவிட்ட
ஆயன்—கோபாலபாலகத்வத்தில் புரையற்ற
மாயனே—ஆஶ்சர்யபூதனே
வாமனனே—(இந்த அவதாரத்தாலே (+) "[illegible] ஜகத்குரோ:" என்று ஜகத்தை அநந்யார்ஹமாக்கும் ஸ்வாமித்வத்தை ப்ரகாஶிப்பிக்கிற) வாமநாவதாரத்தையும் ஸபலமாக்கி
மாதவா—(ஸ்வாபாவிகமான) ஸ்ரிய:பதித்வத்தையும் நிலைநிறுத்தினவனே!
உன்னை—(இப்படி அநுகூலஶத்ருநிரா ஸகனான) உன்னை
பூ—விலக்ஷண புஷ்பயுக்தமாய்
தண்—குளிர்ந்த
மாலை கொண்டு—மாலைகளைக் கொண்டு
போது—அவஸராநுரூபமாக
வணங்கேனேலும்—ஆராதிக்கப்பெற்றிலேனேயாகிலும்
நின்—உன்னுடைய

(+) ஹரிவம்ஶ - விஷ்ணு - [illegible] - ௩௮.

பூ—புஷ்பமயமாய்
தண்—செவ்வியையுடைத்தான
மாலை—மாலையாலே அலங்க்ருதமாய்
நெடு—(ஆதிராஜ்யஸூசகமான) ஓக்கத்தையுடைய
முடிக்கு—திருமுடிக்கு
புனையும்—அலங்காரமாகச் சாத்தும்
கண்ணி—மாலை
எனது உயிரே—என்னுடைய ப்ராணனவனே! (௪)

ஆறு;—(மாய்த்தல்.) ஆஶ்ரிதவிரோதி நிரஸநஸ்வபாவனாய், ஆஶ்ரிதஸமீஹிதப்ரதனாய், ஶ்ரிய:பதியாயிருந்த உன்னை ப்ராப்த காலங்களிலே பூத்தண்மாலைகொண்டு வணங்காதிருக்கச்செய்தேயும், உன்னுடைய பூத்தண்மாலை நெடுமுடிக்கு என்னுடைய ஆத்மாவே புனையுங் கண்ணியாயிற்று என்கிறார். (௪)

ஈடு, அவ;—அஞ்சாம்பாட்டு. தம்முடைய ஸ்நேஹாதிகள் ஒன்றொன்றே ஆபரணாதி ஸர்வ பரிச்சதங்களுமாயிற்று அவனுக்கு என்கிறார்.

கண்ணி எனதுயிர் காதல்கனகச்சோதி முடிமுதலா *
எண்ணில்பல்கலன்களு மேலுமாடையுமஃதே *
நண்ணிமூவுலகும் நவிற்றுங்கீர்த்தியுமஃதே *
கண்ணனெம்பிரா னெம்மான் காலசக்கரத்தானுக்கே. (௫)

ப;—அநந்தரம், போக்யனாய் ஸ்வாமியாய் உபகாரகனாய் ஸுலபனான க்ருஷ்ணனுக்கு என்னுடைய ப்ரேமாதிகள் ஆபரணாதிஸமஸ்தமு மாகாநின்றன என்கிறார்.

காலம்—காலநிர்வாஹகமான
சக்கரத்தான்—திருவாழியையுடையனாய்
எம்மான்—(அவ்வழகைக்காட்டிக் காலவஶ்யனாகாதபடி) என்னையடிமைகொண்ட ஸ்வாமியாய்
எம்பிரான்—காலமுள்ளதனையும் அவ்வழகை அநுபவிப்பிக்கும்) மஹோபகாரகனாய்
கண்ணனுக்கு—(காலாநுரூபமாக அவதரித்து ஸுலபனான) க்ருஷ்ணனுக்கு
எனது—என் அபிமாநாந்தர்க்கதமான
உயிர்—ஆத்மவஸ்து
கண்ணி—(ஶிரஸாவாஹ்யமான) மாலையாகாநின்றது;
காதல்—(ஆத்மதர்மமான) ப்ரேமமானது
கனகம்—கநகமயமாய்
சோதி—(ஆதிராஜ்யஸூசகமான) ஔஜ்ஜ்வல்யத்தையுடைய
முடி முதலா—முடி முதலாக
எண் இல் பல்—அஸங்க்யேயமான
கலன்களும்—ஆபரணங்களு மாகாநின்றது;

ஏனும்—அநுரூபமாய் (ஸர்வஸ்மாத்பா த்வஸூசகமான)	கண்ணி—கிட்ட
ஆடையும்—திருப்பீதாம்பரமும்	நவிற்றும்—வாய்புலற்றக்கடவ
அஃதே—அதுவே;	கீர்த்தியும்—கீர்த்தியும்
மூவுலகும்—த்ரிவிதாத்மவர்க்கமும்	அஃதே—அதுவே.

இவருடைய ப்ரேமத்துக்குத் தான் விஷயீபவிக்கையை, வேறொப்பனை யாகவும் பெரும்புகழாகவும் நினைத்தானென்று கருத்து. (௫)

ஆறு ;—(கண்ணி.) ப்ரதிகூலநிரஸநஸ்வபாவனான திருவாழி யுடையனான கண்ணனுக்கு, தன் திருவடிகளிலும் திருமார்பிலும் திருத்தோளிலும் சாத்தியருளக்கடவ திருத்துழாய் என்னுடைய ஆத்மா ; அஸங்க்யேயநாநாவித திவ்யபூஷணங்களும், ஸ்வோசித திவ்யபீதாம்பரமும், ஸர்வலோகங்களும் சொல்லிப்பேத்தும் தன்னு டைய கீர்த்தியும், மற்றுமெல்லாம் என் காதலே என்கிறார். (௬)

ஈடு ;— ஆறாம்பாட்டு. இப்படி ப்ரணயியா யிருந்துள்ள நீ என்னைக் கிட்டாதேயொழிந்தாயேயாகிலும் உன்ஸத்தையே எனக்கு தாரகாதிகள் என்கிறார். உனக்கு நான் உதவப்பெற்றிலேனாகிலும் என் ஸத்தை உனக்கு தாரகாதிகளானாற்போலே, நீ வாராயாகிலும் உன்ஸத்தை எனக்கு தாரகாதிகள் என்கிறார். அவன் ப்ரணயித்வம் சொல்லாநிற்க, நடுவே தம்முடைய ப்ரணயித்வம் சொல்லுவா னென் ? என்னில் ;—இரண்டுசேதநர் கூடிக்கலந்து பரிமாறாநின்றால், பிறக்கும் ரஸங்களும் இரண்டு தலையிலும் உண்டாயிருக்குமிறே ; அதில், கீழெல்லாம் அவன் ப்ரணயித்வம் சொல்லிக்கொண்டு போந் தார் ; இப்போது அவன் ப்ரணயித்வாதிஶயம் தம்மையும் ப்ரணயி யாக்கிற்று என்கைக்காக.

காலசக்கரத்தொடு வெண்சங்கம் கையேந்தினாய் *
ஞாலமுற்றுமுண்டுமிழ்ந்த நாராயணனே என்றென்று *
ஓலமிட்டு நானழைத்தாலொன்றும் வாராயாகிலும் *
கோலமாமென்சென்னிக்கு உன்கமலமன்ன குரைகழலே. (௭)

ப ;—அநந்தரம், ஆஶ்ரிதவிரோதிநிரஸநபரிகரத்தையுடைய ரக்ஷகனான நீ என் அபேக்ஷாநுரூபமாக முகங்காட்டிற்றிலேயாகிலும், உன் திருவடி களில் ஸம்பந்தமே இத்தலையில் ஸத்தைக்கு அதிஶயகரமென்று, ப்ரணயியான அவன்பக்கல் தமக்கு உண்டான ப்ரணயத்தை அருளிச்செய்கிறார்.

காலன்—(விரோதிகளையழிக்கைக்குக்) காலனும்படியான ஸ்வபாவத்தையுடைய
சக்கரத்தொடு—திருவாழியோடே
வெள் சங்கு—(பரபாகரஸாவஹமான வெளுப்பையுடைய ஸ்ரீபாஞ்சஜந்யத்தை
அம்—(அவற்றுக்குஶோபாவஹமான) [அழகிய
கை—திருக்கையிலே
ஏந்தினாய் — ஏந்தினவனாய், (இப்படி ரக்ஷணபரிகரவானாயிருக்கச்செய்தே)
ஞாலம் — (ரக்ஷ்யமான) ஜகத்துக்கு (ஆபத்து வந்தால் அந்தப்ரளயாபத்தில் அகப்படாதபடி)
முற்றும்—ஒன்று ஒழியாமல்
உண்டு—தன் வயிற்றிலே வைத்து ரக்ஷித்து
உமிழ்ந்த—(அது போனவாறே வெளிநாடுகாண) உமிழ்ந்த
நாராயணனே — (நிருபாதிகபந்தத்தையுடைய) நாராயணனே!
என்று என்று—என்று இந்தஸ்வபாவங்களைத் தனித்தனியே சொல்லி
ஓலமிட்டு—கூப்பிட்டு
நான்—(இருந்தவிடத்தில்நின்றும் எழுந்திருந்து வருகைக்கு யோக்யதையில்லாத) நான்
அழைத்தால்—அழைத்தாலும்
ஒன்றும்—(க) "அருகும்சுவடும்தெரிவுணரோம்" என்கிறபடியே நீ முகங்காட்டுகைக்கு ஈடாயிருப்பது ஒரு அடையாளம் தெரியாதபடி
வாராயாகிலும்—வாராதிருந்தாயேயாகிலும்
என்சென்னிக்கு—("அன்பேபெருகும்மிக" என்கிற கணக்கில் உன்னையொழியச் செல்லாததையுடைய) என் தலைக்கு
உன்—(ஶேஷியான) உன்னுடைய
கமலம் அன்ன — கமலம்போலே நிரதிஶயபோக்யமான
குரை—(ஆஶ்ரிதரக்ஷணப்ரஸித்திதோற்றும்படி) த்வனிக்கிற வீரக்கழலையுடைய
கழல்—திருவடிகள்
கோலம் ஆம்—அலங்காரமாய்க்கொண்டு தேஜஸ்கரமாகாநின்றது.

உன் திருவடிகளிலே ப்ரேமம் எனக்கு ஸத்தாப்ரயுக்தமென்று கருத்து.

ஆறு ;—(காலசக்கரத்தொடு.) - ஸர்வஜ்ஞனாய் ஸர்வஶக்தியாயிருந்த உன்னாலும் விஶ்லேஷிக்க வொண்ணாதபடி என்னோடே ஸம்ஶ்லேஷித்தருளினாயென்கிறார். ஆஶ்ரிதவிரோதிநிரஸநஸ்வபாவமான ஶங்கசக்ராதி திவ்யாயுதோபேதனாய், காருண்ய ஸௌஹார்த்த ஸௌஶீல்யாதி கல்யாணகுணவிஶிஷ்டனாயிருந்த நீ இப்படி என்னோடு ஸம்ஶ்லேஷியாதொழிந்தாலும் உன்னுடைய

(க) பெரியதிருவ - அ.

ஸத்தையே எனக்கு ஸர்வபோக்யமாம்படி என்னைப் பண்ணியருளிறாப் என்னவுமாம். (௬)

ஈடு ; -- ஏழாம்பாட்டு. கீழ்ச்சொன்ன ப்ரேமமும் ததநுகூலமான வ்ருத்திகளு மின்றிக்கேயிருக்கிலும் என்ஸத்தையே உனக்கு ஜீவநஹேதுவாவதே ! என்கிறார்.

குரைகழல்கள்நீட்டி மண்கொண்ட கோலவாமனா *
குரைகழல் கைகூப்புவார்கள் கூடநின்ற மாயனே *
விரைகொள் பூவும்நீரும்கொண்டேத்தமாட்டேனேலும் * உன்
உரைகொள்சோதித் திருவுருவமென்னதாவிமேலதே. (௭)

ப ; - அநந்தரம். நான் அகிஞ்சித்கரனாயிருக்கிலும் அநந்யார்ஹமாக்கி அடிமைகொள்ளும் ஸ்வபாவத்தையுடைய உன் வடிவு என் ஆத்மாவை விஷயீகரித்திராநின்றது என்கிறார்.

குரை—(அநந்யார்ஹபாதகநப்ரஸித்திக்கு இட்ட) வீரக்கழலையுடைய
கழல்கள்—திருவடிகளை
நீட்டி—நிமிர்த்து
மண்—ஜகத்தை
கொண்ட—அளந்துகொண்ட
கோலம்—வடிவழகையுடைய
வாமனா—வாமநனாய் (க) "க்ஷுவநஜித்வரஹஸ் - த்வதங்க்ரிமுத்திஸ்ய" என்கிறபடியே
குரைகழல்—அத்திருவடிகளை உத்தேசித்து
கைகூப்புவார்கள்—ஓர் அஞ்ஜலிபந்தம் பண்ணினார்
கூட—(தன்னையே) ப்ராபிக்கும்படி
நின்ற—(உபாயமும் உபேயமுமாய்) [நின்ற
மாயனே—ஆஸ்சர்யபூதனே !
விரைகொள்—பரிமளப்ரசுரமான
பூவும்—புஷ்பத்தையும்
நீரும்—(பாத்யாதி) ஜலத்தையும்
கொண்டு—கொண்டு
ஏத்தமாட்டேனேலும்—(உன்னையாராதிக்கைக்கு உறுப்பாக ஆபிமுக்யார்த்த) ஸ்தோத்ரம் பண்ணசக்தனல்லேனாகிலும்
உரை—வேதாந்தவசநங்களால்
கொள்—அபரிச்சேத்யமான
சோதி—தேஜஸ்ஸையுடைய
உன்—உன்னுடைய
திருஉருவம்—திருமேனியானது
என்னது ஆவிமேலது—என் ஆத்மாவின்மேலே அபிநிவிஷ்டமாயிராநின்றது. (௭)

ஆறு ;—(குரைகழல்கள்.) ப்ரணதஜநபரித்ராணார்த்தமாக அவதீர்ணனாப், அத்யத்புத திவ்யசேஷ்டிதனாப், பக்த்யேகஸமதிகம்ய

(க) ஸ்தோ - ரத்ந.

ஞனை உன் திருவடிகளிலே அதிஶீதள புண்யகந்தபுஷ்பதோயாதிகளைக்கொண்டு நான் சில வ்ருத்திகளைப்பண்ணிஞல் அவை உனக்கு போக்யமாகையன்றிக்கே, நான் ஒரு வ்ருத்தி பண்ணுதிருக்கச்செய்தேயும் வாங்மநஸாபரிச்சேத்ய தேஜோமய திவ்யரூபஞன உனக்கு என்னுடைய ஆத்மஸத்தையே தாரகமும் போக்யமுமாயிற்று என்கிறார். (௭)

ஈடு ;—எட்டாம்பாட்டு. ஒருவரையொழிய ஒருவர்க்குச் செல்லாதபடி பிறந்தகலவி, பேச்சுக்கு நிலமன்று என்கிறார்.

என்னதாவிமேலையாயேர் கொளேழுலகமும் *
துன்னிமுற்றுமாகிநின்ற சோதிஞானமூர்த்தியாய் *
உன்னதென்னதாவியு மென்னதுன்னதாவியும் *
இன்னவண்ணமேநின்றா யென்றுரைக்கவல்லேனே. (௮)

ப ;— அநந்தரம், எனக்காக ஸர்வலோகத்தையும் வ்யாபித்து என்னை அங்கீகரித்த உன்படியைச் சொல்லப்போமோ? என்கிறார்.

என்னது ஆவிமேலையாய்—என் ஆத்ம வஸ்துவின்மேலே அபிநிவிஷ்டனாய்க்கொண்டு (உனக்கு வ்யாப்யபூதமான)
ஏர்கொள்—ஔஜ்ஜ்வல்யத்தை ஸ்வபாவமாகவுடைய
ஏழ் உலகமும்—ஸப்தவிதமான ஸர்வலோகங்களிலும்
துன்னி—பூர்ணமாக வ்யாபித்து
முற்றும்—ஸமஸ்த பதார்த்தங்களும்
ஆகி—(தனக்கு) ப்ரகாரமாம்படியாய்
நின்ற—நின்ற
சோதி—ஸ்வயம்ஜ்யோதீரூபமான
ஞானம்—ஜ்ஞாநத்தை
மூர்த்தியாய்—ஸ்வரூபமாகவுடையவனே!
என்னது ஆவி—என் ஆத்மஸ்வரூபம்
உன்னதும்—உனது போக்யமும்
உன்னது ஆவி—உன் திவ்யாத்மஸ்வரூபமும்
என்னதும்—எனது போக்யமுமான
இன்னவண்ணமே—இப்படியிலே
நின்றாய்—நின்றாய்
என்று உரைக்கவல்லேனே - இதுக்கு என்னபாசுரமிட்டுச் சொல்லுவேன்? என்று உபயாநுராகமும் சொல்லிற்றாயிற்று. (௮)

ஆறு ;—(என்னதாவி) நியந்த்ருதயா ஸர்வலோகாந்த: ப்ரவிஷ்டனாய், அவாப்த ஸமஸ்தகாமனாயிருந்து வைத்து மதேகதாரகனாயிருந்தவனே! என்னுடைய ஆத்மா நீ இட்ட வழக்காய் உன்னுடைய திவ்யாத்ம ஸ்வரூபமும் நான் இட்ட வழக்காம்படியாக

என்னுடனே கலந்தருளிறுயென்று தம்மோடே கலந்தருளினபடியைப்பேசி, அது ஒன்றும் போராமையாலே பின்னையும், இன்னபடி என்னோடே கலந்தருளிறுப் என்று ஒன்றும் சொல்ல நிலமல்ல என்கிறார். (௮)

ஈடு ;—ஒன்பதாம்பாட்டு. "அநுபூதமானது பேசத் தட்டு என் ?" என்ன, 'உன்ப்ரணயித்வ ப்ரகர்ஷம் என்னுடைய பேச்சுக்கு நிலமன்று' என்கிறார்.

உரைக்கவல்லேனல்லேனுன்னுலப்பில் கீர்த்திவெள்ளத்தின் *
கரைக்கணென்றுசெல்வன்நான் காதல்மையலேறினேன் *
புரைப்பிலாதபரம்பரனே பொய்யிலாதபரஞ்சுடரே *
இரைத்துநல்லமேன்மக்களேத்த யானுமேத்தினேன் (௯)

ப ;—அநந்தரம், 'பாரமார்த்திக பரத்வதளஜ்வல்யத்தை யுடைய உன்படி என்னாற்பேசி முடிக்கப்போமோ ?' என்கிறார்.

உரைக்கவல்லேன் அல்லேன்—'ஆப்ரிதவிஷயத்தில் உன் ப்ரணயகுணத்தை நான் பாசுரமிட்டுச் சொல்ல) ஶக்தன் அல்லேன்; (அது எத்தாலேயென்னில்
உலப்பு இல்—முடிவு இல்லாத
உன்—உன்னுடைய
கீர்த்தி—ப்ரணயித்வப்ரதையாகிற
வெள்ளத்தின்—ஸமுத்ரத்தினுடைய
கரைக்கண்—கரையிடத்து
நான்—நான்
என்று—என்று
செல்வன்—செல்வன் ? அடியிலே பேச இழிந்தது);
காதல்—என் ப்ரேமத்தாலே
மையலேறினேன்—மிக்க கலக்கத்தை யுடையேனானேன் ;
புரைப்பு இலாத—புரை யற்ற
பரம்பரனே—பாரமார்த்திகஸர்வஸ்மாத்பரத்வத்தையுடையனாய் (என்னோட்டைக்கலவியில்)
பொய் இலாத—பொய் இல்லாமையாலே
பரஞ்சுடரே—'அம்மேன்மையோபாதி நிரதிஶயமான ஔஜ்ஜ்வல்யத்தை யுடையனானவனே !
நல்ல—விலக்ஷண ஜ்ஞாநாதிஸ்வபாவராய்
மேல்—ஸர்வோத்க்ருஷ்டரான
மக்கள்—நித்யஸூரிகள்
இரைத்து—(பெருங்கடல் கிளர்ந்தாற்போலே, கோஷித்து
ஏத்த-(க)"ஹாவு ஹாவு ஹாவு-ஹாவுஹாவுஹாவு" என்று ஏத்த
யானும்—(ப்ரேமபரவஶனான) நானும்
ஏத்தினேன்—ஏத்தினேனித்தனை (௯)

(க) தை - ப்ருகு - ௧0

ஆறு ;—(உரைக்க.) நான் உரைக்கவல்லேனல்லேன். வல்ல அம்ஶத்தைச் சொன்னாலோ? என்னில் ;—என்னோடே நீ கலந்த கலவியாகிற உன்னுடைய நிரவதிக கீர்த்திவெள்ளத்தின் கரையினருகேதான் செல்லமுடியுமோ? இப்படி அபூமியான கீர்த்தியைச் சொல்லுவானென்? என்னில் ;—உன்னை உள்ளபடியே எனக்குக் காட்டித் தந்து, பின்னை அநந்யப்ரயோஜநனாய்க்கொண்டு என்னோடு கலந்த கலவியையே நிரவதிகதேஜஸ்ஸாக வுடையவனே! இந்தக் கலவியைப் பரமபக்தியுக்தரான அயர்வறுமமரர்கள் அபிநிவேஶத்தாலே எங்ஙனே பித்தேறி யேத்தினார்கள், அப்படியே நானும் என்னுடைய அபிநிவேஶாதிஶயத்தாலே பித்தேறி யேத்தினேன் என்கிறார். (௯)

ஈடு ;—பத்தாம்பாட்டு. 'நானும், ஸமஸ்தலோகங்களும், ஸர்வேஶ்வரனும் ஏககண்டராய் ஏத்தினாலும் ஏத்தப்போகாத விஷயத்தை என்செல்லாமையாலே ஏத்தினேன்' என்கிறார்.

யானுமேத்தி ஏழுலகும்முற்றுமேத்தி * பின்னையும்
தானுமேத்திலும் தன்னையேத்தவேத்த எங்கெய்தும் *
தேனும்பாலும்கன்னலு மமுதுமாகித்தித்திப்ப *
யானுமெம்பிரானையே ஏத்தினேன்யானுய்வானே. (௰)

ப ;—அநந்தரம். 'ஒருவராலும் எல்லைகாணவொண்ணாத அபரிச்சேத்ய மாஹாத்ம்யத்தையுடையவனை என் ஸத்தாஸித்த்யர்த்தமாக ஏத்தினேன்' என்கிறார்.

யானும்—(அவன் மயர்வறமதிநலமருளப்பெற்ற) நானும்
ஏத்தி—ஏத்தி
முற்றும்—அஜ்ஞஸர்வஜ்ஞவிபாகமற
ஏழுலகும்—இந்தலோகங்களெல்லாம்
ஏத்தி—ஏத்தி
பின்னையும்—அதுக்குமேலே
தானும்—(ஸர்வஜ்ஞனும் ஸர்வர்க்கும் ஜ்ஞாநப்ரதனான) அவன் [தானும்
ஏத்திலும்—ஏத்தினாலும்

தன்னை—(அபரிச்சிந்நஸ்வபாவனான) தன்னை
ஏத்தவேத்த—(ஒருகால்சொன்னவிடம் ஒருகால்சொல்லாமல் மேன்மேலென) ஏத்தினால்
எங்கு—எங்கே
எய்தும்—முடிவெய்தும்? (ஆகிலும் ஏத்துகைக்கடை
தேனும்—தேனும்

பாலும்—பாலும்
கன்னலும்—கன்னலும்
அமுதுமாகி—அமுதும்போலே
தித்திப்ப — (ஸர்வப்ரகாரத்தாலும்) ரஸிக்க
எம்—என்னையநுபவிப்பித்த
பிரானையே—மஹோபகாரகனையே
யான்—நான்
உய்வான்—உஜ்ஜீவிக்கைக்கு
யானும்—யானும்
ஏத்தினேன்—ஏத்தினேன். (௧௦)

ஆறு ;—(யானுமேத்தி.) ஏத்தவல்லீராய் ஏத்தினீரானாலோ? என்னில்,—நானும் ஸர்வலோகவர்த்திகளான ஸர்வாத்மாக்களும் ஸ்வாபாவிக ஸார்வஜ்ஞாதி குணவிசிஷ்டனான எம்பெருமான் தானும் கூடநின்று ஸர்வகாலமும் ஏத்தினால்தான் அவனுடைய நிரவதிகமான கீர்த்திஸமுத்ரத்தினருகே செல்லமுடியுமோ? இப்படி எம்பெருமான் தன்னாலுங்கூட ஏத்தமுடியாத அவனுடைய கீர்த்தியை நீர் ஏத்துவானேன்?—என்னில்,—இனிதாயிருந்தவாறே ஏத்தினேன். இனிதென்றால் முடியாததொன்று தொடங்குவாருளரோ? என்னில்,—நான் ஏத்தியல்லது தரிக்கமாட்டாமையாலே ஏத்தினேன் என்கிறார். (௰)

[illegible] ;—நிகமத்தில் - 'ஈச்வரனுடைய உபயவிபூதியும் இத்திருவாய்மொழி அப்யஸித்தார் இட்ட வழக்கு' என்கிறார்.

உய்வுபாயம்மற்றின்மைதேறிக் கண்ணனொண்கழல்கள்மேல் *
செய்யதாமரைப்பழனத் தென்னன்குருகூர்ச்சடகோபன் *
பொய்யில்பாடலாயிரத்துளிவையும் பத்தும்வல்லார்கள் *
வையம்மன்னிவீற்றிருந்து விண்ணுமாள்வர்மண்ணூடே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழி வல்லவர்கள் உபயவிபூதியும் ஸ்வநியமநத்திலே நிர்வஹிப்பார்களென்று பலத்தை அருளிச்செய்கிறார்.

உய்வு உபாயம்—உஜ்ஜீவநோபாயம்
மற்று இன்மை—வேறு இல்லாமையை
தேறி—அறுதியிட்டு
கண்ணன்—(ஆஸ்ரிதப்ரணயியான) க்ருஷ்ணனுடைய
ஒண்—பரமபோக்யமான
கழல்கள்மேல்—திருவடிகள் விஷயமாக
செய்ய—சிவந்த
தாமரை—தாமரையை யுடைய
பழனம்—நீர்நிலங்களையுடைத்தாய்
தென்—தெற்குத்திக்கில்

நல்—ஶ்லாகநீயமான
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வாருடைய (ப்ரணயித்வகுணத்தில்
பொய் இல்—பொய் இல்லாதபடி
பாடல்—பாடின
ஆயிரத்துள்-ஆயிரந்திருவாய்மொழியில்
இவை பத்தும்—இவைபத்தையும்
வல்லார்கள்—(அர்த்தாநுஸந்தாநத்தோடே) அப்யஸிக்கவல்லவர்கள்
வையம்—பூமியிலே
மன்னி—சிரகாலம் நிரமாய்படி
வீற்றிருந்து—தங்கள் வ்யாவ்ருத்தி தோன்ற இருந்து
மண்ணோடே—இந்தபூமியோடே
விண்ணும்—பரமபதத்தையும்
ஆள்வர்—தங்கள் நியமநத்தின்படி நிர்வஹிப்பார்கள்.
இது—அறுசீராசிரியவிருத்தம். (கக)

ஆறு ;—(உய்வுபாயம்.) 'பொய்யில்பாடல்' என்றது - இப்படி எம்பெருமான் நிரவதிகமான அபிநிவேஶத்தோடேகூட என்னோடு கலந்து பரிமாறின பரிமாற்றம் இத்தனையும் மெய் என்கிறார். (கக)

நாலாம்பத்து மூன்றும் திருவாய்மொழி வ்யாக்யாநம்

முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நாலாம் பத்து

நாலாந்திருவாய்மொழி—மண்ணையிருந்து ப்ரவேசம்.

ஆறு ;—(மண்ணையிருந்து.) இப்படி ப்ரணயஸ்வபாவனான எம்பெருமானை விஸ்லேஷித்தாளொருபிராட்டி அந்த விஸ்லேஷவ்யஸநத்தாலே பிச்சேறிச்சொல்லுகிற பாசுரங்களை அவளுடைய திருத்தாயார் சொல்லி அலற்றுகிறாள்.

ப ;—நாலாந் திருவாய்மொழியில், இப்படி மாநஸஸம்ஸ்லேஷத்தாலே அநுபவிப்பித்துக் கற்பித்த ஈஸ்வரனுடைய ப்ரணயித்வகுணத்தை அநுஸந்தித்த ஆகாராநுரூபமான பாஹ்யாநுபவாபிநிவேஸத்தைப் பண்ணி அது கிட்டாமையாலே ஆர்த்தரான இவர், தம்முடைய ஆர்த்திஸாந்தி ஹேதுவான ஸ்வபாவங்களை யுடையனான ஈஸ்வரனுடைய விபூதித்வயயோகத்தையும், ஸர்வஸமாஸ்ரயணீயத்வத்தையும், ப்ரதாபாநுக்ரஹவத்தையும், உஜ்ஜ்வலமாய் உத்துங்கமாய் ஸ்ரமஹரமான விக்ரஹவைலக்ஷண்யத்தையும், ரக்ஷணார்த்த ப்ரவ்ருத்திகளையும், அநுபாவ்ய சேஷ்டிதங்களையும், பரத்வசிஹ்நங்களையும், ஐஸ்வர்யாபிரூப்ய விஸிஷ்டமான ஆதரணீயத்வத்தையும், ஆஸ்ரிதவிஷயத்தில் உபகாரகத்வத்தையும், ஸௌலப்யபாரம்யத்தையும் அநுஸந்தித்து, ஏவம்விஸிஷ்டனான ஸர்வேஸ்வரனுக்கு ஸம்பந்திகளாயும் ஸத்ருஸங்களாயுமுள்ள பதார்த்த தர்ஸநத்தாலே ஈடுபட்ட ப்ரகாரத்தை பார்ஸ்வஸ்தரான பரிவர் சொன்ன பாசுரத்தை, நாயகனைப்பிரிந்த தலைவியுடைய ஆற்றாமைகண்ட நற்றாய் வார்த்தையாலே அருளிச்செய்கிறார்.

ஈடு ;—கீழில் திருவாய்மொழியில் - அவனுடைய ப்ரணயித்வகுணத்தை அநுஸந்தித்துப் பிச்சேறினார். இவர்க்குக் கீழ்ப்பிறந்த நிரவதிக ப்ரீதியானது * இருவருடைய ஆஸ்ரயமும் அழியுமென்னும்படியாயிற்று ; அந்த ரஸத்தை அரையாறுபடுத்தி ஸாத்மிப்பிக்கைக்காக அக்கலவியை அல்பம் நெகிழநின்றான் ஈஸ்வரன். ஆனாலும், பிரிந்தது அவனையாகையாலே அது தன்கார்யம் செய்தன்றி நில்லாதே ;

ஆற்றாமை மீதூர்ந்து, நலுப்தனவன் கிழிச்சீரையைக் கெடுத்தால் அத்தோடுபோலியான முடிகளெல்லாம் அவிழ்த்தவிழ்த்துப் பார்க்குமாபோலே ; (க) "வைட்டாம்மருந்தாம்" என்னும்படியே

(க) க - எ - உ.

இவர்க்குச் சேமநிதியிறே அவன்; ஆகையாலே, அவனோடு ஸத்ருஶ பதார்த்தங்களையும் ஸம்பந்தி பதார்த்தங்களையும் அகப்பட அவனாகக்கொண்டு ப்ரமித்துக் கிட்டிப்பார்த்து அவனன்றிக்கே யொழிந்தால் மீளவும் மாட்டாதே நோவுபட்டுச் செல்லுகிறது. (க) "ஶஶிநா ஸஹ யாதீவ தாரகா ... ஶஶிநா ஸஹ ... ஶஶி ... ஹாரீ காஞ்சநவேஷதாரை: - க்வசிதுத்ப்ரமதேவேகாத் க்வசித்விப்ரமதேபலாத் । க்வசிந்மத்த இவாபாதி காந்தாந்வேஷணதத்பர:" என்கிறபடியே - பிராட்டியைப் பிரிந்த அநந்தரம் ஆற்றாமையாலே மேல்நோக்கிப் பார்த்து விலங்க ஸஞ்சரிப்பது, அதுதானும் மாட்டாதொழிவது, ஒரு வ்ருக்ஷத்தில் நின்றும் வ்ருக்ஷாந்தரத்திலே சென்று கிட்டுவது, "மைதிலியைக் கண்டீரோ?" என்று கேட்பது, ஆணாறு பெண்ணாறு என்றின்றிக்கே தேடுவதாய் அவர் பட்டாற்போலே இவளும் அப்படியே படுகிறாள் இப்போது.

இப்படி நோவுபடுகிற இவள் தசையை அநுஸந்தித்த திருத்தாயார், இவள் படுகிற பாடுகளையும் இவள் சொல்லுகிற வார்த்தைகளையும் சொல்லி, இதுகண்டு தான் பொறுக்கமாட்டாமே நோவுபடுகிறபடியும் சொல்லி இவள் கைவாங்குமளவாக, அவன் வந்து முகங்காட்டி ஆஶ்வஸிப்பிக்கத் தரித்ததாய்த் தலைக்கட்டுகிறது, இத்திருவாய்மொழி. *

ஈடு; அவ;—முதற்பாட்டு. வினவவந்தவர்களுக்குத் தன்மகள் செய்தியை அறிவியா நின்றுகொண்டு, 'இப்படி இவளை எம்பெருமான் பிச்சேற்றினான்; நான் இதுக்கு என்செய்வேன்?' என்கிறாள்.

மண்ணையிருந்து துழாவி வாமனன்மண்ணிது வென்னும் *
விண்ணைத்தொழு தவன்மேவு வைகுந்தமென்று கைகாட்டும் *
கண்ணையுண்ணீர்மல்கநின்று கடல்வண்ணனென்னுமன்னே * என்
பெண்ணைப்பெருமயல் செய்தார்க்கென்செய்கேன் பெய்வளையீரே.(க)

ப;—முதற்பாட்டில். வினவ வந்த அயலார்க்கு, அவனுடைய விபூதித்வ யஸம்பந்தத்தை அநுஸந்தித்து பூம்யந்தரிக்ஷங்களைக் கண்டு விக்ருதையாகா நின்றாள் என்கிறாள்.

(க) ரா - ஆர - எ௦ - ஙஎ.

மண்ணை — பூமியை
இருந்து — இருந்து
துழாவி — துழாவி
இது — இது
வாமனன் — (அந்யாபிமாநம் வாராதபடி) வாமநனாய் அவனிரந்தளந்து கொண்ட
மண் — மண்
என்னும் — என்னாநிற்கும் ;
விண்ணை — (ஊர்த்வமான) ஆகாசத்தை
தொழுது — (நோக்கி) அஞ்ஜலிபண்ணி
அவன் — அவன்
மேவு — நித்யவாஸம் பண்ணுகிற
வைகுந்தம் — (பரமவ்யோம ஶப்தவாச்யமான) ஸ்ரீ வைகுண்டம்
என்று — என்று சொல்லி, (அபரோக்ஷித்தாரைப்போலே)
கை — ஹஸ்தமுத்ரையாலே
காட்டும் — (பிறர்க்கும்) காட்டாநிற்கும் ;
உள் — அகவாயில்
நீர் — அஶ்ருஜலமானது
கண்ணை — கண்ணையும் விஞ்சி
மல்க — புறப்படும்படி
நின்று — நின்று (இப்படி தன்னோடு ஸம்பந்தித்த விபூதித்வயமும் எனக்கு விஷயமாம்படி)
கடல் — கடல்போலே ஶ்ரமஹரமான
வண்ணன் — தன் வடிவழகைக்காட்டி அநுபவிப்பித்த அபரிச்சிந்நஸ்வபாவன்
என்னும் — என்னும் ;
அன்னே — அம்மே!
என் — என்னுடைய
பெண்ணை — (முக்கையான) பெண்ணை
பெரு — இப்படி அதிஶயிதமான
மயல் — பிச்சை
செய்தார்க்கு — பண்ணினவருக்கு
பெய்வளையீர — (இவள்வளைபோலே கழலுகையன்றியே இட்டபடி வளையை யுடையவர்களே!
என் — எத்தை
செய்கேன் — செய்வேன் ?

அவரை யழைத்துக் கொடுக்கமாட்டுகிறிலேன், அவர்தாமே வருமளவும் இவள் பிச்சைத் தணிக்கமாட்டுகிறிலே னென்று கருத்து. அன்னேயென்று- வெறுப்பைக் காட்டுகிறது. பெய்வளையீர என்கையாலே - நீங்கள் கையும் வளையுமாயிருக்க, இவள் கை நிலம் துழாவும்படியாவதே! என்கை. விண்ணென்று பூதாகாஶமாயிருக்க, அவ்வளவும் ப்ரகாஶித்தபடி. (க)

ஆறு ;—(மண்ணையிருந்து.) எம்பெருமானைப் பிரிந்த வ்யஸநத்தை ஆற்றமாட்டாதே, பண்டு எம்பெருமான் இந்த லோகத்தை அளந்தருளினபோது அவன் திருவடிகளோடே ஸம்பந்தித்தது இம்மண்ணென்று பார்த்து இந்த மண்ணைக்கொண்டு ஆஶ்வஸித்து அந்தப்ரீதியாலே, அடியேன் வாமனன் மண் இதுவென்னும். ஆகாஶத்தை நாமஸாம்யத்தாலே திருநாடாகக்கருதித் தொழுது, அடி

யேன் அவன்மேவு வைகுந்தமென்று கைகாட்டும். அவனைக்காணு தொழிந்தவாறே, கண்ணையுண்ணீர்மல்க நின்று கடல்வண்ணு வென்று அழைக்கும். இப்படி என் பெண்ணைப் பெருமயல் செய் தார்க்கு என்செய்கேன் பெய்வளையீரே ? என்று அலற்றுகிறுள். (௧)

ஈடு ; அவ ;—இரண்டாம்பாட்டு. "அப்ராக்ருத ரூபையான இவள்செய்கிறன ஒன்றும் தெரிகிறதில்லை" என்கிறுள்.

பெய்வளைக்கைகளைக்கூப்பிப் பிரான்கிடக்கும்கடலென்னும் *
செய்யதோர்ஞாயிற்றைக்காட்டிச் சிரீதரன்மூர்த்தியீதென்னும் *
நையுங்கண்ணீர்மல்கநின்று நாரணனென்னுமன்னே * என்
தெய்வவுருவிற்சிறுமான் செய்கின்றதொன்றறியேனே. (௨)

ப :—அநந்தரம், 'அவனேடு ஸம்பந்தமுடைய கடலையும் ஆதித்யனையுங் கண்டு ப்ரீதிலையாகாநின்றுள்' என்கிறுள்.

பெய்—(பலகாலும் கழன்று) இடப்பட்டாநிற்கிற
வளை—வளைகளையுடைய
கைகளை—கைகளை
கூப்பி—கூப்பி அஞ்ஜலிபண்ணி, (தன் முன்பே கோஷிக்கிற கடலைப் பார்த்து)
பிரான்—(ப்ராணயப்புக்க தேவர்களுக்கு முகங்காட்டும்) உபகாரகனுனவன்
கிடக்கும்—(எனக்கு முகங்காட்டக்) கிடக்கிற
கடல்—கடல்
என்னும்—என்னுநிற்கும் ; (ராத்ர்யவஸாநத்திலே உதித்த)
செய்யது—சிவந்த ஒளியாலே
ஓர்—அத்விதீயனுன
ஞாயிற்றை—ஆதித்யனை
காட்டி—கைகாட்டி
சிரீதரன்—(௧) "விசுவாகாரம் பராயவ [illegible] விஷ்யாஸ ஹாயகம் [illegible] " என்று பெரியபிராட்டியாரோடே கூட உபாஸ்யனுன, ஸ்ரீதரன் இருக்கிற
மூர்த்தி—வடிவு
ஈது—இது
என்னும்—என்னுநிற்கும் !
நையும் — (இப்படி ப்ராப்யனுமாய் உபாஸ்யனுமானவனைக் கிட்டி அநுபவிக்கப்பெருமையாலே) ப்ரீதிலையாகாநிற்கும் ! (அத்தையை திவ்யத்தாலே
கண்ணீர்—கண்ணீர்

---

(௧)

மல்க—மல்க
நின்று—நின்று
நாரணன்—(நிருபாதிகஸம்பந்தயுக்தனான) நாராயணன்
என்னும்—என்றிருக்கும்;
அன்னே—அம்மே!
என்—என்னுடைய
தெய்வவுருவில்—ஸூரிகள்வடிவு போலே அப்ராக்ருதமான வடிவையுடையளாய்
சிறு—முக்தமான
மான்—மான்போலே இளையபருவத்தையுடையளான இவள்
செய்கின்றது—செய்கிறது
ஒன்று—ஒன்றும்
அறியேன்—அறிகிறிலேன்.

ஶரண்யஸ்தலத்தை அஞ்ஜலிபண்ணுகின்றாள், உபாஸ்யஸ்தலத்தைக் காட்டாநின்றாள், ஒன்றிலேநின்றாளாக அறியப்போகிறதில்லை யென்று கருத்து. (உ)

ஆறு;—(பெய்வளை.) இக்கடலை அவன்கண்வளர்ந்தருளுகிற திருப்பாற்கடலாகக் கருதி தன்னுடைய பெய்வளைக்கைகளைக் கூப்பி, பிரான்கிடக்கும் கடலென்னும். எம்பெருமானும் பிராட்டியும், ஆதித்யனும் அவனுடைய ப்ரபையும்போல இருக்கையாலே, அந்த ஆதித்யனைக் காட்டி, ஸ்ரீதரன்மூர்த்தி ஈதென்னும். தன் கைக்கு அவன் எட்டாதொழிந்தவாறே நையும். அந்தவ்யஸநத்தை ஸஹிக்க மாட்டாமையாலே கண்ணீர்மல்க நின்று, நாரணனென்னும். ஆஶ்சர்யபூதையான இவள் செய்கிற செயல் ஒன்றும் தெரிகிறதில்லை யென்கிறாள். (உ)

ஈடு:—மூன்றாம்பாட்டு. இவளுடைய அதிப்ரவ்ருத்திகளைச் சொல்லப்புக்கு, அவற்றுக்கு எண்ணில்லை என்கிறாள்.

அறியும்செந்தீயைத்தழுவி அச்சுதனென்னும்மெய்வேவாள் *
எறியும்தண்காற்றைத்தழுவி என்னுடைக்கோவிந்தனென்னும் *
வெறிகொள்துழாய்மலர்நாறும் வினையுடையாட்டியேன்பெற்ற *
செறிவளைமுன்கைச்சிறுமான் செய்கின்றதென்கண்ணுக்கொன்றே.

ப:—அநந்தரம், அவனுடைய ப்ரதாபாநுக்ரஹங்களை நினைத்து, அக்நியையும் வாயுவையும் அவன்தானாகப் ப்ரதிபத்திபண்ணி மேல்விழாநின்றாள் என்கிறாள்.

அறியும்—சுடுமென்று அறிந்துபோரப் படுவதாய்
செம்—சிவந்தநிறத்தையுடைத்தான
தீயை—நெருப்பை
தழுவி—(தேஜோமயவிக்ரஹத்தை யுடையவனாகக்கொண்டு மேல் விழுந்து) அணைத்து
அச்சுதன்—என்னைவிடாதவனன்றோ?
என்னும்—என்னும்; (இப்படி தாஹகமான அக்நியை மேல்விழச்செய்தே ப்ரஹ்லாத ஶரீரம்போலே)
மெய்—உடம்பு
வேவாள்—வேகிறிலள்; (இவள் ப்ரமித்தாலும் அவனுக்கு அஞ்சுகையாலே தஹியாதிறே);
எறியும்—வீசுகிற
தண்—குளிர்ந்த
காற்றை—தென்றலை
தழுவி—(அணைத்து அதுகுளிர்ந்திருக்கையாலே ப்ரணயியான அவனாக நினைத்துத்) தழுவி
என்னுடை—எனக்குபவ்யனான
கோவிந்தன்—கோவிந்தன் (பசும்மைக் கப்போய் 'நான் க்லேசிக்கிறேன்' என்று காற்றிற் கடியனாய் வந்ததென்?)
என்னும்—என்னும்
வெறிகொள்—(இவள்) பரிமளப்ரசுரமான
துழாய்மலர்—திருத்துழாய்
நாறும்—நாறாநிற்கும்; (க) ("ஓர்தண் தென்றல் வந்து - அந்பூந்துழாயின் இன்தேன் புயலுடை நீர்மையினால் தடவிற்று என் புலன்கலனே" என்கிறபடியே இவள் உயலிடம்பெற்று உய்கைக்காகக் காற்றோடே கலந்துபுகுந்தாராகக்கூடும்);
வினையுடையாட்டியேன்—(இப்படி ப்ரமிக்கக் காணும்படியான) பாபத்தையுடைய நான்
பெற்ற—பெற்றவளாய்
செறி—(போலிகண்டு அவனாகநினைத்து மேல்விழுகையாலே பூரித்துச்) செறிந்த
வளை—வளையையுடைத்தான
முன்கை—முன்கையையுடையளாய்
சிறு—முக்தமான
மான்—மான்போலேயிருக்கிற இவள்
செய்கின்றது—செய்கிற வ்யாபாரம்
என் கண்ணுக்கு—என் கண்ணுக்கு
ஒன்றே—ஒன்றாக இருக்கிறதில்லை; [பஹுவிதமாயிருக்கிறது.]

நெருப்புச் சுடாமையாலே லோகத்தார்படி யல்லள்; காற்றுச் சுடாமையாலே பிரிந்தார்படி யல்லள்; போலிகண்டு ப்ரமிக்கையாலே கூடினார் படியல்லள்; திருத்துழாய் மணக்கையாலே கூடாதார்படி யல்லளென்று கருத்து (௩)

ஆறு;—(அறியும்.) எல்லாராலும் தாஹகஸ்வபாவத்வேந அறியப்படுகிற செந்தீயை அதினுடைய ஔஜ்ஜ்வல்யத்தாலே எம்

(க) திருவி - ௫௧.

பெருமாளைக் கருதிச் சென்று ஸம்ஶ்லேஷித்து அந்த ஸம்ஶ்லேஷ ஜநிதப்ரீதியாலே, அச்சுதனென்னும்; மெய்வேவாள்; அதினுடைய ஶைத்யாதிஶயத்தாலே நிரஸ்த ஸமஸ்தஸந்தாபையா யிருக்கும். அதிஶீதளமாய்க்கொண்டு வருகிற தென்றலை, பசுமேய்க்கப்பெற்று வருகிற வண்டுவரைப்பெருமானென்று நிஶ்சயித்து அக்காற்றைத் தழுவி, அடியேன் இவன் என்னுடைய கோவிந்தனென்னும். வெறிகொள்துழாய்மலர் நாறும். இப்படி எம்பெருமானைப் பிரிந்துபடுகைக்கு அர்ஹையன்றியே யிருக்கச்செய்தே, இவள் என்னுடைய பாபத்தாலே பிச்சேறிச் செய்கிற செயல்கள் இவ்வளவோ! என்கிறாள். (௩)

ஈடு ; அ ;— நாலாம்பாட்டில், வ்யஸநஸஹையல்லாத இவளை இப்படி நோவுபடுத்துவதே! என்கிறாள்.

ஒன்றியதிங்களைக்காட்டி ஒளிமணிவண்ணனேயென்னும் *
நின்றகுன்றத்தினைநோக்கி நெடுமாலே வாவென்றுகூவும் *
நன்றுபெய்யும்மழைகாணில் நாரணன்வந்தானென்றாலும் *
என்றினமையல்கள்செய்தாயென்னுடைக்கோமளத்தையே.(௪)

ப ;—அநந்தரம் உஜ்ஜ்வலமாய் உத்துங்கமாய் ஶ்யாமளமான வடிவையுடையவனை அநுஸந்தித்து, சந்த்ரனையும் மலையையும் மேகத்தையும் கண்டு அவனாக ப்ரமியாநின்றாள் என்கிறாள்.

ஒன்றிய—(எல்லாக்கலைகளாலும்) ஒன்றப்பட்ட
திங்களை—சந்த்ரனை
காட்டி—(அருகுநின்றார்க்குக்) காட்டி, (க) "[illegible] கலங்காஸம்" என்கிறபடியே)
ஒளி—ஒளியையுடைத்தான
மணி—ஸ்படிகமணிபோன்ற
வண்ணனே—வடிவையுடையவனே!
என்னும்—என்னாநிற்கும்;

நின்ற—(அந்தச்சந்த்ரபதத்தளவும் உயர்ந்து முன்னே) நிற்கிற
குன்றத்தினை—மலையை
நோக்கி—பார்த்து
நெடுமாலே—(உன்னுடையவடிவுபோலே நெடிதான ஸ்நேஹத்தையுடையவனே!
வா—(ஸாபராதரைப்போலே தேங்கிநிற்கிறதென்? க்ஷேமமற்போன நீ யாரைக்கேட்டுப் புகுருகைக்கு நிற்கிறது?) வாராய்;

(க)

என்று—என்று
கூவும்—(தன்ப்ரணயம் தோன்ற) அழையாநிற்கும்;
நன்று—(உருவினை பயிர் கொந்தளிக்கும்படி) நன்றாக
பெய்யும்—வர்ஷிக்கும்
மழை—மேகத்தைக்
காணில்—காணில்
நாரணன்—நாராயணத்வாச்யமான அப்புக்களையுடைய நாராயணன்
வந்தான்—(நம்உருவுதல்தீர) வந்தான்
என்று—என்று
ஆலும்—'மேகஸந்நிதியில் மயில் ஆலிக்குமாபோலே ஹர்ஷரூபநர்த்தநத்துடன் ஸம்ப்ரமந்ருத்தம் பண்ணாநிற்கும்;
என்னுடை—என்னுடைய
கோமளத்தை—ம்ருதுஸ்வபாவையான பெண்பிள்ளையை
என்று—என்றுகாண்
இனை—இப்படிப்பட்ட
மையல்கள்—ப்ரமங்களை
செய்தார்—பண்ணினார்?

இவ்வவஸ்தையிலே இதுக்கெல்லாம் காலமுண்டோ? என்று கருத்து (௪)

ஆறு;—(ஒன்றிய) அதிபரீதரான ப்ரபன்னை பூர்ணசந்த்ரனைக் காட்டி, இவன் ஒளிமணிவண்ணனே யென்னும். நின்றகுன்றத்தினை நோக்கி, இந்த லோகத்தை அநாந்தருணை நக்காக மண்ணும் விண்ணும் நிறைய மலர்ந்த எம்பெருமானென்று நிர்ணயித்து, நெடுமாலே வாவென்று கூப்பிட்டழைக்கும். இலங்கொலிநீர் பெரும் பௌவம் மண்டியுண்ட பெருவயிற்ற கருமுகிலைக்காணில், நாரணன் வந்தானென்று மயில்கள் நின்று ஆலுமாபோலே ஆலும். என்று இப்படியே பித்தேறப்பண்ணினான் என்னுடைக் கோமளத்தை என்கிறாள். (௪)

ஈடு;—அஞ்சாம்பாட்டு. 'இவனுக்கு இவ்வவஸாதம் எவ்வளவாய் முடியக்கடவது? என்று அறிகிறிலேன' என்கிறாள்.

கோமளவான்கன்றைப்புல்கிக் கோவிந்தன்மேய்த்தனவென்னும் *
போமிளநாகத்தின்பின்போயவன் கிடக்கையீதென்னும் *
ஆமளவொன்றுமறியேனருவினையாட்டியேன்பெற்ற *
கோமளவல்லியைமாயோன் மால்செய்துசெய்கின்றகூத்தே. (ரு)

ப;—அநந்தரம், அவனுடைய ரக்ஷணப்ரவ்ருத்திகளை அநுஸந்தித்து, கன்றுகளையும் ஸர்ப்பத்தையும் கண்டு, அவன்ரக்ஷித்தவை யென்றும், ரக்ஷணார்த்தமாக வந்து கிடக்கும் படுக்கையென்றும் சொல்லாநின்றாள் என்கிறாள்.

கோமளம்—இளையவாய்
வான்—பெரியவான
கன்றை—கன்றுகளை
புல்கி—தழுவி
கோவிந்தன்-(பசுமேய்க்க முடிசூடின) கோவிந்தன்
மேய்த்தன—(இனிது உகந்து) மேய்த்தன
என்னும்—என்னுநிற்கும்;
போம்—(ஸ்வைரஸஞ்சாரமாகப்) போகாநிற்கிற
இளம் நாகத்தின்—இளையதான நாகத்தின்
பின்—பின்னே
போய்—('இதுபோனவிடத்திலே அவனையும் காணலாம்' என்று நினைத்துப்) போய்
அவன் கிடக்கை—அவன்கிடக்கிற படுக்கை
ஈது—இது
என்னும்—என்னுநிற்கும்;
அரு—(அநுபவித்துமுடிக்க) அரிய
வினையாட்டியேன்—பாபத்தையுடையேனான நான்
பெற்ற—(இப்படி ஈடுபடுகைக்கு உறுப்பாகப்) பெற்ற
கோமளம்—ம்ருதுஸ்வபாவையாய்
வல்லியை—(கொள்கொம்பில்லாத) கொடிபோலே தளைப்படுகிற இவளை
மாயோன்—ஆச்சர்யகுணசேஷ்டிதங்களை யுடையவன்
மால்செய்து—பிச்சேற்றி
செய்கின்ற—பண்ணுகிற
கூத்து—கூத்தாட்டு
ஆமளவு—எவ்வளவாமென்று
ஒன்றும்—ஒன்றும்
அறியேன்—அறிகிறிலேன், இவள் பாம்பின்வாயிலே அகப்பட்டு முடியுமாகில் அவனும் அவள் விபூதியுங்கூட முடியுமிறே யென்று கருத்து.
கிடக்கை—படுக்கை

'ஆண்கன்றை' என்று பாடமாகவுமாம். (ரு)

ஆறு;—(கோமளம்.) கோமளவான் கன்றுகளைப்புல்கி, இவை கோவிந்தன்மேய்த்தன என்னும் போம் இளநாகத்தின்பின் போய் அத்தைப்புல்கி, 'இவ்விளமையும் மார்த்தவமும் அழகும் எம்பெருமானோடுகலந்த திருவநந்தாழ்வானுக் கல்லது கூடாது; ஆதலால், அவன் கிடக்கை ஈது' என்னும். அருவினையாட்டியேன் பெற்ற கோமளவல்லியை மாயோன் மால்செய்து செய்கின்ற கூத்து என்னாய் விளையுமென்று அறிகிலேன் என்கிறாள். (ரு)

ஈ௬; அவ;—ஆறும்பாட்டு. தன்மகள் பிச்சுக்கு நிதாநத்தையும் அதடியாகவந்த பிச்சுத் தன்னையும் சொல்லுகிறாள்.

கூத்தர்குடமெடுத்தாடில் கோவிந்தனாமெனாவோடும் *
வாய்த்தகுழலோசைகேட்கில் மாயவனென்றுமையாக்கும் *
ஆய்ச்சியர்வெண்ணெய்கள்காணிலவனுண்டவெண்ணெயீதென்னும்
பேய்ச்சிமுலைசுவைத்தார்க்கென் பெண்கொடியேறியபித்தே ! (௬)

ப ;—அநந்தரம், 'அவனுடைய மநோஹரசேஷ்டிதங்களை அநுஸந்தித்து, அவற்றுக்குப் போலிகண்டு ப்ரமியாநின்றாள்' என்கிறாள்.

கூத்தர்—கூத்தாடுமவர்கள்
குடம் எடுத்து—குடம் எடுத்து
ஆடில்—ஆடினார்களாகில்
கோவிந்தன்—(கோஸம்ருத்தியையுடையனாகையாலே செருக்குமிக்குக் கூத்தாடுகையே ஸ்வபாவமாகவுடைய) க்ருஷ்ணன்
ஆம்—ஆம்
எனா—என்று
ஓடும்—(காண்கைக்கு) ஓடாநிற்கும் ;
வாய்த்த—நன்றாய் நெஞ்சைவருத்தும்
குழலோசை—குழலோசை
கேட்கில்—கேட்டாளாகில்
மாயவன்—(இடைப்பெண்களுடைய ப்ரணயரோஷமாறும்படி தன் தாழ்ச்சிவைத்தூதும் குழலோசையையுடைய ஆஸ்சர்யபூதனான) க்ருஷ்ணன்
என்று—என்று
மையாக்கும்—மோஹியாநிற்கும் ;
ஆய்ச்சியர்—இடைச்சிகள் கையிலே
வெண்ணெய்கள்—வெண்ணெயை
காணில்—கண்டாளாகில்
அவன் உண்ட—அவன் அமுதுசெய்த
வெண்ணெய்—வெண்ணெயோடு ஸஜாதீயம்
ஈது—இது
என்னும்—என்னாநிற்கும் ;
பேய்ச்சி—பூதனையுடைய
முலை—முலையை
சுவைத்தார்க்கு—ப்ராணனோடே சுவைத்து நன்மை லோகத்துக்குக் கொடுத்த மஹோபகாரகர்க்கு
கொடி—கொடிபோலே மெல்லியவடிவையுடைய
என் பெண்—என் பெண்பிள்ளை
ஏறிய—மேலண்டையிட்டுப்படி கொண்ட
பித்து—பிச்சு இருந்தபடி. (௬)

ஆறு ;—(கூத்தர்.) கூத்தர் குடமெடுத்தாடில், 'கோவிந்தனல்லன்காண்' என்றாலும் ; ஆம்காணென்றோடும் ; அன்றியே ஒழிந்தவாறே தளரும். 'அழகியகுழலோசை கேட்கில், இவளைப் பெறவொண்ணாது' என்று கேளாததொருபடி காத்துச் செல்லாநிற்கச் செய்தே, எங்கேனுமோரிடத்திலே பின்னையும் ஸப்தமானவாறே, அடியேன் மாயவனென்று ஓடும் ; அவனன்றியே யொழிந்தவாறே

மோஹிக்கும். பின்னையும், ஆய்ச்சியர் வெண்ணெய்கள் காணில், அவனுண்ட வெண்ணெய் ஈதென்னும். மாய்த்தலெண்ணி வாய் முலைதந்த பேய்ச்சியை மாய்த்த இச்செயல்கள் இவளை இப்பாடு படுத்துகிறது என்கிறாள். (சு)

ஈடு ;— ஏழாம்பாட்டு. தேறினபோதோடு தேறாதபோதோடு வாசியற எப்போதும் அவன்திறமல்லது அறியாளே என்கிறாள்.

ஏறியபித்தினோடெல்லாவுலகும் கண்ணன்படைப்பென்னும் *
நீறுசெவ்வேயிடக்காணில் நெடுமாலடியாரென்றோடும் *
நாறுதுழாய்மலர்காணில் நாரணன்கண்ணி ஈதென்னும் *
தேறியுந்தேறாதும்மாயோன் திறத்தனளே இத்திருவே. (எ

ப ;—அநந்தரம், அவனுடைய பாத்வ சிஹ்நங்களை அநுஸந்தித்துக் கலங்கினபோதோடு தேறினபோதோடு வாசியற அவன்படிகளிலே உள்ளாயிராநின்றாள் என்கிறாள்.

ஏறிய—மிகைத்த
பித்தினோடு—ப்ரமத்தோடே கூடியிருக்கச்செய்தே, (வேதாந்த வித்துக்கள் சொல்லுமா போலே (க) "க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாம் உத்பத்தி: - க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாமுத்பத்தி:" என்று)
எல்லாவுலகும் — ஸர்வலோகமும்
கண்ணன் — க்ருஷ்ணனுடைய
படைப்பு — ஸ்ருஷ்டி
என்னும் — என்னாநிற்கும் ;
நீறு—பஸ்மத்தைக்கொண்டு
செவ்வே—செவ்விதாக
இட—இட
காணில்—கண்டாளாகில் ('த்ரவ்யம் இன்னது' என்று அறியாதே ஊர்த்வபுண்ட்ரமே அடையாளமாக)
நெடுமால்—(ஆஸ்ரிதர்பக்கல்) அத்யந்த வ்யாமுக்தனான ஸர்வேஸ்வரனுடைய
அடியார்—அடியார்
என்று—என்று ப்ரமித்து
ஓடும்—(அவர்களிருந்தவிடத்தை நோக்கி) ஓடாநிற்கும் ;
நாறு—பரிமளோத்தரமான [தாழை
துழாய் மலர்—திருத்துழாயின் பூந்
காணில்—காணில்
நாரணன்—ஸர்வஸ்வாமியான நாராயணனுடைய
கண்ணி—மாலை
ஈது—இது
என்னும்—என்னாநிற்கும் ; (இப்படி)
தேறியும்—தேறினவளவிலும்
தேறாதும்—கலங்கினவளவிலும்
இத்திரு—(உ) "நாத்ய ப்ரவ்ருத்தே - நாத்யர்த்தம் க்ஷீயதே" என்

(க) பாரத - ஶா -

(உ) ரா - ஸு - கக - சு.

றும் (க) " தத்த ஸ்வஸ்ய ஸம்ஸ வெசு - தத்தஸ்யஸ த்ருஸம்பவேத்" * என்று மென்னும் படி மிகவும் கலங்காத அந்தத் திருவைப்போலன்றியே பிரிந்த தசையில் ஸத்ருஸ வஸ்துக்களையும் ஸம்பந்தி பதார்த்தங்களையும் கண்டு கலங்கும்) இத்திருவானவள் மாயோன்—ஆஸ்சர்யமான பாத்வசிஷ்றங்களையுடையவன் திறத்தனள் — திறத்திலே யாகாநின்றாள்.

அநபாயிநியான ஸம்பத்தாயிருக்கை இருவர்க்கும் ஒக்குமிறே (எ)

ஆறு ;—(ஏறிய.) எத்தனையேனும் பித்தேறினாலும் எல்லாவுலகும் கண்ணன்படைப்பென்னும்; இதொன்றும் தப்பாமல் சொல்லும். த்ரவ்யம் ஏதேனுமாகிலும் ஊர்த்த்வமாக இடக்காணில், நெடுமாலடியாரென்று ஓடும். ததீய வஸ்துஸாத்ருஸ்யத்தாலே ததீயமல்லாதவற்றையும் ததீயமாகக் கருதிப் பிதற்றுகிற இவள் அவனுக்கு அஸாதாரண ஸேஷபூதமான திருத்துழாயைக் கண்டால் என்படும்; பலசொல்லியென்? இனி, தேறியும் தேறாதும் மாயோன் திறமல்லதறியாள் இத்திரு என்கிறாள். (எ)

அடு ; அவ ;—எட்டாம்பாட்டில் - 'அத்யந்த தூர்த்தசையாவர்த்தியாநின்றாலும் இவள் ததேகபரையாயிருக்கும்' என்கிறாள்.

திருவுடைமன்னரைக்காணில் திருமாலேக்கண்டேனேயென்னும் *
உருவுடைவண்ணங்கள்காணி லுலகளந்தானென்றுதுள்ளும் *
கருவுடைத்தேவில்களெல்லாம்கடல்வண்ணன்கோயிலேயென்னும்*
வெருவிலும்வீழ்விலுமோவாக் கண்ணன்கழல்கள்விரும்புமே. (அ)

ப ;—அநந்தரம், அவனுடைய ஐஸ்வர்யாபிரூப்யாசரணீயத்வங்களை அநுஸந்தித்து, போலிகண்டாலும் ஸர்வாவஸ்தையிலும் அவனையே விரும்பாநின்றாள் என்கிறாள்.

திரு—பூர்ணமான ஐஸ்வர்யத்தை
உடை—உடைய
மன்னரை—ராஜாக்களை
காணில்—காணில்
திருமாலே—(பரிபூர்ணவிபூதிகனான) ஸ்ரீயப்பதியை
கண்டேனே—கண்டேனே
என்னும்—என்னாநிற்கும் ; (கடலும்) காயாவும் கருவிளையும் தொடக்கமான)
உரு—விலக்ஷணரூபங்களை
உடை—உடையவாயுள்ள

(க) ரா - ஸு - ருக - உ0.

வண்ணங்கள்—பதார்த்தங்களை
காணில்—காணில்
உலகளந்தான்—திருவுலகளந்தருளின போது ஒருநாளே வளர்ந்தருளின செவ்வியையுடைய ரூபஸௌந்தர்யத்தையுடையவன்
என்று—என்று
துள்ளும்—ஸம்ப்ரமித்து ஆடாநிற்கும்;
கரு—ப்ரதிமாகர்ப்பத்தை
உடை—உடைத்தான
தேவில்கள் எல்லாம்—தேவக்ருஹங்கள் எல்லாம், (ஆஸ்ரிதர் ஆதரிக்கைக்காக)
கடல் வண்ணன்—கடல்போலே தர்ஸநீயமான வடிவையுடைய ஸர்வேஸ்வரன்
கோயிலே—(ஸந்நிதிபண்ணின) கோயில்களே
என்னும்—என்னாநிற்கும்;
வெருவிலும்—(பந்துஜநந்நிதியால்) அஞ்சினபோதோடு
வீழ்விலும்—ஆர்த்தியாலே மோஹித்த போதோடு வாசியற
ஓவாள்—இடைவிடாளாய்க்கொண்டு
கண்ணன்—க்ருஷ்ணன்
கழல்கள்—திருவடிகளை
விரும்பும்—ஆதரியாநிற்கும்.

வெருவுதல் - அஞ்சுதல். வீழ்தல் - மோஹித்தல். (அ)

ஈடு ;—(திருவுடை) ஸ்ரீமான்களான ராஜாக்களைக் காணில், 'ஏவம்விதையான ஸ்ரீமத்தையானது ஸ்ரிய:பதியான ஸர்வேஸ்வரனுக்கல்லது கூடாதாதலால் 'இவன் ஸ்ரிய:பதியே' என்று நிஸ்சயித்து, திருமாலைக்கண்டேனே யென்னும்; அழகிய நீலமேகங்கள் குவளைகள் காயாமலர்கள் கடல் என்னும் இவற்றைக்காணில், உலகளந்தானென்று துள்ளும்; கருவுடைத்தேவில்களெல்லாம் கடல்வண்ணன் கோயிலே என்னும்; அங்கே போய்ப்புக்கு அவனன்றிய யொழிந்தவாறே ஏங்கிவிழும்; பின்னையும் தவிராதே கண்ணன் கழல்கள் விரும்பும் என்கிறாள். (அ)

ஈடு ; ஒன்பதாம்பாட்டு. பெறுதற்கரிய இவள், தன்னையே வாய்வெருவி மோஹிக்கும்படி பண்ணுகின்றான் என்கிறாள்.

விரும்பிப்பகவரைக்காணில் வியலிடமுண்டானே யென்னும் *
கரும்பெருமேகங்கள் காணில் கண்ணனென்றேறப்பறக்கும் *
பெரும்புகழ்வானவைகாணில் பிரானுமென்றுபின்செல்லும் *
அரும்பெறல்பெண்ணினைமாயோ னலற்றியயர்ப்பிக்கின்றானே. (௯)

ப :—அநந்தரம், ஆஸ்ரிதர்பக்கல் அவனுடைய உபகாரகத்வத்தை அநுஸந்தித்து தத்ஸத்ருஸ ஸம்பந்திகளைக் கண்டு வாய்புலற்றி மோஹிக்கும்படி பண்ணினான் என்கிறாள்.

பகவரை-(ஜ்ஞாநாதிகுணபூர்த்தியாலே ஆஶ்ரிதரை ஸ்வாபிமாநாந்தர்க்கதராக்கி ரக்ஷிப்பாராயுள்ள) பகவத்ரூபரான மோக்ஷாஶ்ரமிகளை
காணில்—காணில்.
விரும்பி—அத்யாதரத்தைப்பண்ணி
வியல் இடம்—விஸ்தீர்ணமான ஜகத்தை
உண்டானே — வயிற்றிலேவைத்து நோக்கின ஸர்வரக்ஷகனே, (இது நிஶ்சிதம்)
என்னும்—என்றிருக்கும்;
கரு—கறுத்து
பெரு—பெருத்த
மேகங்கள்—மேகங்களை
காணில்—காணில்
கண்ணன்—(ஜ்ஞாந அஜ்ஞாநவிபாகமறத் தன் வடிவைக் காட்டி உபகரிக்கும்) க்ருஷ்ணன்
என்று—என்று
ஏற—மேலேயெழ
பறக்கும்—பறக்கத் தேடாநிற்கும்;
பெரு—அதிப்ரபூதமாய்
புலம்—தர்ஶநீயமான
ஆநிரை—பசுத்திரளை
காணில்—கண்டாளாகில்
பிரான்—(இவற்றை வயிறு நிறையமேய்த்து ரக்ஷிக்கும்) மஹோபகாரகன்
உளன்—கூடவருகிறான்
என்று—என்று
பின்—அவற்றின்பின்னே
செல்லும்—போகாநிற்கும்:
பெறல் அரும்—பெறுதற்கு அரியளான
பெண்ணினை—இப்பெண்ணை
மாயோன்—(இப்படி உபகாரசேஷ்டிதங்களையுடைய) ஆஶ்சர்யபூதன்
அலற்றி—வாய்விட்டலற்றும்படி பண்ணி
அயர்ப்பிக்கின்றான்-(அதுக்குமேலே) மோஹிக்கும்படி பண்ணுகின்றான்.

பகவர்—ஸந்ந்யாஸிகள். (௩)

ஆறு ;—(விரும்பி.) அபரிமித பகவத்ஜ்ஞாநவிஶிஷ்டராய் அதஏவ பகவத்வ்யதிரிக்த விஷயங்களில் நிரபேக்ஷரா யிருப்பாரைக் காணில், ஏவம்வித நைரபேக்ஷ்யம் எம்பெருமானுக்கல்லது கூடாதாதலால், வியலிடமுண்டானேயென்று ஸாதரமாகச் சொல்லும். கரும்பெருமேகங்கள் காணில், அடியேன் கண்ணனென்று தன்னுடைய ப்ரீதிப்ரஸரமே சிறகாகக்கொண்டு ஏறப்பறக்கும்; தனக்கு எட்டாதொழிந்தவாறே தளரும். பின்னையும் லப்தஸம்ஜ்ஞையாய், அதிஸமக்ரமான பசுநிரைகாணில், அடியேன்பிரான் உளனென்று அவற்றின்பின் செல்லும். இப்படி என்னுடைய அரும்பெறல்

பெண்ணினை மாயோன் தன்னை அலற்றி யயர்க்கும்படி பண்ணு நின்றான் என்கிறாள். (௯)

ஈடு ;—பத்தாம்பாட்டு. ஸத்ருஶபதார்த்தங்களை அநுஸந்திக்க க்ஷமமல்லாத வ்யஸநாதிஶயத்தாலே இவளுக்குப் பிறந்த விக்ருதிகளைச் சொல்லி, நான் என்செய்வேன் ? என்கிறாள்.

அயர்க்கும்சுற்றும்பற்றிநோக்கு மகலவே நீள்நோக்குக்கொள்ளும் *
வியர்க்கும்மழைக்கண் துளும்ப வெவ்வுயிர்கொள்ளும்மெய்சோரும்*
பெயர்த்தும்கண்ணா என்றுபேசும் பெருமானேவாவென்றுகூவும் *
மயற்பெருங்காதலென்பேதைக் கென்செய்கேன்வல்வினையேனே. ()

ப ;—அநந்தரம், அவனுடைய ஸௌலப்யாதிஶயத்தை அநுஸந்தித்து ஸத்ருஶ ஸம்பந்திவஸ்துக்களையும் காண்கைக்கு யோக்யதையில்லாத ஆர்த்தி விஞ்சினபடியைச் சொல்லி 'இவளுக்கு என்செய்வேன் ?' என்கிறாள்

அயர்க்கும்—(துல்யஸம்பந்திவஸ்துக்களையும் காணவொண்ணாதபடி) மோஹியாநிற்கும் ; (உணர்த்தி வந்தவாறே, 'இவ்வவஸ்தையில் அவன் வாராதொழியான்' என்று நினைத்து)

சுற்றும்—சுற்றும்

பற்றி நோக்கும்—பலகாலும் பாராநிற்கும் ; (அவ்வளவிலும் காணவிட்டவாறே தூரத்திலேநிற்கிறானாக நினைத்து)

அகல—(பார்த்தகண்ணை) ஓட்டி

நீள்நோக்குக் கொள்ளும்—நெடும்போது பாராநிற்கும் ;

வியர்க்கும்—(அங்கும் காணாமையாலே ப்ரணய ரோஷத்தாலே) வேர்த்து நீராகாநிற்கும் ;

மழை—மழைபோலே (அருவிச்சொரிகிற கண்ணீரானது கோபாக்நியாலே சுவறி அடியற்று)

கண்—கண்ணளவிலே

துளும்ப—துளும்பும்படி

வெம்—அவ்வெம்மைதோன்ற

உயிர்கொள்ளும்—நெடுமூச்செறியும் ;

மெய்—(அந்தப்பரிதாபத்தாலே) ஶரீரம் தரிக்கமாட்டாமல்

சோரும்—சோரும்.

பெயர்த்தும்—பின்னையும் (ஆசை பேசாதிருக்கவொட்டாமையாலே)

கண்ணா—(பெண்களுக்கு ஸர்வகால ஸுலபனான) க்ருஷ்ணனே !

என்று—என்று

பேசும்—ஸம்போதித்துச் சொல்லாநிற்கும் ; (இப்பேர் கேட்டவாறே வந்தானாக நினைத்து)

பெருமானே—(என்னிணைவளவன்றியே அதிஸயிதமாக உபகரிக்கும் என்னுடைய) நாதனே!	என் பேதைக்கு—என் சொற்கேளாப் பெண்ணுக்கு
வா—வரலாகாதோ?	வல்வினையேன்—(இவளை இப்படி காண்கைக்கு அடியான) அதிப்ரபலபாபத்தை யுடைய நான்
என்று—என்று	என்செய்கேன்—எத்தைச்செய்வேன்?
கூவும்—அழையாநிற்கும்;	
மயல்—(இப்படி) பிச்சேறும்படி	
பெரு காதல்—பெரிய காதலையுடைய	

வாராதவனை வரப்பண்ணுவேனோ? இதுகண்டு பொறுத்திருப்பேனோ? என்று கருத்து. (௧௦)

ஆறு;—(அயர்க்கும்.) வ்யஸநாதிஸயத்தாலே அறிவழிந்து கிடக்கும். பின்னையும், நெடும்போது கூட ப்ரபுத்தையாய், தன்னருகேவந்தானாகக்கருதிச் சுற்றும் பற்றிநோக்கி, அருகுகாணாதொழிந்தவாறே அகலவே நீள்நோக்குக்கொள்ளும். தூரத்திலும் காணாதொழிந்தவாறே நீராய் உருகும். மழைக்கண்ணூடு வெவ்வுயிர்கொள்ளும். மெய்சோரும். பின்னையும் கண்ணனென்று பேசும். பெருமானே வாராயென்று கூப்பிட்டழைக்கும். இப்படி காதல் மையலேறின என் பெண்பேதைக்கு என்செய்கேன் பாவியேன்? என்று அலற்றுகிறாள். (௧௦)

ஈடு; அவ;—நிகமத்தில் - இத்திருவாய்மொழி கற்றார், ஸம்ஸாரதுரிதம்போய் பகவத்விஸ்லேஷகந்தமில்லாத திருநாட்டிலே எல்லாரும் ஸிரஸாவஹிக்கும் மேன்மையோடே இருக்கப்பெறுவரென்கிறார்.

வல்வினைதீர்க்குங் கண்ணனை வண்குருகூர்ச்சடகோபன் *
சொல்வினையாற்சொன்னபாடலாயிரத்துளிவைபத்தும் *
நல்வினையென்றுகற்பார்கள் நலனிடைவைகுந்தம்நண்ணித் *
தொல்வினைதீரவெல்லாரும் தொழுதெழவீற்றிருப்பாரே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப;—அநந்தரம், இத்திருவாய்மொழி அப்யஸித்தவர்கள் நித்யஸூரிகளாதரிக்கும்படியாக ஸ்வஸேஷத்வ ஸாம்ராஜ்ய ப்ரதிஷ்டிதராவர்கள் என்று பலத்தை அருளிச்செய்கிறார்.

வல்—ஆஸ்ரிதர் தன்னை ஸம்ஸ்லேஷிக்கைக்கு விலக்கான

வினை—ஸகலபாபங்களையும்

தீர்க்கும்—(க) “ ஸவ-ீவெ வெ ஹ்ராமெ ோக்ஷயிஷ்யாமி - ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி ” என்று போக்கும் ஸ்வபாவனை

கண்ணனை—க்ருஷ்ணனை

வண்—ஸர்வஸம்பத் ஸம்ருத்தமான

குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான

சடகோபன்—ஆழ்வார்

சொல்வினையால்—வாசிகசேஷவ்ருத்திரூபத்தாலே

சொன்ன—அருளிச்செய்த

பாடல்—கானரூபமான பாட்டுகள்

ஆயிரத்துள்—ஆயிரத்துள்

இவைபத்தும்—இவைபத்தையும்

நல்வினை—விலக்ஷணவ்ருத்திவிசேஷம்

என்று—என்று

கற்பார்கள்—கற்குமவர்கள்

நலன்—பக்வத்நுபவாநந்தத்தைத்

உடை—உடைத்தான

வைகுந்தம்—பரமபதத்தை

நண்ணி—கிட்டி

தொல்—அநாதிஸித்தமான

வினை—அவித்யாதிதோஷங்கள்

தீர—மறுவலிடாதபடி

எல்லாரும்—அங்குள்ள ஸூரிகளெல்லாரும்

தொழுது — (தங்களுடைய ததீயசேஷத்வம் தோன்றும்படி) தாழ்ந்து ஆதரித்து

எழ—(ஸம்ப்ரமத்தாலே) பெரியகிளர்த்தியை யுடையராம்படியாக

வீற்று இருப்பார்—(தங்கள் சேஷத்வஸாம்ராஜ்யத்தாலுள்ள) வேறுபாடுதோன்ற இருக்கப்பெறுவார்கள்.

இது - அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம். (கக)

ஆறு;—(வல்வினைதீர்க்கும்) ஆஸ்ரிதஜந ஸமஸ்ததுக்காபநோதந ஸ்வபாவனும் ஆஸ்ரிதஸுலபனுமிருந்த எம்பெருமானைச் சொல்வினையாற் சொன்ன பாடல் ஆயிரத்துள் இவைபத்தும் அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு கற்பார்கள் நலனுடை வைகுந்தம் நண்ணி எல்லாரும் தொழுதெழ வீற்றிருப்பார் என்கிறார். (கக)

நாலாம்பத்து நாலாந்திருவாய்மொழி வ்யாக்யாநங்கள் முற்றுப்பெற்றன.

(க) கீ - கஅ - சுசு

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

நாலாம் பத்து

ஐந்தாந்திருவாய்மொழி — வீற்றிருந்து ப்ரவேஶம்

ஆ ;—(வீற்றிருந்து.) ஸ்ரீவைகுண்டநிலயனாய் அநந்தபோகிநி ஶ்ரியாஸஹாஸீநனாய் ஶேஷஶேஷாஶநவைநதேய ப்ரப்ருத்யபரிமித பரிஜநபரிவ்ருதனாயிருந்த எம்பெருமானை அவனுடைய நிரவதிக காருண்யத்தாலே கண்களாலே கண்டு, கைகளாரத் தொழுது, வாயாலே திருவாய்மொழி பாடப்பெற்ற எனக்கு இனியென்ன குறையுண்டு? என்கிறார். *

ப ;—அஞ்சாந்திருவாய்மொழியில், கீழ் - ஶத்ருஶமாயும் ஸம்பந்தியாயுமுள்ள வஸ்துக்களுடைய தர்ஶநத்தாலே ப்ரமிக்கும்படி இவர்க்கு உண்டான ஆர்த்த்யதிஶயம் தீருகைக்காக ஸர்வேஶ்வரன் தன்னுடைய நிரதிஶயபோக்யமான ஸ்வரூபரூபகுணங்களையும், மஹிஷீபூஷணாயுத பரிஜநாதிரூபமான விபூதி வைலக்ஷண்யத்தையும், மஹோதாரசேஷ்டிதங்களையும் அநுபவிப்பிக்க அநுபவித்து ப்ரீதராய் அவனுடைய அகிலலோக நிர்வாஹகத்வத்தையும், அதுக்கு அடியான லக்ஷ்மீபதித்வத்தையும், உபயஸித்தமான ஆநந்தாதிகுண யோகத்தையும், இக்குணாதி போக்தாக்களைக் காத்தூட்டும் வாஹநாயுதவத்தையையும், போகாநுகுணமான ஜ்ஞாநப்ரேமாதி ப்ரதத்வத்தையும், அஸ்கலிதஜ்ஞாநர்க்கு அநுபாவ்யமான விக்ரஹவைலக்ஷண்யத்தையும், இந்த போக்யதைக்கு ஸர்வாவஸ்தையிலும் ஒத்தாரும் மிக்காருமில்லாத மேன்மையையும், அதுக்கு உபபாதகமான விபூதித்வயயோகத்தையும், தத்விஷயமான வ்யாப்த்யாதிகளையும், வ்யாப்யரக்ஷணார்த்தமான தர்ஶநீயவ்யாபாரங்களையும் அநுஸந்தித்து, இப்படி பரிபூர்ணனான ஸர்வேஶ்வரனை அநுபவித்துப் பிறந்த ஹர்ஷாதிஶயத்தாலே ஸம்ஸாரிகளைப்போலே வாய்விட்டுப் புகழ்ந்து, இந்தளத்தில் தாமரைபோலே இங்கே இந்த அநுபவங் கிடைக்கையாலே எனக்கு ஸத்ருஶருண்டோ? என்று தமக்குப்பிறந்த செருக்கை அருளிச்செய்கிறார்.

ஈடு ;—கீழில் திருவாய்மொழியிலே அப்படி விடாய்த்தவர் ''இனியென்ன குறையெழுமையுமே'' என்னப்பெறுவதே ; பொய்ந்நின்ற ஞானம் தொடங்கிக் கீழெல்லாம் - மண்ணையிருந்து துழாவியில் விடாய்க்கு க்ருஷிபண்ணினபடி ; அப்படி விடாய்க்கப்பண்ணின க்ருஷியின்பலம் சொல்லுகிறது இதில். பேற்றுக்கு இதுக்கு அவ்

வருக்கு சொல்லலாவது இனியொன்றில்லை. "சூழ்விசும்பணிமுகி லுக்கு அநந்தரம் இத்திருவாய்மொழியாகப் பெற்றதில்லையே" என்று அருளிச்செய்வர் ஜீயர்

பெருமாளும் இளையபெருமாளுமான இருப்பிலே பிராட்டிக்குப் பிரிவு உண்டாக, மஹாராஜரையும்பரிகரத்தையும் கூட்டிக்கொண்டு சென்று விரோதிவர்க்கத்தைக்கிழங்கெடுத்து அவளோடே கூடினாற்போலே, போலிகண்டு இவர்ப்ரமித்த இழவெல்லாம் போம்படி, நித்யவிபூதியையும் லீலாவிபூதியையு முடையனாயிருக்கிற தன்படிகளொன்றும் குறையாதபடிகொண்டுவந்து காட்டிக்கொடுத்து, 'கண்டீரே நாமிருக்கிறபடி ? இந்த ஐஶ்வர்யமெல்லாம் ஒன்றுப்த் தலைக்கட்டுவது, நீர் உம்முடைய வாயாலே ஒருசொல்லுச் சொன்னால்காணும்' என்று இவர்திருக்கையிலே தாளத்தைக் கொடுக்க, அவ்விருப்புக்கு மங்களாஶாஸநம்பண்ணு ‡ * (உபய விபூதியிலும் என்னோடொப்பாரில்லையென்று அதிப்ரீதரா) கிறார்.

"நின்றகுன்றத்தினைநோக்கி" என்று ப்ரமித்ததுக்கு, வானமாமலையான தன்னைக் காட்டிக்கொடுத்தான்; "நீறுசெவ்வேயிடக்காணில் நெடுமாலடியாரென்றோடினதுக்கு, "தூவியம்புள்ளுடையானடலாழியம்மான்" என்கிற நித்யஸித்த புருஷர்களைக் காட்டிக்கொடுத்தான்; செய்யதோர் ஞாயிற்றைக் காட்டிச் ஸ்ரீதரன்மூர்த்தியீதென்றதுக்கு, "மையகண்ணாள் மலர்மேலுறைவாளுறைமார்பினன்" என்று தானும் பெரிய பிராட்டியாருமாக விருக்கிற விருப்பைக் காட்டிக்கொடுத்தான். "திருவுடைமன்னரைக்காணில் திருமால்" என்றதுக்கு உபயவிபூதியுக்தனான தன் ஐஶ்வர்யத்தைக் காட்டிக் கொடுத்தான்; பிறர்வாயாலே 'என்செய்கேன்' என்றதைத் தவிர்த்து, தம் வாயாலே "என்னகுறையெழுமையும்" என்னப் பண்ணினான்; "விரும்பிப் பகவரைக்காணில் வியலிடமுண்டான்" என்று - ஆநந்தமேலஶமுடையாரைக் கண்டு ப்ரமித்தவர்க்கு, "வீவிலின்பமிக வெல்லைநிகழ்ந்த நம்மச்சுதன்" என்று - ஆநந்தமயனாயிருக்கிற இருப்பைக் காட்டிக்கொடுத்தான். *

ஈடு ; அவ ; - முதற்பாட்டில் - ஸர்வேஶ்வரனாய்வைத்து ஆஶ்ரிதரக்ஷணார்த்தமாக மநுஷ்யஸஜாதீயனாய்வந்து அவதரித்த க்ருஷ்

‡ இங்கே சிலபதங்கள் விட்டுப்போயின.

ணைக் கவிபாடப்பெற்ற எனக்கு ஒருநாளும் ஒருகுறையில்லை யென்கிறார்.

வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல்செல்லவீவில்சீர் *
ஆற்றல்மிக்காளுமம்மானை வெம்மாபிளந்தான் தன்னை *
போற்றியென்றேகைகளாரத் தொழுதுசொல்மாலைகள் *
ஏற்றநோற்றேற் கினியென்னகுறை எழுமையுமே ?. (க)

ப ;—முதற்பாட்டில், ஸமஸ்தலோக நிர்வாஹகனான ஸர்வேஶ்வரனை மங்களாஶாஸநம்பண்ணி ஸ்துதிக்கப்பெற்ற எனக்கு ஸர்வகாலத்திலும் ஒரு குறையில்லை என்கிறார்.

வீற்று—(ஸர்வாதாரத்வ ஸர்வநியந்த்ருத்வ ஸர்வஶேஷித்வ ஸர்வவ்யாபகத்வாதிகளாலே) ஸ்வேதரஸமஸ்தவ்யாவ்ருத்தனாய்க் கொண்டு

இருந்து—(லோகாநாமஸம்பேத்யார்த்தமாக திவ்யவிபூதியிலே திவ்ய பர்யங்கத்திலே) இருந்து

எழுலகும்—(வ்யக்தாவ்யக்த காலரூபமாயும் ஶுத்தஸத்வரூபமாயும் சதுர்விதமான அசேதனவர்க்கமும் பத்த முக்த நித்ய ரூபேண த்ரிவிதமா யுள்ள சேதநவர்க்கமுமாகிற) எழுவகைப்பட்ட லோகங்களிலும்

தனி—(ஸ்வஸங்கல்பரூபமாய்) அத்விதீயமான

கோல்—செங்கோல்

செல்ல—நடக்கும்படி

வீவில்—அப்ரதிஹதமான

சீர்—(ஜ்ஞாநஶக்த்யாத்யஸங்க்யேய) கல்யாணகுணங்களுடன் கொண்டு

ஆற்றல்மிக்கு — (ஸ்வாபாவிகமாகையாலே மதோத்ரேக ரஹிதமாய்) நிரவதிகமான ஶாந்தி யோகத்தாலே

ஆளும்—(இது ஸாத்ம்யமாம்படி) ஸ்வரூபவைபவத்தை யுடையனாய்க்கொண்டுபோருகிற

அம்மானை—ஸர்வஸ்வாமியாய்

வெம்—ர(க்ஷணீயவர்க்கத்துக்குவிரோதியாய் (க "ஹாரௌத்ர ஊரூ - மஹாரௌத்ர:" என்கிறபடியே வெம்மையே நிரூபகமான

மா—(கேசியாகிற அஸுரா விஷ்டமா யுள்ள) குதிரையை

பிளந்தான் தன்னை — "நிவ்யாதி தாஸ்யம் கேஶி பாதத்விதா பூத:" என்னும்படியே இருகூறாய்விழும்படி) வாய்பிளந்த ஸர்வேஶ்வரனை

போற்றி என்றே—போற்றி போற்றி யென்று இப்பெருமைக்கு மங்களாஶாஸநம் பண்ணிக் கொண்டே

கைகள் — ("விண்ணைத்தொழுது" என்ற கைகள்)

ஆர—வயிறுநிறையும்படி

(க) வி-பு-ரு-கசு-கச.

தொழுது—அஞ்ஜலி பந்தம்பண்ணி
சொல்—ஶப்தஸந்தர்ப்பரூபமான
மாலைகள்—மாலைகளை
ஏற்ற—(அவன் ஶிரஸாவஹிக்கும்படி) ஸமர்ப்பிக்கைக்கு
நோற்றேற்கு — "விதிவாய்க்கின்று" என்கிறபடியே அவனுடைய நிர்ஹேதுக க்ருபாரூப புண்யத்தையுடையஎனக்கு
இனி—இனிமேல்
எழுமையும்-(க) "ஸப்த ஸப்த ச ஸப்த ச-ஸப்த ஸப்தச ஸப்தச" என்கிறபடியே)ஏழேழுபடி காலான ஜந்மமுண்டாகிலும்
என்னகுறை—என்னகுறையுண்டாம

ஶரீரவிமோசந தேஶப்ராப்த்யாதிகளாகிற குறை யுண்டாகா தென்று கருத்து. ஆற்றல் - பொறையும், மிடுக்கும். (க)

ஆறு ;—ஸ்ரீ வைகுண்டத்திலே திருவநந்தாழ்வான்மேலே தன்னுடைய ஸர்வலோகாதிராஜ்யமெல்லாம் தோன்றும்படி யிருந்தருளி, ஸ்வஸங்கல்ப ஸஹஸ்ரைகதேஶத்தாலே நிர்வாஹித ஸர்வலோகனாய், நித்ய நிர்த்தோஷ நிரவதிக கல்யாணகுணவிஶிஷ்டனாய், இப்படி பரிபூர்ணனா யிருக்கச்செய்தே அநுக்ரஹ ஸ்வபாவனாய், ஆஶ்ரித பரித்ராணார்த்தமாக வஸுதேவக்ருஹே அவதீர்ணனாய் ஆஶ்ரிதவிரோதி நிரஸநைக ஸ்வபாவனாயிருந்த எம்பெருமானைத் திருப்பல்லாண்டு பாடிக்கொண்டு என்கைகளினுடைய விடாயெல்லாம் தீரும்படி தொழுது, திருவாய்மொழி பாடுகைக்கு பாக்யம் பண்ணினேன் ; எனக்கு இனி ஒருநாளும் ஒரு குறையில்லை' என்கிறார். (க)

ஈடு ;—அவ ;—இரண்டாம்பாட்டு. இம்மஹைஶ்வர்யத்துக்கு அடியான ஶ்ரிய:பதித்வத்தை அருளிச்செய்கிறார். ஸர்வேஶ்வரன் ப்ரஸாதத்தாலே அவன் கருத்தறிந்து நடத்தும் ப்ரஹ்மாவின் ப்ரஸாதமடியாக, நாரதாதிகள் முன்னிலையாக வாயிற்று ஸ்ரீமத் ராமாயணம் ப்ரஸ்துதமாயிற்றது ; இப்படிப்பட்ட ஸ்ரீராமாயணத் திற்காட்டில் தாம் அருளிச்செய்த ப்ரபந்தத்துக்கு ஏற்றம் அருளிச் செய்கிறார். "திருமாலாலருளப்பட்ட சடகோபன்" என்கிறபடியே அவர்களிருவருடையவும் ப்ரஸாத மடியாகவாயிற்று இப்ப்ரபந்தங்கள் பிறந்தது. (உ) "ஸீதாயாஶ்சரிதம் மஹத்-ஸீதாயாஶ்சரிதம் மஹத்" என்கிறது இரண்டுக்கும் ஒக்கும் ; (ங) "திருமாலவன்

(க) பா-பீஷ்ம-
(உ) ரா-பா-ச-எ.
(ங) திருவிரு-சஅ.

கவியாதுகற்றேன்'' என்றாரிறே இவரும். அவன் பாடித் தனியே கேட்பித்தான் ; அவனோடேகூடக் கேட்பித்து அச்சேர்த்தியிலே மங்களாசாஸநம் பண்ணப்பெற்றார் இவர் ; மையகண்ணாள் மலர்மேலுறைவாளுறை மார்பினனானவனையாயிற்றுக் கவிபாடிற்று.

மையகண்ணாள்மலர்மேலுறைவாளுறைமார்பினன் *
செய்யகோலத்தடங்கண்ணன் விண்ணோர்பெருமான்தன்னை *
மொய்யசொல்லாலிசைமாலைகளேத்தியுள்ளப்பெற்றேன் *
வெய்யநோய்கள்முழுதும் வியன்ஞாலத்துவீயவே. (உ)

ப —அநந்தரம், இந்த மேன்மைக்கு அடியான லக்ஷ்மீ ஸம்பந்தத்தை யுடையவனை ஜகத்ஸம்பந்தியான ஸகலக்லேசமுந்தீரும்படி புகழப்பெற்றேன் என்கிறார். (க)

மைய—(அவன் மார்பிலே எப்போதும் கணிச மாகையாலே அவ்வடிவு நிழலிட்ட தடியாக அஸிதேக்ஷணையான ஸ்வபாவத்துக்குமேலே) மையணிந்த தென்னலாம் படியான

கண்ணாள் — கண்ணையுடையளாய், (இந்த ஆபிரூப்யத்துக்கு மேலே

மலர்மேல் உறைவாள்–தாமரைப்பூவில் பிறப்பாலும் வாஸத்தாலும் அபிஜாதையுமாய்ப் பரிமளம் வடிவுகொண்டாற் போலே போக்ய பூதையுமான லக்ஷ்மி

உறை—நித்யவாஸம்பண்ணும்படி நிரதிசயபோக்யமான

மார்பினன்—மார்பையுடையனாய்

செய்ய—பத்மவர்ணையான அவளை அநுபவிக்கையாலே பழைய சிவப்புக்குமேலே சிவந்து

கோலம்—அழகையுடைத்தாய்

தடம்—(ப்ரேமபாரவச்யத்தாலே) விஸ்தீர்ணமான

கண்ணன் — திருக்கண்களை யுடையனாய்

விண்ணோர்—(இப்படி பரஸ்பர ஸம்ச்லேஷ ஸாரஸ்யத்தைப்) பரமசுவாமிகளுக்கு அநுபவிப்பித்து

பெருமான் தன்னை—(அவர்களுக்கு) அதிபதியாயிருக்கிற ஸர்வேச்வரனை

மொய்ய—(அவர்கள் ஸாமகாநம் பண்ணுமாபோலே) செறிந்த

சொல்லால்—சொற்களாலே சமைந்தாய்

இசை—இசையையுடைத்தான

மாலைகள்—மாலைகளாலே

வியல்—விஸ்தீர்ணமான

ஞாலத்து—ஜகத்திலேயிருக்கச்செய்தே

வெய்ய—(க) “நக்தம் ஸஹஸ்ரசீர்ஷ்ணி நக்ஷத்ராணி சரிஷ்யந்தி” என்னுமாபோலே) பரிதாபஹேதுவாயிருக்கிற

(க) நாரதீய-அஷ்டா-க-கக.

நோய்கள் முழுதும்—(அவித்யா கர்ம வாஸநாருசிப்ரக்ருதி ஸம்பந்தங்களான) ஸமஸ்த க்லேசங்களும்
வீய—(நாட்டிலே நடையாடாதபடி ஸ்வயமேவ) நசிக்கும்படியாக
ஏத்தி—ஏத்தி
உள்ள—(ஸ்வப்ரியனான அவனுடைய முகமலர்த்தியை) என்னெஞ்சாலே அநுபவிக்க
பெற்றேன்—பெற்றேன்.

"மையகண்ணாள், செய்யகோலத் தடங்கண்ணன்" என்கிறவிடம்-அவள் கண் நிழலீட்டாலே இவனுடைய ஶ்யாமளத்வமும், இவன்கண் நிழலீட்டாலே அவளுடைய பத்மவர்ணமுமென்று கருத்தாகவும் சொல்லுவர்கள்; ஆகிலும், கண்ணுக்கு விஷயாதீநத்வம் உசிதம். (உ)

ஆறு ;—(மையகண்ணாள்.) இப்படி ஸர்வலோகாதி ராஜ்யத்தைச் செலுத்திக்கொண்டு ஶேஷபோகபர்யங்கத்திலே, விதளிதேந்திவரலோசனையாயிருந்த பெரிய பிராட்டியாரோடேகூட ஸுகாஸீநனாய், தத்ஸம்ஶ்லேஷஜநித நிரதிஶய ப்ரீதியாலே செய்யகோலத் தடங்கண்ணனாய், அநந்த வைநதேய விஷ்வக்ஸேந ப்ரப்ருதி அஸங்க்யேய திவ்யபரிஜந பரிவ்ருதனாயிருந்த எம்பெருமானை என்னுடைய வெய்யநோய்கள் முழுதும் இந்த ப்ரக்ருதியிலேயிருக்கச்செய்தே வீயும்படி, அழகிய சொல்லாலே இசைமாலைகளேத்தி உள்ளப்பெற்றேன் என்கிறார். (உ)

ஈடு ;—அவ ;—மூன்றாம்பாட்டு; ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய் உபயவிபூதியுக்தனான ஸர்வேஶ்வரனைக் கிட்டிக் கவிபாடுகையாலே, அவனுடைய ஆநந்தத்தையும் விளாக்குலை கொள்ளும்படியான ஆநந்தத்தை யுடையனானேன் என்கிறார்.

வீவிலின்பம் மிக எல்லைநிகழ்ந்த நம்மச்சுதன் *
வீவில்சீரன்மலர்க்கண்ணன் விண்ணோர்பெருமான்தன்னை *
வீவில்காலமிசைமாலைகளேத்தி மேவப்பெற்றேன் *
வீவிலின்பம்மிக † எல்லைநிகழ்ந்தனன் மேவியே. (கூ)

ப;—அநந்தரம், மேன்மையாலும் ஶ்ரிய:பதித்வத்தாலும் ஸித்தமான ஆநந்தாதிகுண யோகத்தையுடையவனை ஸ்தோத்ரம்பண்ணிக் கிட்டப்பெற்று நிரதிஶயாநந்த பூர்ணனானேன் என்கிறார்.

வீவு இல் இன்பம் — அவிச்சிந்நமான ஆநந்தமானது
மிக எல்லை நிகழ்ந்த — (ஆநந்த வல்லீ க்ரமத்திலே அவாங்மநஸ கோசரமாம்படி) மிகுதியான எல்லையிலே வர்த்திக்கிற (ஆகாரத்தை)
நம் அச்சுதன் — என்போல்வார்க்கு அநுபவிப்பிக்கிற அப்ரச்யுத ஸ்வபாவனாய் (அவ்வாநந்தத்துக்கு அடியாகச்சொல்லப்பட்ட
வீவு இல் — முடிவில்லாத
சீரன் — யுவத்வாதிநித்யகுண விபூதி வைலக்ஷண்யத்தை யுடையனாய்
மலர்க்கண்ணன் — (இவ்வபிப்ராயத்துக்கு ஸூசகமாம்படி) புண்டரீகாக்ஷனாய்; (இக்கண்ணழகாலே
விண்ணோர் — விண்ணோர்பரவும்
பெருமான்தன்னை — தலைமகனானவனை
வீவு இல் — ஒழிவு இல்லாத
காலம் — காலமெல்லாம்
இசை — கானரூபமான
மாலைகள் — ஸந்தர்ப்பத்தாலே
ஏத்தி — ஸ்துதித்து
மேவப்பெற்றேன் — கிட்டப்பெற்றேன்;
மேவி — (க) "ரஸꣳஹ்யேவாயம் லப்த்வாநந்தீபவதி" என்கிறபடியே ஆநந்தமயனானவனைக்)கிட்டி (க) "ஸோஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ - ஶ்ரோத்ரியஸ்யசாகாமஹதஸ்ய" என்னும் கணக்கிலே அவனோடொத்த)
வீவு இல் — முடிவில்லாத
இன்பம் — ஆநந்தத்தினுடைய
மிக எல்லை — அபரிச்சேத்யமான அபிவ்ருத்திகள்
நிகழ்ந்தன — உண்டாயிற்றன.
நிகழ்ந்தனமென்று — ப்ரீதியாலே பஹுமாநோக்தியாகவுமாம். (௩)

ஆறு;—(வீவிலின்பம்.) ஆஶ்ரித வாத்ஸல்ய ஸௌஶீல்யைஶ்வர்ய ஸௌந்தர்யாத்யநவதிக மங்களகுண விசிஷ்டனாய், ஸ்வபரிசரணபோக ஶேஷஶேஷாஶநாத்யபரிமித நித்யஸித்த பரமஸூரிநிரவரத ஸம்ஸேவ்யமானனாய், ஸ்ரீ வைகுண்டநிலயனாய், லக்ஷ்மீபூமிநீளாநாயகனாயிருந்த தன்னைத்தான் அநுபவித்ததிலே தனக்கு வந்த நிரவதிகாநந்தமும்,—தன்னைத் திருவாய்மொழி பாடுகையால் எனக்குவந்த ஆநந்தமுமானால் இதிலே ஸஹஸ்ரைக தேஶத்துக்குப்போருமோ அது? என்கிறார். (௩)

ஈடு; — அவ; — நாலாம்பாட்டு. அநந்யப்ரயோஜநரையும், முதலிலே ப்ரயோஜநாந்தரங்களில் இழியாத நித்ய ஸூரிகளையுமுடையனாய் வைத்து, நித்யஸூரிகளுக்கு அவ்வருகான தான் நித்ய ஸம்

(க) தை-ஆநந்த

ஸாரியான என்பக்கல் பண்ணின மஹோபகாரம் என்னால் பரிச்சே திக்கவொண்ணுகிறதில்லை என்கிறார்.

மேவிநின்றுதொழுவார் வினைபோகமேவும்பிரான் *
தூவியம்புள்ளுடையான் அடலாழியம்மான்தன்னை *
நாவியலாலிசைமாலைகளேத்தி நண்ணப்பெற்றேன் *
ஆவியென்னாவியை யானறியேன்செய்தவாற்றையே. (௪)

ப ;—அநந்தரம், போக்தாக்களான அநந்யப்ரயோஜநரைக் காத்தூட்டும் வாஹநாயுதாதிகளையுடையவனை ஸ்துதித்துக் கிட்டப்பெற்றேன் என்கிறார்.

மேவி — (அநந்யப்ரயோஜநராய்) கலந்து
நின்று — நிலைநின்று
தொழுவார் — அநுபவிப்பாருடைய
வினை — (அநுபவவிரோதி) பாபங்கள்
போக — (ஸ்வயமேவ) நசிக்கும்படி
மேவும் — (தான் அவர்களோடே ஸம்ச்லேஷிக்கும்
பிரான் — மஹோபகாரகனாய்
தூவி — (க) "அஞ்சிறைப்புள்ளுமொன்றேறிவந்தார்" என்கிறபடியே இவர்க ளிருந்தவிடத்தே தன்னைக்கொண்டு வருவதான பக்ஷபாதத்தையும்
அம் — அழகையுமுடைய
புள் — பெரியதிருவடியை
உடையான் — வாஹநமாகவுடையனாய்
அடல் — (உ) "கைகழலாநேமியான் நம்மேல் வினைகடிவான்" என்கிறபடியே ஆச்ரித விரோதி நிரஸநார்த்தமாக) யுத்தோந்முகமான
ஆழி — திருவாழியையுடையனான
அம்மான் தன்னை — ஸர்வேச்வரனை
நா — நாவினுடைய
இயலால் — வ்ருத்தியாலே
இசை — கானரூபமான
மாலைகள் — ஸந்தர்ப்பங்களையிட்டு
ஏத்தி — ஏத்துகையாகிற
நண்ண — நண்ணுதலை
பெற்றேன் — பெற்றேன்;
ஆவி — எனக்கு அந்தராத்மபூதனாய்த் தாரகனானவன்
என் — (தனக்கு சரீரமான) என்னுடைய
ஆவியை — ஆத்மாவை
செய்த ஆற்றை — ஸ்துதிப்பித்து உகப்பித்து விரும்புகிற ப்ரகாரம்
யான் — நான்
அறியேன் — ("ஏவம் வித:" என்று) பரிச்சேதித்து அறியமாட்டுகிறிலேன்.
அறிவும் ஆழங்கால்படுகைக்கு உறுப்பாயிற்று என்று கருத்து

ஈடு ;—(மேவிநின்று.) கீழ்ச்சொன்ன விண்ணோராகிறார் - பெரியதிருவடி திருவாழி திருச்சங்கு திருவநந்தாழ்வான் ஸ்ரீஸேநா

(க) தி-மொ-கூ உ-அ. (உ) பெரியதிருவ-அஎ.

திபதியாழ்வான் முதலான திவ்யபுருஷர்கள். அந்தத் திவ்ய புருஷர்களாலே பரிசர்யமாண சரணாரவிந்த யுகளனாய், பக்தியுக்த ஜநஸமஸ்த துஃகாபநோதந ஸ்வபாவனாய், தத்ஸம்ச்லேஷஸ்வ பாவனாயிருந்த எம்பெருமானைத் திருவாய்மொழி பாடிக்கொண்டு ஸம்ச்லேஷிக்கப்பெற்றேன்; அத்யந்த நிக்ருஷ்டனான என்னை இப்படி விஷயீகரித்தருளுவதே! ஒருவனுடைய குணவத்தை இருக்கும்படியே இது! என்கிறார். (ச)

ஈடு ;— அவ ;— அஞ்சாம்பாட்டு. தான் ஸாரதியாய்வைத்து அர்ஜுநனுக்கு ஸர்வார்த்தங்களையும் ஸாதிக்க ஸாதிக்க அருளிச்செய்தாற்போலே எனக்குத் தன்படிகளைக் காட்ட, கண்டு அநுபவித்து நான் என்னுடைய ப்ரதிபந்தகங்களெல்லாம் போம்படி திருவாய்மொழிபாடி நிரதிசயாநந்தியானேன் என்கிறார்.

ஆற்றநல்லவகைகாட்டுமம்மானை * அமரர்தம்
ஏற்றை எல்லாப்பொருளும்விரித்தானைஎம் மான்தன்னை *
மாற்றமாலைபுனைந்தேத்தி நாளும்மகிழ்வெய்தினேன் *
காற்றின்முன்னம்கடுகி வினைநோய்கள்கரியவே. (ரு)

ப ;— அநந்தரம், அநுபவோபகரணமான ஜ்ஞாநாதிகளைக் கொடுத்து, அநுபவிப்பிக்கும் ஸர்வேச்வரனை, ஸகலக்லேசமும் ஸகாரணமாகச் சடக்கென ஸ்வயமேவ நசிக்கும்படி ஸ்துதிக்கப்பெற்றேன் என்கிறார்.

(ஆச்ரயாநுரூபமாக),
ஆற்ற — பொறுக்கும்படி
நல்ல — (அநுபவோப கரணமாம்படி) விலக்ஷணமாயுள்ள
வகை — (ஜ்ஞாநபக்திகள் பரபக்தி பரஜ்ஞாந பரம பக்திகளாகிற ப்ரகாரங்களை
காட்டும் — (போக்தாக்களுக்கு) ப்ரகாசிப்பிக்கும்
அம்மானை — நிருபாதிகஸ்வாமியாய்
அமரர்தம் — (இந்தப்ரகாரமுடையாரை) நித்யஸூரிகளநுபவிக்குமா போலே அநுபவிப்பிக்கும்
ஏற்றை — செருக்கை யுடையனாய்,
(கீதோபநிஷந்முகத்தாலே)
எல்லாப்பொருளும் — இவ்வர்த்த விசேஷங்களை
விரித்தானை — விஸ்தீர்ணமாக உபதேசித்து
எம்மான் தன்னை — எனக்கு நிர்ஹேதுகமாக உபகரித்த ஸ்வாமியானவனை
வினை — (ஜ்ஞாநப்ரேமாதிப்ரதிபந்தகங்களான) பாபங்களும்
நோய்கள் — (ராகத்வேஷாதி) மஹாவ்யாதிகளும்

(ஈ) சாந்தோ-ரு-உச.

காற்றின்—(சீக்ரகாமியான) காற்றுக்கு	புனைந்து—நிர்மித்து
முன்னம்—முற்பட	ஏத்தி—ஸ்தோத்ரம் பண்ணி
கடுகி—சடக்கென ஓடிப்போய்	நாளும்—ஸர்வகாலமும்
கரிய—(க) "அக்நௌ ப்ராஸ்தாஹுதி: ..." என்கிறபடியே) வெந்து போம்படியாக	மகிழ்வு எய்தினேன் — மகிழ்ச்சியைப் பெற்றேன்;
மாற்றம்மாலை—பத்தஸந்தர்ப்பங்களை	மாற்றம்—பத்தம்
	புனைதல்—தொடுத்தல் (ரு)

ஆறு ;—(ஆற்றநல்ல.) அயர்வறு மமரர்களதிபதியாய், வஸுதேவ க்ருஹே அவதீர்ணனாய், அர்ஜுநவ்யாஜத்தாலே ஸர்வாத்மாக்களுக்கும் ஸகல வேதார்த்த ப்ரகாசகனாயிருந்த தன்னை எனக்கு ஸாத்மிக்க ஸாத்மிக்கக் காட்டித் தந்தருளினான். நானும் அவனைக் கண்டு, காற்றின் முன்னம் கடுகி வினைநோய்கள் கரியும்படி திருவாய்மொழிபாடி, நாளும் மகிழ்வெய்தினேன் என்கிறார். (ரு)

ஈடு ;—அவ ;—ஆறாம்பாட்டு. ஸர்வேச்வரன் திருவடிகளிலே அடிமைசெய்யவும் பெற்று ப்ரதிபந்தகமும் போகப்பெற்றேனென்றார் - கீழ்; 'ஆனால், இனி உமக்குச் செய்ய வேண்டுவதென்?' என்றான் ஈச்வரன்; இதுக்கு முன்பு பெறாததாய் இனிப் பெறவேண்டுவதொன்றுண்டோ? என்கிறார் இதில்.

கரியமேனிமிசை வெளியநீறுசிறிதேயிடும் *
பெரியகோலத்தடங்கண்ணன் விண்ணோர்பெருமான்தன்னை *
உரியசொல்லாலிசைமாலைகளேத்தி உள்ளப்பெற்றேற்கு *
அரியதுண்டோஎனக்கின்றுதொட்டுமினியென்றுமே. (௬)

ப ;—அநந்தரம், அஸ்கலிதஜ்ஞாந ப்ரேமானர்க்கு நிரதிசயாநுபாவ்யமான அழகையுடையவனை ஸ்தோத்ரமுகத்தாலே அநுபவிக்கப்பெற்ற எனக்கு துர்லபமுண்டோ? என்கிறார்.

கரிய—ச்யாமளமான	பெரியகோலம்—நிரதிசய ஸௌந்தர்ய யுக்தமாய்
மேனிமிசை – வடிவழகுக்குமேலே	தடம்—விஸ்தீர்ணமான
வெளியநீறு—அஞ்ஜநசூர்ணத்தை	கண்ணன்—கண்ணழகையுடையனாய் (இவ்வழகு வெள்ளத்திலே)
சிறிதே—அளவில்	
இடும்—அணிகிற	

(க) சாந்தோ - ரு - உ௪.

விண்ணோர்பெருமான் தன்னை — ஸூரி களுக்குமிழிநீருட்டும்மேன் மையை யுடையனான ஸர் வேச்வரனை
உரிய — (இவ்வழகுக்குத்) தகுதியான
சொல்லால் — சொல்லாலேசமைந்த
இசைமாலைகள் — காநரூபஸந்தர்ப்பங் களையிட்டு
ஏத்தி — ஸ்துதித்து
உள்ள — அநுபவிக்க
பெற்றேற்கு எனக்கு — பெற்றேனான எனக்கு
இன்று தொட்டும் — (அநுபவாரம்ப மான) இன்று தொடங்கி
இனி — இனி
என்றும் — மேலுள்ள காலமெல்லாம்
அரியது — துர்லபமாயிருப்பது
உண்டோ — ஓரர்த்தமுண்டோ ?

வெளியம்-அஞ்ஜநம், அன்றியே, ஶ்யாமளமான திருமேனிமேலே (க) “ஸைந்த்ராயுதவஸ்யேவஸம் க்ருஷ்ணாங்கதவஸ்த்ரவிக்ரஹம் - கர்ப்பூர தூளீதவளம் க்ருத்வாதேவஸ்ய விக்ரஹம்”என்கிறபடியே அலங்காரார்த்தமான கர்ப்பூரசூர்ணத்தைஅளவுபடச் சாத்தின பெரிய ஒப்பனையை யுடைய என்றுமாம். (௮)

ஆறு ;—(கரியமேனி.) நீலமேக நிபதிவ்யரூபோசித திவ்யாங்கராகத்தாலே அநுலிப்தனாய், அதிவிஶாலமாய் அதிரமணீயமாயிருப்பதொரு தாமரைத் தடாகம்போலே யிருந்த திருக்கண்களை யுடையனாய், அவ்வழகாலே விண்ணோர்பெருமானாயிருந்த எம்பெருமானை, அவனுக்கு ஸத்ருஶமான சொற்களாலே இசைமாலைகளேத்தி உள்ளப்பெற்ற எனக்கு இன்றுதொட்டும் இனியென்றும் அரியது உண்டோ ? என்கிறார். (௯)

ஈடு ;—அவ ;—“அரியதுண்டோ வெனக்கு”என்கிற இப்பூர்த்தி உமக்கு எத்தாலே வந்ததென்ன, ‘பகவத்க்ருபையாலே வந்தது’ என்கிறார்.

என்றுமொன்றாகி ஒத்தாரும்மிக்காருமின்றி * தன்தனக்கு
இன்றி நின்றானை எல்லாவுலகுமுடையான் தன்னை *
குன்றமொன்றால்மழைகாத்தபிரானைச் சொல்மாலைகள் *
நன்றுசூட்டும்விதியெய்தினமென்ன குறைநமக்கே. (௭)

ப :—அநந்தரம், ஸமாப்யதிகரஹிதையான போக்யதையையுடைய க்ருஷ்ணனை ஸ்துதிக்கப்பெற்ற எனக்கு என்ன குறையுண்டு ? என்கிறார்.

என்றும் — (பரத்வத்தோடு அவதாரத்தோடு வாசியற) ஸர்வாவஸ்தையிலும்
ஒன்று ஆகி — ஒரு ப்ரகாராந்வயியாய்க் கொண்டு
ஒத்தாரும் — ஸமராயும்
மிக்கார்களும் — அதிகராயுமிருப்பார்
தன்தனக்கு — தன்னுடைய நிரதிசய போக்யமான ஸௌலப்யாதிகளாகிற அஸாதாரணாகாரத்துக்கு
இன்றி — இன்றியிலே
நின்றானை — நின்றவனாய், (க) "ஸ்ரைஷ்ட்யஹ்ருதிக்ருதே - க்ருஷ்ணஸ்யஹ்ருதிக்ருதே" என்கிறபடியே அந்நிலையிலே)
எல்லாவுலகும் — ஸமஸ்த லோகத்தையும்
உடையான்தன்னை — தனக்கு சேஷமாகவுடையனாய்
மழை — (சேஷவஸ்துக்களுக்கு இந்த்ரனால் வந்த) வர்ஷாபத்தை
குன்றம் ஒன்றால் — (கண்டதொரு) மலையாலே
காத்த — காத்த
பிரானை — மஹோபகாரகனானவனை
சொல் மாலைகள் — ஸப்தமயமான மாலைகளை
நன்று சூட்டும் — அவன் ஆதரித்துச் சூடும்படி பண்ணுகைக்கிடான
விதி — (அவன் க்ருபாரூபமான) பாக்யத்தை
எய்தினம் — கிட்டப்பெற்றோம்;
நமக்கு — நமக்கு
என்ன குறை — ஒரு குறையுண்டோ?

அத்தலையில் க்ருபையில் குறையுண்டாகிலிறே இத்தலையில் பேற்றிற் குறையுண்டாவது என்று கருத்து. விதி-தப்பவொண்ணாத க்ருபையை நினைக்கிறது. நமக்கு என்கிற பன்மை - பஹுமானத்தாலே; ஆத்மநிபஹுவசநம் ( )

ஆறு ;—(என்றுமொன்றாகி.) ஸர்வகாலமும் ஏகப்ரகாரமாக நிரஸ்தஸமாப்யதிகனாய், ஸர்வலோகேச்வரனாய்ப் பரமகாருணிகனாயிருந்த எம்பெருமானைத் திருவாய்மொழி பாடுகைக்கு, அவனுடைய நிர்மர்யாத க்ருபையாகிற மஹாபாக்யத்தை யுடையோமானோம்; இனி நமக்கு என்ன குறையுண்டு? என்கிறார். (எ)

ஈடு ;—அவ ;—எட்டாம்பாட்டு. எம்பெருமானுக்குத் தம்பக்கலுண்டான ஸங்காதிசயத்தை அநுஸந்தித்து, அவனுடைய உபயவிபூதிபோகத்துக்கும் ஸௌகுமார்யத்துக்கும் தகுதியாகக் கவி சொல்லவல்ல எனக்குத் திருநாட்டிலும் நிகரில்லையென்கிறார்.

நமக்கும்பூவின்மிசைநங்கைக்குமின்பனை * ஞாலத்தார்
தமக்கும்வானத்தவர்க்கும்பெருமானை * தண்தாமரை
சுமக்கும்பாதப்பெருமானைச் சொன்மாலைகள் * சொல்லுமாறு
அமைக்கவல்லேற்கினியாவர்நிகரகல்வானத்தே. (அ)

(க) பார-ராஜ-

ப;—அநந்தரம், உபயவிபூதி யுக்தனான ஸர்வேஶ்வரனை ஸ்துதிக்கிற எனக்குப் பரமபத வாஸிகளில் ஸத்ருஶருண்டோ? என்கிறார்.

நமக்கும்—(அநாத்யஜ்ஞாநாதி ஸம்ஸர்க்கத்தாலே நித்ய ஸம்ஸாரிகளுக்கும் இவ்வருகான) நமக்கும்
பூவின்மிசை நங்கைக்கும்—பூவிற் பிறப்பால்வந்த போக்யதை யாலும் ஆத்ம குண பூர்த்தியாலும் நித்ய ஸூரிகளுக்கும் அவ்வருகான பிராட்டிக்கும்
இன்பனை—(தன் போக்யதாதிஶயத்தாலே) ஆநந்த ஜநகனானவனாய். (இவ் விரண்டாகாரத்துக்கும் உபபாதகமாய்)
ஞாலத்தார் தமக்கும்—(அவிஶேஷஜ்ஞரான) லீலாவிபூதியிலுள்ளாரோடு
வானத்தவர்க்கும்—(விஶேஷஜ்ஞரான) பரமபதவாஸிகளோடு வாசியற
பெருமானை—நிருபாதிகமான ஸர்வஶேஷித்வத்தை யுடையனாய், (இந்த போக்யதைக்கும் மேன்மைக்கும் மேலே ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்யாதி குணங்களுக்குத் தோற்று)
தண்—செவ்வியையுடைய
தாமரை—தாமரை
சுமக்கும்—சுமக்கும்படியான
பாதம்—திருவடிகளையுடையனான
பெருமானை—ஸர்வாதிகனை. (இவ்வாகாராநுஸந்தானத்தாலே உடை குலைப்படாதே)
சொல் மாலைகள்—ஶப்த ஸந்தர்ப்பங்களை
சொல்லும் ஆறு—சொல்லும்படியாக
அமைக்கவல்லேற்கு—(என்னை அமைத்து) தரிக்கவல்ல எனக்கு
அகல்—அதிவிஸ்தீர்ணமான
வானத்து—த்ரிபாத்விபூதியில்
யாவர்—(அவிகாராகாரராய் அநுபவிக்கிறவர்கள்) ஆர்தான்
இனி—இனி
நிகர்—ஒப்பார்?

இந்தளத்தில் தாமரைபோலே இருள் தருமா ஞாலத்திலே அநுபவிப்பார்க்கு தெளிவிசும்பிலநுபவிப்பார் ஸத்ருஶரல்லரென்று கருத்து. (௮)

ஆறா;—(நமக்கும்.) இன்று தன் திருவடிகளை ஆஶ்ரயிக்கைக்கு நாமும் பெரியபிராட்டியாருமானால், பெரியபிராட்டியார் பக்கலிற் காட்டிலும் நம் பக்கலிலே வ்யாமுக்தனாய், அநாஶ்ரிதரான தேவர்களுக்கும் மநுஷ்யர்களுக்கும் ஒருவாசியின்றியே ஒக்க அரியனாய், விகசாருணாரவிந்தாதிக ஸௌகுமார்ய சரணயுகளனாயிருக்க எம்பெருமான் என்னை ‘ஒன்று சொல்லுங்காண்’ என்று அருளிச்செய்தருளினால், சொல்லலாம்படி சொல்மாலைகள் அமைக்கவல்லேற்கு இனித் திருநாட்டிலேதான் நிகருண்டோ? என்கிறார். (௮)

ஈடு ;—அவ ;—ஒன்பதாம்பாட்டு. அவனுடைய வ்யாப்த்யவதாராதிகள் எங்கும்புக்குக் கவிசொல்லவல்ல எனக்கு எதிருண்டோ? என்கிறார். நித்யஸூரிகள் தாங்கள் அநுபவிக்கிற விஷயத்தில் போக்யதா ப்ரகர்ஷத்தாலே வேறொன்று அறியார்கள்; முக்தர் (க) "நோபஜநம் ஸ்மரந்நிதம் ஶரீரம்" என்று ஸம்ஸார யாத்ரையை ஸ்மரியாதே நிற்பர்களாகையாலே, அவர்களும் நித்யரோடு ஒப்பர்கள்; இங்குள்ள பராஶர பாராஶர்யாதிகள் ஒரோதுறையிலே மண்டியிருப்பார்கள்; ஸ்ரீ வால்மீகிபகவான் ராமாவதாரமல்லது அறியாதேயிருக்கும். ஸ்ரீபராஶர பகவானும் ஸ்ரீவேதவ்யாஸபகவானும் க்ருஷ்ணாவதாரமல்லது அறியார்கள்; ஸ்ரீஶௌநகபகவான் அர்ச்சாவதாரத்திலே ப்ரவணனாயிருக்கும்; அங்ஙனன்றிக்கே, ஸர்வேஶ்வரனை எங்கும் புக்குக் கவிபாடப்பெற்ற என்னோடு ஒப்பாருண்டோ? என்கிறார்.

வானத்தும்வானத்துள்ளும்பரும் மண்ணுள்ளும்மண்ணின்கீழ்த்
தானத்தும் * எண்டிசையும்தவிராதுநின்றான் தன்னை *
கூனற்சங்கத்தடக்கையவனைக் குடமாடியை
வானக்கோனைக் * கவிசொல்லவல்லேற்கினியாருண்டே. (கூ)

ப ;—அநந்தரம், வ்யாப்திதஶையோடு அவதாரதஶையோடு வாசியற விளாக்குலைகொண்டு ஸ்துதிக்கவல்ல எனக்கு ஸத்ருஶருண்டோ? என்கிறார்.

வானத்தும்—ஆகாஶஶப்த வாச்யமான ஸ்வர்க்கத்திலும்
உள் வானத்து—ஊர்த்வாகாஶ வர்த்திகளான
உம்பரும்—உபரிதநலோகங்களிலும்
மண்ணுள்ளும்—பூமிக்குள்ளும்
மண்ணின்கீழ் தானத்தும் — பூமியின் கீழ்பாதாளஸ்தாநங்களிலும்
எண்டிசையும்—(இவற்றிலுண்டான தேவாதி ஜாதிபேதத்தாலும் ப்ராஹ்மணாதி வர்ணபேதத்தாலும்) அஷ்டவிதமான பதார்த்தங்களிலும்
தவிராது—ஒன்றும் நழுவாதபடி
நின்றான் தன்னை—வ்யாபித்துநின்ற ஸ்வரூபத்தை யுடையனாய் (இப்படி முகங்காட்டாதே நின்று ரக்ஷிக்கையன்றியே)
கூன் — புடையுடைமையாலே கூனியாய்
நல்—தர்ஶநீயமான
சங்கம்—ஸ்ரீபாஞ்சஜந்யத்தை யுடைய
தட—பெரிய
கையவனை—திருக்கையையுடையனாய்
குடமாடியை — குடக்கூத்து முகத்தாலே ஸர்வஜநமநோஹாரியான சேஷ்டிதங்களை யுடையனாய், (இக்கிலேயிலே.)

(க) சாந்தோ. அ-கஉ.

வானம்கோனை—நித்யஸூரிகளுக்கு அநுபவிக்கும்மேன்மையை யுடையவனானவனை(வ்யாப்தியோடு அவதாரத்தோடு பரத்வத்தோடு வாசியறக் கபளீகரித்து)

கவிசொல்ல வல்லேற்கு—கவிசொல்ல வல்ல எனக்கு

இனி—இனி

மாறு—எதிர்

உண்டோ—உண்டோ?

ஓரோராகாரத்தை ஸ்துதிக்கப்புக்குப் பிற்காலிக்கும் உபய விபூதியிலும் எதிரில்லையென்று கருத்து (க)

ஆறு ;—(வானத்தும்.) ஸ்வர்க்காத்யுபரிதந லோகங்களுக்கும் ப்ருதிவ்யாதி அதஸ்தநலோகங்களுக்கும் ததந்தர்வர்த்தியான சராசரங்களுக்கும் ஆத்மபூதனுய், ஶங்கசக்ரகதாதரனுய், ஆஶ்ரிதபரித்ராணார்த்தமாக மநுஷ்யாதிரூபேண அவதீர்ணனுய், அதிமநோஹர திவ்ய சேஷ்டிதனுய், ஸ்ரீ வைகுண்டநாதனு யிருந்த எம்பெருமான் தன்னைக் கவிசொல்லவல்ல என்னோடு ஒக்குமோ, ஸர்வேஶ்வரனுன எம்பெருமான்தான்? என்கிறார். (க)

ஈடு ;—அவ ;—பத்தாம்பாட்டு. அவன் சேஷ்டிதங்களடங்க என்சொல்லுக்குள்ளே யாம்படி கவிபாட வல்லேனுய், ப்ராப்தவிஷயத்திலே வாசிகமாக அடிமை செய்யப்பெற்ற வளவன்றிக்கே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆநந்தாவஹனுனேன் என்கிறார்.

உண்டுமுமிழ்ந்தும்கடந்துமிடந்தும் கிடந்தும்நின்றும் *
கொண்டகோலத்தொடுவீற்றிருந்தும் மணங்கூடியும் *
கண்டவாற்றால் தனதேயுலகெனநின்றான்தன்னை *
வண்தமிழ்நூற்கநோற்றேனடியார்க்கின்பமாரியே. (கo)

ப ;—அநந்தரம், வ்யாப்யவிஷய ரக்ஷணார்த்தமான மநோஹாரி சேஷ்டிதங்களையுடையவனை, ஆஶ்ரித்த ஆநந்தாவஹமாம்படி கவிபாட பாக்யம் பண்ணினேன் என்கிறார்.

உண்டும்—(ப்ரளயாபத்திலே) வயிற்றிலேவைத்தும்

உமிழ்ந்தும்—(அநந்தரத்திலே) உமிழ்ந்தும்

கடந்தும்—(அந்யாபிமாநம்போம்படி) அளந்து காற்கீழேயிட்டும்

இடந்தும் — (அவாந்தரப்ரளயத்திலே வாராஹரூபியாய்) இடந்தெடுத்தும்

கிடந்தும்—(க) "வடதிஸிஸெள ஊஷோஸெய: ப்ரதிஶிஶ்யே மஹோததே:" என்று கடற்கரையிலே) கிடந்தும்
நின்றும்—(உ) "அவஷ்டப்ய ஸ்வதிஷ்டம்-அவஷ்டப்யசதிஷ்டந்தம்" என்று ராவணவதாநந்தரம் தேவர்களுக்குக் காட்சி கொடுத்து) நின்றும்
கொண்ட—மீண்டுவந்து திருவபிஷேகம்பண்ணின
கோலத்தொடு—திருக்கோலத்தோடே
வீற்றிருந்தும்—எழுந்தருளியிருந்தும்
மணம்—நித்யோத்ஸவமாம்படி
கூடியும்—(பூமியுடனே) ஸம்ஸ்லேஷித்து ராஜ்யம்பண்ணியும்
கண்ட—இப்படி ப்ரத்யக்ஷஸித்தமான
ஆற்றல்—சேஷ்டிதப்ரகாரங்களாலே
(௩) "பதிம்விஸ்வஸ்ய பதிம்விஸ்வஸ்ய" என்கிற ப்ரமாணத்திலே ஸுஷ்மாக)
உலகு—லோகம்
தனதே—தனக்கே சேஷம்
என—என்றநாடாகச்சொல்லும்படி
நின்றான்தன்னை—நின்ற ஸர்வேஸ்வரனைப்பற்ற
வண்தமிழ்—லிலக்ஷணமாய் ஸர்வாதிகாரமான த்ராவிட ப்ரபந்தத்தை
நூற்க—நிர்மிக்கைக்கு
நோற்றேன்—(அவனுடைய அங்கீகாரமாகிற) புண்யத்தைப் பண்ணினேன்;
அடியார்க்கு—அவனுக்கு அடியாரான பாகவதர்க்கு, (இப்ரபந்தம்)
இன்பமாரி—ஆநந்தவர்ஷியான மேகமாயிறே இருக்கிறது

ஆறு;—(உண்டும்.) நிகிலஜகந்நிகரணோத்கரண க்ரமணோத்தரண ஸயநஸ்தாநாஸந ஸம்ஸ்லேஷாதி ஸ்வகீய திவ்ய சேஷ்டிதங்களாலும், ஸ்வாஸாதாரண திவ்ய ஸௌந்தர்யத்தாலும், ஸ்வகீய திவ்யரூபத்தாலும் தனதே உலகென நின்றான்தன்னைத் திருவாய்மொழி பாடுகைக்கு ஒரு மஹாபாக்யம்பண்ணினேன். பகவத் ஸ்வரூப ரூபகுணவிபூதிபாதாத்ம்யப்ரதர்ஸகமாய் அதிமதுரமாய் அதிரமணீய ஸௌந்தர்யமாய் அதிமதுரஸ்வரமாயிருந்த இத்திருவாய்மொழியை, எம்பெருமானுக்கு நல்லராயிருப்பார் கேட்டால் என்படுவாரோ? என்கிறார்.
(கo)

ஈடு;—அவ;—நிகமத்தில் - இத்திருவாய்மொழி கற்றாரைப் பெரியபிராட்டியார் தமக்கே தாமாகக்கொண்டு ஸமஸ்த து:க்கங்களையும் போக்குவர் என்கிறார்.

(க) ரா-யு-உக-க. (உ) ரா-கி-கக-உ௫-
(௩) தை நாரா-கக.

மாரிமாறுத தண்ணம்மலை வேங்கடத்தண்ணலை *
வாரிமாறுதபைம்பூம்பொழில்சூழ் குருகூர்நகர் *
காரிமாறன்சடகோபன் சொல்லாயிரத்திப்பத்தால் *
வேரிமாறுதபூமேலிருப்பாள் வினைதீர்க்குமே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப;—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக. இதில் அந்வய மாத்ரத்தாலே பகவதநுபவ விரோதியான ஸகல பாபங்களையும் தன் கடாக்ஷத்தாலே லக்ஷ்மி போக்கியருளு மென்கிறார்.

மாரிமாறுத—வர்ஷம் மாறுதபடியாலே
தண்—குளிர்ந்து
அம்—தர்ஸநீயமாய்
வேங்கடம்—திருவேங்கடமென்று திருநாமமான
மலை—திருமலையிலே (தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கைக்காக வந்து நிற்கிற ஶீலத்தையுடைய)
அண்ணலை—நிருபாதிகஸ்வாமியை
வாரிமாறுத—(பாதபாதிகளுக்கு ஶிஶிரோபசாரம் பண்ணுகிற) ஜலஸம்ருத்தி மாறுத
பைம்பூம்பொழில்—தர்ஸநீயமான புஷ்பஸம்ருத்தியையுடைய பொழிலாலே
சூழ்—சூழப்பட்ட
குருகூர்நகர்—திருநகரியில்
காரி—காரியென்று பேரான பித்ருஸம்பந்தத்தையுடையராய்
மாறன்—மாறனென்னும் குடிப்பேரையுடைய
சடகோபன்—ஆழ்வார்
சொல்—அருளிச்செய்த
ஆயிரத்து—ஆயிரத்தில்
இப்பத்தால்—இப்பத்தாலே
வேரிமாறுத—மதுப்ரவாஹம்மாறுத
பூமேல்—தாமரையிலே
இருப்பாள்—நித்யவாஸம் பண்ணுகிற லக்ஷ்மி
வினை—(அநுபவவிரோதியான) ஸமஸ்தபாபங்களையும்
தீர்க்கும்—தன்கடாக்ஷத்தாலே போக்கும்.

இவள் கடாக்ஷித்த விஷயத்தில் ஈஶ்வரனுடைய அபராதஸஹத்வம் அவர்ஜநீயமென்று கருத்து. இது-கலித்துறை (கக)

ஆறு;—(மாரிமாறுத) ஸம்ஸார தாவாக்நி தப்தஸர்வஜந்து ஸந்தாபநாஶகமான தண்திருமலையைத் தனக்கு திவ்யதாமமாகவுடையனான திருவேங்கடமுடையானுடைய ஆஶ்ரித வாத்ஸல்யாதி கல்யாணகுண ப்ரதிபாதகமான இத்திருவாய்மொழி வல்லாருடைய ஸமஸ்த து:க்கங்களையும், பகவதாஶ்ரித வாத்ஸல்யாதி கல்யாண குணைகபோகையான பெரியபிராட்டியார் போக்கும் என்கிறார்.

நாலாம்பத்து அஞ்சாந் திருவாய்மொழி
வ்யாக்யாநம் முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஆறாந்திருவாய்மொழி—தீர்ப்பாரை : ப்ரவேசம்.

ஆ;—(தீர்ப்பாரையாமினி) ஏவம்பூதனாயிருந்த எம்பெருமானை விஸ்லேஷித்து அத்யந்தம் அவஸந்நையாய் மோஹதசாபந்நையாயிருந்த பிராட்டி திருத்தாயாரும் உறவுமுறையாரும் இவளுடைய அவஸாதத்தைக் கண்டு 'இவளுக்கு இந்த அவஸாதம் எதனாலே வந்தது?' என்றும், 'இதுக்குப் பரிஹாரமென்?' என்றும் ஒருகட்டுவிச்சியைக் கேட்க, அவளும் 'க்ஷுத்ர தேவக்ருதம்' என்றும், 'இதுக்குப் பரிஹாரம் தத்ப்ரீணநம்' என்றும் சொல்ல, அவர்களும் அதுகேட்டு இவள்பக்கலுள்ள ஸ்நேஹாதிசயத்தாலே 'ஏதேனும் ஒரு தைவத்தை ஆஸ்ரயித்தாகிலும் இவளைப் பெறில் அதுவே எங்களுக்கு ஆத்மலாபம்' என்று பார்த்து அந்த க்ஷுத்ர தேவப்ரீணநத்திலே ப்ரவ்ருத்தராய்ச் செல்லாநிற்க, இப்பிராட்டியினுடைய திருத்தோழியானவள் 'நீங்கள் கருதுகிறவை ஈடல்ல, பரிஹாரமுமல்ல; நோயும் நீங்கள் கருதுகிறதல்ல; இன்னதுநோய், இன்னது பரிஹாரம்' என்று சொல்லி அவர்களை நிவர்த்திப்பிக்கிறாள் என்கிறது. *

ப;—ஆறாந்திருவாய்மொழியில், கீழில்திருவாய்மொழியில் இவர்க்குப் பிறந்த ஹர்ஷப்ரகர்ஷம் மாநஸாநுபவஜநிதமாகையாலே தத்அநுரூபமாக அவனுடைய ஆலோகநாலாபாதி முகத்தாலே ஸம்ஸ்லேஷித்து அநுபவிக்கப் பெறாத அவஸாதம் அதிசயிக்க, அநபாய்யனான அவனுடைய ஆஸ்ரிதவிஷய பக்ஷபாதத்தையும், ஆஸ்ரிக்யஸூசகமான அஸாதாரண சிஹ்நங்களையும், அதிசயித போக்யத்வத்தையும், ஆபத்ஸகத்வத்தையும், விரோதி நிவர்த்தகத்வத்தையும், விலக்ஷண விக்ரஹயோகத்தையும், அத்யாஸ்சர்யமான உபகாரகத்வத்தையும், நித்யஸூரி ஸேவ்யத்வத்தையும், நிரதிசயஸௌலப்யத்தையும், நித்யப்ராமாணிகம்யத்வத்தையும் அநுஸந்தித்து, 'ஏவம்விதனானவன் நம்மை யநுபவிப்பியாதொழிவதே!' என்று அப்ரக்ருதிங்கதராய் மோஹிக்க, பார்ஸ்வஸ்தரான பரிவர் இவரை ஆஸ்வஸிப்பிக்கத்தேடி (க) "[illegible] ஸர்வாந் தேவாந்நமஸ்யந்தி" என்கிறகணக்கிலே பரிவின்கனத்தாலே 'அமார்க்கங்களாலேயாகிலும் பரிஹரிக்கப்போமோ?' என்று உத்யோகிக்க, இவர் ப்ரக்ருதியறிந்த ப்ரகல்பஸுஹ்ருத்துக்களான ஸ்ரீமதுரகவிபோல்வார் அத்தைவிலக்கி, பகவந்நாம ஸங்கீர்த்தந ததீயபாதபாம்ஸுஸ்பர்சாதிகளாலே பரிஹரணீயமென்று ப்ரதி

(க) ரா - அயோ உ - ருஉ.

பாதித்த பாசுரத்தை, - நாயகனைப் பிரிந்து ஆர்த்தையாகிய தலைமகள் வேறுபாடு கண்டு ப்ரதி பந்நபாஷிணியா யிருப்பாளொரு கட்டுவிச்சி வார்த்தைகேட்டு வெறியாட்டாலே பரிஹரிக்கத்தொடங்கின † செவிலி தொடக்கமானாரைப் பார்த்து, இவள் ப்ரக்ருதியறிந்த ப்ரகல்பையானதோழி. அவர்களுத்யோகத்தை விலக்கித்தான் இப்போது நிரூபித்து நோயின் நிதானமறிந்தாளாக பாவித்து, 'க்ருஷ்ணனடியாக வந்தநோவுக்கு அவனை யநுஸந்தித்துப் பிழைப்பிக்கும தொழிய இது பரிஹாரமல்ல' என்று வெறிவிலக்கின பாசுரத்தாலே அருளிச் செய்கிறார். *

ஈடு;—கீழ் வீற்றிருந்தேழுலகா யிருக்க, அநந்தரம் தீர்ப்பாரையாமினியாயிருக்கிறதிறே; எம்பார், கீழில் திருவாய்மொழியையும் இத்திருவாய்மொழியையும் அநுஸந்தித்து, 'மோருள்ளதனையும் சோறேயோ? அதிலே அப்படி நிரவதிக ப்ரீதியாய்ச் சென்றது; இதில் - இப்படி மோஹத்தோடே தலைக்கட்டிற்று; இதுக்கு இருந்து அடைவு சொல்லுவேனே? "இதுக்கு அஸங்கதிரேவ ஸங்கதி:" என்று அருளிச்செய்வராம்.

பொய்ந்நின்ற ஞானத்திலே - ப்ரக்ருதிதோஷத்தை அநுஸந்தித்து அஞ்சி, ஸ்ரீபரதாழ்வான் 'பெருமாள் திருவபிஷேகத்துக்கு நம்மை யழைத்துவந்தது' என்று, 'அவரைத் திருமுடிசூட்டி அடிமைசெய்யக்கடவோம்' என்று பாரித்துவரக்கொண்டு, கைகேயி (க) "ராஜ நீ -'ராஜந்' என்று 'உனக்கு முடிவாங்கிவைத்தேன்' என்ற போது அவன் துடித்தாற்போலே துடித்தாராயிற்று; 'நான் அவரடியேனன்றோ; அவர் என்சொல்லை மறுப்பரோ? இப்போதே மீட்டுக்கொண்டுவந்து திருவபிஷேகம் பண்ணுகிறேன்' என்று திருச்சித்திரகூடத்திலே கிட்டுமளவும் பிறந்த தரிப்புப்போலேயாயிற்று - திருவாசிரியத்திற் பிறந்த தரிப்பு; பின்பு, பதினாலாண்டுகூடி ஆசை வளர்ந்தாற்போலேயாயிற்று - திருவந்தாதியில் ஆசைபெருகினபடி; (உ) "என்னெஞ்சினார் தாமே யணுக்கராய்ச் சார்ந்தொழிந்தார்," (ங) "முயற்றி சுமந்தெழுந்து" என்னும்படியிறே ஆசை பெருகினபடி. மீண்டு எழுந்தருளி "திருவபிஷேகம்பண்ணி அவன் மநோரதம் தலைக்கட்டினாற்போலேயாயிற்று - திருவாய்மொழியில் இவரை அநுபவித்தபடி.

(க) ரா - அயோ - எஉ - உச.
† செவிலி - வளர்த்ததாய்
(உ) பெரிய திருவ - எ
(ங) பெரிய திருவ - க.

ஷிழ் வீற்றிருந்தேழுலகில் பிறந்த நிரவதிகப்ரீதி மாநஸாநுபவ மாத்ரமாய் பாஹ்யகரண யோக்யமல்லாமையாலே, எத்தனையேனும் உயர ஏறினது தகரவிழுகைக்கு உடலாமாபோலே மோஹத்துக்கு உறுப்பாய்த் தலைக்கட்டிற்று. இப்படியிருக்கிற தம்தசையை, ஸர்வேச்வரனோடே கலந்து பிரிந்து நோவுபடுகிறாளொருபிராட்டி தன் னாற்றாமையாலே மோஹித்துக் கிடக்க, இவள் தசையை யநுஸந்தித்த பந்துவர்க்கமும் மோஹித்து, 'இது தேவதாந்தரங்களாலே வந்ததோ? என்று தேவதாந்தர ஸ்பர்சமுடையாரைக் கொண்டு புகுந்து பரிஹாரம்பண்ணப் புக, இவள் ப்ரக்ருதியறிந்த தோழியானவள், 'நீங்கள் பாரிக்கிறவை இவள் நோவுக்குப் பரிஹாரமல்ல; விநாசத்துக்கு உடலாயித்தனை; ஆனபின்பு, பகவந்நாம ஸங்கீர்த்தநத்தாலும் பாகவத பாதரேணுவாலும் பரிஹரிக்கப் பாருங்கோள்' என்கிற அவள் பாசுரத்தாலே ஸ்வதசையைப் பேசுகிறார்.

இவர்தாம், (௧) "நவஸீதாகவயாஹீநா - நசஸீதாத்வயாஹீநா" என்றும், (௨) "கூமவஷ உத்ஷவா - குநுத்வமநுசரம்" என்றும் சொல்லுகிறபடியே, வ்யதிரேகத்திலே தரியாமைக்கு இளையபெருமாளோடொப்பர்; அவன்பொகட்டவிடத்தே கிடக்கைக்கும் குணாநுஸந்தாநத்தாலே ஜீவித்திருக்கைக்கும் ஸ்ரீபரதாழ்வானோடொப்பர்; எத்தனையேனும் ஆற்றாமை கரைபுரண்டாலும் 'அந்தலையாலே பேறு' என்றிருக்கைக்குப் பிராட்டியோடொப்பர்.

முதல் திருவாய்மொழியிலும் பரத்வமிறே பேசிற்று; அநந்தரம் - அவதாரஸௌலப்யத்தை அநுஸந்தித்து மோஹிக்கச் செய்தேயும், * அஞ்சிறைமடநாரையிலே தூதுவிட வல்லராம்படி உணர்த்தியுடையரானார்; * வீற்றிருந்தேழுலகில் பரத்வத்தை அநுஸந்தித்த அநந்தரம், தாமும் மோஹித்துத் தம்தசையை அநுஸந்தித்த பந்துவர்க்கமும் மோஹித்து தேவதாந்தரஸ்பர்சமுடையார் புகுந்து கலக்கினாலும் உணர்த்தியறும்படியாயிற்று. பகவல்லாபத்திலுணர்த்தியும் அலாபத்தில் மோஹமுமாய்ச் செல்லுமித்து, இவ்வாழ்வாரொருவர்க்குமேயுள்ள தொன்றாயிற்று. மற்றும் ஜ்ஞாநாதிகராய் பகவத் விஷயத்திலே கைவைத்தாரா யிருந்தமவர்களிலும், ஸ்ரீவஸிஷ்டபகவான்புத்ரவியோகத்திலே வந்தவாறே

(௧) ரா - அயோ - ௫௩ - ௩௧. (௨) ரா - அயோ ௩௧ - ௨௨.

கடலிலே புகுவது, மலையிலேயேறி விழுவதானான்; ஸ்ரீ வேதவ்யா ஸனும் சாபாஸ்த்ரங்களைக்கொண்டு ஜீவித்தான்; பகவத் விஷயத்தில் லாபாலாபமே யேறிழுவாயிருக்குமிது இவ்வாழ்வா ரொருவர்க்குமேயிறே உள்ளது.

இப்படி இவள் மோஹித்துக்கிடக்க, இவளைக்கண்ட உறவுமுறையாருமெல்லாம் நாகபாஸ பத்தரைப்போலே மோஹித்து யுக்தாயுக்த நிரூபணக்ஷமரன்றிக்கே கலங்கிக்கிடக்க, அங்குப்போலே உணர்ந்திருந்து நோக்குகைக்கு ஸ்ரீஜாம்பவன்மஹாராஜர் திருவடி போல்வாருமில்லையாயிற்று; (௧) "ஸத்ரு க்நோ நஷ்ட ஸஞ்ஜ்ஞஸ் ஸத்ருக்நோ நக்தஸ்த்தித:" என்னும் இதுவும் இல்லையாயிற்று. (௨) [ஜீவந்தும் ராஜகுலம் ஸர்வம் த்வதீயம் நரஸஞ்ஜீவிதம் - அஸ்யராஜகுலஸ்யாத்யத்வதீநம் ஹி ஜீவிதம்] - 'பெருமாள் காட்டேற எழுந்தருளினார்; சக்ரவர்த்தி துஞ்சினான்; இனி நீயேயிறே ராஜ்யத்துக்குக் கடவாய்; உன்னைக்கொண்டன்றோ நாங்கள் ஜீவிக்கவிருக்கிறது' என்கிறார்களல்லர்; 'உன்முகத்திலுருவுதல்காணக்காணா உன்னையிழக்கமாட்டார், அவர் வரவு அணித்து என்றன்றோ நாங்கள் ஜீவிக்கிறது' என்கிறார்களாயிற்று; அப்படியே இவளைக்கொண்டே ஜீவிக்க இருக்கிறார்களாகையாலே எல்லாருமொக்க இவள் தசையைக்கண்டு கலங்கிக்கிடக்க, இவ்வளவிலே நாட்டிலே வேரறிவார் விரகறிவார் மந்த்ரமறிவார் ஔஷதமறிவாரடங்கலும் வந்துபுகுர, அவ்வளவிலே தேவதாந்தரஸ்பர்ஸமுடையார் 'வைஷ்ணவக்ருஹத்தை தூஷிக்க நடந்த நல்லளவு' என்று வந்துபுகுர, இவளுடைய பந்துவர்க்கத்திலுள்ளார் கலங்கியிருக்கையாலே, 'இவளுடைய நோய் இன்னது' என்றும், 'பரிஹாரம் இன்னது' என்றும் அறியாதே, அவர்களிலே ஒருத்தி ஒருகட்டுவிச்சியை, 'இவள்நோய் எது? நோய்க்கு நிதாநம் எது?' என்றுகேட்டு, அவள் சொற்படியே, (௩) "த்ரவ்யம் நித்யஸ நாநாதி ஸ்ரீவைஷ்ணவேத்யோ த்ருஷ்ட்வாந் ஸ்ரீவைஷ்ணவ ஸ்வோக்த பரிஹாரம் தோஷே கஞ்ஜநா: - த்ரவ்யம் நித்யஸநாதி தைவதம் தீக்ஷாந்த்ரஞ்ச பரிஹாரகமோ த்ருஷ்டிர்தேவலகாப்ய்ச தேஸிகஜநா:" என்கிறபடியே, நித்யமான த்ரவ்யத்தை இவள் ரக்ஷணத்துக்குப்

(௧) ரா - அயோ - அ௭ - ௪. (௨) ரா - அயோ அ௯ - அ. (௩)

பரிகரமாகக்கொண்டு, க்ஷுத்ரதேவதை ஆவேசித்ததாகக்கொண்டு, பாஹ்யாகமங்களை த்ருஷ்டியாகக்கொண்டு, தேவதாந்தர ஸ்பர்ஶமுடையாரை தேசிகராகக்கொண்டு, இவள் பக்கலுண்டான ஸ்நேஹாதிஶயத்தாலே, 'இவள் ஜீவிக்குமாகில் ஏதேனும் ஒருவழியாலேயாகிலும் பரிஹரிக்க அமையும்' என்று வழியல்லாவழியிலே இழிந்தார்கள்.

அப்படி கலங்கப்பண்ணுமிறே பரிவு; (க) "ஸவ்ர்தாவேறுவாநே ஶைஷ்டி ஶாஸ்வாதெயப்யஶ்வி நீ:-ஸர்வாந்தேவாந்நமஸ்யந்திராமஸ்யார்த்தேயஶஸ்விந:" என்றார்களிறே திருவயோத்யையிலுள்ளார். இத்தைக்கண்ட உயிர்த்தோழியானவள், "இவர்கள் செய்கிற இவை இவளுகவாயில் கிடக்கிற ஸத்தையையும் இழக்குமித்தனை; இனி நாம் இத்தை அறிந்தோமாகச் சொல்லில் 'உன் காவற்சோர்வாலே வந்ததன்றோ?' என்று சொல்லுவர்கள்; நாம் கைவாங்கியிருந்தோமாகில் இவளை யிழக்கவரும்; இனி இதுக்குப் போக்கடியென்?" என்று விசாரித்து, "இவர்கள் தாங்களும் 'இதுதான் ஏதோ?' என்று ஆராயாநின்றார்களிறே; அவ்வோபாதி நாமும் நிரூபணத்திலே யிழிந்து இவள் ப்ரக்ருதியைக்கொண்டு சொன்னோமாகச் சொல்லுவோம்" என்று பார்த்து, "நீங்கள் இவளுக்கு ஓடுகிற நோவும் அறிந்திலீகோள்; நிதாநமும் அறிந்திலீகோள்; பரிஹாரமும் அறிந்திலீகோள்; நீங்கள் பரிஹாரமாகச்செய்கிறவை, கருமுகைமாலையைச் "செவ்விபெறுத்த" என்று நெருப்பிலே இடுவாரைப் போலே இவளை யிழக்கைக்கு உடலாமித்தனை; ஆனபின்பு, இவற்றைவிட்டு, இக்குடியிலே பழையதாகச்செய்து போரும் பரிஹாரத்தைப் பண்ணப்பாருங்கோள்; (உ) "உலகேழுமுண்டான் சொன்மொழிமாலையந்தண்ணந்துழாய்க்கொண்டு சூட்டுமினே" என்றும், (ங) "தண்ணந்துழாய்த்தாராயினும் தழையாயினும் தண்கொம்பதாயினும் கீழ்வேராயினும் நின்ற மண்ணாயினுங் கொண்டுவீசுமினே" என்றுமிறே முன்பும் விதித்தது; அங்கு, "நின்றமண்ணாயினும்" என்றாள்; இங்கு "மாயன்தமரடிநீறு" என்றாள்; இதிறே அடிப்படச் செய்து போந்த பரிஹாரம். ஆயிட்டு, இவள்நோய் இது, நோய்க்கு நிதாந

(க) ரா - அயோ - உ - ருஉ

(உ) திருவி-உ௦.

(ங) திருவி - ருங.

மும் இது; இதுக்குப் பரிஹாரமும் - பகவந்நாம ஸங்கீர்த்தநமும் பாகவத பாதரேணுவை ஸ்பர்சிப்பிக்கையும்" என்றுசொல்லி, அவர்கள் செய்கிறவற்றை நிவர்த்திப்பிக்கிறாளாய்ச் செல்லுகிறது

இதுதன்னி லோடுகிற தென்? என்னில்;—அஜ்ஞாததசையிலும் தேவதாந்தரஸ்பர்சமும் ததீயஸ்பர்சமும் ஸத்தயாபாதகமாய். பகவந்நாம ஸங்கீர்த்தநமும் பாகவதஸஹவாஸமும் ஸத்தயா தாரகமாமபடி ஆழ்வார்க்கு வைஷ்ணவத்வம் முறுகினபடி சொல்லுகிறது, ராவணன் மாயாசிரஸ்ஸைக் காட்டினபோது பிராட்டியும் அல்லாத ஸ்த்ரீகளோபாதி சோகித்துக் கண்ணநீர் விழவிட்டிருந்தாளாயிருந்தது; இதுக்கு அடியென்? இது கேட்டபோதே முடியவன்றோ ப்ராப்தம்' என்று ஜீயரைக் கேட்க, 'அவதாரத்தில் மெய்ப்பாட்டாலே 'மெய்' என்றே சோகித்தாள்; ஜ்ஞாந மின்றியிலே ஜீவிக்கைக்கு ஹேது அவருடைய ஸத்தையாகையாலே உளளாயிருந்தாள்; இவ்வர்த்தம் மெய்யாகில் ஸத்தையுமில்லையாம்' என்று அருளிச்செய்தார்.

ஈடு;—அவ;—முதற்பாட்டு. தோழி, இவள்நோய்க்கு நிதாநத்தைச்சொல்லி, 'நீங்கள்செய்கிறவை பரிஹாரமன்று' என்று விலக்குகிறாள்.

*தீர்ப்பாரையாமினி எங்ஙனம்நாடுதுமன்னைமீர் **
*ஓர்ப்பாலிவ்வொண்ணுதல் உற்றநல்நோயிது தேறினோம் **
*போர்ப்பாகு தான்செய்து அன்றைவரை வெல்வித்தமாயப்போர்த் **
தேர்ப்பாகனார்க்கு இவள்சிந்தை துழாய்த்திசைக்கின்றதே. (க)

ப;—முதற்பாட்டில், 'இவள் பாண்டவபக்ஷபாதியான க்ருஷ்ணனுக்கு ஈடுபட்டாளென்னுமிடம் நிரூபித்தறிந்தோம்; ஆனபின்பு, இவள்நோய் தீர்ப்பாரை எங்கே தேடுவோம்?' என்று தோழியானவள் தாயாரைக் குறித்துச் சொல்லுகிறாள்.

அன்னைமீர்—(இவள் பக்கல் பரிவாலே 'ஏதேனும் ஒருவழியாலும் இவள்நோய் சமிப்பிக்கவேணும்' என்றிருக்கிற) அன்னைமீர்!

இனி—அது பரிஹாரமாகாதபின்பு

தீர்ப்பாரை—(இந்நோய்) தீர்ப்பாரை

யாம்—(என்னோடு உங்களோடு வாசியற நோயினடியறியாத) நாம் எல்லாருங்கூடவாராய' என்றாலும்)

எங்ஙனம்—எங்ஙனே

நாடுதும்—ஆராய்வோம்? (இப்படி தாசொல்லுகிற நீ அறிந்ன்னியோ? என)

ஓர்ப்பால்—இப்போது நிரூபிக்கையாலே
இ ஒள் நுதல்—இந்த அழகிய நுதலையுடையவள்
உற்ற—உள்ளுறப்பெற்ற
நல்—ஶ்லாக்யமான
இது—இந்த
நோய்—நோயை
தேறினோம்—('இவள் ஸ்வபாவத்தாலும் இவளவயவ ஶோபையாலும் நோய் ஆந்தரமாக உற்றபடியாலும் வேறொரு ஶரீரரோகமல்ல, விலக்ஷணரூபப்ராவண்ய ரூபமான ஶ்லாக்யமானநோய்' என்று) அறுதியிட்டோம்; (இது எந்தவிஷய மடியாக வந்தது? என்னில்)
போர்—யுத்தத்துக்குவேண்டும்
பாகு—நிர்வாஹங்களையுடைய
தான்—(க) "யஸ்ய ஶ்ரீ மாந் ஹரிர் மந்த்ரீ ஸகோப்தா ஸஸூஹ்ருச் சைவ ஜநார்த்தந:" என்று) தானே
செய்து—செய்து
அன்று—(துர்யோதநாதிகள் பாண்டவர்களை மேலிட்ட) அன்று (அவர்களை)
ஐவரை—ஐவரும்
வெல்வித்த—வெல்லும்படியாகப் பண்ணின
மாயம்—('ஆயுதமெடேன்' என்று ஆயுதமெடுத்தும் பகலை இரவாக்கியும்பண்ணின) க்ருத்ரிமரூபமான ஆஶ்சர்ய சேஷ்டிதங்களையுடைய
போர்—யுத்தத்திலே
தேர்—அர்ஜுநன்தேரிலே
பாகனார்க்கு(உ)"பார்த்தம் ஸஞ்சாத்ய" என்று எதிரிகளம்பு தன்மேலே படும்படி முன்னே) ஸாரதியாய் நின்றவனுக்கு
இவள்—இவளுடைய
சிந்தை—நெஞ்சானது
துழாய்—ப்ரமித்து
திசைக்கின்றது—அறிவழியாநின்றது.

தேறினோமென்ற பன்மையால் - அவர்கள் கலக்கம் தனக்கு மொத்தவோபாதி, தன்தெளிவே அவர்களுக்கும் தெளிவென்று கருத்து. (க)

ஆறு;—(தீர்ப்பாரை.) இவளுக்கு இந்தநோய் எங்ஙனே வந்தது?" என்று நிரூபித்து, 'அந்நிரூபணத்தாலே இவளுற்ற நன்னோயை அறிந்தோம்; இது எத்தாலே வந்ததென்னில்,—'துர்யோதநாதிகள் நடுங்கும்படி ஸேனையை அணிவகுத்த அன்று ஐவரை வெல்வித்த மாயப்போர்த் தேர்ப்பாகனாரை ஆசைப்பட்டுப் பெருமையால் வந்தது. இந்தநோய் தீர்ப்பாரை நாம் எங்கே தேடுவோம்? அன்னைமீர்!' என்றுகொண்டு, அவர்கள் பரிஹாரமாகச் செய்கிற செயல்களை இவளுடைய தோழி நிவர்த்திப்பிக்கிறாள். (௩)

(க) பாரத - ராஜ. (உ) பார - த்ரோணம் - ௩௩ - ௧௨.

ஈடு ;—அவ ; — இரண்டாம்பாட்டு. க்ஷுத்ரதேவதா ஸாந்நித்யால் இந்நோய் போக்குகை அரிது; பகவத்விஷயத்தைச் சொல்லில் இவளைப் பெறலா மென்கிறாள்.

திசைக்கின்றதேஇவள்நோயிதுமிக்கபெருந்தெய்வம் *
இசைப்பின்றிநீரணங்காடுமிளந்தெய்வமன்றிது *
திசைப்பின்றியேசங்குசக்கரமென்றிவள்கேட்க *நீர்
இசைக்கிற்றிராகில்நன்றேயில்பெறுமிதுகாண்மினே. (உ)

ப ;—அநந்தரம், இவள்நோய் க்ஷுத்ரதேவதாமூலமல்ல, ஸர்வாதிக தேவதாமூலம்; அவனுடைய அஸாதாரண சிஹ்நங்களைச் சொல்லில் இவளைக் கிடைக்கலா மென்கிறாள்.

திசைக்கின்றது — (இவளோடு உங்களோடு வாசியற) மதி கெடுகிறது
இவள்நோய் — இவள் நோயாலாயிருக்கும் ;
இது — இது
மிக்க பெரும் தெய்வம் — ஸர்வாதிகமாய் அபரிச்சேத்யமாஹாத்ம்யத்தையுடைய தேவதாமூலம்
இது — இது
இசைப்பு இன்றி — (உங்களுக்கும் இவள்தனக்கும்நோய்க்கும்) சேராதபடி
நீர் — நீங்கள்
அணங்காடும் — தைவாவிஷ்டரா யாடுகிற
இளந்தெய்வம் — அல்பதேவதை
அன்று — அன்று;
திசைப்பு இன்றியே — (புறம்பு சொல்லுவார் வார்த்தையைக் கேட்டு) ப்ரமியாதே
சங்குசக்கரம் — (அந்த ஸர்வாதிக தேவதைக்கு அஸாதாரண சிஹ்நங்களான) சங்கசக்ரங்கள்
என்று — என்று
இவள் — (மோஹித்துக்கிடக்கிற) இவள்
கேட்க — கேட்க
நீர் — நீங்கள்
இசைக்கிற்றிராகில் — சொல்ல வல்லீர்களாகில்
நன்றே — நன்றாகவே (இவள்)
இல் பெறும் — இல்லிருப்புப்பெறும்;
இது — இத்தை
காண்மின் — அபரோக்ஷித்துக் காணுங்கோள்.

இல்லென்று - இருப்பிடமாய், இவ்விடத்திலே இவள் ஸத்தையோடே யிருக்கபெறு மென்றபடி; அன்றியே, நாயகன்பக்கலிலே இல்வாழ்க்கையைப் பெறு மென்றுமாம். (உ)

ஆறு ;—(இசைக்கின்றதே.) நீங்கள் இவளுடைய நோயினை ஒன்றும் அறிகிறிலீர் ; இந்நோய் மிக்கபெருந்தெய்வத்தாலே வந்தது. விஸத்ருஶமாக நீங்கள் நின்று அணங்காடுகிற க்ஷுத்ர தைவக்ருத மல்ல. இதுக்குப் பரிஹாரமென்? என்னில் ;—சொல்லுவார் சொல்லிற்றைக் கேட்டுத் திசையாதே, "சங்குசக்கரம்" என்று இவள் கேட்க நீர் இசைக்கிற்றிராகில் நன்றே இவளைப்பெறலாம். இப்போதே இப்பொருளை ப்ரத்யக்ஷிக்கலா மென்கிறாள். (௨)

ஈடு ;—அவ ;—மூன்றாம்பாட்டு. அயுக்தங்களைச் செய்யாதே அவன் திருவடிகளை ஏத்துங்கோள் ; அதுவே இந்நோய்க்கும் பேஷஜ மென்கிறாள்.

இதுகாண்மினன்னைமீர் இக்கட்டுவிச்சிசொற்கொண்டு * நீர்
எதுவானும்செய்து அங்கோர்கள்ளுமிறைச்சியும்தாவேன்மின் *
மதுவார்துழாய்முடி மாயப்பிரான்கழல்வாழ்த்தினால் *
அதுவே இவளுற்றநோய்க்கு மருமருந்தாகுமே. (௩)

ப ;—அநந்தரம், நிந்த்யமான ஸுராமாம்ஸங்களைக்கொண்டு இதரதேவதாஶாந்திபண்ணாதே. நிரதிஶய போக்யனானவன் திருவடிகளை ஏத்தினால், அதுவே இவள்நோய்க்கு பேஷஜமாய் போக்யமுமா மென்கிறாள்.

அன்னைமீர்—அன்னைமீர்! (பெற்று வளர்த்தோமென்கிற மேன்மையாலே சொல்லிற்றுக் கேளாநிராதே)
இது—(நான்சொன்ன) பரிஹாரத்தைப்பண்ணி
காண்மின் — (பலத்தைக்) காணுங்கோள் ;
இ—இந்தத் தண்ணியளான
கட்டுவிச்சி—கட்டுவிச்சியுடைய
சொல்—(தகுதியில்லாத)வார்த்தையை
கொண்டு—கைக்கொண்டு
நீர்—உங்கள் ஸ்வரூபத்தைப் பாராதே
எதுவானும்—(ஹேயதேவதாநுவ்ருத்திரூபமானது) ஏதேனுமொன்றை
செய்து—அநுஷ்டித்து
அங்கு—அந்தஸ்தலத்திலே
ஓர்—(ஹேயமாயிருப்பது) ஒரு
கள்ளும்—மதுவையும்
இறைச்சியும்—மாம்ஸத்தையும்
தாவேன்மின்—தூவி தூஷியாதே கொள்ளுங்கோள் ;
ஆனால் பரிஹாரமேதென்னில் ;—("பாலுமாய் மருந்துமாய்" என்னுமாபோலே)
மதுவார்—மதுஸ்யந்தியான
துழாய்—திருத்துழாயாலே அலங்க்ருதமான
முடி—முடியையுடையனாய்
மாயம்—ஆஶ்சர்யமான குண சேஷ்டிதங்களை

பிரான்—ஆசைப்பட்டார்க்கு அநுபவிப்பிக்கும் மஹோபகாரகனுடைய

கழல்—திருவடிகளுக்கு

வாழ்த்தினால்—மங்களாசாஸநம் பண்ணினால்

அதுவே—அந்த மங்களாசாஸநம் உங்கள் ஸ்வரூபாநுரூபமானவன்றியே

இவள் உற்ற—இவள் உள்ளுறக் கொண்ட

நோய்க்கு—நோய்க்கு

அரு—பெறுதற்கரிய

மருந்துமாகும்—மருந்துமாய் இவளுக்கு போக்யமுமாய், இவள் நோய்கண்டு நீங்கள் படுகிற கலக்கத்துக்குப் பரிஹாரமுமாம்

ஆறு ;—(இதுகாண்மின்) இக்கட்டுவிச்சி சொற்கொண்டு நீர் எதுவானுமொன்றைச்செய்து அங்கு ஓர் கள்ளும் இறைச்சியும் தூவேன்மின். மற்றுச் செய்வதென்? என்னில், மதுவார் துழாய் முடி மாயப்பிரான் கழல் வாழ்த்துங்கோள் ; வாழ்த்தினால், அதுவே இவளுற்ற நோய்க்கு அருமருந்துமாம் ; யுக்தமும் அதுவே ; இது நிஸ்சிதம் என்கிறாள். (௩)

ஈடு ;—அவ ; நாலாம்பாட்டு. வஞ்சகையாய்த் தோற்றிற்றுச் சொல்லுகிற இவளுடைய பஹுஜல்பாதிகளை விட்டு, ஆபத்ஸகனான ஸர்வேஸ்வரனுடைய திருநாமத்தைச் சொல்ல வல்லிகோளாகில் இவளைக் கிடைக்கும் என்கிறாள்.

மருந்தாகுமென்றங்கோர்மாயவலவைசொற்கொண்டு * நீர்
கருஞ்சோறும்மற்றைச்செஞ்சோறும்களனிழைத்தென்பயன் *
ஒருங்காகவே உலகேழும்விழுங்கி யுமிழ்ந்திட்ட *
பெருந்தேவன்பேர்சொல்லகிற்கிலிவளைப்பெறுதிரே. (௪)

ப ;—அநந்தரம், க்ருத்ரிமையான கட்டுவிச்சி சொல்லிற்றுச் செய்து ஒரு ப்ரயோஜநமில்லை ; ஆபத்ஸகனான ஸர்வேஸ்வரனுடைய திருநாமத்தைச் சொல்லில் இவளைக் கிடைக்குமென்கிறாள்.

(பரிஹாரமில்லாதத்தை) மருந்து ஆகும் என்று—பரிஹாரம் என்று ப்ரதிபத்தி பண்ணி

அங்கு ஓர்—'இன்னவிடத்திலாள், இன்னாள்' என்று சொல்ல வொண்ணாதாளொரு

மாயம்—க்ருத்ரிமையாய்

வலவை — ப்ரதிபந்நபாவிணியானவளுடைய

சொல்—வார்த்தையை

கொண்டு—விஸ்வஸித்து

நீர் — (தேவதாந்தரஸ்பர்ஶயோக்யதையில்லாத) நீங்கள், (இவள் பக்கல் பரிவாலே சலங், ஸாத்த்விகாந்நமான ஸாத்தாந்நமன்றியே தாமஸமாயும் ராஜஸமாயுமுள்ள
கருஞ்சோறும் — கருஞ்சோற்றையும்
மற்றை — த்வ்யதிரிக்தமான
செஞ்சோறும் — செஞ்சோற்றையுங் கொண்டு
களன் — தேவதாந்தரஸந்நிதாநஸ்தலத்திலே
இழைத்து — (அவற்றுக்குப் ப்ரீணநமாம்படி சொல்லுகிற கணக்கிலே) இட்டால்
என்பயன் — என்ன ப்ரயோஜநமுண்டு?
உலகு எழும் — (ஆஸ்ரிதாநாஸ்ரித விபாகமற) ஸர்வலோகங்களையும்
ஒருங்காகவே — ஒருகாலே
விழுங்கி — (ப்ரளயம் விழுங்காதபடி) தான் விழுங்கி ரக்ஷித்து
உமிழ்ந்திட்ட — (அது போனவாறே) மீள உமிழ்ந்த
பெருந்தேவன் — பரதேவதையினுடைய
பேர் — திருநாமத்தை
சொல்லகிற்கில் — சொல்லவல்லீர்களாகில்
இவளை — (விலக்ஷணையான) இவளை
பெறுதிர் — பெறுதிகோள் (௪)

ஆறு ;- (மருந்தாகும்.) மருந்தாகுமென்று, வஞ்சகையாய்த் தோற்றிற்றுச்சொல்லக் கடவளாயிருப்பாளொரு கட்டுவிச்சி சொற்கொண்டு நீர் கருஞ்சோறும் மற்றைச் செஞ்சோறும் களனிழைத்து என்ன ப்ரயோஜநமுண்டு? ஒருங்காகவே உலகேழும் விழுங்கியுமிழ்ந்திட்ட பெருந்தேவனுடைய திருநாமத்தைச் சொல்லில் இவளைப் பெறலாமென்கிறாள். (௪)

ஈடு ;— அவ ;— அஞ்சாம்பாட்டு. நீங்கள் பண்ணுகிற பரிஹாரம் நோயை மிகப்பண்ணுகின்றது; அத்தைவிட்டு, நோய்க்கு யோக்யமான பரிஹாரத்தைப் பண்ணுங்கோளென்கிறாள்.

இவளைப்பெறும்பரிசிவ்வணங்காடுதலன்றந்தோ *
குவளைத்தடங்கண்ணுங்கோவைச்செவ்வாயும்பயந்தனள் *
கவளக்கடாக்களிறட்டபிரான் திருநாமத்தால் *
தவளப்பொடிக்கொண்டுநீரிட்டிடுமின் தணியுமே. (ரு)

ப ;— அநந்தரம், நீங்கள் பண்ணுகிற பரிஹாரம் இவள்நோய் மிகுகின்றது; ப்ரபல விரோதி நிவர்த்தகனான க்ருஷ்ணனுடைய திருநாமத்தை உச்சரித்துப் பரிசுத்த சூர்ணத்தை ஸ்பர்ஶிப்பியுங்கோள் என்கிறான்.

இவளை — (நிரதிசய வைலக்ஷண்யத்தையுடைய) இவளை
பெறும்—பெறும்
பரிசு—ப்ரகாரம்
இ அணங்காடுதல் அன்று — இந்த அணங்கேறியாடுதல் அன்று
அந்தோ—ஐயோ! (இவளுக்கு நோய் விஞ்சினபடி;
குவளை தட கண்ணும்—குவளைப் பூப்போலே மைத்துப் பரப்பையுடைத்தான கண்களும்
கோவை செம் வாயும்—கோவைப்பழம் போலே சிவந்த அதரமும்
பயந்தனள் — தன்னிறமழிந்து பயந்த நிறத்தை யுடையவாம்படியானாள்; இனி இதுக்குப் பரிஹாரமாவது)
கவளம்—(மதகரமான மருந்துகளைக்) கவளங்கொண்டு
கடாம்—கடமழியும்படி மதித்த
களிறு — குவலயாபீடமாகிற) ஆனையை
அட்ட — கொன்று (க) "வாமே ... ஸக்ய: பஶ்யத க்ருஷ்ணஸ்ய முகம்" என்று மதுரையிற்பெண்களுக்கு முகங்கொடுத்த
பிரான்—மஹோபகாரகனுடைய
திருநாமத்தால்—(விரோதிநிரஸநஸூசகமான) திருநாமோச்சாரணத்தாலே, (க) "ஸ்வ்ராஹ்மணாஸ்வோபதேசே யா: ப்ராஹ்மணா: பாததோயேத்யா:" என்கிறபடியே ப்ராஹ்மநிஷ்டரான பாகவதருடைய
தவளம்—பரிசுத்தமான
பொடி—பாதூளியை
கொண்டு—கொண்டு
நீர்—(இவள்பக்கல் பரிவாலே வழியல்லாவழியேயாகிலும் பரிஹரிக்கத்தேடுகிற) நீங்கள்
இட்டிடுமின் — (இவள் ஸ்பர்சிக்கும்படி சடக்கென) ப்ரயோகியுங்கோள்;
தணியும்—(இவளுக்கு விஞ்சியிருக்கிற வைவர்ண்யம்) தணியும்.
குவளை—செய்தல்
கடாம்—மதமாதல், ஆனையின்கதுப்பாதல்.
தவளமென்று — வெளுப்பாய், சுத்தியைச் சொல்லுகிறது.

ஆறு ;—(இவளை.) க்ஷுத்ரதேவாவிஷ்டராய் நின்று நீர் அணங்காடுகிற இது இவளைப்பெறுகைக்கு உபாயமன்று. இவள் குவளைத் தடங்கண்ணும் கோவைச் செவ்வாயும் பயந்தனள்; ஆனபின்பு, ஈண்டு, கவளக்கடாக்களிறட்ட பிரான் திருநாமத்தைச் சொல்லிப் பரிசுத்தமான பொடியைக்கொண்டு நீங்கள் இடுங்கோள்; இடவே இவள்நோய் தணியுமென்கிறாள். (ரு)

(க) வி - பு - ரு - உ௦ - சஙு.

ஈடு ;—அவ ;—ஆறும்பாட்டு. இப்பெரு நேர்த்தி யெல்லாம் வேண்டா; "தவளப்பொடி" என்று சொன்னது இன்னதென்று விசேஷித்து அத்தைச்செய்ய உத்யோகிக்கவே இவள்நோய் தீரும் என்கிறாள்.

தணியும்பொழுதில்லைநீரணங்காடுதிரன்னைமீர் *
பிணியுமொழிகின்றதில்லை பெருகுமிதுவல்லால் *
மணியினணிநிறமாயன் தமரடிநீறுகொண்டு *
அணியமுயலின் மற்றில்லைகண்டீரிவ்வணங்குக்கே. (௬)

ப ;—அநந்தரம், நீங்கள் இடைவிடாமல் அணங்காடுகிற இத்தால் இவள் நோய் வளருகிறதொழிய மீளுகிறதில்லை; ஆதலால், விலக்ஷண விக்ரஹ விஶிஷ்டனான ஸர்வேஶ்வரன் பக்கலிலே பந்தவான்களான பாகவதருடைய சரணரேணுவை தரிப்பிக்கையிலே உத்யோகியுங்கோளென்கிறாள்.

அன்னைமீர் — அன்னைமீர்! (பெற்றியோளான பக்வதையாலே 'பாலையன்றோ இவள்?' என்று என் வார்த்தை கேளாதே)
தணியும்பொழுது—தவிருவதொரு பொழுது
இன்றி—இன்றி
நீர்—நீங்கள்
அணங்காடுதிர் — அணங்காடாநின்றிகோள்;
இது—இதுதானே ஹேதுவாக
பிணியும்—இவள்நோயும்
பெருகும் அல்லால் — பெருகிவருகிறதொழிய
ஒழிகின்றது இல்லை—தவிருகிறது இல்லை; (இனி மீளுகைக்குப் பரிஹாரம்)
மணியின்—நீலரத்நத்திற்காட்டில்
அணி—நிரதிசயவிலக்ஷணமான
நிறம்—நிறத்தையுடையனாய்
மாயன் — ஆஶ்சர்யபூதனான க்ருஷ்ணன் விஷயமாயுள்ள
தமர் — ஶேஷத்வஸம்பந்தஜ்ஞாநவான்களான பாகவதருடைய
அடிநீறு—"தவளப்பொடி" என்று சொல்லப்பட்ட பாததூளியை
கொண்டு அணிய—தரிப்பிக்கும்படி
முயலில்—உத்யோகிக்கப்பெறில்
இ அணங்குக்கு—இந்த திவ்யஸ்வபாவையான பெண்பிள்ளைக்கு
மற்று—இத்தோடொத்த வேறொரு பரிஹாரம்
இல்லைகண்டீர் — இல்லைகாணுங்கோள்.

இது ப்ரயோகித்தபோதே ஆஶ்வாஸம் கண்டிகோளன்றோவென்று கருத்து. அழகுக்கு ஈடுபட்ட இவளுக்குப் பரிஹாரம் அத்துறையி லகப்பட்டாருடைய அநுபந்தமே யென்றபடி. மணியினென்கிற ஐந்தாம் வேற்றுமை - உவமையாகவுமாம்.

(௬)

ஆறு ;—(தணியும்.) தவளப்பொடியாகிறது இன்னதென்கிறது. நீர் அணங்காடுகிற இத்தால் ஒருக்ஷணமாத்ரம் இவளுக்கு ஒரு ஸுகலேசமும் பிறக்கிறதில்லை. அதுவேயோ ? பிணியும் ஒழிகின்றதில்லை, பெருகுகிற வித்தனையல்லது. ஆனபின்பு, மணியின் அணிநிறமாயன் தமரடிநீறுகொண்டு அணிய முயலு மித்தனையல்லது மற்று இவளுக்கு ஒரு பரிஹாரமும் இல்லை என்கிறாள். (௬)

ஈடு ;—அவ ;—ஏழாம்பாட்டு. இதரதேவதைகளை ஆச்ரயித்தால் இவளுடைய விநாசமே பலித்துவிடும் ; இவள் பிழைக்க வேண்டியிருந்திகோளாகில், ஸ்ரீவைஷ்ணவர்களை ஆச்ரயியுங்கோள் என்கிறாள்.

அணங்குக்கருமருந்தென்றங்கோராடுங்கள்ளும்பராய் *
சுணங்கையெறிந்துநும்தோள்குலைக்கப்படுமன்னைமீர் *
உணங்கல்கெடக்கழுதையுதடாட்டங்கண்டென்பயன் *
வணங்கீர்கள்மாயப்பிரான்தமர்வேதம்வல்லாரையே. (௭)

ப;—அநந்தரம், இவள் ஸத்தை யழியும்படி தேவதாந்தர விஷயப்ரவ்ருத்தி பண்ணினால் ப்ரயோஜநமில்லை; ஆச்சர்யபூதனான ஸர்வேச்வரனுக்கு சேஷபூதரான வைதிகாக்ரேஸரரை ஆச்ரயியுங்கோள் என்கிறாள்.

அன்னைமீர்—அன்னைமீர்! (உங்கள் பக்வதையாராதே)
அணங்குக்கு—திவ்யையான பெண் பிள்ளைக்கு
அருமருந்து என்று—பெறுதற்கரிய மருந்து என்று நினைத்து
அங்கு—அந்தத்தேவதாந்தர விஷயமாக
ஓர் ஆடும்—நிஷித்தமான ஆடறுக்கவும்
கள்ளும்—மதுநிவேதிக்கவும்
பராய்—ப்ரார்த்தித்து, (அத்தேவதாவேசத்தாலே உடம்பு)
சுணங்கை எறிந்து—மயிர்க்கோள் எறிந்து
நும் தோள்—உங்கள் தோள்கள்
குலைக்க—அசைத்தாட
படும்—படாநின்றது;
உணங்கல்—உணங்குகிறநெல்லு
கெட—கெட
கழுதை—(அதைத்தின்கிற) கழுதையினுடைய
உதடு ஆட்டம்—உதடாட்டத்தை
கண்டு—கண்டு
என்பயன்—என்னப்ரயோஜநமுண்டு? (அதுபோலே இவள் ஸத்தையழிய தேவதாந்தரவிஷயவ்யாபாரத்தால் ப்ரயோஜநமில்லை; ஆனால் என்செய்யப்பெறுமென்னில்)
மாயம்—ஆச்சர்யகுணசேஷ்டிதங்களை
பிரான்—இவளுக்கு உபகரித்து அநுபவிப்பித்தவனுடைய

தமர்—அடியாராய்
வேதம்வல்லாரை—வைதிகாக்ரேஸரரான பாகவதரை
வணங்கீர்கள் — வணங்கும்படி பாருங்கோள்.

சுணங்கை—மயிர்க்கோள் "துணங்கை" என்று பாடமாய்—துணங்கையென்ற கூத்தாகவுமாம். "சுணம்கையாலே யெறிந்து" என்றுஞ் சொல்லுவர்.

ஆறு ;—(அணங்குக்கு) இவள் தளராநிற்க, இவளுக்கு அரு மருந்தென்று அங்கு ஓர் ஆடும் கள்ளும் பராய்ச் சில அஸங்கதங்களைப் பண்ணினால் உங்களுக்கு என்ன ப்ரயோஜநமுண்டு? ஆனபின்பு, இவளுடைய நோயெல்லாம் தீரும்படி வேதவித்க்ரேஸரரான ஸ்ரீ வைஷ்ணவர்களைச் சென்று ஆஸ்ரயியுங்கோள் என்கிறாள். (௭)

ஈடு ;—அவ ;—எட்டாம்பாட்டு; ஸ்ரீவைஷ்ணவர்களைப் புருஷகாரமாகக்கொண்டு ஸர்வேஸ்வரன் திருவடிகளிலே ஸரணம்புக்கு இவளுடைய நோயைத் தீர்த்துக்கொள்ளுகை தவிர்ந்து, க்ஷுத்ர தேவதா ஸமாஸ்ரயணம் உங்களுக்குக் கீழ்மையை விளைக்குமென்கிறாள்.

வேதம்வல்லார்களைக்கொண்டுவிண்ணோர்பெருமான்திருப்
பாதம்பணிந்து * இவள்நோயிது தீர்த்துக்கொள்ளாதுபோய் *
ஏதம்பறைந்தல்லசெய்துகள்ளூடுகலாய்த்தூய் *
கீதமுழவிட்டுநீ ரணங்காடுதல் கீழ்மையே. (௮)

ப ;—அநந்தரம், பாகவத புருஷகார பூர்வகமாக ஸூரிஸேவ்யன் திருவடிகளை ஆஸ்ரயித்து இவள் நோயைப் பரிஹரியாதே, இதர தேவதா ப்ரீணநமான அணங்காடல் உங்களுக்குக் கீழ்மை என்கிறாள்.

வேதம்வல்லார்களை—ஸகல வேததாத்பர்ய நிர்வாஹக்ஷமரான பாகவதரை
கொண்டு—புருஷகாரமாகக் கொண்டு
விண்ணோர்பெருமான்—நித்யஸூரிஸேவ்யனான ஸர்வேஸ்வரனுடைய
திருபாதம்—நிரதிஸய போக்யமான திருவடிகளை

பணிந்து—ஆஸ்ரயித்து
இவள்—(அத்யந்தவிலக்ஷணையான) இவளுடைய
இது நோய்—லோகவ்யாவ்ருத்தமான இந்நோயை
தீர்த்துக்கொள்ளாது—ஸமிப்பித்துக் கொள்ளாதே
போய்—(இதரதேவதாபரராய்க்கொண்டு கைகழியப்) போய்

ஏதம் — (ஸ்வரூபஹாநிகரமான) இதர தேவதாபரஸப்தங்களை
பறைந்து—சொல்லி
அல்ல செய்து — அகர்த்தவ்யங்களான நிஷித்தாநுஷ்டாநங்களைப்பண்ணி
ஊடு—நடுவே நடுவே, (ஆராத நோபகாரணங்களோடே)
கள்—ஸுரையை
கலாய்—கலசி
தூய்—தூவி
கிதம்—(தத்யமான) கிதங்களுக்கிடாக
முழவு இட்டு—வாத்ய கோஷத்தைப் பண்ணி
நீர்—(இவளோடு அநுபந்தமுடைய) நீங்கள்
அணங்கு ஆடுதல்—தைவாவிஷ்டைகளாய் ஆடுகிறது
கீழ்மையே—(இக்குடிக்கு) இழுக்கேயாம்.

ஆறு ;—(வேதம்.) ஸ்ரீவைஷ்ணவர்களை ஆஸ்ரயித்தல், ஸ்ரீவைஷ்ணவர்களைப் புருஷகாரமாகக்கொண்டு எம்பெருமானை ஆஸ்ரயித்தல்செய்து இவள் நோயிது தீர்த்துக்கொள்ளாதுபோய் அவாச்யங்களைச்சொல்லி அக்ருத்யங்களைச்செய்து கள்ளோடுகலாய்த் தூய்க் கிதமுழவிட்டு நீர்அணங்காடுமிது சாலத்தண்ணியது என்கிறாள்.

ஈடு ;—அவ ;—ஒன்பதாம்பாட்டு. நீங்கள் பண்ணுகிற நிஷ்பலப்ரவ்ருத்தி நான் காணமாட்டேன்; க்ருஷ்ணன்திருவடிகளை நினைத்து வாழ்த்துங்கோள், இவள் பிழைக்கவேண்டியிருந்திகோளாகில் என்கிறாள்.

> கீழ்மையினாலங்கோர்கீழ்மகனிட்டமுழவின்கீழ்*
> நாழ்மைபலசொல்லிநீரணங்காடும்பொய்காண்கிலேன்*
> ஏழ்மைப்பிறப்புக்குஞ்சேமமிந்நோய்க்குமீதேமருந்து*
> ஊழ்மையில்கண்ணபிரான்கழல்வாழ்த்துமினுன்னித்தே. (௯)

ப ;—அநந்தரம், நீங்கள் ஸ்வதந்த்ரமாகப் பண்ணுகிற நிஷ்ப்ரயோஜந ப்ரவ்ருத்திகள்காண மாட்டுகிறிலேன்; இவள்நோய் ஸமிக்கைக்கு ஸுலபனான க்ருஷ்ணன் திருவடிகளிலே மங்களாஸாஸநம் பண்ணுங்கோள் என்கிறாள்.

கீழ்மையினால் — (அதிரூபணமடியாக வந்த) நிகர்ஷத்தாலே
அங்கு ஓர்—"இன்னவிடத்திலான்" "இன்னான்" என்று சொல்லவொண்ணாத
கீழ்மகன்—நீசன்
இட்ட—ப்ரவர்த்திப்பித்த
முழவின்கீழ்—வாத்யாநுவ்ருத்தியைப் பண்ணி
நாழ்மைபல—தேவதாந்தரோத்கர்ஷங்களை மேறணித்துப் பலபடியாக

சொல்லி—சொல்லி
நீர்—நீங்கள்
அணங்கு ஆடும் — தைவாவிஷ்டைகளாய் ஆடுகிற
பொய்—நிரர்த்தகப்ரவ்ருத்தி
காண்கிலேன்—காணமாட்டுகிறிலேன்
ஏழ்மைப் பிறப்புக்கும்—(க) "ஸைத்வ ஸைத்வ - ஸப்த ஸப்தச ஸப்தச" என்று ஏழு வகையால் வரக்கடவ ஸகல ஜந்மங்களுக்கும்
சேமம்—க்ஷேமரூபமாயிருந்துள்ள
ஈதே—இதுவே
இந்நோய்க்கும் மருந்து — இந்நோய்க்கும் மருந்து.
ஊழ்மையில் — ஸ்வரூபப்ராப்தமாய்ப் பழையதாய்ப் போருகிற ப்ரகாரத்தைத் தப்பாசபடி
கண்ணபிரான் — ஸௌலப்யத்தாலே உபகாரகனான க்ருஷ்ணனுடைய
கழல்—திருவடிகளை
உன்னித்து—அநுஸந்தித்து
வாழ்த்துமின்—மங்களாஸாஸநம் பண்ணுங்கோள்.

நாழ்மை - தகுதியில்லாத மேனாணிப்பு, ஊழ்மை - பழமை, உன்னித்து- நினைத்து. (கூ)

ஆறு ;—(கீழ்மையினால்.) கீழ்மையினால் அங்கோர் கீழ்மகன் இட்ட முழவின்கீழ் நாழ்மை பலசொல்லி நீர் அணங்காடும் இந்த வ்யர்த்தப்ரவ்ருத்திகளால் ஒரு ப்ரயோஜநமும் காண்கிறிலேன். இனி மெய்யாகப் பார்க்கில், எற்றைக்கும் இவளுக்கு ரக்ஷை, இந்நோய்க்கும் இதுவே மருந்து, இத்தை நீங்கள் நிரூபித்துச் செய்யுங்கோள். அது ஏதென்னில், - கண்ணபிரான் கழல் வாழ்த்துமின் என்கிறாள். (கூ)

ஈடு ;—அவ ;—பத்தாம்பாட்டு. இவளுக்கு க்ருஷ்ணன் திருவடிகளில் உண்டான ஐகாந்த்யத்தை அநுஸந்தித்து அவனை யேத்துங்கோள் ; இவள் உஜ்ஜீவிக்கும் என்கிறாள்.

உன்னித்துமற்றொருதெய்வந்தொழாளவனையல்லால் *
நும்மிச்சைசொல்லிநும்தோள்குலைக்கப்படுமன்னைமீர் *
மன்னப்படுமறைவாணனைவண்துவராபதி
மன்னனை * ஏத்துமினேத்துதலுந்தொழுதாடுமே. (கo)

ப ;—அநந்தரம், நிச்சயவேத ப்ரதிபாத்யனான க்ருஷ்ணன் பக்கலிலே பாரமைகாந்த்யத்தையுடைய இவள், நீங்கள் அவனை ஸ்துதித்தபோதே ஆஸ்வஸ்தையாம் என்கிறாள்.

(க) பாரத - மோக்ஷ.

அவனையல்லால்—அவனையொழிய, (இவள்)

மற்று ஒரு தெய்வம் — வேறு ஒருதேவதையை

உன்னித்து—நினைத்து

தொழாள்—தொழும்படியல்லள்: (இப்படியிருக்க,

அன்னைமீர்—பெற்றவர்களான நீங்கள் (இவளளவிற் பரிவாலே கலங்கி)

நும் இச்சை—உங்கள் அபிமதங்களை

சொல்லி—சொல்லி

நும்தோள் — (பகவத்பரிசர்யோபகரணங்களான உங்கள் தோள்கள்

குலைக்க—(தேவதாந்தர விஷயமாக) வ்யாபரிக்க

படும் — படாநின்றன; (அத்தைத் தவிர்த்து

மன்ன—நித்யதயா

படும்—(நெஞ்சிலே) படுவதான

மறைவாணனை—வேதத்துக்கு ப்ரதாநதயா ப்ரதிபாத்யனாய் (ஆஶ்ரிதர்க்கு முகங்கொடுக்கைக்காக)

வண்துவராபதி மன்னனை—ஸ்ரீமத் த்வாரகைக்கு அதிபதியான க்ருஷ்ணனை

ஏத்துமின்—ஸ்தோத்ரம் பண்ணுங்கோள்;

ஏத்துதலும் — அந்தஸ்துதி ஸமகாலத்திலே ப்ரபுத்தையாய்

தொழுது—(அவனைத்) தொழுது

ஆடும் — ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணாநிற்கும்.

ஆறு;—(உன்னித்து) இவளுக்கு அவனையல்லது மற்றொரு தைவத்தைத் தொழுகை அஸம்பாவிதமானாற்போலே, மற்றொரு தைவத்தை ஸ்வப்நத்திலுங்கூட நினைக்கை அஸம்பாவிதம் இப்படி தேவதாந்தரஸம்பந்த கந்தமின்றியேயிருந்த இவளுடைய நோய் தீர்க்கைக்கு, வேதபாஹ்யமான க்ஷுத்ரதைவத்தை வ்யர்த்தமாடி விரோதியுமாயிருந்த வேதபஹிர்ப்பூத மார்க்கத்தாலே தொழுது ஆக்கப்படாதே, ஸாங்க ஸகல வேதவேத்யனாய் ஆஶ்ரித வாத்ஸல்யாத்ய நவதிக கல்யாண குணகண மஹோததியாயிருந்த வண்துவராபதிமன்னனை ஏத்துங்கோள்; ஏத்தவே உஜ்ஜீவிக்கும் என்கிறாள்.

ஈடு;—நிகமத்தில், இத்திருவாய்மொழியை ஸஹ்ருதயமாக அப்யஸிக்கவல்லார், தாம் பிரிந்துபட்ட வ்யஸநம் படாதே பகத்திலே அந்வயிப்பர் என்கிறார்

தொழுதாடித்தூமணிவண்ணனுக்காட்செய்துநோய்தீர்ந்த *
வழுவாததொல்புகழ்வண்குருகூர்ச்சடகோபன் * சொல்
வழுவாதவாயிரத்துளிவைபத்துவெறிகளும் *
தொழுதாடிப்பாடவல்லார்துக்கசீலமிலர்களே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழியை ப்ரேமத்தாலே விக்ருதராய் அநுஸந்திப்பார் பகவத் விஶ்லேஷாதி து:க்கரஹிதராவர்கள் என்று பலத்தை அருளிச்செய்கிறார்.

தொழுது — (ஶேஷத்வாநுரூபமான) அஞ்ஜலியைப்பண்ணி
ஆடி — (அத்யப்ரீதியாலே) ஸஸம்ப்ரம ந்ருத்தம்பண்ணி
தூ மணி — உஜ்ஜ்வலமான நீலரத்நம் போலே யிருக்கிற
வண்ணனுக்கு — நிறத்தையுடைய க்ருஷ்ணனுக்கு
ஆள் செய்து — இதுதானே கைங்கர்யமாகச்செய்து
நோய் தீர்ந்த — தத்விஶ்லேஷது:கரூப வ்யாதி ஶமிக்கும்படியாய்
வழுவாத — (ஸர்வப்ரகாரத்தாலும் தேவதாந்தர ஸம்ஸர்க்கமாகிற) வழுவதலின்றியே
தொல் புகழ் — ஸ்வாபாவிகமான பகவதேகஶேஷத்வ ப்ரதையை யுடையராய்
வண் குருகூர் — விலக்ஷணமான திருநகரிக்கு நிர்வாஹகரான
சடகோபன் — ஆழ்வார்
சொல் — அருளிச்செய்ததாய்
வழுவாத — (பகவத்ஸ்வரூபாதிகளி லொன்றும்) நழுவாதபடி ப்ரதிபாதிக்குமதான
ஆயிரத்துள் — ஆயிரந்திருவாய்மொழிக்குள்ளே
வெறிகள் — வெறியாட்டுவிஷயமாக விலக்கியுரைத்த
இவை பத்தும் — இவை பத்தையும்
தொழுது — (இதில் அர்த்தாநுஸந்தாநவித்தராய்க்கொண்டு) தொழுது
ஆடி — ஆட
பாட — (ப்ரேமபாரவஶ்யத்தாலே) பாட
வல்லார் — வல்லவர்கள்
துக்கம் — பகவத்விஶ்லேஷஜநித து:கமும் தத்பரிஹாரார்த்த தேவதாந்தராநுவ்ருத்தி து:கமுமுண்டாகும்
சீலம் — ஸ்வபாவம்
இலர்கள் — இல்லாதவர்களாவர்கள்.
இது — கலித்துறை. (௧௧)

ஆறு ;—(தொழுதாடி..) 'வண்துவராபதி மன்னன்' என்கிற இந்த ம்ருதஸஞ்ஜீவநமான திருநாமத்தைக்கொண்டு ஜீவித்து நோய்தீர்ந்து தொழுது ஆடிப்பாடித் தூமணிவண்ணனுக்கு ஆட்செய்த வழுவாத தொல்புகழ் வண்குருகூர்ச் சடகோபன் சொல் வழுவாத ஆயிரத்துள் தேவதாந்தர பஜநநிவ்ருத்திபரமான இவை பத்தும் தொழுதாடிப் பாடவல்லார் துக்கசீலமிலர்கள் என்கிறார்.

நாலாம்பத்து ஆறாந்திருவாய்மொழி வ்யாக்யாநங்கள் முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஏழாந்திருவாய்மொழி—சீலமில்லா : ப்ரவேசம்.

ஆறு ;—(சீலமில்லா.) பரமபுருஷ விஶ்லேஷ ஜநித நிரவதிக வ்யஸநத்தாலே மோஹதஶாபந்நரான ஆழ்வார், அம்ருதகல்பமான ததீய திவ்யநாமங்களினுடைய ஶ்ரவணத்தாலே லப்தஸம்ஜ்ஞராய், அந்த விஶ்லேஷவ்யஸநம் அஸஹமாநராய் "காணவாராய்" என்று எம்பெருமானைக் கூப்பிட்டு அழைக்கிறார்.

ப; - ஏழாந்திருவாய்மொழியில், கீழ் "எத்துதலுந்தொழுதாடும்" என்று பகவந்நாம ஶ்ரவணத்தாற் பிறந்த ஆஶ்வாஸம் அவனைக் கிட்டியநுபவிக்கைக்கு உடலன்றியே அலாபத்தாலே ஆர்த்தராகைக்கு உடலாகையாலே அபிநிவேஶாதிஶயத்தையுமுடைய இவ்வாழ்வார் தமக்கு அநுபாவ்யனான ஸர்வேஶ்வரனுடைய - அகிலவஸ்து ஸத்தையும் அழியாமல் நோக்கும் அஸாதாரண ஸம்பந்தத்தையும், அநந்யார்ஹமாக்கி அநுபவிப்பிக்கும் ஔதார்யத்தையும், அநந்யார்ஹமான ஆஶ்ரிதர் பக்கல் அத்யந்த பவ்யதையையும், அவர்களுக்கு ஆஶாஜநகமான ஆபிரூப்யாதிஶயத்தையும், அருந்தொழில் செய்தும் ஆஶ்ரிதர்க்கு அபேக்ஷிதங்கொடுக்கும்படியையும், ஆசைக்கு தீபகமான ஆந்ருஶம்ஸ்யத்தையும், அந்த அவஸ்தாநத்தினுடைய அதிஶயித போக்யதையையும், போக்யதாநிபந்தநமான அபிநிவேஶாதிஶய ஜநகத்வத்தையும், அபிநிவிஷ்டர்க்கு அநுபாவ்யமான அஸாதாரண சிஹ்நவத்தையையும், அகில வேத வேத்யத்வத்தையும் அநுஸந்தித்து, ஏவம் விஶிஷ்டனான போக்யபூதன் பக்கல் அநுபவாபிநிவேஶத்தாற் பிறந்த ஆர்த்த்யதிஶயத்தை அருளிச்செய்கிறார்.

ஈடு ; —(க "வஷைஸ்ணஸீ ஜம்பூ ஸிஸம்ஜ ஹர்ஷே வர்ஷேண பீஜம் ப்ரதிஸஞ்ஜஹர்ஷ" என்று வர்ஷம் விழுந்தால் தன் உணர்த்தியாலன்றிறே பீஜம் பருவம்செய்கிறது ; அப்படியே திருநாம ப்ரஸங்கத்திலே உணர்ந்தாரே. "வண்துவராபதி மன்னனை யேத்துமின்" என்று அம்ருத ஸஞ்ஜீவநியான திருநாம ப்ரஸங்கமே ஶிஶிரோபசாரமாக உணர்த்தி யுண்டாயிற்று ; அத்தால் பெற்றபலம் - முன்புத்தை மோஹத்தையும் இழக்கைக்கு உறுப்பான வித்தனை மோஹதசையில் அநநுஸந்தாநத்தாலே க்லேஶமில்லை ; பிறந்த உணர்த்தி பேற்றுக்கு உடலல்லாமையாலே க்லேஶத்தை விளைக்க, அத்தாலே கூப்பிடுகிறார்.

(க) ரா - ஸு - உக - க.

உறக்கத்தில் பசி பொறுக்கலாம், உணர்ந்தால் உண்டன்றி நிற்கவொண்ணாதிறே. உணர்ந்த அநந்தரம் பொறுக்க வொண்ணாத படி தமக்குப் பிறந்த அலாப க்லேசத்தை யநுஸந்தித்து, அவன் ஆபத்துக்கு உதவும் ஸ்வபாவனாயிருக்கிற படியையும், ஆபத்துக்கு நிதாநமறிந்து பரிஹரிக்க * வல்லனென்றும், ஆபத்துக்கு உதவு கைக்கீடான ப்ராப்தியை யுடையனாவது, பிரிந்தால் பொறுக்க வொண்ணாதபடியான வடிவழகை யுடையனாவது, ஆபத்துக்களிலே விரோதியைப் போக்கி உதவுகைக்கு ஈடான ஶக்தியை யுடையனாவது, அதுக்கீடான பரிகரமுடையனாவது, வரையாதே எல்லாரையு மொக்க ரக்ஷிக்க வல்லனாவது; இப்படி யிருக்கத் தம் ஆற்றாமைக்கு உதவக் காணாமையாலே, பரமபதத்திலே யிருந்தானாகிலும் அவ்விருப்பு நிலைகுலைந்து வந்து முகங்காட்டும்படி ஆர்த்தியாலே நிரம்பிற்று ஒருகடல் கையெடுத்துக் கூப்பிட்டாற்போலே கேட்டாரடைய நீராம்படி கூப்பிடுகிறார்;

(௧) "ஹா ராமே ஹா லக்ஷ்மண ஹா ஸுமித்ரேதி - ஹா ராம மஹா லக்ஷ்மண ஹா ஸுமித்ரே" என்றாற்போலே; (௨) "தயா விஹீநே தந-ஸந்தாபிஸம்ஸ்தே" இத்யாதி - ஸ்ரீகௌஸல்யையார் பெருமாளைப் பிரிந்த ஆற்றாமையாலே கூப்பிட, ஸ்ரீஸுமந்த்ரன் 'அவரைப்பிரிந்தோம் என்று கூப்பிடவேண்டாகாணும், தாமே வந்து புகுருவர்காணும்' என்று ஆஶ்வாஸவசநம் பண்ணினான். [ஸத்யே தந-ஸம்ஸ்தே] - சொன்னவார்த்தை "ஆப்தம்" என்று கைக்கொள்ள வேண்டும்படி அந்தரங்கனாவது, ஸாரதிகள் சொல்லுவதெல்லாம் ஆப்தமிறே. [ஸத்யவாதிநா ஸுயுக்தவாதிநா] அதில்லையேயாகிலும் வார்த்தையைக் கேட்டால் 'இது அப்படியே' என்று விஶ்வஸித்து ஓடுகிற ஶோகம் தீரும்படி வார்த்தைசொல்ல வல்லனாவது. [நிவார்யமாணா-நிவார்யமாணு] இவனாலே 'இதுவேண்டா' என்று தடுக்கப்படா நிற்கச்செய்தேயும் [ஸுதஶோககர்ஶிதா. ஸுதஶோககர்ஶிதா] - இப்படி இவன் இவளைப் போரப் பொலியச் சொல்லுங் காட்டில் நிவ்ருத்தமாகாதிறே, இவள் பிரிந்த விஷயத்தில் ஆற்றாமை. நெடுநாள் கூடிப்பெற்ற பிள்ளையைப் பிரிந்தால் தரிக்கப் போகாதிறே [நசைவ சைவ விராமைக கர்ஜிதா த் -

(௧) ரா - ஸு - ௨௮ - ௮. (௨) ரா - அயோ - ௬௦ - ௨௫.

நசைவதேவீ விரராமகூஜிதாத்] பிறர்கண்ணீரையும் மாற்றி, இதுக்கு முன்பு மோகமும் புதியதுண்ணாதே போந்தவள், கூப்பிடுகிற கூப்பீட்டில் நின்றும் ஓவிற்றிலள்; கூப்பிடுகிற போதுதான் கேட்டார்க்கடைய இரக்கம் பிறக்கும்படி குயில் கூவினாற்போலே காணும் கூப்பிடுவது. கூப்பிட்ட பாசுரம் [ஹி யெதிவ-௯ெகூதி வாரவ வெதிவ-[ப்ரியேதிபுத்ரேதிசராகவேதிச] -பிரிந்தால் தரிக்க வொண்ணாதபடி எனக்கு இனியவரே! உம்மைப் பிரிந்தாருடைய ஆற்றாமைக்கு நிவர்த்தகரானவரே! ஸர்வரக்ஷகர் குடியிலே பிறந்து பெற்றதாயை நலியலாமோ! என்று அவள் கூப்பிட்டாற்போலே இவரும் கூப்பிடுகிறார். *

ஈடு;—அவ;—முதற்பாட்டு. நெடுங்காலம் கூப்பிடச் செய்தேயும், விஷயீகரியாதபடியாக நான் பண்ணின பாபத்தின் மிகுதி இருக்கிறபடி என்? என்கிறார்.

சீலமில்லாச்சிறியனேலும் செய்வினைபோபெரிதால் *
ஞாலமுண்டாய் ஞானமூர்த்தி! நாராயணா! என்றென்று *
காலந்தோறும்யானிருந்துகைதலைபூசலிட்டால் *
கோலமேனிகாணவாராய்கூவியும்கொள்ளாயே. (க)

ப:—முதற்பாட்டில், அகில ஸத்தையையும் நோக்கும் அஸாதாரண ஸம்பந்தத்தையுடைய நீ என்னை அங்கீகரியாதொழிகைக்கு நான் பண்ணின பாபாதிசயம் இருந்தபடியென்? என்கிறார்.

(அபேக்ஷாநிரபேக்ஷமாக ப்ரளயாபத்திலே

ஞாலம்—அகில பதார்த்தத்தையும்

உண்டாய் — அமுதுசெய்து ஸத்தையைநோக்கினவனே

ஞானம் — ஏவம்விதமான ரக்ஷணத்துக்கு விரகறிகைக்கு ஈடான விலக்ஷணஜ்ஞாநத்தை

மூர்த்தீ—வடிவாகவுடையவனே!

நாராயணா—இப்படி விரகறிந்து ரக்ஷிக்கைக்கீடான அப்ருதக்ஸித்த ஸம்பந்தத்தை யுடையனானவனே

என்று என்று — என்றென்று பலபடியும் உன் ஸ்வபாவத்தைச் சொல்லி

காலந்தோறும்—ஒருகால மொழியாமல் எல்லாக்காலத்திலும்

யான் — (வ்யதிரேகத்தி லழியும்படியன ஸ்வரூபத்தையுடைய) நான்

இருந்து—('உன்னைக் காணவேணும்' என்கிற ஆசாபந்தமடியாக) வருந்தியிருந்து

கைத்தலைபூசலிட்டால் — கைத்தலையிலே யாம்படி மஹாத்வநியாகக் கூப்பிட்டால்

கோலம்மேனி — தர்ஶநீயாகாரமான உன்வடிவை

காண — நான் கண்டு அநுபவிக்கும்படி

வாராய் — வருகிறிலை; (அது உன் தர்த்துக்குப் போராதாகில்)

கூவியும் கொள்ளாய் — என்னை அங்கே அழைத்துக்கொள்ளுகிறிலை; (ஆதலால், நான்)

சீலம் இல்லா சிறியன் ஏலும் — நன்றான சரிதமின்றியே அறிவிலியான க்ஷுத்ரனே யிருந்தேனேயாகிலும்

செய்வினை — (நீ ஜகத்ஸ்ருஷ்டி பண்ணுமோபாதி ஸங்கல்பமாத்ரத்தாலன்றியே) காயிக பர்யந்தமாக அநுஷ்டித்தபாபம்

பெரிதால் — அதிமஹத்தா யிருந்ததிறே.

ஓ என்னும் அசை - வெறுப்பின் மிகுதியைக் காட்டுகிறது. சீலம் - ஶ்லாகியான சரிதம். (க)

ஆறு ;— ஆர்த்தருடைய ஆர்த்தியைப் போக்காதாயல்லை, ஆர்த்தியை அறியாதாயல்லை, ஆர்த்தியைப் போக்கமாட்டாதாயல்லை யென்றென்று காலந்தோறும் நான் இருந்து உன்னைத்தொழுது இரந்தால் கோலமேனி காண வருகிறிலை; உன்பாடே என்னைக் கூவியும் கொள்ளுகிறிலை; இப்படி உன் க்ருபைக்கு விஷயமல்லாதபடி என்னை அகற்றின இந்த மஹாபாபத்துக்கெல்லாம் கீடாதிகளிலும் அதிக்ஷுத்ரனை நான் ஆஶ்ரயமானபடி எங்ஙனேயோ? என்கிறார். (க)

ஈடு ;— அவ ;— இரண்டாம்பாட்டு. பண்டுபண்ணின உபகாரங்களைச்சொல்லி, அப்படி யுபகரித்து உன்சுவட்டை யறிவித்து, இப்போது நான் கூப்பிட முகங்காட்டாதே எழவாங்கி யிருக்கை போருமோ? என்கிறார்,

கொள்ளமாளாவின்பவெள்ளம்கோதிலதந்திடும் * என்
வள்ளலேயோ! வையங்கொண்டவாமனாவோ! வென்றென்று *
நள்ளிராவும்நன்பகலும்நானிருந்தோலமிட்டால் *
கள்ளமாயா! உன்னைஎன்கண்காணவந்தியாயே. (௨)

பத;— அநந்தரம், என்னை அநந்யார்ஹமாக்கி அநுபவிப்பித்த ஔதார்யத்தைச்சொல்லிக் கூப்பிட்டால், என் கண்காண வந்து உன்னை எனக்குத் தருகிறிலை யென்கிறார்

வையம்—(அந்யாபிமாநவிஷயையான) பூமியை
கொண்ட—(அநந்யார்ஹையாம்படி) அளந்துகொண்ட அர்த்தித்வத்தையுடைய
வாமனனேயோ—வாமநனே! (அந்த உபகாரகத்வத்தை என்னை யநுபவிப்பித்து)
கொள்ள—அநுபவிக்க அநுபவிக்க
மாளா—எல்லைகாணவொண்ணாத
இன்பவெள்ளம்—ஆநந்தஸமுத்ரத்தை
கோதுஇல—(அநுபவதசையில் த்ருப்தியாதல், அந்யாகாங்க்ஷையாதலாகிற) கோது இல்லாதபடி
தந்திடும்—ஆந்தரமாக உபகரிக்கும்
என்வள்ளலேயோ — என்னுடைய மஹோதாரனே!
என்றென்று—என்றென்று விஷண்ணனாய்ச்சொல்லி
நள்இராவும்—மத்யராத்த்திலும்
நன்பகலும்—பதார்த்தப்ரகாஶகமான பகலிலும்
நான் — (உன்னை யொழியச் செல்லாமையையுடைய) நான்
இருந்து — (அந்யவ்யாபாரக்ஷமனன்றியே) இருந்து
ஓலமிட்டால்—கூப்பிட்டால்
கள்ளம் மாயா—(கண்ணுக்குத் தோற்றாதே க்ருத்ரிமரைப்போலே) நெஞ்சுக்குள்ளேயிருக்கிற ஆஶ்சர்யபூதனே!
உன்னை—(கண்டல்லது தரிக்கவொண்ணாத) உன்னை
என் கண் காண—(ஆசைப்பட்ட) என் கண்கள் காணும்படி
வந்து ஈயாய் — வந்து தருகிறிலை; தரவேணுமென்றுமாம்
இங்கு, ஓ என்கிறவைகள்—விஷாதத்தைக் காட்டுகின்றன.

ஆறு ;—(கொள்ளமாளா.) இதர விஷய வைராக்ய பூர்வகமாக ஸகலேதர வைத்ருஷ்ண்யாவஹமான த்வத்குணாநுபவஜநித நிரவதிகாநந்த மஹௌகத்தை எனக்குத் தந்தருளின என்னுடைய பரமோதாரனே! உன்னுடைய தாத்ருத்வலக்ஷண ஸ்வரூபத்தை அநந்யதாகரித்துக்கொண்டும் ஆஶ்ரிதருடைய அபேக்ஷிதத்தைச் செய்தருளாநிற்கும் ஆஶ்ரிதவத்ஸலனேயோ! என்று என்று, த்வத்ஸம்ஶ்லேஷத்தாலே போக்கக்கடவ அழகிய காலமெல்லாம் நான் இருந்து ஓலமிட்டால் என்கண்களுக்கு உன்னைக் காட்டாதொழிகிறவனே! ஈண்டென வந்து என் கண்களுக்கு உன்னைக் காட்டித் தந்தருளாய் என்கிறார். (௨)

ஈடு ;—அவ ;—மூன்றாம்பாட்டு. எனக்கு உன்னைக் காட்டாதொழிந்தால், 'நீ என்னைக் காண்கைக்கு யாசயம் பண்ணிற்றில்லை

என்றாகிலும் என்கண்முகப்பே வந்து ஒன்று சொல்லுகிறிலை என்கிறார்.

ஈவிலாத தீவினைகளெத்தனைசெய்தனன்கொல் *
தாவிவையங்கொண்டவெந்தாய்! தாமோதராவென்றென்று *
கூவிக்கூவி நெஞ்சுருகிக் கண்பனிசோர நின்றால் *
பாவிநீயென்றொன்றுசொல்லாய் பாவியேன்காணவந்தே. (௩)

ப ;—அநந்தரம், அநந்யார்ஹவிஷயத்தில் அத்யந்தபவ்யனான உன்னை அழைத்துக் கூப்பிட்டால், 'பாபத்தைப் பண்ணின நீ கூப்பிடுகிறதென்?' என்று என்முன்னே வந்து ஒருவார்த்தை சொல்லுகிறிலை என்கிறார்.

(௧) "[illegible]-யத் ப்ரஹ்ம கல்பநியுதாநுபவேப்யநாஶ்யம்" என்று அநந்தகல்பம் அநுபவியாநின்றாலும்),
ஈவு இலாத—விநாசமின்றியே
தீவினைகள்—(பரிதாப ஹேதுவாம்படி) க்ரூரமான பாபங்களை
எத்தனை — அஸங்க்யாதமாம்படி எத்தனை
செய்தனன்கொல் — அநுஷ்டித்தேனோ? (அது என்னென்னில்)
தாவி—(திருவடிகளாலே) அளந்து
வையம் கொண்ட—ஜகத்தை அநந்யார்ஹமாக்கிக்கொண்ட
எந்தாய்—என்னுடைய ஸ்வாமியே!
தாமோதரா — "அநந்யார்ஹர்க்கு அத்யந்தபவ்யன்" என்றுதோன்றும்படி யசோதைகட்டின தாம்பின் தழும்பை உதரத்திலேயுடையவனே!
என்று என்று—என்றென்று
கூவிக்கூவி — இடைவிடாதே பலகாலும் அழைத்து
நெஞ்சு உருகி—நெஞ்சு நீராயுருகி
கண் பனி சோர—அது கண்ணீராய்ச் சோரும்படி
நின்றால்—(ஆர்த்தியோடே) முழுக்க நின்றால்
பாவியேன் — (உன்னைக் காணப்பெறாத)பாபத்தையுடையநான்
காண—காணும்படி
வந்து—முன்னேவந்து
நீ — நீ
பாவி—'பாபிகாண்'
என்று—என்று
ஒன்றுசொல்லாய் — ஒருவார்த்தை சொல்லுகிறிலை
காணவந்து சொல்லப்பெறில் அதுவும் அமையுமென்று கருத்து.
ஈவு—வ்யயம் (௩)

ஆறு ;—(ஈவிலாத.) மநுஷ்யாதிரூபேண அபர்யந்த திவ்யாவதாரங்களைப்பண்ணி ஆஶ்ரிதபரித்ராணம் பண்ணுமவனே! என்றென்று கூவிக்கூவி நெஞ்சுருகிக் கண்பனிசோர நின்றால், உன்னைக் காண்கைக்கு பாக்யம் பண்ணிற்றிலேனாகில், நான் நிராஶனாயிருக்

(௧) வைகுண்டஸ்தவ ௬௬.

கும்படியாக, என்கண்ணெதிரே வந்து, ‘நீ என்னைக் காண்கைக்கு பாக்யம் பண்ணிற்றில்லை காணென்று சொல்லாய் பிரானே!’’ என்று சொல்லி, பின்னையும் எம்பெருமான் ஒன்றுஞ் சொல்லாமையாலே ‘இப்படி எம்பெருமான் என்னை உபேக்ஷிக்கைக்கு ஓரொன்றே காலதத்த்வமெல்லாம் அநுபவித்தாலும் மாளாத பாபங்கள் எத்தனையாயிரம் செய்தேனோ?’ என்கிறார். (௩)

ஈடு ;—அவ ;—நாலாம்பாட்டு. தாம் காணும்படியாக வரவேணுமென்கிறார்; அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகள் அநுபவிக்கும் வடிவை, ப்ரஹ்மேந்த்ராதிகளும் காணமாட்டாதத்தை ‘நான் காணவேணும்’ என்று ஆசைப்படுகிற இத்தால் என்ன ப்ரயோஜநமுண்டு? இதுக்கு அடி-என்னுடைய லஜ்ஜா ஸூந்யதையும் அளவில்லாமையுமிறே என்கிறார்.

காணவந்தென்கண்முகப்பே தாமரைக்கண்பிறழ *
ஆணிச்செம்பொன்மேனியெந்தாய்! நின்றருளாயென்றென்று *
நாணமில்லாச்சிறுதகையேன் நானிங்கலற்றுவதென் *
பேணிவானோர்காணமாட்டாப் பீடுடையப்பனையே. (௪)

ப; அநந்தரம், ப்ரஹ்மாதி தேவதைகளும் காணமாட்டாத பெரியவனை, ஸ்ப்ருஹணீயமான வடிவழகோடே என்முன்னே வந்து நிற்கவேணுமென்று நிர்லஜ்ஜனாய்க் கூப்பிடுகிற இதற்கு என்ன ப்ரயோஜநமுண்டு? என்கிறார்.

வானோர் — ப்ரஹ்மாதிகளான தேவர்கள்
பேணி — தங்கள் ஜ்ஞாநப்ரேமாநுரூபமாக ஆதரித்து
காணமாட்டா — தாங்கள் காண்கைக்கும் ஸக்தரன்றியேயொழியும்படி
பீடுடை — பெருமையையுடையனை
அப்பனை — ஸ்வாமியை
ஆணிச்செம்பொன் — ஓட்டற்ற ஆணிச்செம்பொன்போலே ஸ்ப்ருஹணீயமான
மேனி — வடிவையுடைய
எந்தாய் — என்நாயனே!
தாமரை — (நிரதிஸயபோக்யமான) தாமரைபோன்ற
கண் — கண்ணானவை
பிறழ — விளங்கும்படி (என்னைப்பார்த்துக்கொண்டு)
காண — (ஆரம்பமே தொடங்கி நான்) காணும்படியாக
வந்து — வந்து
என்கண்முகப்பே — என்கண்முகப்பே
நின்றருளாய் — நின்றருளவேணும்

என்று என்று — என்று பலகாலும் சொல்லி
நாணம் இல்லா — நிர்லஜ்ஜனாய்க்கொண்டு
சிறுதகையேன் — க்ஷுத்ரஸ்வபாவனை
நான் — நான்
இங்கு — பகவத்விஷயத்தை யகற்றும் தேசத்திலே யிருந்து
அலற்றுவது — அலற்றுவதற்கு
என் — என்னப்ரயோஜநமுண்டு?
பிறழ்தல் — விளங்குதல். (௪)

ஆறு ;—(காணவந்து.) ப்ரஹ்மாதிகளுங்கூட ஆசைப்பட்டுக் காணமாட்டாதிருக்கிற படியையுடையப்பனே, ஆணிசெம்பொன் மேனி யெந்தாய்! காணவந்து என்கண்முகப்பே தாமரைக்கண் திகழ நின்றருளா யென்றென்று, அதிக்ஷுத்ரனான நான் இங்கேகிடந்து அலற்றுகிறதென்? என்ன நிர்லஜ்ஜனோ? என்கிறார். (௪)

ஈடு ;— அவ :— அஞ்சாம்பாட்டு. ப்ரஹ்மாதிகளுக்கும் காண முடியாதிருக்கிற உன்னுடைய வடிவழகைக் காணவேணும் என்று ஆசைப்படாநின்றேன். என்சாபலம் இருந்தபடியென் என்கிறார்.

அப்பனே! அடலாழியானே! ஆழ்கடலைக்கடைந்த
துப்பனே *உன்தோள்கள்நான்கும்கண்டிடக்கூடுங்கொலென்று*
எப்பொழுதும்கண்ணநீர்கொண்டாவிதுவர்ந்துதுவர்ந்து *
இப்பொழுதேவந்திடாயென்றேழையேன்நோக்குவனே. (௫)

ப;— அநந்தரம், தேவர்களுக்கும் துர்லபனாயிருக்கச்செய்தேயும் ஆஸ்ரிதரானவர்களுக்கு அருந்தொழில் செய்தும் அபேக்ஷிதங் கொடுத்தவனென்று நினைத்து, காண்கைக்கு மிகவும் த்வரியாநின்றேன் என்கிறார்.

அப்பனே — (ஆஸ்ரிதவிஷயத்தில் ஸத்தையே தொடங்கி) உபகரிக்கும் ஸ்வபாவனே!
அடல் ஆழியானே — அவர்களுக்கு விரோதியை நிரஸிக்கும் ஸ்வபாவத்தையுடைய திருவாழியையுடையவனே
ஆழ்கடலை — அகாதமான கடலை
கடைந்த — கடைந்து அவர்களுக்கு அபேக்ஷிதங்கொடுக்கும்
துப்பனே — பெருமிடுக்கனே! (அக்காலத்திலவர்களுக்கு அநுபாவ்யமான)
உன்தோள்கள் நான்கும் — உன்தோள்கள் நாலையும்
கண்டிட கூடுங்கொல் — கண்டதாய் விடக்கூடுமோ?
என்று — என்றுநினைத்து
எப்பொழுதும் — ஸர்வகாலமும்
கண்ணநீர்கொண்டு — கண்ணும் கண்ணீருமாய்

ஆவி—ப்ராணனானது
துவர்ந்து துவர்ந்து — உலர்த்தி மேலு லர்த்தியாக ஶோஷித்து
இப்பொழுதே—ஸத்தை யழிவதற்கு முன்னே இக்ஷணத்திலே
வந்திடாய்—வரவேணும்
என்று—என்று த்வரித்து அபேக்ஷித்து

ஏழையேன்—சபலனான நான்
நோக்குவன்—' இவ்வவஸ்தையில் வரக்கூடும்' என்று நினைத்து ஸம்பாவனையுள்ள ப்ரதேசத் தைப்) பாராநின்றேன்
துவர்ச்சி—உலர்ச்சி.

ஆறு ;—(அப்பனே.) இப்படி ப்ரஹ்மாதிகளுக்குங்கூட துர்த் தர்ஶனாயிருக்கச் செய்தே உன்னையே 'அப்பனே! ஆஶ்ரிதவிரோதி நிரஸநஸமர்த்தமான திருவாழியையுடையவனே! ஆஶ்ரிதஸம்ஹித நிர்வர்த்தநஶீலனே! உன் தோள்கள் நான்கும் கண்டிடக் கூடுங் கொல்?' என்று எப்பொழுதும் கண்ணநீர்கொண்டு ஆவிதுவர்ந்து துவர்ந்து, இப்பொழுதே வந்திடாயென்று அபேக்ஷித்து உன்வரவு பார்த்திருப்பன் ; என்ன சபலனோ? என்கிறார். (௫)

ஈடு ;—அவ ;—ஆறாம்பாட்டு. 'என்பக்கலிலே ஸதாஸந்நிஹித னாயிருந்தே உன்னைக் காட்டாதொழிகிறது நினையாமை' என்று அறிந்துவைத்தே, காண ஆசைப்படாநின்றேன் ; அதுக்கு அடி என் அறிவுகேடு என்கிறார்.

நோக்கிநோக்கிஉன்னைக்காண்பான் யானெனதாவியுள்ளே *
நாக்குநீள்வன்ஞானமில்லை நாடோறுமென்னுடைய *
ஆக்கையுள்ளுமாவியுள்ளு மல்லபுறத்தினுள்ளும் *
நீக்கமின்றிஎங்கும்நின்றாய் நின்னையறிந்தறிந்தே. (௬)

ப ;—அநந்தரம், என்பக்கலிலே ஸர்வதா ஸந்நிஹிதனாய்க்கொண்டு என் னுள்ளே நிற்கும்படி அறிந்திருக்க, 'கண்ணாலே காணவேணும்' என்று ஆசைப்படுகிறது என் அறிவுகேடிறே என்கிறார்

நாடோறும்—ஒருநாள் ஒழியாமல்
என்னுடைய—என்னுடைய
ஆக்கையுள்ளும்—ஶரீரத்துக்குள்ளான ஹ்ருதயத்திலும்
ஆவியுள்ளும் — (அதுக்கபிமானியான) ஆத்மஸ்வரூபத்தினுள்ளும்
அல்ல — (அதுக்குக் காரணங்களாய்) இவையிரண்டுமன்றியே

புறத்தினுள்ளும் — (ஸ்வரூப பஹிர்ப் பூதமான) இந்த்ரியாதி களி லும்
நீக்கம் இன்றி — ஒன்றையும்விடாதே
எங்கும்—எல்லா ஸ்தலத்திலும்
நின்றாய் — (அந்தராத்மாவாய்) நின்ற வனே! (இப்படி ஸதாஸந்நி ஹிதனாக)

நின்னை—உன்னை
அறிந்து அறிந்து—எப்போதும் அறிந்துவைத்து
உன்னை — (போக்யமான வடிவையுடைய) உன்னை
காண்பான் — கண்ணாலே காண்கைக்காக
நோக்கி நோக்கி — பலகாலும் பார்த்து
யான்—(சபலனான) நான்
எனது—என்னுடைய
ஆவியுள்ளே—நெஞ்சுக்குள்ளே
நாக்கு நீள்வன் — ஆசைப்படாநின்றேன்;
ஞானம்—('அந்தராத்மாவானவன் அதீந்த்ரியன்' என்கிற) அறிவு
இல்லை—இல்லாமையாலே.
நாக்கு நீளுகையாவது — ஆசைப்பாட்டுக்கு ஸூசகம். (௬)

ஆறு;—(நோக்கி.) என்னுடைய ஆக்கையுள்ளும் ஆவியுள்ளும் அல்லபுறத்தினுள்ளும் நீக்கமின்றி எங்கும் ஸந்நிஹிதனாய் நின்று வைத்து உன்னை எனக்குக் காட்டாதொழிகிறது உன்னைக்காட்ட நினையாமை யென்னுமிடம் அறிந்துவைத்து, பின்னையும் நோக்கி நோக்கி உன்னைக் காண்பான் நான் என்னுள்ளே ஆசைப்படாநிற்பன்; என்ன அஜ்ஞனோ? என்கிறார். (௬)

௭;—அவ;—ஏழாம்பாட்டு. 'நீர் நம்மைப்போர இன்னாதாகாநின்றீர்; உமக்கு ஒன்றும் உதவிற்றிலோமோ? நாம் ஒன்றும் உபகரித்திலோமென்றேயோ நீர் நினைத்திருக்கிறது?' என்ன, 'சிறிது செய்தமை உண்டு; இவ்வம்சம் பெற்றேன்; எனக்கு இத்தால் போராது' என்கிறார்.

அறிந்தறிந்துதேறித்தேறி யானெனதாவியுள்ளே *
நிறைந்தஞானமூர்த்தியாயை நின்மலமாகவைத்து *
பிறந்தும்செத்தும் நின்றிடறும்பேதைமைதீர்ந்தொழிந்தேன் *
நறுந்துழாயின்கண்ணியம்மா! நானுன்னைக்கண்டுகொண்டே. ()

ப;—அநந்தரம், என் நெஞ்சுக்குள்ளே நிற்கச்செய்தே ப்ரகாசிப்பித்த உன் வடிவழகை அநுஸந்தித்து ஸாம்ஸாரிகமான அறிவுகேடு தீர்ந்தேனித்தனை; அந்த போக்யமான வடிவைக் கண்ணாலே காணவேணுமென்றன்றோ இப்போது ஆசைப்படுகிறது என்கிறார்.

நறு—பரிமளப்ரசுரமான
துழாய் — திருத்துழாயையுடைத்தான
கண்ணி—திருமாலையையுடைய
அம்மா—ஸர்வாதிகனே
நான் — (உன் போக்யதையிலே சபலனான) நான்
உன்னை—(நிரதிசயபோக்யனாய்ப்ராப்தனான) உன்னை

கண்டுகொண்டு — (நீ ப்ரகாசிப்பிக்க என் நெஞ்சாலே அபரோக்ஷித்துக்) கண்டுகொண்டு
அறிந்து அறிந்து—இப்படி தந்த மயர்வற மதிநலத்தாலே உன்னுடைய ப்ராப்யபாவத்தையும் ப்ராபகபாவத்தையும் அறிந்தறிந்து
தேறித்தேறி—(தத்த் விஷயமான வ்யவஸாய பர்யந்தமான) தெளிவுகளை யுடையேனாய்
யான்—(இப்படி லப்தஜ்ஞாநவ்யவஸாயனான) நான்
எனது ஆவியுள்ளே — என் ப்ராணாச்ரயமான நெஞ்சுக்குள்ளே
நிறைந்த ஞாநமூர்த்தியாயை — பரிபூர்ணஜ்ஞாநஸ்வரூபனான உன்னை
நின்மலமாக — ஸம்சயவிபர்யயமாகிற மலம் அறும்படி
வைத்து—(ப்ரதிஷ்டிதமாக) வைத்து
பிறந்தும் செத்தும் — பிறப்பது சாவதாய்
நின்று—நின்று
இடறும்—அலமருகிற
பேதைமை—அறிவுகேடு
தீர்ந்தொழிந்தேன் — தீர்ந்துவிட்டேனித்தனை
மார்வும் மாலையுமான வடிவழகைக் கண்ணிட்டுக்காணப்பெற்றிலே னென்று வாக்யஶேஷம்.)

ஆறு ;—(அறிந்தறிந்து) ஜந்மஜராமரணாதி ஸாம்ஸாரிகதுக்கம் அநுபவிக்கிற தென்னும் பயத்தாலே கூப்பிடுகிறீரோ ? என்தான் இப்படி ஆர்த்தராய்க்கிடந்து நீர் கூப்பிடுகிறது ? என்னில், —ஜ்ஞாந ஶக்தி பலைஶ்வர்யாதி குணங்களாலும் ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்யாதி கல்யாண குணங்களாலும் பரிபூர்ணனான உன் திறத்திலுள்ள விஶத விஶததர விஶததம ப்ரத்யக்ஷதாபந்ந நிரதிஶய பக்திரூப ஜ்ஞாநத்தாலே, என்னுடைய அந்த ஸாம்ஸாரிகதுக்கமெல்லாம் நிரஸ்தமாயிற்றிறே ; அதுக்கன்று நான் இப்போது படுகிறது என்கிறார். (௭)

ஈடு ;—அ ;—எட்டாம்பாட்டு. பெற்ற அம்ஶம் சொன்னாய், பெறாத அம்ஶம் இதுவென்கிறார் இதில்

கண்டுகொண்டென்கைகளார நின்திருப்பாதங்கள்மேல் *
எண்டிசையுமுள்ளபூக்கொண்டேத்தியுகந்துகந்து *
தொண்டரோங்கள்பாடியாடச் சூழ்கடல்ஞாலத்துள்ளே *
வண்டுழாயின்கண்ணிவேந்தே ! வந்திடகில்லாயே. (அ)

ப ;—அநந்தரம், உத்தமான போக்யதையில் அபிநிவேசத்தாலே கண்டு அநுபவித்து அடிமைசெய்ய ஆசைப்படுகிறார்.

கண்டுகொண்டு—("நானுன்னைக் கண்டுகொண்டு" என்கிற நெஞ்சிற் காட்சி யளவன்றியே கண்ணாலே)பரிபூர்ணமாகக் கண்டு அநுபவித்து
என்கைகள் — ("தாயவனே யென்று தடவும்") என்கைகள்
ஆர—பூர்ணமநோரதமாம்படி
நின்—(ப்ராப்தனான) உன்னுடைய
திருப்பாதங்கள் மேல்—திருவடிகளின் மேலே, (ஆதராநுரூபமாக)
எண்திசையும்—ஸகல திக்குக்களிலும்
உள்ள—உண்டான
பூக்கொண்டு — புஷ்பங்களை ஸம்பாதித்து
ஏத்தி—ஸ்தோத்ரபூர்வகமாகப் பரிமாறி
உகந்து உகந்து—தத்தத்ப்ரவ்ருத்திகள் தோறும் ப்ரீதிபரவஶராய்
தொண்டரோங்கள்—(உன்பக்கலிலே) அத்யந்தாபிநிவேஶரூப பக்தியையுடைய நாங்கள்
பாடியாட — (ப்ரீதிக்குப்போக்குவீடாகப்) பாடவுமாடவுமாம்படி
கடல்சூழ் ஞாலத்துள்ளே — கடல்சூழ்ந்த பூமியான ஸம்ஸாரத்துக்குள்ளே, (முன்பு எனக்கு நெஞ்சில் ப்ரகாசிப்பித்த)
வண்—விலக்ஷணமான
துழாய்க்கண்ணி—திருத்துழாய் மாலையையுடைய
வேந்தே—நாயகனே
வந்திடகில்லாய்—வந்திடுகிறிலை (௮)

ஆறு ;—(கண்டுகொண்டு) உம்முடைய ஸாம்ஸாரிக துஃகமெல்லாம் போயிற்றாகில், மற்று எதுக்காகக் கூப்பிடுகிறது? என்னில்;—உன்னை என்கண்களாலே கண்டுகொண்டு என் கைகளார நின் திருப்பாதங்கள்மேல் எண் திசையுமுள்ள பூக்கொண்டு ஏத்தி உகந்துகந்து ஸ்ரீவைஷ்ணவர்களோடே கூடநின்று பாடியாடவேணுமென்று ஆசைப்பட்டிறே கூப்பிடுகிறது; வண்துழாயின் கண்ணிவேந்தே! நான் இப்படி படாநிற்கச்செய்தே வந்தருளுகிறிலை என்று எம்பெருமானை இன்னாதாகிறார். (௮)

ஈடு ;— அவ ;— ஒன்பதாம்பாட்டு. எம்பெருமானைக் காண்கைக்கு ஈடான கர்மயோகாத் யுபாயங்களொன்றுமின்றிக்கே யிருக்கிற நான் 'காணவேணும்' என்று ஆசைப்பட்டால், காண்கைக்கு உபாயமுண்டோ? என்கிறார்.

இடகிலேனொன்றட்டகில்லேனைம்புலன்வெல்லகில்லேன் *
கடவனாகிக்காலந்தோறும் பூப்பறித்தேத்தகில்லேன் *
மடவன்னெஞ்சங்காதல்கூர வல்வினையேனயர்ப்பாய் *
தடவுகின்றேனெங்குக்காண்பன் சக்கரத்தண்ணலையே. (௯)

ப;—அநந்தரம், அநுபாவ்யமான திருவாழியையுடைய என் நாயகனை அகிஞ்சநனாய்வைத்து ஆசைப்பட்ட நான் எங்கே காண்பேன்? என்கிறார்.

ஒன்று இடகிலேன் ஒன்று அட்டகில்லேன் — பசியும் தாஹமுமுடையார்க்கு ஒருபிடி சோற்றை யிடுதல் ஒருமிடறு தண்ணீர்வார்த்தல்செய்ய மாட்டுகிறிலேன்; (இப்படி தாநரூபமான கர்மயோகமில்லாமையாலே, ஜ்ஞாநயோகத்துக்கு உறுப்பாக) ஐம்புலன்—இந்த்ரியங்களைந்தையும் வெல்லகில்லேன் — (விஷயங்களிற் போகாமல்) நியமிக்க மாட்டுகிறிலேன்; கடவனாகி — (அதடியான பக்தியோக சரீரத்தில் அந்வயிக்கும்படி) நியதனாய்க்கொண்டு காலந்தோறும்—(ஆராதநாநுரூபமான) காலந்தோறும் பூப்பறித்து — புஷ்பங்களை ஸம்பாதித்து வத்தகில்லேன்—ஆராதித்து ஸ்துதிக்க மாட்டுகிறிலேன்; (இப்படி அகிஞ்சநனாயிருக்கச் செய்தே) மடம் — (பற்றினவிஷயத்திலே) ப்ரவணமாய் வல் — ஒருவராலும் விடுவிக்கவொண்ணாத சிக்கனவை யுடைத்தான நெஞ்சம்—நெஞ்சானது காதல்கூர—அபிநிவேசம் விஞ்சிவர வல்வினையேன்—(தததநுரூபமான அநுபவத்தைப் பண்ணப் பெறாத) ப்ரபல பாபத்தையுடைய நான் அயர்ப்பாய் — அறிவுகேட்டை யுடையனாய்க்கொண்டு சக்கரம் — போக்யமான திருவாழியையுடைய அண்ணலை—நாதனை தடவுகின்றேன்—('காணலாம்'என்று) தேடாநின்றேன்; எங்குக் காண்பன் — எங்கே காணக்கடவேன். (க)

ஆறு;—(இடகிலேன்.) எம்பெருமானைக் காண்கைக்கு உபாயத்வேந பரிக்லுப்தமான கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோகங்களொன்றும் எனக்கு இன்றியே யிருக்கச்செய்தே, பகவத் குணங்களிலே விழும் ஸ்வபாவமாய் விழுந்தால் எம்பெருமான் தன்னாலும் எடுக்கவொண்ணாத வன்மையை யுடைத்தாயிருந்த என் நெஞ்சம் காதல்கூர, அதினாலே அறிவழிந்து தடவாநின்றேன்; எங்ஙனே காணும்படி? என்கிறார். (க)

ஈடு;—அவ;—பத்தாம் பாட்டு. காணப்பெறுவிட்டால் மறந்து பிழைக்கவொண்ணாதபடி எனக்குத் தக்கதொரு ஜ்ஞாநத்ருஷ்டி எங்ஙனேயுண்டாயிற்று? என்கிறார்.

சக்கரத்தண்ணலேயென்று தாழ்ந்துகண்ணீர்ததும்ப *
பக்கம்நோக்கிநின்றலந்தேன் பாவியேன்காண்கின்றிலேன் *
மிக்கஞானமூர்த்தியாய வேதவிளக்கினை * என்
தக்கஞானக்கண்களாலே கண்டுதழுவுவனே. (கo)

ப ;—அநந்தரம், வேதவேத்யனானவனைக் கையும் திருவாழியுமாகக் காண ஆசைப்பட்டுக் கிடையாதொழிந்தால், மறந்து பிழைக்கவொண்ணாதபடி மாந ஸஜ்ஞாநத்துக்கு விஷயமாய் ப்ரகாசிக்கவேணுமோ ? என்கிறார்.

சக்கரம்—கையும் திருவாழியுமான வடிவைக்காட்டி
அண்ணலே—அடிமைகொண்ட ஸ்வாமியே !
என்று—என்று சொல்லி
தாழ்ந்து—(அவனை யநுபவிக்கப் பெறாமையாலே) தரைப்பட்டு விழுந்து
கண்ணீர்ததும்ப—கண்கள்நீர் மிகைக்கும்படி
பக்கம்நோக்கி—சுற்றும் பார்த்து
நின்று—நின்று
அலந்தேன்—க்லேஶித்தேன் ;
பாவியேன்—(காண்கைக்கு ப்ரதிபந்தகமான) பாபத்தைப்பண்ணின நான்
காண்கின்றிலேன்—காணப்பெறுகிறிலேன் : (இவ்வளவில் மறந்துவிட வொண்ணாதபடி)
மிக்கஞானமூர்த்தியாய—அபரிச்சிந்ந ஜ்ஞாநஸ்வரூபனான
வேதம் விளக்கினை—வேதமாகிய தீபத்தாலே காணப்படுமவனை
என்—(கண்ணிட்டுக்காண ஆசைப்பட்டு க்லேஶிக்கிற) எனக்கு
தக்க—தகுதியான
ஞானம்—ஜ்ஞாநமாகிற
கண்களாலே—கண்ணாலே
கண்டு—கண்டு
தழுவுவன்—ஸம்ஶ்லேஷியாநிற்பன்.

காணப்பெறாமையாலே ப்ரேமம் து:கஹேதுவான வோபாதி ஆந்தரப்ரகாசத்தாலே ஜ்ஞாநமும் து:கஹேதுவாயிற்றென்று கருத்து. (கய)

ஆறு ;—(சக்கரத்தண்ணல்.) சக்கரத்தண்ணலே யென்று தாழ்ந்து கண்ணீர்ததும்பப் பக்கம் நோக்கிநின்று சாலத் தளர்ந்தேன் ; பாவியேன் காணப்பெறுகிறிலேன் ; ஸர்வஜ்ஞனாய் ஸகல வேதவேத்யனா யிருந்த எம்பெருமானை, எனக்குத் தக்க சில ஞானக்கண்களாலேகண்டு தழுவுவன்; நான் எங்ஙனே தரிக்கும்படி? என்கிறார். (கய)

ஈடு ;—அவ ;—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் எம்பெருமானோடே நித்யஸம்ஶ்லேஷம் பண்ணலாந் திருநாட்டிலே செல்லப்பெறுவர் என்கிறார்.

தழுவிநின்றகாதல்தன்னால் தாமரைக்கண்ணன்தன்னை *
குழுவுமாடத்தென்குருகூர்மாறன் சடகோபன் * சொல்
வழுவிலாதவொண்டமிழ்களாயிரத் துளிப்பத்தும் *
தழுவப்பாடியாடவல்லார் வைகுந்தமேறுவரே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழியை அநுஸந்தித்து ப்ரேமபாரவஶ்யரானவர்கள் பரமபதத்திலே யேறப்பெறுவர்க ளென்று பலத்தை அருளிச்செய்கிறார்.

தழுவி—ஸ்வரூபத்தோடு அவிநாபூதமாய்
நின்ற—ஸ்திரமான
காதல்தன்னால்—பகவதநுபவாபிநிவேஶத்தாலே
தாமரைக்கண்ணன் தன்னை—அவ்வபிநிவேஶத்துக்கு நிதாநமாய் நிரதிஶயபோக்யமான தாமரைபோன்ற திருக்கண்களை யுடையவனைப்பற்ற
குழுவும்—திரண்ட
மாடம்—மாடங்களை யுடைத்தான
தென்குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான
மாறன்—குடிப்பிறப்பையுடைய
சடகோபன்—ஆழ்வாருடையதாய்
வழுஇலாத—(பகவத்குணங்களி லொன்றும்) வழுவாதபடியான
ஒண் தமிழ்கள்—போதகத்வவைலக்ஷண்யத்தை யுடைத்தாய் ஸர்வாதிகாரமான த்ராமிடரூபமான
ஆயிரத்துள்—ஆயிரந்திருவாய்மொழியில்
இப்பத்தும்—இப்பத்தையும்
தழுவ—(பாவவ்ருத்தியோடு) நெஞ்சு பொருந்தும்படி
பாடி—பாடி
ஆட—(ப்ரேமபாரவஶ்யத்தாலே) விக்ருதராய் ஆட
வல்லார்—வல்லவர்கள்
வைகுந்தம் ஏறுவர்—(அஸங்குசிதாநுபவஸ்தலமான) பரமபதத்திலே ஏறப்பெறுவர்கள்
இது—அறுசீராசிரிய விருத்தம். (௧௧)

ஆறு ;—(தழுவிநின்ற.) 'முடிவேன்' என்றாலும் முடியவொட்டாதிருந்த காதலாலே சொன்ன இத்திருவாய்மொழியை இப்பாவயுக்தமாகப் பாடி ஆடவல்லார் வைகுந்த மேறுவர் என்கிறார். (௧௧)

நாலாம்பத்து ஏழாந்திருவாய்மொழி வ்யாக்யாநங்கள்

முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

எட்டாந்திருவாய்மொழி—ஏறாளும் : ப்ரவேசம்.

ஆறு ;—(ஏறாளும்) இப்படி எம்பெருமானை விஸ்லேஷித்து அத்யந்தம் அவஸந்நராய்க் கிடந்து தாம் கூப்பிடாநிற்கச் செய்தேயும் அவன் எழுந்தருளாமையாலே தம்மை உபேக்ஷித்தானாக நிஸ்சயித்து, 'இனி அவனால் உபேக்ஷிதமான ஆத்மாத்மீயங்களால் ஒரு ப்ரயோஜநமில்லை; இவை முடிந்துபோக அமையும்' என்றுகொண்டு அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார். *

ப ;—எட்டாந்திருவாய்மொழியில், கீழ் இவர் ஆசைப்பட்டுக் கூப்பிட்ட படியிலே வந்து முகங்காட்டக் காணாமையாலே அவன் அநாதரித்தானாக நினைத்து. ஆஸ்ரிதாநாஸ்ரிதவிஷயங்களில் அதிகம்யத்வ அப்ரத்ருஷ்யத்வத்தாலுண்டான உபாயபாவத்தையும், கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்தால் வந்த உபேயத்வ பூர்த்தியையும், உபாயகார்யமான அநுகூலஸத்ருநிரஸநத்தையும், அபிமதவிரோதி மர்தநத்தையும், அஸஹ்யவிரோதி நிரஸநத்தையும், அர்த்தோபதேசத்தாலும் அநந்யார்ஹமாக்கும் அறிவுடைமையையும், உத்துங்கவிரோதி விதாரணத்தையும், விரோதிஸத விநாஸகத்வத்தையும், விரோதிஸரீர விஹஸ்ததாகரணத்தையும், அஸேஷவிரோதி கண்டநத்தையும் அநுஸந்தித்து, 'இப்படி ஆஸ்ரிதோபகாரகன் அநாதரித்த ஆத்மாத்மீயங்களாலே எனக்கு ஒருகார்யமில்லை' என்று தமக்குப் பிறந்த அநாதரவிஸேஷத்தை, நாயகனான ஈஸ்வரன் ஆதரியாத ஆத்மாத்மீயங்களை அநாதரிக்கிற நாயகிவார்த்தையாலே அருளிச்செய்கிறார். *

ஈடு ;—அவ ;—கீழில் திருவாய்மொழியிலே - கேட்டாரடைய நீராம்படி கூப்பிட்டார்; 'இப்படி கூப்பிடச்செய்தேயும் ஸர்வேஸ்வரன் நமக்கு முகம் தாராதிருந்தது நம்பக்கல் உபேக்ஷையாலேயாக அடுக்கும்' என்று பார்த்து, 'ப்ராப்தனுமாய் ஸுஸீலனுமாய் விரோதிநிரஸந ஸீலனுமாயிருக்கிறவன் 'இதுவேண்டா' என்றிருக்குமாகில் எனக்கோதான் இது வேண்டுவது' என்று விடப்பார்த்து, 'அவனுக்கு வேண்டாத நானும் என் உடைமையும் வேண்டா எனக்கு' என்று ஆத்மாத்மீயங்களில் நசையற்றபடியை அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார்.

அவன் விரும்பின வழியாலேகாணும் ஆத்மவஸ்துவைவிரும்ப ப்ராப்தியுள்ளது; இங்ஙன் விரும்பாதவன்று பழைய தேஹாத்மாபிமாநத்தோபாதியாமிறே; (க) [न देहं - நதேஹம்] இத்தனை சாந்துநாற்றத்துக்காக நிலைநின்ற அத்ருஷ்டத்தையுங்கூட அழியமாறும்படியிறே தேஹத்தில் பண்ணியிருக்கும் அபிமாநம்; அப்படிப்பட்ட தேஹம் வேண்டா. [न प्राणान् - நப்ராணாந்] தேஹந்தன்னை யாதரிக்கிறது ப்ராணனுக்காக; அப்ப்ராணன்களும் வேண்டா. [न च सुखं - நசஸுகம்] - ப்ராணன்களை விரும்புகிறது ஸுகத்துக்காக; அந்த ஸுகமும் வேண்டா. இதுக்கு உறுப்பாகவு மல்லாதவையும் எனக்கு வேண்டா. இவையெல்லாம் புருஷார்த்தமாவது - ஆத்மாவுக்கிறே; அவ்வாத்மா தானும் வேண்டா. இங்ஙன் பிரித்துச் சொல்லுகிறதென்? உன் திருவடிகளில் ஶேஷத்வ ஸாம்ராஜ்யத்துக்குப் புறம்பானவையானவை சில, அவை யொன்றும் எனக்கு வேண்டா. [नाथ - நாத] - உடையவனுக்குப் புறம்பாயிருக்குமவற்றை விரும்ப ப்ராப்தியுண்டோ? அங்ஙனேயாமாகில் க்ரமத்தாலே கழித்துத் தருகிறோம் என்ன, 'ஒரு க்ஷணமும் பொறுக்கமாட்டேன். இவை தன்னைத் தவிர்த்துக் கடக்கவைக்கவொண்ணாது, நசித்துப்போம்படி பண்ணவேணும். இது கண்டாதூர்த்வமான வார்த்தையன்றே?' என்ன, [तत्सत्यं - தத்ஸத்யம] - மெய். [मधुमथन - மதுமதந] - இங்ஙனன்றாகில் தேவர்முன்பு பொய்யரானார் பட்டது படுகிறேன்.

(க)[न हि मे जीवितेनार्थो नैवार्थैर्न च भूषणैः । वसन्त्या राक्षसीमध्ये विना रामं महारथम् - நஹி மேஜீவிதேநார்த்தோ நைவார்த்தைர்நசபூஷணை: | வஸந்த்யாராக்ஷஸீமத்யே விநா ராமம்மஹாரதம்] - ப்ராணாதிகளால் கார்யமின்றிக்கே யொழிகிறதென்? என்னில்;—இருக்கிறது ராக்ஷஸிகள் நடுவே; பிரிகிறது பெருமாளை; இவற்றால் என்ன ப்ரயோஜநமுண்டு? *

ஈடு;—அவ;—முதற்பாட்டு. அத்யந்தகுணவானுமாய் விரோதிநிரஸந ஸமர்த்தனுமாயிருக்கிற எம்பெருமான் விரும்பாத ஶ்லாக்யமான நிறங்கொண்டு எனக்கு ஒரு கார்யமில்லை என்கிறாள்.

(க) ஸ்தோத்ரரத்ந. (உ) ரா ஸு-உசு-ரு.

ஏறாளுமிறையோனும் திசைமுகனும் திருமகளும் *
கூறாளுந்தனியுடம்பன் குலங்குலமாவசுரர்களை *
நீறாகும்படியாக நிருமித்துப்படைதொட்ட *
மாறாளன்கவராத மணிமாமைகுறைவிலமே. (௧)

ப;—முதற்பாட்டில், ஆஶ்ரிதர்க்கு அபாஶ்ரயமான ஶீலவத்தையையும், அநாஶ்ரிதர்க்கு விநாஶகமான ஆண்பிள்ளைத்தனத்தையுமுடைய உபாயபூதன் ஆதரியாத அழகியநிறத்தால் எனக்கு ஒருகார்யமில்லை யென்கிறாள்.

ஏறு ஆளும்—ருஷபவாஹநத்தை யுடையனாய்
இறையோனும்—(க) "ஶாஸ்தாஹம் ஸர்வலோகாநாம் ஈஶோஹம் ஸர்வதேஹிநாம்" என்று நாட்டுக்கு) ஈஶ்வரனாகத் தன்னை யபிமாநித்திருக்கும் ருத்ரனும்
திசைமுகனும்—பஹுமுகமாக ஸ்ருஷ்டியைப் பண்ணுகைக்கு யோக்யனான சதுர்முகனும் (ஈஶ்வராபிமாநிகளான இவர்களோடொக்க)
திருமகளும்—தனக்கு நித்யாநபாயிநியான ஸம்பத்தாயுள்ள லக்ஷ்மியும்
கூறு—ப்ரதிநியதமாம்படி
ஆளும்—அநுபவித்துத் தங்களுக்கிருப்பிடமாக அபிமாநித்துக்கொண்டுபோருமதாய்
தனி—அத்விதீயமாம்படி அப்ராக்ருத வைலக்ஷண்யத்தை யுடைத்தான
உடம்பன்—திருமேனியை யுடையனாய் (ஆஶ்ரிதவிஷயத்தில் 'அபிமாநதூஷிதர்' என்றும், (உ) 'அநபாயிநி' என்றும் வாசிவையாத ஶீலத்துக்குமேலே அவர்கள் விரோதியைப் போக்குமிடத்தில்)
குலங்குலமா—திரள்திரளாக
அசுரர்களை—அஸுரர்களை
நீறாகும்படியாக—தூளிஶேஷமாய்ப் போம்படி
நிருமித்து—திருவுள்ளத்தாலே அறுதியிட்டு
படைதொட்ட—ஆயுதமெடுத்து வ்யாபரித்த
மாறாளன்—ஶாத்ரவநிர்வாஹகனானவன்
கவராத—விரும்பாத
மணிமாமை—ஒளியையுடைய நிறத்தால்
குறைவு இலம்—நமக்கு ஒரு கார்யமில்லை.

நிருமித்தல்—நிரூபித்தல்; மாறாளன்—எதிர்த்தலையுடையவன். கவர்தல்—விரும்புதல்; மணியென்று—ஒளியைக் காட்டுகிறது; மாமை—நிறம். குறைவிலமென்றது—இத்தால் கொள்ளுவதொரு ப்ரயோஜநமுண்டாய் அக்குறை கிடப்பதில்லை யென்றபடி; இது—எல்லாப்பாட்டிலு மொக்கும். (௧)

(க) ஹரிவம்ஶ-௨௭௯-௪௭. (உ) வி-பு-௧-

ஆறு ;—நிரவதிகஸௌஸீல்யாऽऽஸ்ரிதவிரோதிநிரஸந ஸாமர்த்த்யாதி கல்யாணகுண மஹோததியாயிருந்த எம்பெருமான் விரும்பாத என்னுடைய மணிமாமையால் எனக்கு ஓரபேக்ஷையுமில்லை ; இது முடிந்துபோக அமையும் என்கிறாள். (௧)

ஈடு;—அவ;—இரண்டாம்பாட்டு. இஸ்ஸீலத்துக்கும் அடியான பிராட்டியோடேகூட வடிவழகைக் காட்டி அடிமைகொண்டவன் விரும்பாத பவ்யமான நெஞ்சால் என்னகார்யமுண்டு ? என்கிறாள்.

மணிமாமைகுறைவில்லா மலர்மாதருறைமார்பன் *
அணிமானத்தடவரைத்தோ ளடலாழித்தடக்கையன் *
பணிமானம்பிழையாமே அடியேனைப்பணிகொண்ட *
மணிமாயன்கவராத மடநெஞ்சால்குறைவிலமே. (௨)

ப ;—அநந்தரம், பிராட்டியோடுகூடின விக்ரஹ வைலக்ஷண்யத்தைக் காட்டி அடியிலே என்னை அடிமைகொண்ட உபேயபூதன் ஆதரியாத நெஞ்சால் ஒருகார்யமில்லை யென்கிறாள்.

மணி—(நித்யஸம்ஸ்லேஷத்தாலே) நிரதிஸயௌஜ்ஜ்வல்யமான
மாமை—நிறத்துக்கு
குறைவில்லா—குறையற்றிருப்பாளாய் (இந்த ஆபிரூப்யத்துக்குமேலே)
மலர்மாதர்—பூவிற்பிறந்த ஆபிஜாத்யத்தால் வந்த ஸௌகுமார்யாதி குணவிஸிஷ்டையான போக்யதையையுடைய நாரீணுமுத்தமையானவள்
உறை—நிரந்தரவாஸத்தைப்பண்ணுகிற
மார்பன்—திருமார்பையுடையனாய்
அணி—ஆபரணஸோபிதமாய்
மானம்—ஆயதமாய்
தடம்—ஸுவ்ருத்தமாய்
வரை—மலையைக் கணையமாக வகுத்தாற்போலே சிக்கென்ற
தோள்—தோள்களையுடையனாய்
அடல்—விரோதிநிரஸநஸீலமான
ஆழி—திருவாழியை யுடைத்தான
தட கையன்—பெரியகையை யுடையவனாய்
பணிமானம்—கைங்கர்யவ்ருத்திகளில் ஓரளவும்
பிழையாமே—தப்பாதபடி
அடியேனை—அடியேனான ஸ்வரூபத்தையுடைய என்னை
பணிகொண்ட—அதுக்கு ஈடாக அடிமைகொண்ட
மணிமாயன்—நீலரத்நம்போல் கறுத்த நிறத்தையுடையனானவன்
கவராத—விரும்பாத
மடநெஞ்சால்—விதேயமான நெஞ்சால்
குறைவு இலம்—ஒருகார்யமுடையோமல்லோம்.

அணி—ஆபரணம் மானம்—அளவுடைமை. தடம்—சுற்றுடைமை. மாயன்—கரியவன். (உ)

ஆறு ;—(மணிமாமை.) நிரதிஶயஸௌந்தர்யநிதியான திருத்தோள்களையுடையனாய் ஶங்கசக்ராதி திவ்யாயுதபூஷிதனா யிருந்த எம்பெருமான் பெரியபிராட்டியோடு கலந்தருளுமாபோலே என்னோடு பண்டு கலந்தருளினான் ; அப்படியே எனக்கு ஸுலபனாயிருந்தவன் கவராத மடநெஞ்சால் குறைவிலம் என்கிறாள். (உ)

ஈடு ;—அவ ;—மூன்றாம்பாட்டு. விரோதிநிரஸநஸமர்த்தனாய் அத்யந்த விலக்ஷணனாய், முன்பு என்பக்கல் அத்யபிநிவிஷ்டனானவன் விரும்பாத அடக்கம் எனக்கு வேண்டா என்கிறாள்.

மடநெஞ்சால்குறைவில்லா மகள்தாய்செய்தொருபேய்ச்சி *
விடநஞ்சமுலைசுவைத்த மிகுஞானச்சிறுகுழவி *
படநாகத்தணைக்கிடந்த பருவரைத்தோட்பரம்புருடன் *
நெடுமாயன்கவராத நிறைவினாற்குறைவிலமே. (ங)

ப ;—அநந்தரம், உபாயகார்யமான அநிஷ்டநிவ்ருத்த்யாதிகளை மேல்முழுக்க ப்ரதிபாதிப்பதாக, முதலிலே அநுகூலஶத்ருவான பூதநாநிரஸநத்தைச் சொல்லி, ஆஶ்ரிதார்த்தமாக நாகபர்யங்கத்தில்நின்றும் வந்த க்ருஷ்ணன் விரும்பாத அடக்கத்தால் ஒரு காரியமில்லை என்கிறாள்.

மடம் நெஞ்சால்—(முலையுண்கிற பிள்ளைபக்கலிலே) ப்ரவணமான நெஞ்சால்
குறைவில்லா—குறைவற்றிருக்கிற
தாய்மகள்—(யசோதையாகிற) தாய் மகளாக
செய்து—தன்னைப்பண்ணிவந்தவளாய்
ஒரு—(எதிர்த்தலையை) நலிகைக்கு அத்விதீயையாயிருக்கிற
பேய்ச்சி—பேய்ச்சியுடைய
விடம் நஞ்சம் முலை—(நாட்டில் விஷங்கள் அம்ருதமென்னலாம்படி) மிக்க விஷத்தையுடைத்தான நச்சு முலையை
சுவைத்த—பசையறச்சுவைத்த
மிகுஞானம்—மிக்கஸஜ்ஞாநத்தையுடைய
சிறுகுழவி—முக்தஶிஶுவாய் (இப்படிவந்த விரோதியை நிரஸிக்கைக்காக வலக்கோலி)
படம்நாகத்து அணை—(ஸ்வஸ்பர்ஶத்தாலே விரிந்த) பணத்தையுடைய நாகபர்யங்கத்திலே
கிடந்த—கண்வளர்ந்தவனாய்
பரு வரை தோள்—பெரிய மலைபோலேவளர்ந்த தோளையுடையவனாய்

பரம்புருடன்—(௧) "உத்தம: புருஷ: - உத்தம: புருஷ:" என்னும் பரமபுருஷனாய்
நெடுமாயன்—நிரவதிகமான ஆஸ்சர்ய குணசேஷ்டிதங்களை யுடைய க்ருஷ்ணன்

கவராத—விரும்பாத
நிறைவினால்—ஸ்த்ரீத்வபூர்த்தியாலே
குறைவு இலம்—என்ன காரியமுண்டு?
நிறைவாவது—நெஞ்சு பிறரறியாமல் அடக்கும் நிரப்பம்.

விடநஞ்சமென்றது—மீமிசை. 'பேய்ச்சிவிடவென்று—அவள்நசிக்க' என்றும் சொல்லுவர். (௫)

ஆறு ;—(மடநெஞ்சால்.) நாகபர்யங்கஸாயியாய், தத்ஸம்ஸ்பர்ஸ நிரவதிக ஸுகத்தாலே வளர்ந்த திருத்தோள்களை யுடையனாய், புருஷோத்தமனாய் திருத்தாயாரான யஸோதைப்பிராட்டி நெஞ்சும் வடிவும்போலே தன்னுடைய நெஞ்சையும் வடிவையும் அநுகூலமாகப் பண்ணிக் கொண்டுவந்த பேய்ச்சி முடியும்படி நஞ்சமுலை சுவைத்த மிகுஞானச் சிறுகுழவியா யிருந்த நெடுமாயன் கவராத நிறைவினால் குறைவிலம் என்கிறாள். (௫)

ஈடு ;—அவ ;—நாலாம்பாட்டு. தன்னைப் பேணாதே, பெண் பிறந்தாரைப் பேணும் க்ருஷ்ணன் விரும்பாத நிறம் எனக்கு வேண்டா என்கிறாள்.

நிறைவினாற்குறைவில்லா நெடும்பணைத்தோள்மடப்பின்னை *
பொறையினான்முலையணைவான் பொருவிடையேழடர்த்துகந்த *
கறையினார்துவருடுக்கைக் கடையாவின்கழிகோற்கைச் *
சறையினார்கவராத தளிர்நிறத்தாற்குறைவிலமே. (௬)

ப ;—அநந்தரம், அபிமதையான நப்பின்னைப் பிராட்டியை புணர்க்கைக்காக, ஆஸுரமான எருதேழடர்த்தவன் விரும்பாத நிறத்திற்செவ்வியால் ஒரு ப்ரயோஜநமில்லை யென்கிறாள்.

நிறைவினால்—ஸ்த்ரீத்வபூர்த்தியால்
குறைவில்லா—குறைவற்றிருப்பாளாய்
நெடும்பணைத்தோள்—நீண்டுபணைத்த தோளையுடையளாய்
மடம்—ப்ரணயவிஷயத்தில் பவ்யையான

பின்னை—நப்பின்னைப்பிராட்டி
முலை—முலையை
அணைவான்—அணைக்கைக்காக
பொறையினால்—(தன்னுடைய வ்யஸநஸஹமான) மிடுக்காலே
பொருவிடை ஏழ்—யுத்தோந்முகமான ருஷபங்கள் ஏழையும்

(௧) கீதை-௧௫.

அடர்த்து உகந்த—அடர்த்து ('அபிமதம் பெற்றேரும்' என்று) உகந்தவராய் (இவளைப் பெறுகைக்கிடான ஜாத்யுசித வ்ருத்தியாலே
கறையின் ஆர்—(காட்டில் பழம் பறித்திட்ட) கறை நிரம்பி
துவர்—துவருட்டின
உடுக்கை—உடைத்தோலையும்
கடையாவின்—(பசுக்கறக்கைக்கு ஸாதநமான) கடையாவையும்
கழிகோல்—கழிகோலையும்
கை—கையிலேகொண்டு
சறையினார்—(அரையிற்கட்டின) சறைமணியையுடையரானவ
கவராத—விரும்பாத
தளிர் நிறத்தால்—தளிர்போலே செவ்விய நிறத்தால்
குறைவிலம்—(நமக்கு ஒரு) ப்ரயோஜநமில்லை

நெடும்பணையென்று—நீண்டமூங்கி லென்றுமாம். துவருடுக்கை—துவருட்டின உடைத்தோல். கடையா—கறக்கும் மூங்கிற்குழாய். கழிகோல்—பசுக்கள்பாயாமல் வீசும் கோல். சறைமணி—பசுக்கள் த்வநிகேட்டு வருகைக்குத் தன் அரையிற் கட்டின மணி. சறையனென்று—உடம்பைப்பேணுதவனென்றுமாம். தளிரென்று—தளிர்போன்ற செவ்வியை நினைக்கிறது. (௪)

ஆறு ;—(நிறைவினுல்.) ஆத்மகுணங்களாலும் ரூபகுணங்களாலும் பூர்ணையாய் கோபவம்ஶோத்பவையா யிருந்த நப்பின்னைப் பிராட்டியோடே ஸம்ஶ்லேஷிக்கைக்காக அந்த கோப குலோசிதமான வேஷத்தாலே பூஷிதனுய், தத்ஸம்ஶ்லேஷோபாயமான வ்ருஷபஸப்தகநிரஸநத்துக்கு அநுகுணஸாமர்த்யத்தை யுடையவனுய் அவற்றை நிரஸித்து ப்ரஹ்ருஷ்டனுனவன் கவராத தளிர்நிறத்தால் குறைவிலம் என்கிறுள். (௪)

ஈடு ;—அவ ;—அஞ்சாம்பாட்டு. பரமப்ரணயியாய் ஸர்வரக்ஷகனுன தஶரதாத்மஜன் விரும்பாத அறிவினுல் என்னப்ரயோஜநமுண்டு எனக்கென்கிறுள்.

தளிர்நிறத்தாற்குறைவில்லாத் தனிச்சிறையில்விளப்புற்ற *
கிளிமொழியாள்காரணமாக் கிளரரக்கன்நகரெரித்த *
களிமலர்த்துழாயலங்கல்கமழ்முடியன் கடல்ஞாலத்து *
அளிமிக்கான்கவராத அறிவினுற்குறைவிலமே. (௫)

ப ;—அநந்தரம், ஸ்ரீஜநகராஜன் திருமகளுக்காக, அஸஹ்யாபராதியான ராவணனை அழியச்செய்த சக்ரவர்த்தி திருமகன் விரும்பாத அறிவால் என்ன காரியமுண்டு ? என்கிறுள்.

தளிர் நிறத்தால்—தளிர்போலே தர்ஶ நீயமாய் ஸுகுமாரமான நிறத்தால்
குறைவில்லா—பரிபூர்ணையாய்
தனிச்சிறையில்—(ப்ராப்ராபாவான்களைப் பிரிக்குமாபோலே பிரிக்கப்பட்டுத்) தனியே ராக்ஷஸீமத்யத்திலே நிருத்தையாய்
விளப்புற்ற—(லோகமடைய 'ஒருத்தி சிறையிருந்து ரக்ஷிக்கும்படியே' என்று கொண்டாடும்படி) ப்ரஸித்தையாய்
(க) "[illegible] - மதுராமதுராலாபா" என்னும்படி
கிளிமொழியாள்—கிளிபோலே இனியமொழியை யுடையாளான பிராட்டி
காரணமா—காரணமாக
கிளர்—அதீதியாலே பெரிய கீர்த்தி யை யுடையனை
அரக்கன்—ராவணனுடைய
கிளர் நகர்—ஸம்ருத்தமான நகரத்தை
எரித்த—நெருப்புக்கிரையாக்கினவனாய் (மீண்டுவந்து முடிசூடி)
களிமலர்—தேனையுடைத்தாய் மலர்ந்த
துழாயலங்கல்—திருத்துழாய் மாலையாலே
கமழ்—பரிமளோத்தரமான
முடியன்—அபிஷேகத்தை யுடையனாய்
கடல் ஞாலத்து—கடல்சூழ்ந்த பூமியிலே
அளிமிக்கான்—தண்ணளி விஞ்சும்படி எழுந்தருளியிருந்தவன்
கவராத—விரும்பாத
அறிவினால்—அறிவால்
குறைவிலம்—ஒருகாரியமுடையோமல்லோம்.

களி—தேன். அலங்கல்—மாலை. அளி — தண்ணளி; உபகாரமாகவுமாம் (ரு)

ஆறு;—(தளிர் நிறத்தால்). அபரிமித ஸௌந்தர்ய மஹோததியாய் கலபாஷிணியாயிருந்த பிராட்டி அஶோகவநிகையிலே எழுந்தருளி யிருந்தமை திருவடி விண்ணப்பஞ் செய்யக்கேட்டருளி, அப்போதே ஸம்ஶ்லேஷவிரோதியான ராவணனை ஸபுத்ரஜநபாந்தவ நகரமாக ஸாராக்நியிலே தக்தமாக்கிப் பிராட்டியோடேகூட எழுந்தருளியிருந்து லோகத்தை ரக்ஷித்து, பின்னைத் திருமஞ்சநமாடியருளி நிரதிஶயஸுகந்த திவ்யமால்யாநுலேபநாலங்க்ருதனாய் திவ்யபூஷண பூஷிதனாயிருந்தவன் கவராத அறிவினால் குறைவிலம் என்கிறாள். (ரு)

(க) ரா-ஸு-கக-கரு.

ஈடு ;—ஆறும்பாட்டு. அறிவில்லாதார்க்கு ஸ்வப்ராப்த்யுபாயங்களை உபதேசித்து, அறிவுபிறக்கைக்கு யோக்யதையில்லாதாரை வடிவழகாலே தனக்காக்கிக்கொள்ளுமவன் விரும்பாத லாவண்யத்தால் என்ன கார்யமுண்டு? என்கிறாள்.

அறிவினாற்குறைவில்லா அகல்ஞாலத்தவரறிய *
நெறியெல்லாமெடுத்துரைத்த நிறைஞானத்தொருமூர்த்தி *
குறியமாணுருவாகிக் கொடுங்கோளால்நிலங்கொண்ட
கிறியம்மான்கவராத கிளரொளியாற்குறைவிலமே. (௬)

ப ;—அநந்தரம், உபதேஶத்தாலும் அர்த்தித்வத்தாலும் தனக்கேயாக என்னைக்கொள்ளும் ஸர்வஜ்ஞன் விரும்பாத ஒளியால் ஒருகாரியமில்லை யென்கிறாள்.

அறிவினால்—ஜ்ஞாநத்தில் அபேக்ஷையில்லாமையாலே
குறைவில்லா—குறைவுபட்டிராத
அகல் ஞாலத்தவர்—விஸ்தீர்ணையான பூமியிலுள்ளார்
அறிய—அறியும்படி (ஸர்வலோகமும் திரண்ட படைக்குநடுவே)
நெறியெல்லாம்—(கர்மயோகம் முதலாக ப்ரபத்திபர்யந்தமான) ஸகலோபாயங்களையும்
எடுத்து உரைத்த—(வ்யக்தமாம்படி தானே) எடுத்து அருளிச்செய்த
நிறை ஞானத்து—பரிபூர்ண ஜ்ஞாநவானான
ஒருமூர்த்தி—அத்விதீயஸ்வபாவனானவனாய்
குறிய—மஹாமேருவை மஞ்சாடியாக்கினாற்போலே வாமநத்வத்தாலே ஆகர்ஷகமாய்
மாணுருவாகி—(அர்த்தித்வமே நிரூபகமென்னலாம்படி) ப்ரஹ்மசாரிவேஷத்தை யுடையனாய்
கொடுங்கோளால்—(அழகைக்காட்டி மாறாதபடிபண்ணி, சிற்றடியைக் காட்டியிசைவித்து இப்படி) கொடிதாக வஞ்சித்தபரிக்ரஹத்தாலே
நிலம்கொண்ட—பூமியைத் தன்னதாக்கிக்கொண்ட
கிறி—நல்விரகையுடைய
அம்மான்—ஸர்வேஶ்வரன்
கவராத—விரும்பாத
கிளர் ஒளியால்—கிளர்ந்த ஒளியால்
குறைவிலம்—என்னப்ரயோஜநமுண்டு?.

ஒளி—லாவண்யகுணமான ஸமுதாயஶோபை. (௬)

ஆறு ;—(அறிவினால்.) ஸ்வவிஷயஜிஜ்ஞாஸையுங்கூட இல்லாத ஆத்மாக்களெல்லாரும் அறியும்படி ஸ்வப்ராப்த்யுபாயங்களெல்லாவற்றையும் தத்ததிகாராநுகுணமாக எடுத்துரைத்த நிறைஞானத்தொருமூர்த்தியாய், இப்படி உபாயாநுஷ்டாநத்தாலே

வரும் விளம்பம் பொறுக்கமாட்டாமை ப்ரதிகூலாநுகூல விபாகமின்றியே ஸர்வாத்மாக்களுக்கும் 'காண்மின்களுலகீர்' என்று தன்னைக்காட்டிக் கொடுத்தருளினவன் கவராத இளரொளியால் குறைவிலம் என்கிறாள். (௬)

ஈடு ;—அவ ;—ஏழாம்பாட்டு. பெற்றதமப்பன் பகையாக பாலனுக்கு உதவினவன் தான் உதவாமை நோவுபடுகிற எனக்கு உதவாகில், நான் ஆபரணம்பூண்டு ஒப்பித்திருக்கிற இவ்வொப்பனை யார்க்கு என்கிறாள்.

> கிளரொளியாற்குறைவில்லா அரியுருவாய்க்கிளர்ந்தெழுந்து *
> கிளரொளியவிரணியனது அகல்மார்பங்கிழித்துகந்த *
> வளரொளியகனலாழி வலம்புரியன்மணிநீல *
> வளரொளியான்கவராத வரிவளையாற்குறைவிலமே. (எ)

ப ;—அநந்தரம். உத்துங்கவிரோதியான ஹிரண்யனைப் பிளந்த நரஸிம்ஹன் விரும்பாத வளையால் என்ன கார்யமுண்டு ? என்கிறாள்.

மணி—ப்லாக்யமான
நீலம்—நீலரத்நத்தினுடைய ஒளிபோலே அத்யுஜ்ஜ்வலமாய்
வளர்—அஸாதாரணமான
ஒளியான்—விக்ரஹதேஜஸ்ஸை யுடையனாய்வைத்து (ஆஸ்ரிதார்த்தமாக அவ்வடிவழகை அழியமாறி)
கிளர்—(௧) "ஜ்வலந்தம்" என்னும்படி அபிவ்ருத்தமான
ஒளியால் — ஔஜ்ஜ்வல்யத்தால்
குறைவில்லா—பரிபூர்ணமான
அரியுருவாய்—ஸிம்ஹரூபமாய்க் கொண்டு
கிளர்ந்து எழுந்து—ப்ரத்யுதிரஸநத்திலே உத்யோகித்து ஆவிர்ப்பவித்து
கிளர் ஒளிய—மிக்க தேஜஸ்ஸை யுடையனான
இரணியனது—ஹிரண்யனுடைய
அகல் மார்பம்—விஸ்தீர்ணமான மார்பை
கிழித்து—(அநாயாஸேந) கிழித்து
உகந்த—(ஆஸ்ரிதவிரோதி போனபடியாலே) உகந்தவனாய் (இரைபெற்ற பாம்புபோலே சீறுகையாலே)
வளர் ஒளிய—வளர்கிற ஜ்வாலையையுடைய
கனல் ஆழி—அக்நிபோலேயிருக்கிற திருவாழியையும்
வலம்புரியன்—ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுமுடையனானவன்
கவராத—ஆதரியாத
வரிவளையால்—வரியையுடைய வளையாலே
குறைவிலம்—என்ன ப்ரயோஜநமுண்டு ? (எ)

---

(௧) மந்த்ரமஹோததி.

ஆறு ;—(கிளர்) ஹிரண்யவிஷய நிரவதிகரோஷத்தாலே அநந்யந்தம் அநபிபவநீயமாய் அதிதுஸ்ஸஹமாய் யுகபதுதித திநகரஶத ஸஹஸ்ர தேஜஸ்ஸத்ருஶமாயிருந்த தேஜஸ்ஸையுடையதொரு அரியுருவாய்க் கிளர்ந்தெழுந்து, அதிபலபராக்ரமனான ஹிரண்யனைத் தன் திருவுகிராலே பிளந்தருளி ப்ரஹ்ருஷ்டனாய், நிஹதஹிரண்யனாகையாலே ப்ரஶாந்தாஶேஷரோஷனாய், அதிநாலே அதிஶீதள ஸர்வாநுகூலநிரவதிக தேஜோவிஶிஷ்டனாய், திருவுகிர்களாலே முந்துறவே ஹிரண்யவக்ஷஸ்தலம் விதாரிதமாகையாலே ததர்த்தமான ஸ்வோத்யோகம் நிர்விஷயமாதலால் அதிப்ரவ்ருத்தரோஷாந்வித ஶங்கசக்ராதி திவ்யாயுதோபேதனாயிருந்தவன் கவராத வரிவளையால் குறைவிலம் என்கிறாள். (எ)

ஈடு ;—அவ ;—எட்டாம்பாட்டு. ஜகத்துக்காக உபகரிக்குமவன் தனக்கு அஸாதாரணையான என்னை உபேக்ஷிக்குமாகில் என்னுடைய மேகலையால் என்ன ப்ரயோஜந முண்டு? என்கிறாள்.

வரிவளையாற்குறைவில்லாப் பெருமுழக்காலடங்காரை *
எரியழலம்புகவூதி இருநிலமுன்துயர்தவிர்த்த *
தெரிவரியசிவன்பிரமனமரர்கோன்பணிந்தேத்தும் *
விரிபுகழான்கவராத மேகலையாற்குறைவிலமே. (அ)

ப ;—அநந்தரம், பூபாரநிர்ஹரணார்த்தமாக துர்யோதநாதிவிரோதிஶதத்தையும் நிரஸித்த நிரதிஶயகீர்த்தியை யுடையவன் விரும்பாத மேகலையால் என்ன கார்யமுண்டு? என்கிறாள்.

வரி—(முகத்தில்) வரியையுடைய
வளையால்—ஸ்ரீபாஞ்சஜந்யத்தாலுண்டான
குறைவில்லாப் பெருமுழக்கால்—மஹாகோஷத்தாலே
அடங்காரை—அபவ்யரான ஶத்ருக்களை
எரி—கிளர்ந்தெரிகிற
அழலம்—பயாக்நியானது
புக—உள்ளே ப்ரவேஶிக்கும்படியாக
ஊதி—ஊதி
முன்—முற்காலத்திலே
இருநிலம்—மஹாப்ருதிவியினுடைய
துயர்—பாரக்லேசத்தை
தவிர்த்த—தவிர்த்தவனாய்
(இவ்வுபகாரத்தாலே)
தெரிவரிய—(தன்னோடொக்க நினைத்து ப்ரமித்து) விவேகிக்க அரிய ப்ராதாந்யத்தையுடைய
சிவன்—ருத்ரன்
பிரமன்—ப்ரஹ்மா
அமரர்கோன்—தேவநிர்வாஹகனான இந்த்ரன்

பணிந்து ஏத்தும்—க்ருதஜ்ஞதாபரவஶ ராய்க்கொண்டு வணங்கி ஸ்தோத்ரம் பண்ணும்படி
விரிபுகழான்—விஸ்தீர்ணமான புகழையுடையவன்
கவராத—ஆதரியாத
மேகலையால்—காஞ்சிகுணத்தால்
குறைவிலம்—என்ன ப்ரயோஜந முண்டு?

மேகலை—பரிவட்டத்தின்மேற் கட்டும் காஞ்சி; பரிவட்டமாகவுமாம் (அ)

ஆறு;—(வரிவளையால்.) துர்யோதநாதிகளுடைய ஹ்ருதயத்திலே காலாக்நி புகும்படியாக அதிகம்பீரநாதமான ஸ்ரீபாஞ்சஜந்யத்தை படுத்து ஊதி இருநிலமுன்துயர்தவிர்த்து, ப்ரஹ்மேஶாநாதி ஸர்வதேவைஸ் ஸம்ஸ்துயமாந விஜய ஸ்ரீகளுக்கொண்டு நின்றவன் கவராத மேகலையால் குறைவிலம் என்கிறாள். (அ)

ஈடு;—அவ;—ஒன்பதாம்பாட்டு. ஆஸ்ரிதவிரோதியான வாணனை அழியச்செய்து, ஸர்வரும் உஜ்ஜீவிக்கும்வழி யெண்ணுமவன் விரும்பாத உடம்புகொண்டு கார்யமென்? என்கிறாள்.

மேகலையாற்குறைவில்லா மெலிவுற்றவகலல்குல் *
போகமகள்புகழ்த்தந்தை விறல்வாணன்புயந்துணித்து *
நாகமிசைத்துயில்வான்போ லுலகெல்லாம்நன்கொடுங்க *
யோகணைவான்கவராத உடம்பினாற்குறைவிலமே. (கூ)

ப;—அநந்தரம், ஆஸ்ரிதவிரோதியான பாணனை விஹஸ்தனாக்கின க்ருஷ்ணன் விரும்பாத ஶரீரத்தால் என்ன ப்ரயோஜநமுண்டு? என்கிறாள்.

மேகலையால்—உடையழகால்
குறைவு இல்லா—குறை இன்றியிலே
மெலிவு உற்ற—(அதிருக்தஸம்ஶ்லேஷத்தால் வந்த) துவட்சியை உடைத்தாய்
அகல் அல்குல்—விஸ்தீர்ணமான நிதம்பவைலக்ஷண்யத்தை யுடையளாய்
போகம் மகள்—போகாநுகூலமான ஸ்த்ரீத்வத்தை யுடையாளான உஷைக்கு
தந்தை--பிதாவென்கிற
புகழ்--ப்ரதைத்யை யுடையனாய்
விறல்—ஶௌர்யவீர்யாதிகளால் குறைவற்ற
வாணன்—பாணனுடைய
புயம்—(க) ("ஸஹஸ்ரபாஹுர்.... பாராயமமிம்புஜை:" என்று யுத்தகண்டூதியை யுடைத்தாகச் சொல்லப்பட்ட) தோள்களை
துணித்து— (தின்றவிடம்சொறிந்தாற் போலே) துணித்து (அவதார கார்யாநந்தரம்)

(க) வி-பு-டு-ருரு-உ.

நாகமிசை—பழையநாகபர்யங்கத்திலே சாய்ந்து
துயில்வான்போல்—உறங்குவான் போலே
உலகெல்லாம்—ஸர்வலோகமும்
நன்கு ஒடுங்க—(ஸ்வப்ராப்தியாகிற) நன்மையிலே ஒதுங்கும்படி
யோகு அணைவான்—உபாயசிந்தையைப் பண்ணுமவன்
கவராத—விரும்பாத
உடம்பினால்—உடம்பால்
குறைவிலம்—என்னப்ரயோஜநமுண்டு?
யோகு—உபாயம். (௯)

ஆறு;—(மேகலையால்.) ஸ்வாச்ரித ஸமீஹிதபஞ்ஜகனான பாணனுடைய தோள்களைத் துணித்துப் பின்னை நிர்ப்பயனாய், ஸர்வலோகமும் தன்னுடைய ஸங்கல்பத்தினுள்ளே செல்லும்படி செலுத்திக்கொண்டு நாகபர்யங்கத்திலே ஸ்வாத்மாநுபவரூப யோகநித்ரை பண்ணுகிறவன்கவராத உடம்பினால் குறைவிலம் என்கிறாள்.

ஈடு;—அவ;—பத்தாம் பாட்டு. முதற்பாட்டிற் சொன்ன சீலகுணத்தையும் விரோதிநிரஸநத்தையும் சொல்லி, அவன்விரும்பாத ஸத்தையால் என்ன கார்யமுண்டு? என்று உபக்ரமத்தோடே சேர உபஸம்ஹரிக்கிறாள். 'உடம்பினாற் குறைவில்லா வுயிர்பிரிந்த மலைத்துண்டம் கிடந்தனபோல் துணிபலவா அசுரர்குழாந் துணித்து' என்றதால் - "நீறுகும்படியாக நிருமித்துப்படைதொட்ட" என்றத்தைச் சொல்லுகிறது. 'தடம்புனலசடைமுடியன் தனியொருகூறமர்ந்துறையு முடம்புடையான்' என்றதால் - "கூறாளும் தனியுடம்பன்" என்றத்தைச் சொல்லுகிறது.

உடம்பினாற்குறைவில்லா உயிர்பிரிந்தமலைத்துண்டம் *
கிடந்தனபோல்துணிபலவா அசுரர்குழாந்துணித்துகந்த *
தடம்புனலசடைமுடியன் தனியொருகூறமர்ந்துறையும் *
உடம்புடையான்கவராத உயிரினாற்குறைவிலமே. (௧௦)

ப;—அநந்தரம், அசேஷவிரோதிநிவர்த்தகனான ஸர்வேச்வரன் விரும்பாத ஆத்மாவால் என்ன ப்ரயோஜநமுண்டு? என்கிறாள்.

உடம்பினால் குறைவில்லா } சரீரபோஷணத்தாலே மஹாகாயரான
அசுரர்குழாம்—அஸுரஸமூஹங்களை
உயிர்பிரிந்த—(இந்த்ரச்சிந்நமாய்) நிஷ்ப்ராணமான
மலைத்துண்டம்—பர்வதகண்டங்கள்
கிடந்தனபோல்—கிடந்தாற்போலே
பலதுணியா—நாநாகண்டமாம்படி
துணித்து உகந்த—துணித்து (அத்தாலே 'ஜகத்விரோதிகழிந்தது' என்று) உகக்குமவனாய்

தடம்புனல—அதிவிஸ்தீர்ணஜலையான கங்கையைத் தரிக்கிற	ஒருகூறு—ஒருபார்ஶ்வத்திலே
சடைமுடியன்—ஜடாமகுடத்தை யுடையவனுகையாலே அதிஶயிதஶக்திகனாக அபிமானித்திருக்கிற ருத்ரன்	உறையும்—நித்யவாஸம்பண்ணும் படியான
தனி அமர்ந்து—தனக்கஸாதாரணமாகப் பற்றி	உடம்பு உடையான்—திருமேனியை உடையவன்
	கவராத—விரும்பாத
	உயிரினால்—ஆத்மாவால்
	குறைவிலம்—ஒருப்ரயோஜநமுடையோமல்லோம்.

(க) "நவா தாநு - நசாத்மாநம்" என்கிறகணக்கிலே அவன் விரும்பாத ஆத்மீயங்களோபாதி ஆத்மாவையும் வேண்டேனென்றபடி. (கo)

ஆறு ;—(உடம்பினால்) ஸுந்தரஸநஸகலீக்ருத காலநேமிப்ர ப்ருத்யஸுரநிகரனுப், ஆஶ்ரிதகதமான உத்கர்ஷநிகர்ஷம்பாராதே எல்லாரோடுமொக்க ஸம்ஶ்லேஷிக்கும் ஸ்வபாவனுயிருந்த எம்பெருமானுடைய ஸௌந்தர்ய ஸௌஶீல்யாதி குணங்களாலும், அதிலும் அதிமாநுஷமான திவ்யசேஷ்டிதங்களாலும் என்னோடே கலந்த கலவியாலும் உபஸ்க்ருதமாகாத என்னுடைய ஆத்மாவும் வேண்டா, இது முடிந்துபோக அமையும் என்கிறாள். (கூ)

ஈடு ;—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை அப்யஸித்தவர்கள், காழ்ப்பேறின ஸம்ஸாரதுரிதமற்றுப் பரமபதத்திலே புகப்பெறுவர்கள் என்கிறார்.

உயிரினாற்குறைவில்லா உலகேழுதன்னுள்ளொடுக்கித் *
தயிர்வெண்ணெயுண்டானைத் தடங்குருகூர்ச்சடகோபன் *
செயிரில்சொல்லிசைமாலை ஆயிரத்துளிப்பத்தால் *
வயிரஞ்சேர்பிறப்பறுத்து வைகுந்தம்நண்ணுவரே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக, பகவச்சேஷத்வ பூர்வகமான பரமபதப்ராப்தியை அருளிச்செய்கிறார்.

உயிரினால்—ஆத்மாக்களால்	தன்னுள் ஒடுக்கி—ஸங்கல்பாந்தர்ப்பூதமாம்படி ரக்ஷிக்கும் பரத்வத்தை யுடையனுய்
குறைவில்லா—குறைவில்லாத	
ஏழுலகு—ஸமஸ்தலோகங்களையும்	

(க) ஸ்தோ-

(ரக்ஷையகதேசத்திலே அவதீர்ணனாய் ஆஶ்ரிதருக்காக)
தயிர்—தயிரையும்
வெண்ணெய்—வெண்ணெயையும்
உண்டானை—அமுதுசெய்த ஸௌலப்யத்தை யுடையவனைப்பற்ற
தடம் குருகூர்—மஹாவகாசமான திருநகரிக்கு நிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வாருடைய
செயிர் இல்—(ப்ரப்தார்த்தங்களில்) குற்றம் அற்ற
சொல்—சொல்லாயிருக்கிற
இசை—இசையோடுகூடின
மாலே—ஸந்தர்ப்பமாயிருக்கிற
ஆயிரத்துள்—ஆயிரந் திருவாய்மொழிக்குள்ளும்
இப்பத்தால்—இப்பத்தாலே
வயிரம்சேர்—காழ்ப்பேறும்படி அநாதி ஸித்தமான
பிறப்பு—ஸம்ஸாரஸம்பந்தத்தை
அறுத்து—அறுத்து
வைகுந்தம்—பரமபதத்தை
நண்ணுவர்—கிட்டப்பெறுவர்கள்.

இது—கலிவிருத்தம்; நாலடித்தாழிசையுமாம். (கக)

ஆறு;—(உயிரினால்) தேவாதி ஸ்தாவராந்த ஸகலபூதஜாத பரிபூர்ண ஸர்வலோக பாலகனாயிருந்துவைத்து மநுஷ்யதிருமேனி அவதீர்ணனாய்க்கொண்டு ஆஶ்ரிதஸௌலபனாயிருந்த எம்பெருமானைச் சொன்ன நிரவத்யமான இத்திருவாய்மொழி வல்லார், நிரஸ்தஸமஸ்த ப்ரதிபந்தகராய் வைகுந்தம் நண்ணுவர் என்கிறார். (கக)

நாலாம்பத்து எட்டாம்திருவாய்மொழி வ்யாக்யாநங்கள் முற்றுபெற்றன.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஒன்பதாந் திருவாய்மொழி - நண்ணாதார் ப்ரவேஶம்.

ஆறு ;—(நண்ணாதார்.) இப்படி பரமபுருஷவிஶ்லேஷ ஜநித ஶோகாக்நியாலே தஹ்யமாநரா யிருக்கச்செய்தே, அதின்மேலே, பகவத்ஸம்ஶ்லேஷ விஶ்லேஷைக ஸுகது:கத்வரஹிதராய், சேதநாசேதநாத்மக ஸமஸ்தவஸ்துநேத்ரு பகவச்சேஷதைகரதித்வ ஜ்ஞாநரஹிதராய், பகவத்வ்யதிரிக்த ப்ராக்ருதவிஷயலாபாலாபைக ஸுகது:கராயிருந்த அவைஷ்ணவர்களோடு உள்ள ஸஹவாஸமாகிற மஹாக்நியாலே தஹ்யமாநரான ஆழ்வார், 'இந்த அவைஷ்ணவ ஸஹவாஸத்தைக் காட்டிலும் முடிகையே நன்று; ஆன பின்பு, அடியேனை முடித்தருளவேணும்' என்று எம்பெருமானை அபேக்ஷிக்கிறார். *

ப ;—ஒன்பதாந் திருவாய்மொழியில், இப்படி அவன்விரும்பாத ஆத்மாத்மீயங்களிலும் அநாதரம்பிறந்தவளவிலும் அநுபவம் ஸித்தியாமையாலே அத்யந்தம் ஆர்த்தரான தமக்கு உசாத்துணையாகைக்கு யோக்யரல்லாதபடி ஸம்ஸாரத்திலுள்ளாரும் அதிஶயித து:கமக்நராய்க்கொண்டு க்லேஶிக்கிறபடியைக் கண்டு, ஸகலக்லேஶநிவர்த்தகனாய் நிரதிஶயபோக்யனான ஸர்வேஶ்வரனுடைய ஆர்த்திஹரத்தகாரணத்தையும், ஸாதாரணபந்தத்தையும், அபரிச்சிந்நஸௌந்தர்யத்தையும், அவ்வழகை அநுபவிப்பிக்கும் ஔதார்யத்தையும், அநுபவிப்பார்க்குக் கைக்கடங்கும்படியான ஸௌலப்யத்தையும், போக்யதாதிஶயத்தையும், ஸர்வாத்மபாவத்தையும், ஸகலஜகத்காரணத்வத்தையும், ஆஶ்ரித ஸம்ஶ்லேஷ ஸ்வபாவத்தையும், லக்ஷ்மீஸகத்வத்தால் வந்தபரமப்ராப்யத்வத்தையும் அநுஸந்தித்து 'ஏவம்விஶிஷ்டனான நீ அத்யந்தாஸஹ்யமாம்படி க்லேஶோத்தரமான ஸம்ஸாரத்திலே யிருத்தி என்னை க்லேஶிப்பியாதே, உன் திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளவேணும்' என்று கூப்பிட்டு, இவர் அபேக்ஷாநுரூபமாக அவனும் பரமபதத்திலே (க) "ஶ்ரியாஸார்த்தம் ஜகத்ஸ்ரஷ்டா ஶ்ரியாஸார்த்தம்ஜகத்பதி:" என்றிருக்கிற இருப்பைக் காட்ட, மாநஸஜ்ஞாநத்தாலே கண்டு, ஐஶ்வர்ய கைவல்யங்களினுடைய ஹேயதாப்ரதிபத்திபூர்வகமாக அவன் திருவடிகளையே பரமப்ராப்யமாகப்பற்றின படியை அருளிச்செய்கிறார். *

(க) வாயுபுராணம்

ஈடு; —' உடம்பு வேண்டா, உயிர்வேண்டா ' என்று இவற்றை உபேக்ஷித்துப்பார்த்தார்; தாம் ' வேண்டா ' என்றவாறே தவிருமாகக்கொண்டு ; அவை தவிர்ந்தனவில்லை ; ஒன்றைப் பெறுகைக்கேயன்றிக்கே முடிகைக்கும் உன் தரவு வேணுமாகில் அத்தைத்தந் தருளவேணு மென்கிறார். இவ்வமங்கள ஸப்தத்தைத் திருமுன்பே விண்ணப்பஞ் செய்யவேண்டும்படியாகக் காணும் இவர் ஸம்ஸாரத்தை வெறுத்தபடி.

எம்பார், ' உன்னைப்பிரிந்திருந்து படுகிறக்லேசத்தினளவல்ல உன்னையொழியப் புறம்பே பேறும் இழவுமாயிருக்கிற ஸம்ஸாரிகள் நடுவேயிருக்கிற விருப்பால் படுகிற க்லேசம்; இத்தைத் தவிர்த்தருள வேணுமென்கிறார் ' என்று அருளிச் செய்வர்

(க) [உஜ்ஜ்வலா தமஹாவாணிஃ - உத்பபாதகதாபாணி:] ராவணனோடு பொருந்தாமை பிறந்தபின்பு, நெருப்புப்பட்ட தரையில் கால்பாவாதாப்போலே அவ்விடம் அடிகொதித்துப் போநகாணுயிற்று; [மஹா - கதா] - அங்குள்ளாரில் (உ) " ந நஶேயம் நநமேயம்' என்னுதது தடியொன்றுமேயாயிற்று. [வ தசஸி-ஃ - சதுர்ப்பி:] அதுவும் எடுத்துத் தோளிலே வைக்கவேணுமே. அதுவும் வேண்டாதார் நால்வருமேயாயிற்று இத்தால் ஒருவன் ' பகவத்விரோதத்திலே நிலைநின்றான் ' என்று அறிந்தால் தன்னைக்கொண்டு அகலவிறே அடுப்பது.

ஆழ்வான் அங்ஙனன்றிக்கே, * ஏறாளுமிறையோனில் தம்முடைய ஆற்றாமைக்குக் கூட்டாவார் உண்டோ ? என்று லோகவ்ருத்தாந்தத்தை அந்வேஷித்து ஸம்ஸாரிகளைப் பார்த்தார் ; அவர்கள், தாம் இவ்விஷயத்தில் ப்ரவணராயிருக்கிறாப்போலே ஸப்தாதிவிஷயங்களிலே ப்ரவணராய், அவற்றினுடைய பேறிழவுகளே லாபாலாபமாம்படி யிருந்தார்கள் ; வாளேறுகாணத் தேளேறுமாய்ந்து, அத்தைக்கண்டவாறே தம் இழவை மறந்தார் ; இவர்களுடைய இழவே நெஞ்சிலேபட்டது; ஸர்வேஶ்வரனைப் பார்த்தார் : அவன் ஸர்வஜ்ஞனாய் ஸர்வஶக்தியாய்ப் பரமோதாரனாய் எல்லாருடைய ரக்ஷணத்திலே தீக்ஷித்திருக்குமவனாய் ஸர்வாபராதஸஹனாய் ஸர்வநியந்தாவா

(க) ரா-யு-கசு-கஅ (உ) ரா-யு-ரு-சு-கக

யிருந்தான் ; அவன்படி இதுவாயிருக்க, இவை இப்படி நோவுபடு கைக்கு இவ்விடம் தன்னாசுநாடோ? என்று பார்த்து, 'நீ ஸர்வேஶ்வரனும் பரமக்ருபாவானும் ப்ராப்தனுமாய் இவற்றின் க்லேஶம் அறிந்து பரிஹரிக்கைக்கு ஈடான ஜ்ஞாநஶக்தியை யுடையையுமாயிருக்க, இவை இங்ஙனே கிடந்து நோவுபடுகை போருமோ? இவற்றைக் கரைமரஞ்சேர்க்கவேணும்' என்று அவன் திருவடிகளைப் பிடிக்க, "நம்மால் செய்யலாவதுண்டோ? இவை சேதநரானபின்பு இவைதனக்கே ருசியுண்டாகவேணுமே; நாம் கொடுக்கிற விது புருஷார்த்தமாகவேணுமே; புருஷன் அர்த்திக்கக் கொடுக்குமதிறே புருஷார்த்தமாவது; அசித்தாய் நாம் நினைத்தபடி கார்யங்கொள்ளுகிறோமல்லோமே; இவற்றுக்கு நம்பக்கலிலே ருசி பிறக்கைக்கு நாம் பார்த்துவைத்த வழிகளையடையத் தப்பினபின்பு நம்மாற் செய்யலாவதில்லை காணும்; நீர் இத்தை விடும்" என்று ஸமாதாநம்பண்ண, 'நீ பண்ணின இது பரிஹாரமாய் நான் ஸமாஹிதனாவது 'இவை தங்கார்யத்துக்குத் தாம்கடவவாய் நோவுபடுகிறன' என்று உன்னால் சொல்லலாமன்றன்றோ'? என்ன, 'இவை சேதநராகையாலே இவற்றின் வாசியறியவேணுமென்று நம்மை ஒருதட்டும் ஸம்ஸாரிகளை ஒருதட்டுமாகவைத்து உங்களுக்குவேண்டிற்றொன்றைக் கொள்ளுங்கோள்" என்ன, ஸம்ஸாரிகள் இருந்த தட்டு தாழ்ந்திருக்கையாலே அத்தட்டை 'அமையும்' என்று பற்றிற்றின; நாமும் ஆந்தனையும்பார்த்து முடியாமைகாணும் கைவாங்கிற்று; இனி நம்மாற் செய்யலாவதில்லை; இனி நீரும் இத்தைவிடும்" என்ன, 'ஆகில், உன்னையொழியப் புறம்பே பேறும் இழவுமாயிருக்கிற இவர்கள் நடுவில் நின்றும் என்னை முன்னம் வாங்கவேணும்' என்ன, 'முன்பே உம்மை வாங்கினோமே; ஸம்ஸாரிகளோடு பொருந்தாதபடி பண்ணினோமாகில், ஸம்ஸாராநுஸந்தாநத்தாலே வந்த க்லேஶமெல்லாம் போம்படி உம்முடைய இருப்பு இதுகாணும்' என்று பரமபதத்தில் அயர்வறுமமரர்கள் அடிமைசெய்யப் பெரியபிராட்டியாரும் தாமுமாக வ்யாவ்ருத்தமாக இருக்கிற இருப்பைக் காட்டித்தந்து 'அங்கே உம்முடைய நெஞ்சு ப்ரவணமாம்படி பண்ணினோமாகில், இனி உமக்குப் பேற்றுக்குக் குவாலுண்டோ? நாம் செய்யவேண்டுவதென்?' என்ன, இவை யிரண்டையும் அநுஸந்தித்து தரித்து க்ருதார்த்தராய்த் தலைக்கட்டுகிறார்" என்று பணிக்கும்.

“மையகண்ணாள் மலர்மேலுறைவாளுறைமார்பினன் செய்ய கோலத்தடங்கண்ணன் விண்ணோர் பெருமான் தன்னை” என்று கண்டு அநுபவித்தாரிறே; ஆழ்வான் தான் ஓரிடத்தே வழிபோகா நிற்க, ஒருஸர்ப்பம் தவளையைப் பிடித்துக் கூப்பிடாநிற்க, ‘இது ஆர் அறியக் கூப்பிடுகிறது?’ என்று மோஹித்தானும்; இவ்வாழ்வான் ப்ரக்ருதிக்குச் சேருமே இவர் நிர்வாஹமும்.

ஈடு;—முதற்பாட்டு. உன்னையொழியப் புறம்பே பேறும் இழவுமாயிருக்கிற இவர்கள் நடுவில்நின்றும் நான் உன்திருவடிகளிலே வந்துகிட்டும்படி எனக்கு இஶ்ஶரீர விஶ்லேஷத்தைப் பண்ணித் தந்தருளவேணும் என்கிறார்.

நண்ணாதார்முறுவலிப்ப நல்லுற்றார்கரைந்தேங்க *
எண்ணாராத்துயர்விளைக்கு மிவையென்னவுலகியற்கை *
கண்ணாளா! கடல்கடைந்தாயுனகழற்கேவரும்பரிசு *
தண்ணாவாதடியேனைப் பணிகண்டாய்சாமாறே. (க)

ப;—முதற்பாட்டில், ‘ஸம்ஸாரிகள் படுகிற து:க்கம் அஸஹ்யமாயிரா நின்றது; ஆனபின்பு, ஆஶ்ரிதர்க்கு அருந்தொழில் செய்தும் அபேக்ஷிதங் கொடுக்கும் நீ இத்து:க்கங்காணாதபடி என்னை ஶரீரவிஶ்லேஷம் பிறப்பிக்கவேணும்’ என்கிறார்.

நண்ணாதார்—ஶாத்ரவத்தாலே இவனை அணுகியிராதவர்கள்
முறுவலிப்ப—(இவன் அநர்த்தத்துக்கு ப்ரீதராய்) ஸ்மிதம்பண்ணும்படியாகவும்
நல் உற்றார்—ஸ்நேஹத்தாலே கிட்டியிருக்கிற பந்துக்கள்
கரைந்து ஏங்க—இவன் அநர்த்தத்துக்கு பரிதிலராய் “என்னாகிறதோ” என்று ஏங்கி க்லேஶிக்கவும்
எண் ஆரா—எண்ணுதலில் அடங்காத
துயர்—து:கங்களை
விளைக்கும்—(தன்னில்தான்) விளைத்துக்கொண்டுபோருகிற
இவை உலகியற்கை—இந்த லோகயாத்ரைகள்
என்ன—என்னாயிருக்கிறன?
கண்ணாளா—(நிருபாதிகநிர்வாஹகனாகையாலே) காருணிகனாய்
கடல் கடைந்தாய்—(ப்ரயோஜநாந்தரங்களை வேண்டிலும்) கடலைக் கடைந்துகொடுக்கும் ஸ்வபாவத்தையுடையவனே! (இந்த லோகக்லேஶம் காணாதே)
உன கழற்கே—ப்ராப்தனான உன் திருவடிகளுக்கே யுறுப்பாய்
வரும் பரிசு—நான் வரும்படி
தண்ணாவாது—விளம்பியாதே

அடியேனை—(உனக்கேஶேஷபூதனை) என்னை
சாமாறு—ஶரீரவிஶ்லேஷம் பிறக்கும்படி

பணிகண்டாய்—(க) "அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்கிறகணக்கிலே ஒருவார்த்தை அருளிச்செய்யவேணும்.

ஸர்வபாபஶப்தத்திலே ஶரீரமும் அந்தர்ப்பூதமென்று கருத்து. கண்ணன்—கண்ணையுடைய ஆளனென்று, க்ருபையையுடைய நிர்வாஹகனென்றபடி. (க)

ஆறு;—'க்ருஹ க்ஷேத்ர தநாதி விஷய ஸ்ப்ருஹையாலே தத்பஹரணாத்யநிஷ்டங்களைப் பண்ண ப்ரதிகூலர் உகக்கவும், அநுகூலர் இன்னாதாகவும், பிறர்க்கு து:கங்களையே விளைத்து அந்யபரமாய், எம்பெருமான் திறத்துப் படக்கடவதன்றியே யிருந்த இந்த லோகப்ரஸ்தாநம் இருந்தபடியென்! இந்தலோகத்தோடு எனக்கு இருப்பு அரிது; ஆனபின்பு, ஆஶ்ரிதஸமீஹித நிர்வர்த்தநைக ஸ்வபாவமாய் அபரிமிதகாருண்ய பரிபூர்ணமாய் அதிஶீதளமான உன்னுடைய திருக்கண்களாலே என்னைக் குளிரப்பார்த்தருளி, இவர்கள் நடுவில்நின்றும் உன்திருவடிகளிலே என்னை வாங்கியருளுதல், அன்றியே சடக்கென என்னை முடித்தருளுதல் செய்யவேணும்' என்று அபேக்ஷிக்கிறார். (க)

ஈடு;—இரண்டாம்பாட்டு. "எண்ணாராத்துயர்" என்று திரளச்சொன்னார், முதற்பாட்டிலே; அவற்றிலே சிலவகைகளைச் சொல்லி விஷண்ணராய், 'இவர்கள் து:கத்தைப்போக்காயாகில் என்னை உன் திருவடிகளிலே அழைத்தருளவேணும்' என்கிறார்.

சாமாறும்கெடுமாறும் தமருற்றார்தலைத்தலைப்பெய்து *
ஏமாறிக்கிடந்தலற்று மிவையென்னவுலகியற்கை *
ஆமாறொன்றறியேன் நானரவணையாயம்மானே *
கூமாறேவிரைகண்டா யடியேனைக்குறிக்கொண்டே. (உ)

ப;—அநந்தரம், லௌகிகக்லேசம் என்னாய் முடியப்புகுகிறது? என்று அறிகிறிலேன்; நிருபாதிகஶேஷியான நீ என்னை அழைக்கும்படி விரையவேணும் என்கிறார்.

(க) கீ-சஅ-கூசு.

சாமாறும்—(சிரகாலம் ஜீவிக்கவிருக்க மத்யே) சாகிற ப்ரகாரமும்
கெடுமாறும்—(ஐஶ்வர்யத்தைப்பாரிக்க அது) நசிக்கிற ப்ரகாரமும் (இதடியாக)
தமர்—தமரான ஜ்ஞாதிகளும்
உற்றார்—உற்றாரான ஸம்பந்திகளும்
தலைத்தலைப்பெய்து—ஒருவர்க்கொருவர் மேல்விழுந்து
ஏமாறி—ஏங்குதலற்று
கிடந்து—கிடந்து
அலற்றும்—கூப்பிடுகிற கூப்பீடும் ஆகிற
இவை—இவை
என்ன உலகியற்கை—என்ன லோகயாத்ரைகளிருக்கிறனதான்?
நான்—நான்
ஆம் ஆறு—இது என்னளவிலேயாய் முடியப்புகுகிற ப்ரகாரம்
ஒன்று—ஒன்றும்
அறியேன்—அறிகிறிலேன்.
அரவணையாய்—ஶேஷபூதனை அநந்தனை ஶேஷ வ்ருத்தி கொள்ளுமவனாய்
அம்மானே—அதுபோலே எல்லாரோடும் உறவொத்த ஸ்வாமியானவனே!
அடியேனை—ஶேஷபூதனை என்னை
குறிக்கொண்டு—(து:கஸஹனல்லன்) என்று குறிக்கொண்டு
கூமாறு—அழைக்கும்படி
விரைகண்டாய்—விரையவேணும்.
ஏமாற்றம்—க்லேசமாகவுமாம்.
தலைத்தலைப்பெய்தல்—தலையோடு தலை சேர்த்தலாகவுமாம். (உ)

ஆறு;—(சாமாறும்.) "உன்னைக் காணப்பெறுகிறிலோம்" என்று அலற்றாதே, புத்ராதிமரணவிநாஶங்கள் காரணமாகத் தமர் உற்றார் தலைத்தலைப்பெய்து ஏங்கிக்கிடந்து அலற்றும் இவை என்ன உலகியற்கை? நானும் இங்கே லௌகிகரைப்போலேயாகில் செய்வதென்? ஆஶ்ரித ஸம்ஶ்லேஷைகபோகனே! பிரானே! 'நம் அடியான் இவன்' என்று அடியேனை உன் திருவுள்ளத்திலேகொண்டு ஈண்டென என்னைத்திருவடிகளிலே வாங்கியருளவேணுமென்கிறார்.

ஈடு;—அவ;—மூன்றாம் பாட்டு. ஆபிஜாத்யாதிக ளெல்லாம் கிடக்க, இவை முடிகிறபடியைக் கண்டு பொறுக்கமாட்டுகிறிலேன்; து:க்கந்தமில்லாத உன் திருவடிகளிலே அடிமைகொள்ள வேணும் என்கிறார்.

கொண்டாட்டும்குலம்புனைவும் தமருற்றார்விழுநிதியும் *
வண்டார்பூங்குழலாளும் மனையொழியவுயிர்மாய்தல் *
கண்டாற்றேனுலகியற்கை கடல்வண்ணா! அடியேனை *
பண்டேபோற்கருதாதுன்னடிக்கே கூய்ப்பணிகொள்ளே. (ந)

ப ;—அநந்தரம், தாங்கள் நன்மையாக நினைத்திருக்கிறவை யொழிந்து போகத் தாங்கள் நசிக்கும்படி கண்டு பொறுக்கமாட்டுகிறிலேன் ; அபரிச்சிந்ந ஸௌந்தர்யனான உன் திருவடிகளிலே அழைத்து அடிமைகொள்ளவேணும் என்கிறார்.

கொண்டாட்டும்—ஸம்பத்தடியாக நாட்டார் ஆரோபித்துச் சொல்லும் கொண்டாட்டமும்
குலம்புனைவும்—(இல்லாத குலத்தை யேறிட்டுக்கொண்ட) ஆபிஜாத்யாபிமாநமும்
தமர்—(ஐஶ்வர்யம் கண்டு வந்த) ஜ்ஞாதிகளும்
உற்றார்—ஸம்பந்திகளும் (இதுக்கடியான)
விழுநிதியும்—சீரிய அர்த்தஸஞ்சயமும் (அதடியாக ஸ்வீகரித்த)
வண்டு ஆர் பூ குழலாளும்—வண்டு நிறைந்தபூமாறுதகுழலை யுடையளாகையாலே போக்யபூதையான ஸ்த்ரீயும்
மனை—போகஸ்த்தாநமாம்படி விலக்ஷணமாக எடுத்தமனையும்
ஒழிய—(தன்னைவிட்டுக்) குறியழியா மலிருக்க
உயிர்மாய்தல்—ப்ராணவிநாஶம் பிறக்கையாகிற
உலகியற்கை—இந்த லோகயாத்ரை
கண்டு—கண்டு
ஆற்றேன்—பொறுக்க மாட்டுகிறிலேன்!
கடல்வண்ணா—கடல்போல அளவிறந்த வடிவழகை யுடையவனே!
அடியேனை—(உன்வடிவழகுக்குத் தோற்று) அடிமைபுகுந்த என்னை
பண்டே போல்—(உன்னைப்பிரிந்து கூப்பிட்ட) பண்டுபோலே
கருதாது—நினைத்திராதே
உன் அடிக்கே—உன் திருவடிகளுக் கேயாம்படி
கூவி—அழைத்து
பணிகொள்—அடிமை கொண்டருள வேணும். (ந)

ஆறு ; —(கொண்டாட்டும்.) மரணதசையிலும் “ஸம்பாவநாபிஜநஜ்ஞாதி பந்துதநகளத்ரபவநாதிகளை யிழந்தோம்” என்று விஷண்ணராய், உன்திறத்துப் படாதே யிருக்கிற இந்த லோகத்தாருடைய ப்ரக்ருதியைக் கண்டு நான் படுகிற வ்யஸநம், உன்னைப் பிரிந்து நான் பண்டுபட்ட வ்யஸநம்போலன்று ; அதிதுஸ்ஸஹந்

கிடாய். அபரிச்சேத்ய மாஹாத்ம்யனானவனே! இந்த வ்யஸநத்தில் நின்றும் மீண்ட உன் திருவடிகளிலே கூவிப் பணிகொண்டருளவேணும் என்கிறார். (௫)

ஈடு ;—அவ ;—நாலாம்பாட்டு சேதநர், ஐஶ்வர்யத்தை விரும்பினால் அது விநாஶஹேதுவாகக் காணா நிற்கச்செய்தே, திரியவும் அந்த ஐஶ்வர்யத்தை விரும்புகையே ஸ்வபாவமாம்படி யிருக்கிற இதுக்கு ஹேது ஏதோ? நான் இதுகண்டு பொறுக்கமாட்டுகிறிலேன் ; என்னை முன்னம் இவர்கள் நடுவில்நின்றும் வாங்கவேணும் என்கிறார்.

கொள்ளென்றுகிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாக *
கொள்ளென்றுதமம்மூடும் இவையென்னவுலகியற்கை *
வள்ளலே! மணிவண்ணா! உனகழற்கேவரும்பரிசு *
வள்ளல்செய்தடியேனை உனதருளால்வாங்காயே. (௪)

ப ;—அநந்தரம் நஶ்வரமான ஐஶ்வர்யத்தை ஆதரிக்கிற லோகயாத்ரையைக் காணாதபடி உன் வடிவை எனக்கு உபகரித்த மஹோதாரனான நீ என்னை அங்கே ஸ்வீகரிக்கிற ஔதார்யத்தையும் பண்ணவேணும் என்கிறார்.

கொள் என்று—“என்னைக்கொள் என்னைக்கொள்” என்று

கிளர்ந்து எழுந்த—மேன்மேலென அபிவ்ருத்தமாய்த் தோற்றுகிற

பெரு செல்வம்—பெரிய ஐஶ்வர்யம்

நெருப்பாக—(விநாஶாதிகளாலும்ப்ரதிபக்ஷங்களபிபவிக்கைக்கு ஹேதுவாகையாலும் பரிதாபகரமாய்க் கொண்டு) அக்நிகல்பமாகச் செய்தே (வாஸநையாலும் சாபல்யத்தாலும்)

கொள் என்று—(‘பின்னையும் இத்தையே) ஸ்வீகரி’ என்று

தமம் மூடும்—அஜ்ஞாநதமஸ்ஸானது அபிபவியாநிற்கிற

இவை—இவை

என்ன உலகியற்கை—என்ன லோகயாத்ரைகள்?

வள்ளலே—நிரதிஶயௌதார்யத்தையுடையையாய்

மணி வண்ணா—நீலரத்நம்போலே தர்ஶநீயமான வடிவையுடையவனே!

உனகழற்கே—(ஏவம்பூதனான) உன் திருவடிகளிலே

வரும் பரிசு—வரும்படி

வள்ளல் செய்து—இதுக்கென்னவும் ஓர் ஔதார்ய விஶேஷத்தைப் பண்ணி

அடியேனை—(உனக்கே அநந்யார்ஹனான) என்னை

உனது அருளால்—உன்க்ருபையாலே

வாங்காய் கைக்கொண்டருளவேணும்.

ஆறு ;—(கொள்ளென்று.) உன்னை ஆசைப்படாதே, அதி க்ஷுத்ரமாய் அநர்த்தகரமாயிருந்த ஐச்வர்யத்தை ஸ்வாஜ்ஞதை யாலே ஆசைப்படுகிற இந்த லௌகிகரோடு எனக்குள்ள ஸஹவாஸ த்தைத் தவிர்த்து, பரமோதாரனே! பரமகாருண்யத்தாலே ஆச்ரித ஸுலபனானவனே ! உன்னுடைய பரமௌதார்யத்தாலும் பரமகாருண்யத்தாலும் அடியேனை உனகழற்கே வரும் பரிசு வாங்கியருள வேணும் என்கிறார். (௪)

ஈடு ;—அவ ;—அஞ்சாம் பாட்டு. ஜந்மஜராமரணாதிகளாலே நோவுபடுகிற ஸம்ஸாரிகள் நடுவினின்றும், இது நடையாடாத தேச த்திலே அழைத்துக்கொண்டருளவேணும் என்கிறார்.

வாங்குநீர்மலருலகில் நிற்பனவும்திரிவனவும் *
ஆங்குயிர்கள்பிறப்பிறப்புப் பிணிமூப்பால்தகர்ப்புண்ணும் *
ஈங்கிதன்மேல்வெந்நரக மிவையென்னவுலகியற்கை *
வாங்கெனைநீமணிவண்ணா! அடியேனைமறுக்கேலே. (௫)

ப ;—அநந்தரம், ஜந்மஜராமரணாதி க்லேசங்கள் நடையாடுகிற தேசத்தில் இராதபடி ஆச்ரிதஸுலபமான வடிவையுடைய நீ அங்கீகரிக்கவேணும் என்கிறார்.

வாங்கும்—(திரைக்குளகப்பட்ட பதார்த்தங்களை) உள்ளே வாங்கும்
நீர்—ஸமுத்ரஜலத்தையுடைய
மலருலகில்—விஸ்தீர்ணபூமியில்
நிற்பனவும்—நிற்பனவும்
திரிவனவும்—திரிவனவுமான
ஆங்கு—அந்தஸ்த்தலங்களிலே வர்த்திக்கிற
உயிர்கள்—ப்ராணாச்ரயமான ஆத்மாக்கள்
ஈங்கு—இவ்விடத்தில்
பிறப்பு இறப்பு பிணிமூப்பால் — ஜந்மமரணவ்யாதி ஜரைகளாலே
தகர்ப்புண்ணும்—நெருக்குண்டு நிற்கும் ;
இதன்மேல் —இதற்குமேல்
வெந்நரகம்—க்ரூரமான ரௌரவாதி நரகங்களாயிருக்கும் ;
இவை—இவை
என்ன உலகியற்கை—என்ன லோக யாத்ரைகள்;
மணி—(ஆச்ரிதர்க்கு முடிந்தாளலாம் படி) நீலரத்நம்போலே தர்சநீயமாய் ஸுலபமான
வண்ணா—வடிவையுடையவனே !
நீ—நீ
எனை—(இந்த து:க்கம் பொறுக்கமாட்டாத) என்னை
வாங்கு—அங்கீகரித்தருளவேணும் ;
அடியேனை—(உன் அடியேனான) என்னை
மறுக்கேல்—மறுகப்பண்ணாதேகொள்
மறுக்குதல்—கலக்குதல். (௫)

ஆறு ;—(வாங்கும்.) த்வத்விஶ்லேஷ து:க்கரன்றியே, ஜந்ம ஜராமரணாதி வ்யாத்யாதி து:க்கரான இவ்வாத்மாக்கள் வர்த்திக்கிற இந்தலோகத்தில் நின்றும் அடியேனை மறுகப்பண்ணாதே, ஈண்ட என்னை வாங்கியருளவேணும் என்கிறார். (௫)

ஈடு ;—அவ ;—ஆறாம் பாட்டு. ஸம்ஸாரிகளுடைய பகவத் வைமுக்யாதிதோஷங்களை அநுஸந்தித்து ஈஶ்வரனை இன்னாதாகை தவிர்ந்து, ஜீவநார்த்தமாகப் பரஹிம்ஸைபண்ணுகிற ஸம்ஸாரிகள் நடுவினின்றும் என்னை உன் திருவடிகளிலே அழைத்த ருளவேணு மென்கிறார்.

மறுக்கிவல்வலைப்படுத்திக் குமைத்திட்டுக்கொன்றுண்பர் *
அறப்பொருளையறிந்தோரா ரிவையென்னவுலகியற்கை *
வெறித்துளவமுடியானே! வினையேனையுனக்கடிமை
யறக்கொண்டாய் * இனியென்னாரமுதே! கூயருளாயே. (௬)

ப ;—அநந்தரம் பரபீடாகரமான ஸம்ஸாரஸ்வபாவத்தைக் காணாதபடி, நிரதிஶயபோக்யனான நீ என்னை அழைத்துக்கொண்டருளவேணுமென்கிறார்.

மறுக்கி—(பயஹேதுக்களான வார்த்தைகளைச் சொல்லி இவன் நெஞ்சைக்) கலக்கி (பயநிவ்ருத்திக்குத் தன்னையே தஞ்சமாகப் பற்றும்படி தன்வஶமாக)

வல்வலைப்படுத்தி—சிக்கென்ற வலையிலே அகப்படுத்தி

குமைத்திட்டு—(அவன் தன்பதார்த்தங்களை ஸ்வயமேவ நெகிழும்படி) பீடித்து

கொன்று—பின்தொடர்ந்தியறும்படி கொன்று

உண்பர்—தங்கள் வயிறு வளர்க்காநிற்பர்கள் ;

அறப்பொருளை—தர்மமாகிற ப்ரதம புருஷார்த்தத்தை

அறிந்து—அறிந்து

ஓரார்—(' இதுவே நமக்கு உஜ்ஜீவந ஹேது ' என்று) நிரூபியார் ;

இவை என்ன உலகியற்கை—இவை என்ன லோக யாத்ரைகள் ?

வெறி துளவம்—பரிமளோத்தரமான திருத்துழாயை யுடைத்தான

முடியானே—திருமுடியை யுடையவனே ! (இந்த போக்யதையைக் காட்டி

வினையேனை—பாபமே நிரூபக மென்னலாம்படியான என்னை

உனக்கு—உனக்கு

அற—அநந்யார்ஹமாக

அடிமை கொண்டாய்—அடிமை கொண்டவனே

என்—எனக்கு

ஆர்—பரிபூர்ணமாய் நித்யபோக்யமான

அமுதே—அம்ருதமானவனே !

இனி—ஸம்ஸாரத்திலே அத்யந்தார்த்திபிறந்த பின்பு
கூயருளாய்—அழைத்துக்கொண்டருளவேணும்.

அறப்பொருளை யறிந்தோராரென்று—மிகவும் பொருளையே யறிந்து வேறொன்றையும் விசாரியா ரென்றுமாம். (௬)

ஆறு ;—(மறுக்கி.) என்னுடைய விஶேஷ தோஷாஸ்பதத்வத்தை ஒன்றும் பாராதே உன்னுடைய நிரவதிகஸௌந்தர்யாவிஷ்காரத்தாலே என்னை* தவ தாஸ்ய ஸுகைகஸங்கியாக்கி யருளினாய் ; இனி என்னாரமுதே! நிர்க்க்ருணராய் பரஹிம்ஸைகப்ரவ்ருத்திகராய் த்வதௌந்முக்யலேஶ ரஹிதராயிருந்த இவர்கள் நடுவில் நின்றும் ஈண்ட என்னை வாங்கியருளவேணும் என்கிறார். (௬)

ஈடு ;—அவ ;—ஏழாம் பாட்டு. அபேக்ஷிதம் அப்போதே கிட்டாமையாலே, ‘பேறு தம்மதான பின்பு தாமே யத்நம்பண்ணிவருகிறார்’ என்று நினைத்தானாகக்கொண்டு, “ஸகல பதார்த்தங்களும் த்வததீநமான பின்பு நீயே உன்னைக்கிட்டும்வழி பார்த்தருளவேணும்” என்கிறார்.

ஆயேயிவ்வுலகத்து நிற்பனவுந்திரிவனவும் *
நீயேமற்றொருபொருளு மின்றிநீநின்றமையால் *
நோயேமூப்பிறப்பிறப்புப் பிணியேயென்றிவையொழிய *
கூயேகொள்ளடியேனைக் கொடுவுலகங்காட்டேலே. (௭)

ப;—அநந்தரம், ஸர்வாத்மபூதனான நீ, க்ரூரமான து:க்கோத்தாஜகத்தைக் காணாதபடி என்னை அழைத்துக்கொண்டருளவேணும் என்கிறார்.

இ உலகத்து—இந்த லோகத்தில்
நிற்பனவும்—நிற்பனவும்
திரிவனவும்—திரிவனவும்
நீயே ஆய்—நீயே ஆய்
மற்று ஒருபொருளும்—வேறு ஒரு பதார்த்தமும்
இன்றி—இன்றி
நீ—நீ
நின்றமையால்—நின்றபடியாலே (ஸ்வஶரீரத்தில் வ்யாத்யாதிகளை ஶரீரி தானே ஶமிப்பிக்குமோபாதி)

நோயே—நோய்
மூப்பே—மூப்பு
பிறப்பே—பிறப்பு
இறப்பே—இறப்பு
பிணியே—பிணி
என்ற—என்று சொல்லப்பட்டுத் தனித்தனியே து:க்கத்துக்கு நிரபேக்ஷஹேதுவான
இவை—இவை
ஒழிய—போம்படியாக
அடியேனை—(உனக்கு) அடியேனான என்னை

கூயேகொள்—அழைத்துக்கொண்டருளவேணும்; (இவற்றாலே ஈடுபடுகையாலே)

கொடு-கொடிதாய்(க்லேஶோத்தரமான

உலகம்—ஜகத்தை

காட்டேல்—(என் கண்ணுக்கு) இலக்காக்காதொழியவேணும்

மூப்பு பிறப்பு என்கிற சொற்கள்—ஸந்திகார்யத்தாலே, புகரம் மறைந்து மூப்பிறப்பு என்று கிடக்கிறது. பிணியென்று—தாரித்ர்யத்துக்கும் பேர். (எ)

ஆறு;—(ஆயே) த்வதாத்மகமாகையாலே த்வச்சேஷைகரஸமாயிருக்கச்செய்தே - த்வச்சேஷைகரஸத்வஜ்ஞாநரஹிதமாய் த்வத்விஶ்லேஷைக துக்கத்வாரஹிதமுமாய் ஜந்மஜராவ்யாதி மரணாதி துக்கமுமாயிருந்த இந்தப்பொல்லாத லோகத்தை என் கண்ணால் காணமாட்டுகிறிலேன். இங்கு நின்றும் ஈண்ட அடியேனை வாங்கியருளவேணு மென்கிறார் (எ)

ஈடு;—அவ;—எட்டாம்பாட்டு. நாம் செய்யப்புக, நீர் "வேண்டா" என்றவாறேயன்றோ தவிர்ந்தது; இதுக்கு நம்மைக் காற்கட்டவேணுமோ? என்ன, 'செய்யக்கடவதாகில் அது என்று செய்வது?' என்கிறார். "எம்மாவீட்டுத் திறமும் செப்பம்" என்றாரே

காட்டிநீகரந்துமிழும் நிலம்நீர்தீவிசும்புகால் *
ஈட்டிநீவைத்தமைத்த இமையோர்வாழ்தனிமுட்டை *
கோட்டையினிற்கழித்தென்னை உன்கொழுஞ்சோதியுயரத்து *
கூட்டரியதிருவடிக்க ளெஞ்ஞான்றுகூட்டுதியே. (அ)

ப;—அநந்தரம் 'ஸகல ஜகத்காரணபூதனான நீ, இந்த ஜகதந்தர்ப்பாவத்தைக் கழித்து என்னை உன் திருவடிகளிலே கூட்டுவது என்று?' என்கிறார்.

காட்டி—(பூர்வஸ்ருஷ்டியிலே) ப்ரகாஶிப்பித்து

நீ—நிரபேக்ஷகாரணபூதனான நீ

கரந்து—(ஸம்ஹ்ருத்யவஸ்த்தையிலே (க) "[illegible] - [illegible] தி- தம: - ஏகீபவதி" என்கிறபடியே நாமரூப விபாகரஹிதமாம்படி ஸ்வரூபத்திலே) மறைத்து

உமிழும் — (ஸ்ருஷ்டிதசையிலே (உ) "ஸூர்யா... யதாபூர்வமகல்பயத்" என்கிற படியே) உண்ட துமிழ்ந்தாற்போலே உருக்குலையாதபடி ஸ்ருஷ்டிக்கும்

நிலம் நீர் தீ விசும்பு கால் } ப்ருதிவ்யாதிபூதங்களான்ஐயும்

ஈட்டி—(பஞ்சீகரணப்ரகாரத்தாலே) திரட்டி

வைத்து—(இவற்றைப் புறவாயிலே ஆவரணமாகவும்) வைத்து (அகவாயிலே)

(க) ஸுபால உ. (உ) தை-நா-க.

இமையோர்—ப்ரஹ்மாதிகளான அநிமிஷர்க்கு
வாழ்—வாஸஸ்த்தாநமாம்படி
அமைத்த—சமைத்த
தனி முட்டை—அத்விதீயமான அண்டமாகிற
கோட்டையினை—முட்டுக்கோட்டையை
கழித்து—கழித்து
என்னை—(இதிலிருப்பு து:க்கமாய் உன்னைப் ப்ராபிக்கையிலே) ஆசையுடைய என்னை
உன் கொழுஞ்சோதி—உனக்கு அஸாதாரணமாய் அதிஶயித தேஜோரூபமாய்
உயர்த்து—(க) “விஶ்வத: ப்ருஷ்டே ஷு ஸர்வத: ப்ருஷ்டேஷு விஶ்வத:ப்ருஷ்டேஷு ஸர்வத: ப்ருஷ்டேஷு” என்கிறபடியே எல்லாவற்றுக்கும்) மேலான பரமபதத்திலே (விதிஶிவஸநகாதிகளுக்கும் அத்யந்த தூரமாம்படி)
கூடு அரிய—பெறுதற்கு அரிதான
திருவடிகள்—திருவடிகளை
எஞ்ஞான்று—எக்காலம்
கூட்டுதி—கூட்டுதி ?
காலம அறிந்தேனாகில் தரித்திருக்கலாமென்று கருத்து.

‘ காந்துமிழுமென்று—உண்டுமிழ்ந்து ’ என்றுஞ் சொல்லுவர்கள். (௮)

ஆறு ;—(காட்டி.) உன்னுடைய ஸ்ருஷ்ட்யாதி லீலைக்கு உபகரணபூதமாய் த்வததிஷ்ட்டித ப்ருதிவ்யாதி பஞ்சபூதாரப்தமாய் ப்ராக்ருதவிஷயைகபோக ப்ரஹ்மாதிக்ஷேத்ரஜ்ஞவர்க்க பரிபூர்ணமாயிருந்த அண்டத்தைக் கழித்து, நிரவதிகதேஜோமயமாய் ஸத்வகுணாத்மகமாய் ப்ரக்ருதே: பரஸ்தாத்வர்த்தமாநமான ஸ்ரீவைகுண்டத்திலே கொண்டுபோய் ஶ்வயத்நதுர்லபமான உன் திருவடிகளிலே என்னை என்று கூட்டுவது ? என்கிறார். (௮)

ஈடு ;—ஒன்பதாம் பாட்டு. இவருடைய ஸம்ஸாராநுஸந்தாநத்தாலேவந்த வ்யஸநமெல்லாம் தீரும்படி, திருநாட்டிலிருந்த இருப்பைக் காட்டியருள, கண்டு அநுபவிக்கப் பெற்றேனென்று த்ருப்தராகிறார்.

கூட்டுதிநின்குரைகழல்க ளிமையோரும்தொழாவகைசெய்து *
ஆட்டுதிநீஅரவணையா யடியேனுமதுவறிவன் *
வேட்கையெல்லாம்விடுத்தென்னை உன்திருவடியேசுமந்துழல *
கூட்டரியதிருவடிக்கள் கூட்டினைநான்கண்டேனே. (௯)

(க) சாந்தோ-௩-௧௩.

ப ;—அநந்தரம், இவருடைய ஆர்த்தி தீரும்படி பரமபதத்திலிருப்பை ப்ரகாசிப்பிக்க. ஆஶ்ரிதஸம்ஶ்லேஷை ஸ்வபாவனான நீ என்னை உன் திருவடிகளை ப்ராபிப்பிக்கக் கண்டேனென்று த்ருப்தராகிறார்.

நீ—(ஸர்வஶக்தியான) நீ (கூட்ட நினைத்தாரை அளவிலிகளேயாகிலும்)
குரை—நிரதிஶயபோக்யமான
நின் கழல்கள்—உன் திருவடிகளை
கூட்டுதி—சேர்த்துக்கொள்ளுதி ; (ஸ்வயத்நத்தாலே காண நினைக்கில்)
இமையோரும்—(விஶதஜ்ஞாநரான) தேவர்களும்
தொழாவகை—கண்டநுபவியாதபடி
செய்து—பண்ணி
ஆட்டுதி—அலமருவிப்புதி ;
அரவு—(ஆஶ்ரிதர்க்கு அக்ரகண்யனான) திருவநந்தாழ்வானை
அணையாய்—படுக்கையாகக் கொண்டவனே !
அது—ஆஶ்ரிதாநாஶ்ரிதவிஷயத்தில் ஸௌலப்யதௌர்லப்யரூபமான ஸ்வபாவத்தை
அடியேனும்—ஶேஷபூதனான நானும்
அறிவன்—அறிவன் ; (எங்ஙனே யென்னில்)

வேட்கை எல்லாம்—இதர விஷயங்களில் அபிநிவேஶத்தை யெல்லாம்
விடுத்து—ஸவாஸநமாகக் கழித்து
என்னை – உன்னை யொழியச்செல்லாத ஆசையையுடையேனை என்னை
திரு—நிரதிஶயபோக்யமான
உன் அடி—உன் திருவடிகளை
சுமந்து—ஶிரஸாவஹித்து
உழல—(க)"யெ நயெ நஹா காரு வு தி- யோநயோநதாதகச் சதி" என்கிறபடியே அநுஸஞ்சாரணம் பண்ணும்படியாக
கூட்ட—(எத்தனையேனும் அளவுடையார்க்கும்) கூட்டிக்கொள்ள
அரிய—அரிய
திருவடிக்கள்—திருவடிகளிலே
கூட்டினை—கூட்டிக்கொண்டாய் ;
நான்—(ப்ராப்தாவான) நான்
கண்டேன்—(இந்தப்ராப்யத்தை) அபரோக்ஷித்து அநுபவித்தேன்
ஏ—நிஶ்சிதமென்று கருத்து. (௬)

ஆறு ;—(கூட்டுதி.) ப்ரஹ்மாதிகளுக்குங்கூட துர்லபனாயிருந்து வைத்து, எத்தனையேனும் தண்ணியரேயாகிலும் ஆஶ்ரிதரை உன் திருவடிகளோடே கூட்டுதி யென்னுமிடம் அடியேனுங்கூட அறியும்படி லோகத்திலே ப்ரதிதமா யிருக்குமதை, நீ என் பக்கலிலே செய்தருளக் கண்டேன். எங்ஙனே யென்னில் ;—ப்ராக்ருத விஷயைகபோக லௌகிக ஜநஸஹவாஸஜநித நிரவதிக து:கமெல்லாம் போம்படி, ப்ராக்ருதவிஷயவைராக்ய பூர்வகமாக என்னை உன்

(க) பரமஸம்ஹி-

திருவடியே சுமந்துழலக் கூட்டரிய திருவடிகளோடே கூட்டினாய் என்கிறார். (கூ)

ஈடு ;—பத்தாம்பாட்டு. கீழ்ப்பாட்டில், 'விடுத்து' என்றும் "கூட்டினை" என்றும் ப்ரஸ்துதமான பேற்றை, ப்ரீத்யாதிஶயத்தாலே "விட்டது இது, பற்றினது இது" என்று வ்யக்தமாக அருளிச்செய்கிறார்.

கண்டுகேட்டுற்றுமோந்துண் டுழலுமைங்கருவி
கண்டவின்பம் * தெரிவரிய வளவில்லாச்சிற்றின்பம் *
ஒண்டொடியாள்திருமகளும் நீயுமேநிலாநிற்ப *
கண்டசதிர்கண்டொழிந்தே னடைந்தேனுன்திருவடியே. (கo)

ப ;—அநந்தரம், உமக்கு இதரபுருஷார்த்தங்களைக் கழித்து பரமபுருஷார்த்தத்தைக் கூட்டின கணக்கென்னென்ன ; ஐஶ்வர்யகைவல்யங்களை நானே விட்டு, ஶ்ரிய:பதியான உன்னையே புருஷார்த்தமாக நிஶ்சயித்து ப்ராபிக்கும்படியானேன் என்கிறார்.

கண்டு—(ரூபகுணத்தைக்) கண்டும்
கேட்டு—(ஶப்தகுணத்தைக்) கேட்டும்
உற்று—(ஸ்பர்ஶகுணத்தைக்) கிட்டியும்
மோந்து—(கந்தகுணத்தை) மோந்தும்
உண்டு—(ரஸகுணத்தை) புஜித்தும்
உழலும்—(லப்தவிஷயத்தில் பசைபோராமல் ஸஜாதீயவிஷயந் தேடி) அலமாக்கும்
ஐங்கருவி—ஐந்திந்த்ரியங்களாலேயும்
கண்ட—பரிச்சேதித்து அநுபவித்த
இன்பம்—ஐஶ்வர்யஸுகமும்
தெரிவு—இந்த இந்த்ரியங்களுக்கு க்ரஹித்து அநுபவிக்க
அரிய—அரிதாய்
அளவில்லா—(இவ்வைஶ்வர்ய ஸுகத்திற்காட்டில் நித்யத்வாதிகளாலே) அபரிச்சிந்நமாய்
சிறு இன்பம்—பகவதநுபவத்தைப் பற்ற அத்யல்பமான ஆத்மாநுபவஸுகமும்
ஒண்தொடியாள்—விலக்ஷணமான முன்கைச்சரியை யுடையளாய்
திருமகளும்—ஸர்வஸம்பத்ஸம்ருத்த பூதை யாகையாலே திருவென்று சொல்லப்பட்ட நாரீணாமுத்தமையும்
நீயுமே—(புருஷோத்தமனான) நீயுமே
நிலாநிற்ப—(அந்த ஸம்பத்தும் ஆத்மஸ்வரூபமும் உபயப்ரகாரமுமாம்படி) ஒருபடிப்பட்டு நிற்கும்படியாக
கண்ட—நிரூபித்துவைத்த
சதிர்—நல்விரகை
கண்டு—அபரோக்ஷித்துக்கண்டு
ஒழிந்தேன்—(கேவலைஶ்வர்யத்தையும் கேவலாத்மாநுபவத்தையும்) ஒழிந்தேன் ;

உன் திருவடி—(ஸகல பதார்த்தமும் உனக்குள்ளேயாம்படி ப்ரிய.பதியாய் பரமபுரு ஷார்த்தபூதனுன) உன் திருவடிகளை அடைந்தேன்—(அநுபவமுகத்தாலே) ப்ராபித்தேன். (கo)

ஆறு ;—(கண்டு.) விஷயரஸங்களிலும், கைவல்யாநுபவரஸத்திலும் வைராக்யம் பிறந்தது எத்தாலே என்னில் ;—நித்யநிர்த்தோஷநிரவதிக கல்யாணகுணைகதாநராய் தனைவோஸிகராயிருந்த லக்ஷ்ம்யாதி திவ்யமஹிஷீ ஜநங்களும், ஸ்வபாவதஏவ நிரஸ்த ஸமஸ்தஸாம்ஸாரிகஸ்வபாவ த்வத்பரிசர்யைக போகரானஶேஷஶேஷாஶநாத்யஸங்க்யேய திவ்யபரிஜநங்களும், நீயுமேயாயிருந்த இந்த மநோஹரமான இருப்பைக்கண்டு, அந்த ஐஶ்வர்ய கைவல்யங்களையொழிந்து, தநேகபோக த்வத்பராங்முக ஜநஸஹவாஸ ஜநிதது:க்கமெல்லாம் போம்படி உன் திருவடிகளை அடைந்தேன் என்கிறார். கo

---

ஈடு ;—நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யஸித்தாரை இதுதானே அவன் திருவடிகளிலே சேர்க்கும் என்கிறார்.

திருவடியைநாரணனைக் கேசவனைப்பரஞ்சுடரை *
திருவடிசேர்வதுகருதிச் செழுங்குருகூர்ச்சடகோபன் *
திருவடிமேலுரைத்த தமிழாயிரத்துளிப்பத்தும் *
திருவடியேயடைவிக்கும் திருவடிசேர்ந்தொன்றுமினே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழி அப்யஸித்தவர்களை அவன் திருவடிகளை அடைவிக்குமென்று பலத்தை அருளிச்செய்கிறார்.

திருவடியை—ஸர்வஶேஷியாய் நாரணனை—ஶேஷித்வ நிர்வாஹகமான அந்தராத்மத்வத்தையுடையனாய் கேசவனை—ஶேஷபூதருடைய விரோதிகளைக்கேஶி நிரஸநம் பண்ணினாற்போலே போக்குமவனாய் பரஞ்சுடரை—(ஸம்பந்தத்தாலும் வாத்ஸல்யத்தாலும் விரோதி நிரஸநத்தாலும் ஸித்தமான) நிரதிஶயௌஜ்ஜ்வல்யத்தையுடைய க்ருஷ்ணனை உத்தேசித்து திருவடி—அவன் திருவடிகளை சேர்வது—பற்றவேணுமென்கிற கருதி—அபிஸந்தியை யுடையராய்க் கொண்டு செழும் குருகூர்—நிரதிஶய போக்யமான திருநகரிக்கு நிர்வாஹகரான

சடகோபன்—ஆழ்வார்
திருவடிமேல்—("பானடிமேல்" என்று ப்ராப்யமான) அவன் திருவடிகளின்மேலே
உரைத்த—அருளிச்செய்த
தமிழ் ஆயிரத்துள்—தமிழ் ஆயிரத்துள்
இப்பத்தும்—இப்பத்தும்
திருவடியே—அந்தத் திருவடிகளைத் தானே
அடைவிக்கும்—ப்ராபிப்பிக்கும் ; (இத் திருவாய்மொழியில் அந்வயமுடைய நீங்கள்)
திருவடி—அத்திருவடிகளை
சேர்ந்து—ப்ராபித்து
ஒன்றுமின்—(ப்ருதக் ஸ்த்திதியில்லாதபடி) அடிமைசெய்யப் பாருங்கோள்.

இது—நாலடித்தாழிசை ; கலிவிருத்தமுமாம். (கக)

ஆறு ;—(திருவடியை.) எம்பெருமானைக் கண்ட ப்ரீத்யதிசயத்தாலே அவனை யேத்தின இத்திருவாய்மொழி வல்லாரை, இத் திருவாய்மொழிதானே எம்பெருமான் திருவடிகளை யடைவிக்கும். திருவடிகளிலே திவ்யரேகைபோலே போய்ச் சேருங்கள் என்கிறார்.

நாலாம்பத்து ஒன்பதாம் திருவாய்மொழி வ்யாக்யாநங்கள் முற்றுபெற்றன.

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:.

பத்தாந்திருவாய்மொழி—ஒன்றுந்தேவும் : ப்ரவேஶம்.

ஆறு ;—(ஒன்றுந்தேவும்.) 'அவைஷ்ணவ ஜநஸஹவாஸத்திற்காட்டில் முடிகை நன்று' என்று 'ஈண்ட என்னை முடித்தருள வேணும்' என்று எம்பெருமானை அபேக்ஷிக்கச் செய்தேயும் அவன் செய்தருளாமையாலே, 'இனி இவர்களோடுள்ள ஸஹவாஸம் அவர்ஜ்ஜநீயமான பின்பு இவர்களை வைஷ்ணவர்களாக்கிக் கொண்டாகிலும் இவர்களோடே கூட வர்த்திப்போம்' என்று பார்த்து, எம்பெருமானுடைய ஸர்வேஶ்வரத்வ ஸர்வஸுலபத்வாதிகளை உபபாதித்து, அவனை ஆஶ்ரயியுங்கோள் என்று அவர்களுக்கு அருளிச்செய்கிறார். எம்பெருமானைக் கண்டு ஸம்ஶ்லேஷித்த பக்ஷத்தில் அந்த ஸம்ஶ்லேஷஜநித ப்ரீத்யதிஶயத்தாலும், எம்பெருமானை இழந்து கிடக்கிற ஆத்மாக்கள் பக்கலுள்ள க்ருபையாலும், 'எம்பெருமானை ஆஶ்ரயியுங்கோள்' என்று அவர்களைக் குறித்து அருளிச்செய்கிறாரென்னுமது. *

ப ;—பத்தாந் திருவாய்மொழியில், கீழ் - ஸம்ஸாரதோஷாநுஸந்தாந பூர்வகமாக பகவத்ப்ராப்தியை ப்ரார்த்தித்தவர் ப்ராப்யமான பரதசையை அவன் ஆவிஷ்கரிக்கக் கண்டு ஸந்துஷ்டராய். 'இப்பரத்வம் அறியாமல் ஸம்ஸாரிகள் இழக்கவொண்ணாது' என்று பார்த்து, ப்ராப்யத்வபர்யந்தமான அவனுடைய பரத்வத்தை உபதேசிப்பதாக உத்யோகித்து, அதுக்கு உபகாரகமான ஸர்வகாரணத்வத்தையும், காரணத்வாநுகுணமான நித்யகல்யாணகுண யோகத்தையும், கார்யரூபமான ஜகத்விஷயரக்ஷணவ்யாபாரம் பரத்வாவஹமான படியையும், ஸோபபாதகமான ஸர்வேஶ்வரத்வத்தையும், அந்த ஈஶ்வரத்வப்ரகாஶகமான ஸௌலப்யாதிஶயத்தையும் ஸம்ஸாரநிர்வஹண ஸாமர்த்த்யத்தையும், பரத்வப்ரகாஶகமான கருடத்வஜத்வத்தையும், அல்லாத தேவதைகள் பலப்ரதத்வத்துக்கும் ஶக்த்யாதாயகன் அவனேயென்னுமிடத்தையும், அந்யதாவ போதஜ்ஞன அவன் வர்த்திக்கிற தேசமே உஜ்ஜீவநார்த்திகளுக்கு ஜ்ஞாதவ்யமாம்படியையும், ஸர்வஶரீரியான அவன் திருவடிகளில் கைங்கர்யமே உத்தேஶ்யமான படியையும் உபதேசித்து, இப்படி பரமப்ராப்யபூதனான ஈஶ்வரனுடைய போக்யதாதிஶயத்தாலே இவ்வாத்மாவினுடைய ததேகப்ரியத்வத்தை உபபாதித்துத் தலைக்கட்டுகிறார். *

ஈடு ;—ஒருநிலத்திலே ஒருகூறு உவர்ந்துகிடக்க மற்றைக்கூறு விளைவதறுப்பதாமாபோலே, நித்யவிபூதியும் நித்யஸூரிகளும் பகவதநுபவமே யாத்ரையாய்ச் செல்லாநிற்க, ஸம்ஸாரமாகிற பாழ் நிலத்திலுள்ளார் ஶப்தாதிவிஷயங்களிலே ப்ரவணராய் இவற்றினுடைய லாபாலாபங்களே பேறுமிழவுமாய் பகவத்விமுகராய் க்லேஶப்படுகிறபடியை அநுஸந்தித்து, ‘அவர்களைத் திருத்துவோம்’ என்று பார்த்து, ‘ஸர்வேஶ்வரன் உளனாயிருக்க நாம் இருந்து க்லேஶப்படவேணுமோ ?’ என்று, ‘தேவர் உள்ளீராயிருக்க இவை இப்படி நோவுபட விட்டிருக்கைபோருமோ ? இவர்களையும் திருத்தி நல்வழிபோக்கவேணும்’ என்று அவன் திருவடிகளிலே விழ, ‘நம் குறையல்லகாணும் ; இவை அசித்தாய் நாம் நினைத்தபடி காரியங் கொள்ளுகிறோமல்லோமே ; சேதநரானபின்பு இவர்கள் பக்கலிலேயும் ருசியுண்டாக வேணுங்காணும், அநராவ்ருத்தி லக்ஷணமோக்ஷத்தைப பெறும்போது ; நாமும் உம்மோபாதி ஆவதெல்லாம் பார்த்து முடியாமை கண்ண நீரோடேகாணும் கைவாங்கிற்று’ என்ன, ‘இவர்களுக்கு ருசியில்லையாகிலும், பேற்றுக்கு வேண்டுவது இச்சாமாத்ரமாயிற்றான பின்பு, இந்த இச்சையையும் நீயே பிறப்பித்துக் கொள்ளுமித்தனையன்றோ ?’ என்று - உதங்கன் துர்யோதநாதிகள் பக்கலுண்டான பக்ஷபாதத்தாலே, துர்யோதநாதிகளை அழியச்செய்து வெற்றிகொண்டு நிற்கச்செய்தே வந்து, ‘உனக்கு ப்ராப்தி ஒத்திருக்க, பாண்டவர்களுக்குப் பக்ஷபதித்து இவர்களை அழியச்செய்தாயே’ என்ன, ‘அவர்களை ஆந்தனையும் பொருந்தவிட்டுப் பார்த்தோம் ; அவர்கள் ‘நாங்கள் பந்துக்கள் ஜீவிக்கில் ஜீவியோம்’ என்றபின்பன்றோ நாம் அவர்களை அழியச்செய்தது’ என்ன, ‘ஸர்வநியந்தாவானபின்பு அவர்களுக்கு இசைவைப் பிறப்பித்துப் பொருந்தவிட்டுக்கொள்ளாவிட்டதென் ?’ என்று அவன் நிர்ப்பந்தித்தாற்போலே - இவரும் நிர்ப்பந்திக்க, ‘சேதநரானபின்பு ருசிமுன்பாகச் செய்யவேணுமென்றிருந்தோமித்தனைகாணும் ; அது கிடக்க ; உமக்குக் குறையில்லையே ; உம்மைக்கொடுபோய் வைக்கப்புகுகிற தேசத்தைப் பாரீர்’ என்று பரமபதத்தைக் காட்டிக்கொடுக்க, கண்டு க்ருதார்த்தரானார், கீழில் திருவாய்மொழியிலே ;

பின்னையும் தம்செல்லாமையாலே, ஸர்வேச்வரன் கைவிட்ட ஸம்ஸாரத்தையும் திருத்தப் பார்க்கிறார். 'ஸம்ஸாரத்தை அடியறுக்கவேணும்' என்று பார்த்தார் : ஸம்ஸாரபீஜம் - இதரதேவதைகள் பக்கல் ப்ராவண்யமும், பகவத்பரத்வஜ்ஞாந மில்லாமையுமாயிருந்தது ; அதுக்கு உறுப்பாக பகவத்பரத்வ ஜ்ஞாநத்தை உபதேசிக்கிறார்.

எம்பார், "ஸகலவேதசாஸ்த்ரங்களையும் அதிகரித்து வைத்து, 'பரதத்த்வம் இன்னது' என்று அறுதியிடமாட்டாதே, 'சேம்புக்குக் கூராச் சிற்றறிவாளருண்டோ? * (நமக்கு உபாஸ்யரல்லாதாருண்டோ ? ') என்று, கண்டவிடமெங்கும் புக்குத் தலைசாய்த்துத் தடுமாறித் திரியாநிற்க, எம்பெருமானார் தர்சநஸ்தரில் எத்தனையேனும் கல்வியில்லாத ஸ்த்ரீப்ராயரும் தேவதாந்தரங்களை அடுப்பிடுகல்லோபாதியாக நினைத்திருக்கிறது இவ்வொன்றுந்தேவும் இப்பக்ஷத்திலே உண்டாகையிறே" என்று அருளிச்செய்வர் ; (க) "த்ருணீக்ருதவிரிஞ்சாதி - த்ருணீக்ருதவிரிஞ்சாதி".

"கார்த்தவீர்யார்ஜுநன் என்பானொருவன் தான் ராஜ்யம்பண்ணுகிற காலத்தில் ஆரேனுமொருவர் பாபசிந்தை பண்ணினருண்டாகில் அவர்கள் முன்னே கையும் வில்லுமாய் நின்று அவற்றைத் தவிர்த்துப்போந்தான்" என்றால், இது உபபந்நம்' என்றிருப்பர்கள்; ஒருக்ஷுத்ரமநுஷ்யனுக்கு 'இது கூடும்' என்றிருக்கிறவர்கள், 'ஸர்வசக்தியாய் ஸர்வாந்தர்யாமியாயிருக்கிற ஸர்வேச்வரன் இப்படி வ்யாபித்துநின்று நோக்கும்' என்றால், சேதநர் 'இது அநுபபந்நம்' என்றிருப்பர்கள் 'ஜாதி, வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்கும்' என்றால், 'அசித்பதார்த்தத்துக்கு இது கூடும்' என்றிருப்பர்கள் ; 'பரமசேதநனாயிருப்பானொருவன் பரிஸமாப்ய வர்த்திக்கும்' என்றால், 'இது கூடாது' என்று ஸம்சயியாநிற்பர்கள்.

முதல் திருவாய்மொழியிலே - ஸ்வாநுபவத்துக்கு உறுப்பாக, அவன் காட்டிக்கொடுத்த பரத்வத்தை அநுஸந்தித்து, அதுதன்னை 'உளன்சுடர்மிகுசுருதியுள்'' என்று - ச்ருதிச்சாயையாலே உபபாதித்தார் ; 'ஸ்வாநுபவந்தான் பிறர்க்கு உறுப்பாயிருக்கையாலே

---

* குண்டலிதம் க்வாசித்கம். (க) எம்பார் முக்தகம்

சேதநராகில் இவ்வளவு அமையுமிறே' என்று பார்த்து, பின்பு இதிஹாஸபுராண ப்ரக்ரியையாலே பரத்வத்தை அருளிச்செய்தார் - * திண்ணன் வீட்டில். அதிலும் அவர்கள் திருந்தாமையாலே, அவர்கள்தங்களையே உத்தேசித்தே பகவத்பரத்வத்தை உபபாதிப்போம்' என்று பார்த்து, அதுக்கு உறுப்பாக, இதரதேவதைகள் பக்கலுண்டான பரத்வஶங்கையை அறுத்துக்கொண்டு பகவத்பரத்வத்தை உபபாதிக்கிறார் - இதில். முதல் திருவாய்மொழியில் - பரத்வேபரத்வத்தை அருளிச்செய்தார்; அது ஸம்ஸாரிகளுக்கு எட்டாநிலமாயிருந்தது; அதுக்காக, அவதாரத்திலே பரத்வத்தை அருளிச்செய்தார் - * திண்ணன்வீட்டில்; அதுவும் தத்ப்ராயமாட்ப் பிற்பாடர்க்கு எட்டிற்றில்லை; இரண்டும் தேஶகாலவிப்ரக்ருஷ்டமாயிருந்தது; அக்குறைகளொன்றுமின்றிக்கே, (க) " பின்னானார்வணங்குஞ்சோதி" என்கிறபடியே பிற்பாடர்க்கும் இழக்கவேண்டாத அர்ச்சாவதாரத்திலே பரத்வத்தை அருளிச்செய்கிறார் - இதில்.

இனி இவர்தாம் திருத்தப்பார்த்த வழி ஏது? என்னில் ;— எல்லார்க்குமொக்க ஸுகங்களுண்டாகவும், து:க்கங்களின்றிக்கேயொழியவும் அபேக்ஷிதமாயிருக்கச்செய்தே, அபேக்ஷித்த ஸமயத்தில் அபிமதமானஸுகம் வரக்காணாமையாலும், அநபிமதமான து:கம் வரக்காண்கையாலும், ' இவற்றுக்கு நியாமகனாய் நின்று அநுபவிப்பிக்கிறானொருவன் உளன்' என்று கொள்ளவேண்டியிருந்தது. அதுவென்? ஸுகது:க்கங்களுக்கு ஹேதுவான புண்யபாபங்கள் அநுபவிப்பிக்கிறனவாறலோ? என்னில் ;—அவற்றினுடைய ஸ்வரூபத்தை ஆராய்ந்தவாறே, அவை - அசேதநமாயிருப்பன சில க்ரியாவிஶேஷங்களாகையாலே அப்போதே நசிக்கும்; இனி, தாருநிர்மாணத்தில் வந்தால் கர்த்தாவையொழிய வாஸ்யாதிகளுக்கு ஒருவ்யாபாரம் கூடாதாப்போலே, அந்தக்ரியைகளுக்கும் ஒருசேதநனையொழிய பலப்ரதாநஶக்தி கூடாமையாலே ஒரு சேதனனைக்கொள்ளவேண்டிவரும்; இனி, ' அபூர்வம்' என்று ஒன்றைக் கல்பித்து ' அது அத்ருஷ்டரூபேண நின்று பலப்ரதயாகிறது' என்னுமதிற் காட்டில், ' ஒருபரமசேதநன் நெஞ்சிலே பட்டு அவனுடையநிக்ரஹரூபத்தாலும் அநுக்ரஹரூபத்தாலும் இவை பலிக்கிறது' என்கை நன்றிறே.

(க) திருநெடு-கo

இனி, 'அந்தப் பரமசேதநன் தானாகிறான் ஆர்? அவன் ஸ்வரூபஸ்வபாவங்கள் இருக்கும்படி எங்ஙனே? அவன் சேஷ்டிதங்கள் இருக்கும்படி எங்ஙனே?' என்னில்; - அது ப்ரமாணங்கொண்டு அறியவேணும். அதில், ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்கள் அதீந்த்ரியார்த்தத்தில் கோசரியாமையாலே அவை ப்ரமாணமாக மாட்டாது; இனி, ஆகமாதிகள் ப்ரமாணமானாலோ? என்னில்; - அவற்றுக்குப் புருஷபுத்தி ப்ரபவமான விப்ரலம்பாதிதோஷம் உண்டாகையாலே அவையும் ப்ரமாணமாக மாட்டாது; இனி, சதுர்த்தஶவித்யாஸ்த்தாந ப்ரதாநமாய் நித்யமாய் அபௌருஷேயமாகையாலே விப்ரலம்பாதி தோஷஸம்பாவநாரஹிதமாய் ஸாத்த்விகபுராணங்களாலே உபப்ரும்ஹிதமான வேதம் ப்ரமாணமாகவேணும்.

'ஸாத்த்விகபுராணங்கள்' என்று விசேஷித்ததுக்குக் கருத்தென்? என்னில்; - புராணகர்த்தாக்களெல்லோரும் ப்ரஹ்மாவின் பக்கலிலே சென்று இவ்விரண்டு காதைகளையும் கேட்டுப்போந்து தாந்தாம் புராணங்கள் பண்ணினார்கள்; அந்தப்ரஹ்மாதானும் (௧) "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை - யோப்ரஹ்மாணம்விததாதிபூர்வம் யோவை வேதாம்ஶ்சப்ரஹிணோதிதஸ்மை" என்கிறபடியே - ஸர்வேஶ்வரனாலே ஸ்ருஷ்டனாய் அவனாலே லப்தஜ்ஞாநனுமாயிருக்கச்செய்தேயும், (௨) "ப்ருஷ்டஶ்சைவ ச பகவாந் அப்ஜயோநி: பிதாமஹ: - ப்ருஷ்டஶ்சைவாசபகவாநப்ஜயோநி:பிதாமஹ:" என்று கொண்டு ருஷிகளைக்குறித்து உபதேசிக்கிறவிடத்திலே, 'நான் குணத்ரயவஶ்யனாயிருப்பன்; தமோகுணம் உத்ரிக்தமானபோதும் ரஜோகுணம் உத்ரிக்தமானபோதும் சொன்னவற்றைப் பொகட்டு, ஸத்த்வகுணம் உத்ரிக்தமான ஸமயத்தில் சொன்னவற்றை ஸ்வீகரியுங்கோள்' என்றானிறே; இனி, (௩) "அக்நேஶ்ஶிவஸ்ய மாஹாத்ம்யம் தாமஸேஷு ப்ரகீர்த்த்யதே । ராஜஸேஷு ச மாஹாத்ம்யம் அதிகம் ப்ரஹ்மணோ விது: । ஸாத்த்விகேஷ்வத கல்பேஷு மாஹாத்ம்யமதிகம் ஹரே: - அக்நேஶ்ஶிவஸ்யமாஹாத்ம்யம் தாமஸேஷுப்ரகீர்த்த்யதே । ராஜஸேஷுசமாஹாத்ம்யம் அதிகம்ப்ரஹ்மணோவிது: । ஸாத்த்விகேஷ்வதகல்பேஷு மாஹாத்ம்யமதிகம்ஹரே:" என்றுநின்ற

(௧) ஶ்வேதா-௬· (௨) வி·பு-௧௧ ௨-௧௦. (௩) மாத்ஸ்யபுராணம்.

